# பகுதி II

*சிறப்புக்குறிப்புII - 1*

# இலங்கை மத்திய வங்கியினை நவீனமயப்படுத்தல்

## 1. அறிமுகம்

நிதியியல் முறையில் தொடர்ந்தும் அதிகரித்துவருகின்ற சிக்கல்கள், பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மாற்றமடைந்து வருகின்ற உலகில் மத்திய வங்கியின் பங்கு என்பன மீதான புதிய சிந்தனை என்பன மத்திய வங்கிகள் அவை தொடர்பான பொருளாதாரங்கள் பயனுள்ள முறையில் தொழிற்படுவதற்கான இயலாற்றலைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு உலகம் முழுவதிலும் அவற்றை மாற்றவேண்டிய தேவையைத் தோற்றுவித்தன. இலங்கை மத்திய வங்கியும் இதற்கான தேவையை உணர்ந்து கொண்டிருப்பதுடன், மத்திய வங்கித்தொழிலின் நவீன தன்மைகளுக்கு இணையாக வங்கியை மீளமைக்கும் பொருட்டும் அதன் மூலம் இவ்வறைகூவல்களை எதிர்கொள்வதற்கான இயலாற்றலைப் பெற்றுக் கொள்வதற்குமாக 2000ஆம் ஆண்டில் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. (பார்க்க ஆண்டறிக்கைகள் 2000 பகுதி IIபக்கம் II 2001இன் பகுதி II சிறப்புக்குறிப்பு-II-1)

வங்கியின் முன்னைய ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு, நவீனமயப்படுத்தல் செயற்பாடு மூத்த அலுவலர்களின் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலமும் சீர்திருத்தத்திற்கான முக்கிய துறைகளை ஆய்வுசெய்து அறிக்கையிடுவதற்கான முக்கியமான குழுக்களை நியமித்ததன் மூலமும் விரைவுபடுத்தப்பட்டது. சிறப்பாக, பின்வருவன தொடர்பாக ஒரு முக்கியமான சுயமதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டது.

- மத்திய வங்கி ஏன் மாற்றப்பட வேண்டும்?.
- மத்திய வங்கியின் குறிக்கோள்களில் மீளாய்வு.
- குறிக்கோள்களை எய்துவதற்கு பின்பற்ற வேண்டிய செயன்முறை.
- மத்திய வங்கி எவ்வாறு நவீனமயப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.
- நவீனமயப்படுத்தல் செயற்பாட்டினை நிறைவுசெய்வதற்கு மேற்கொள்ளவேண்டிய உபாய வழிமுறைகள்.

உலக வங்கி மற்றும் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவர் என்பனவற்றின் நிதியிடலின் கீழ் நவீனமயப்படுத்தல் செய்முறைகளை திட்டமிடுவதற்கும் வழிகாட்டுவதற்குமாக மத்திய வங்கி நவீனமயப்படுத்தல் சிறப்பு செயற்றிட்டமொன்று வங்கியில் ஏற்படுத்தப்பட்டது. பின்வரும் பிரிவுகள் செயற்றிட்டத்தின் 2002 இறுதிவரையான முன்னேற்றங்களின் விபரங்களைத் தருகின்றது.

## 2. நவீனமயப்படுத்தல் செய்முறை

2001இல் தொடங்கப்பட்ட நவீனமயப்படுத்தல் செயன்முறையானது வங்கி அதன் முறைகளையும் நடைமுறைகளையும், ஆளுகை முறையினையும் தரமுயர்த்துவதன் மூலமும் தொழிற்பாட்டுச் செலவுகள், செய்முறை வினைத்திறன் மற்றும் கொடுகடன், திரவநிலை மற்றும் முறைசார்ந்த இடர்நேர்வு போன்ற வேறுபட்ட குறிக்கோள்களிடையே சமநிலையொன்றைத் தோற்றுவிப்பதற்கான முறையொன்றுடன் பொருளாதாரத்தினை வளர்ச்சி பெறச்செய்வதற்கான தேவையை திருப்திப்படுத்துவதற் கேற்ற மைய நிதியியல் முறை உட்கட்டமைப்பினை நிறுவுவதன் மூலமும் முக்கியமான, நவீனமயப் படுத்தப்பட்ட மற்றும் வினைத்திறன் மிக்க மத்திய வங்கியை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே இந் நிகழ்ச்சித்திட்டம் மத்தியில் வினைத்திறன் மிக்க மத்திய வங்கியொன்றினை உருவாக்குவதன் மூலம் மேலதிக நிதியியல்துறை சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதுடன் இது போட்டித்தன்மை கொண்டதும் முன் மதியுடைய விதத்தில் முகாமைப்படுத்தப்படும் வங்கித்தொழில் முறையினை நிறுவுகின்ற இறுதிக் குறிக்கோள்களை அடையவும் உதவும்.

### மையக் குறிக்கோள்கள்

மத்திய வங்கி அதன் குறிக்கோள்களை மீள வரைவிலக்கணப்படுத்தி இரு புதிய மையக் குறிக்கோள்களை பின்பற்றுகிறது. அவையாவன (அ) பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு அத்துடன் (ஆ) நிதியியல் முறை உறுதிப்பாடு. 2002ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த நாணயவிதிச் சட்டத்துக்கான திருத்தத்தினூடாக இலங்கையின் உற்பத்தியாக்க மூலவளங்களின் அபிவிருத்தியினை ஊக்குவித்து மேம்படுத்தும் நோக்குடன் இவ்விரு குறிக்கோள்களும் பின்பற்றப்பட்டன. இவ்விரு புதிய குறிக்கோள்களும் கடந்த காலத்தில் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட பலதரப்பட்ட குறிக்கோள்களிலிருந்து முற்றும் விலகியனவாகக் காணப்பட்டதுடன், மத்திய வங்கித் தொழிலின் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளினால் எடுத்துக் காட்டப்பட்டவாறு வங்கியானது, மத்திய வங்கித் தொழில் நடவடிக்கைகளின் முக்கிய துறைகளில் மட்டும் கவனம் செலுத்த உதவியது. புதிய மையக் குறிக்கோள்கள் பின்பற்றப்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கியினால் ஏனைய பல அமைப்பியல் சார்ந்த மற்றும் முகாமைத்துவ ரீதியான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. அவையாவன பின்வருமாறு.

- மையமல்லாத தொழிற்பாடுகளைப் பரவலாக்கம் செய்தல்.
- அதன் புதிய தொழிற்பாட்டினை மிகக் கூடியளவிற்கு வினைத்திறனுள்ள முறையிலும் பயனுள்ள விதத்திலும் ஆற்றுவதற்கான நிருவாகக் கட்டமைப்பிலான மாற்றங்கள்.
- மனித மூலவள இருப்பினை அதிகரிப் பதற்காக புதிய மனித வளக் கொள்கையினை பின்பற்றுதல்.
- உரிய காலத்திற்கு முன்னரே ஓய்வு பெறவிரும்புபவர்களுக்கு வெளிச்செல்லும் பொறிமுறையொன்றை வழங்குவதற்கான சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தல்.

*சிறப்புக்குறிப்புII - 1 தொடர்ச்சி*

- வங்கியின் புதிய மாற்றங்களுக்கு பொருந்தும் விதத்தில் சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

**மையமல்லாத தொழிற்பாடுகளைப் பரவலாக்கம் செய்தல்**

வங்கியின் மையக் குறிக்கோள்களில் மிகுந்த கவனம் செலுத்துகையில் மையமல்லாத் தொழிற்பாடுகளை பரவலாக்கம் செய்ய உதவுவதற்காக பின்வருவன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

(அ) காசோலைத் தீர்ப்பனவு முறை மற்றும் நிதி மாற்றல் ஆகிய தொழிற்பாடுகளைக் கையாண்ட மத்திய வங்கியின் ஒரு பிரிவாக இருந்த இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் 2002 ஏப்பிறலில் மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் கூட்டுச் சொந்தமாக விளங்கும் அமைப்பொன்றான லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. உரிமை மாற்றத்தின் குறிக்கோள் புதிய முகாமைத்துவத்தையும் தொழில் நுட்பத்தையும் கவர்ந்திழுப்பதன் மூலமும் செலவுச்சிக்கனமான தொழிற்பாட்டு முறைகளை மேற்கொள்வதன் மூலமும் காசோலைத் தீர்ப்பனவினதும் நிதிய மாற்றல் முறையினதும் வினைத்திறனை மேம்படுத்துவதேயாகும்.

(ஆ) ஊழியர் சேமநிதியத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினையும் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதுடன், இச் செயன்முறைக்கு உதவுவதற்காக 2003இல் ஆலோசனை உதவிகள் பெறப்படும்.

(இ) பிரதேச அபிவிருத்தி வங்கிகளில் வங்கி கொண்டிருந்த பங்குகளின் சொத்துடமை வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 20 சதவீதத்திற்கும் மேலாக இருந்தவை திறைசேரிக்கு மாற்றப்பட்டன. பிரதேச அபிவிருத்தி வங்கிகளை மீளமைப்பதில் உதவுவதற்காக ஆலோசனை வழங்கும் நிறுவனத்தினைத் தெரிவு செய்யும் செயற்பாட்டினை வங்கி நிறைவு செய்துள்ளதுடன், இவை இந் நிறுவனங்கள் தாமாகவே தொழிற்படுவதனை இயலச் செய்யும்.

**நிருவாகக் கட்டமைப்பில் மாற்றங்கள்**

மையக் குறிக்கோள்கள் மற்றும் தொழிற்பாடுகளினைக் கவனத்திற்கொண்டு புதியதொரு நிருவாகக் கட்டமைப்பொன்று வடிவமைக்கப்பட்டது. இவ்வுத்தேச நிருவாகக் கட்டமைப்பின் கீழ் திணைக்களங்கள் முக்கிய குறிக்கோள்களின் கீழ் அல்லது தொழிற்பாட்டுத் தொகுதிகளின் கீழ் அதாவது விலை உறுதிப்பாடு, நிதியியல் முறை உறுதிப்பாடு, முகவராண்மை மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் கம்பனிப் பணிகள் என்பனவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இச் செயன்முறையில் பின்வரும் மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

(அ) பிரதேச அபிவிருத்தி துறையினை வலுப்படுத்துவதற்காக அபிவிருத்தித் நிதித் திணைக்களமும் கிராமியக் கொடுகடன் திணைக்களமும் ஒருங்கிணைக்கப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் என மீள பெயர் குறித்தொதுக்கப்பட்டது.

(ஆ) பன்னாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் சார்ந்த துறைகளில் தீவிரமாக செயற்படும் பொருட்டும் நிதியியல் சந்தையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகள் பொறிமுறையினை வலுப்படுத்துவதுடன் உள்ளக நிதியியல் விடயங்களை கையாளச் செய்வதற்குமாக வங்கித்தொழில் திணைக்களம் 4 புதிய சிறப்பியல்பு வாய்ந்த திணைக்களங்களாக மீளமைக்கப்பட்டன.

**புதிய மனித வளக் கொள்கைகளைப் பின்பற்றுதல்**

பெருமளவு தொழில் சார்ந்த தன்மை மற்றும் வலுவான மனித மூலவள இருப்பினைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுடன் முகாமைத்துவ முறையினை ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கையை நோக்கிய செயற்பாடாக வங்கி புதிய பல மூலவளக் கொள்கைகளைத் பின்பற்றத் தொடங்கியது. இதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நவீன மயப்படுத்தல் செயன்முறையாக நிறுவப்பட்டுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் முகாமையாளர்களுக்கு தொடர்ச்சியாகப் பயிற்சியளித்ததுடன் அவர்களுக்கு புதிய அறிவினை வெளிக்காட்டியதுடன் அதன் மூலம் அவர்கள் கல்வியூட்டல், விழிப்புணர்வு அதிகரிப்பு, மிக முக்கியமான பகுப்பாய்வுகள் மற்றும் செய்முறைகளையும் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியாக மதிப்பிடல் என்பனவற்றின் மூலமாக முகாமைத்துவ செய்முறைகளை மாற்றுவதிலும் புதிய தொழிற்பாடுகளை ஆற்றுவதிலும் முக்கிய பங்கினை வகிக்க முடிந்தது.

(ஆ) நவீன மனித வளத் திணைக்களத்தினை ஏற்படுத்தும் பொருட்டு வங்கியில் பொருத்தமான புதிய மனித வளக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மனித வள முகாமையாளர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

(இ) மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் காலப்பகுதியில் மனித வளத் திணைக்களத்திற்கு மதியுரை வழங்கவும், உதவி புரியவும் வழிகாட்டுவதற்குமென மனித வள மதியுரையாளர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) அலுவலர்களைப் பட்டப்பின் படிப்பிற்கு வெளிநாடுகளுக்கு அனுப்பும் அனைத்தையு

முள்ளடக்கிய பயிற்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும், அலுவலர்களின் அறிவாற்றலை தொடர்ச்சியாக அதிகரிப்பதற்கும் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் ஏற்படும் பிந்திய அபிவிருத்திகளுடன் இணைந்து செல்ல வைக்கும் பொருட்டும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இடம்பெறும் குறுங்கால பாடநெறிகளில் பங்கேற்க அலுவலர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உலக வங்கியும் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மையும் நிதியிட்டன.

### சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல்

நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் மீளமைத்தல் செய்முறைகள் மற்றைய பல விடயங்களுடன் வங்கியின் குறிக்கோள்களையும், தொழிற்பாடுகளையும், அமைப்பினையும் மீள வடிவமைத்தல், வேலைச் செயல்முறை மற்றும் நடவடிக்கைகளின் தன்னியக்கப்படுத்தல் பற்றி ஆய்வு செய்தல், மனித மூலவளத் தேவைகளை மீள்மதிப்பீடு செய்தல், பதவிகளை மீள வடிவமைத்தல் மற்றும் சில தொழிற்பாடுகளை வெளியிலுள்ள முகவராண்மைகளுக்கு துணை-ஒப்பந்தங்களின் கீழ் வழங்கல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இச் செயற்பாட்டில் சில வகை ஊழியர்கள் தேவைக்கதிகமாக உள்ளமையைக் கண்டறிய முடிந்தது. இதன்படி, வங்கி குறிப்பிட்ட சில வகை ஊழியர்களுக்கு சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தினை வழங்கியது. இத் திட்டம் போதுமானளவு இழப்பீடு/ ஓய்வூதிய பொதியினை வழங்கியதுடன் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெறுவதற்கு பல ஊழியர்களையும் தூண்டியது. இதன்படி 2002இன் தொடக்கத்திலிருந்து 690 ஊழியர்கள் வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். எஞ்சிய அலுவலர்களுடன், வேலை நடைமுறைகளை இலகுபடுத்தியமை, வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெறல், வேலைச் செய்முறையைத் தன்னியக்கப்படுத்தல் என்பனவற்றின் மூலமாக சிறந்த பணிகளை வங்கி வழங்கி வருகின்றது.

### சட்ட சீர்திருத்தங்கள்

நிதித்துறையிலான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாணய விதிச்சட்டம் வங்கித்தொழில் சட்டம், படுகடன் மீளப்பெறுவதற்கான சட்டவிதி, நிதிக்கம்பனிகள் சட்டம் மற்றும் நிதிக் குத்தகைச் சட்டம் என்பனவற்றில் மாற்றங்களைச் செய்யும் தேவை காணப்பட்டது. இதன்படி வங்கி பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

(அ) தேவையான சட்டவாக்க மாற்றங்களை முன்மொழிவதற்காகவும், ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட சபைகள் மற்றும் பங்குடமையாளர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளல், தேவையான சட்டவாக்கங்களை வரைவதற்குமாக போதியளவு பன்னாட்டு அனுபவங்களைக் கொண்ட உள்நாட்டு ஆலோசனையாளர்களின் பணிகளைக் குறுங்கால ஒப்பந்தங்களில் பெற்றுக்கொள்ளல். இவ் ஒப்படைப்புக்களின் இறுதி அறிக்கை 2003 பெப்புருவரி நடுப்பகுதியில் கிடைக்கும்.

(ஆ) மத்திய வங்கியின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்காகவும் வங்கித்தொழில் துறையினை ஒழுங்கான முறையில் அபிவிருத்தி செய்து ஒழுங்குமுறைப் படுத்துவதற்குமான நடைமுறை சார்ந்ததும் பயன் நிறைந்ததுமான சட்டரீதியான கட்டமைப்பொன்றினை வழங்குவதற்காக புதிய சட்டங்களை வடிவமைக்கின்ற நோக்குடன் நாணய விதிச்சட்டம் மற்றும் வங்கித்தொழில் சட்டம் என்பனவற்றை முழுமையாக மீளாய்வு செய்வதற்காக பன்னாட்டு நிபுணர்களின் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் முன்மொழியப்பட்டிருக்கின்றது. வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை நீண்டகால அபிவிருத்தியுடன் இணைந்து செல்லும் விதத்தில் மற்றைய வங்கி, நிதியியல் நிறுவனங்களையும் கொண்டுவரும் நோக்குடன் இவ்வாலோசனை யாளர்கள், தற்பொழுது மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் மற்றைய நிதிச் சட்டங்களையும் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கிகளை நிறுவுகின்ற நியதிச் சட்டங்களையும் மீளாய்வு செய்வரென மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

### ஆளுகை, வெளிப்படுத்துகை மற்றும் ஒழிவு மறைவற்ற கோட்பாடுகள்

வங்கியின் ஆளுகைக் கோட்பாடுகளை உயர்த்தும் பொருட்டு பின்வரும் நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

- நாணயவிதிச்சட்டத்திற்கு திருத்தங்களைச் செய்து நாணயச்சபையின் அளவினை விரிவாக்கியமை.
- தொழில்நுட்ப மதியுரை குழு முறைகளை நிறுவுதல்
- வங்கியின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகளை வலுப்படுத்தல்.
- வங்கியின் புதிய கணக்கீட்டு கட்டமைப்பாக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுதல்.
- புதிய உள்ளகக் கணக்காய்வுப் பட்டயத்தினைப் பின்பற்றுதல்.

### நாணயச்சபையின் அளவினை விரிவுபடுத்தல்

சபையில் தனியார்துறையின் பிரதி நிதித்துவத்தினை அதிகரிப்பதற்காக நாணயச்சபையின் அளவு ஐந்து உறுப்பினர்களாக அதிகரிக்கப்பட்டது.

### தொழில்நுட்ப மதியுரைக் குழு முறைகளை நிறுவியமை

தீர்மானங்களை எடுப்பதில் நாணயச்சபைக்கு வழிகாட்டுவதற்காக துணை ஆளுனரை அல்லது சபையின் உறுப்பினரொருவரைத் தலைவராகக் கொண்டு தொழில்நுட்ப மதியுரைக்குழு முறைகள் நிறுவப்பட்டுள்ளன. இதன்படி, நாணயக் கொள்கைக்குழு (நாணயக் கொள்கை மீதான விதந்துரைப்புக்களைச் செய்வதற்கு), நிதியியல் முறை உறுதிப்பாட்டுக்குழு (வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் விடயங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் அம்சங்கள் மீதான விதந்துரைப்புக்களைச் செய்வதற்கு) மற்றும்

*சிறப்புக்குறிப்புII - I தொடர்ச்சி*

கணக்காய்வுக்குழு (வங்கியின் நிதியியல், கணக்கீடு மற்றும் இடர்நேர்வு விடயங்களின் மீதான விதந்துரைப்பிற்கு) என்பனவற்றை நிறுவியதுடன் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாடு ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டது.

### *மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழிற்பாடுகள் வலுப்படுத்தல்*

வங்கியானது அதன் முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை பன்னாட்டு தரங்களுக்கு ஏற்ப பூரணப்படுத்தல், அதன் தல மற்றும் தலத்திற்கு வெளியேயான தொழிற்பாடுகளை வலுப்படுத்தல், இலங்கையில் மிகச் சிறந்த வங்கித்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதனை உறுதிப்படுத்தல் ஆகிய செய்முறைகளில் ஈடுபட்டிருகின்றது. இந்நோக்கத்திற்காக மத்திய வங்கி, வங்கி மேற்பார்வைத் துறையினை வலுப்படுத்துவதற்கு உதவும் பொருட்டு பன்னாட்டு நிபுணத்துவர் ஒருவரின் பணியினைப் பெறவுள்ளதுடன் இப் பணியினைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்படைப்பு 2003 மேயில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அலுவலர்கள் தமது வங்கி மேற்பார்வைத் தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் ஆற்றுவதனை இயலச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இது உறுதியான நிதியியல் முறையினை உறுதிப்படுத்தும் நோக்குடனான கூடியளவு தல மற்றும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு வங்கிக்கு உதவியது.

### *புதிய கணக்கீட்டு கட்டமைப்பினையும் உள்ளகக் கணக்காய்வுப் பட்டயமொன்றினையும் பின்பற்றுதல்*

ஒப்பிடத்தக்கதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான வெளிப்படுத்தல் கொள்கையொன்றினைக் கொண்டிருக்கும் பொருட்டு, மத்திய வங்கிக் கணக்குகளுக்காக வங்கி பன்னாட்டு நிதியியிடல் நியமங்களைப் பின்பற்றியது. இது, வங்கி அதன் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்து கொள்வதனையும், வங்கி பின்தங்கியுள்ளது என அடையாளங் காணப்பட்ட துறைகளை சிறந்த பன்னாட்டுத் நடைமுறைகளுக்கு இணையாகக் கொண்டுவரவும் இயலச்செய்தது. இது உள்நாட்டு நிதியியல் நிறுவனங்களில் சிறந்த கம்பனி ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் வங்கியினால் உருவாக்கப்படும் நியமங்களை மேம்படுத்தும். இதன்படி பின்வருவன தொடர்பில் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன:

(அ) மற்றைய தொடர்பான சிறப்பு ஒப்படைப்புக் களுடன் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களுக் கிணங்க ஏர்னஸட் அன்ட் யங் நியூசிலாந்து 2001ஆம் ஆண்டிற்கான கணக்கினை முழுமையாகக் கணக்காய்வு செய்தது. அவர்கள் 2002ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் கணக்குகள் மீதான கணக்காய்வு கருத்துக்களையும் வழங்கியுள்ளனர்.

(ஆ) கணக்காய்வுத் திணைக்களமானது. செயலாற்றக் கணக்காய்வுகளையும், தகவல் முறைமைக் கணக்காய்வுகளையும் நடத்துவதற்காக சிறப்பியல்பு வாய்ந்த பிரிவொன்றினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் முழுமையாக ஈடுபட்டது. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் இந் நோக்கத்திற்காக உள்ளக கணக்காய்வுப் பட்டயமொன்றினை பின்பற்றி வருகிறது.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் நிறைவுபெற்றதும் முகாமைத்துவ கணக்காய்வுத் தொழிற்பாடும், இடர்நேர்வு முகாமைத்துவ செயற்பாடுகளும் மேலும் முன்னேற்றமடைவதுடன் பன்னாட்டுச் சமூகத்தினிடையே வங்கியின் நன்மதிப்பும் உயர்வடையும்.

### கொடுப்பனவு முறை சீர்திருத்தங்களினூடான தொழில்நுட்ப ரீதியான மேம்பாடுகள்

உத்தேச கொடுப்பனவு சீர்திருத்தங்கள் இலங்கையின் நிதியியல் சந்தைகளையும் வங்கித்தொழில் துறையினையும் அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்காக தேவைப்படும் உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கு எதிர்பார்க்கின்றன. இச் செய்முறைகள் பின்வருவனவற்றை எய்துவதற்கு உதவும்:

(அ) தற்போது தோற்றம் பெற்றுவரும் மிகச் சிறந்த பன்னாட்டு நடைமுறைக்கு இசைந்ததாக கொடுப்பனவு முறை மற்றும் பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பவற்றிலான தீர்ப்பனவு இடர்நேர்வுகளை குறைத்தல்.

(ஆ) இலங்கையின் பொதுப்படுகடனின் தன்னாதிக் கத்தினையும் வர்த்தகப்படுத்தும் தன்மை யினையும் உயர்த்துதல்.

(இ) வங்கியின் நிதியியல் மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளின் வினைத்திறனையும் தரத்தினையும் மேம்படுத்தல்; அத்துடன்

(ஈ) புதிய தொழிற்பாட்டு பொறிமுறைக்கு வலு வான அடித்தளமொன்றினை இடும் விதத்தில் பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப் பொன்றினை நிறுவுதல்.

மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடையும் பொருட்டு, அதேநேரத்தில் தீர்ப்பனவு செய்யும்முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு செய்யும் முறை என்பனவற்றை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேர தீர்ப்பனவு செய்யும்முறையானது, உடனடியாக மாற்றப்பட வேண்டிய நேர முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பெறுமதிக் கொடுப்பனவுகளை மாற்றல் செய்வதற்கே முக்கியமாகப் பயன்படுத்தப்படும். பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறையானது இலங்கையின் பிணையங்கள் தீர்ப்பனவு முறை பன்னாட்டு நியமங்களுக்கு இசைந்திருப்பதனை

*சிறப்புக்குறிப்புII - 1 தொடர்ச்சி*

உறுதிப்படுத்துவதனையும், அரச பிணையங்களின் வர்த்தகப்படுத்தலை இரண்டாந்தரச் சந்தையில் கூடியளவிற்கு தீவிரமடையச் செய்வதற்கான வசதிகளை வழங்குவதனையும் அதேவேளையில் பத்திரப் பிணையங்களுடன் தொடர்பான வினைத் திறனின்மையினை இல்லாதொழிப்பதனையும் உறுதிப்படுத்தும். மேலும், மேற்குறிப்பிட்டவற்றிற்கு வசதியளிப்பதற்காகவும் வங்கியின் நடைமுறை மற்றும் எதிர்கால நிதியியல் தொழிற்பாடுகளுக்கு உதவியளிப்பதற்குமாக ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கீட்டு முறை/ தன்னியக்கப்படுத்தப்பட்ட பேரேட்டு முறையொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினதும், உலக வங்கியினதும் வழிகாட்டுதல்களை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பன்னாட்டு விலைக்கோருநர்களிடமிருந்து 2002 பெப்புருவரியில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதுடன் 2002 ஒத்தோபரில் அதேநேர தீர்ப்பனவு செய்யும் முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் பொதுப்பேரேட்டு முறை என்பனவற்றை நிறுவுவதற்கும் தொழிற்படுத்துவதற்குமாக முறையே லோஜிகா யூ.கே.லிமிட்டெ் மற்றும் இலங்கையின் டீ.எம்.எஸ்.குறூப் இற்கும் அவை வழங்கப்பட்டன. இச் செயற்றிட்டங்கள் தொடர்பான வேலைகள் 2002 நவெம்பரில் தொடங்கப்பட்டதுடன் இம்முறைகள் 2003ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் தொழிற்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**3. நிதியிடல் மூலங்கள்**

நவீனமயப்படுத்தும் செய்முறைக்கு ஆதரவாக தேவையான நிதியிடலை வழங்குவதற்கு பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையூடாக உலக வங்கியும் அதனுடன் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பும் சேர்ந்து உடன்பட்டன. மொத்த செயற்றிட்ட செலவு ஐ.அ.டொலர் 42 மில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மை ஐ.அ.டொலர் 30.3 மில்லியனையும் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர் ஐ.அ.டொலர் 1 மில்லியனையும் வழங்கின. மிகுதி ஐ.அ.டொலர் 10.7 மில்லியன் மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்படும். எனினும் வேறொரு அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு அரசாங்கம் ஐ.அ.டொலர் 5 மில்லியனை மீள்ஒதுக்கீடு செய்தமையின் காரணமாக பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மையின் உதவி ஐ.அ.டொலர் 25.3 மில்லியனுக்கு குறைவடைந்தது.

**4. கால அட்டவணை**

நவீனமயப்படுத்தும் செயன்முறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2005 நடுப்பகுதியில் அதனை நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கணக்குகளும் நிதியும்

### (1) கணக்கீட்டு அமைப்பும் கொள்கைகளும், 2002.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியற் கூற்றுக்களும் குறிப்புக்களும்

### அ. வழங்கும் முறையின் அடிப்படை

2001 இலிருந்து, மத்திய வங்கி அதன் நிதியியல் கூற்றுக்களை பன்னாட்டுரீதியில் ஒப்பிடத்தக்க வகையில் தயாரிக்கும் பொருட்டு அதன் நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டு அமைப்பாக பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களை (ப.க.நி) பின்பற்றியதுடன், சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசையும் வகையில் வெளிப்படுத்தல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளையும் பின்பற்றியது. இது, இதுவரையில் பின்பற்றப்பட்ட நிதியியல் அறிக்கையிடும் முறையிலிருந்து முழுமையாக வேறுபட்டுக் காணப்பட்டபோதிலும், வங்கி 2001இலும் 2002இலும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் கணிசமான இணங்கியொழுகும் தன்மையை அடையத்தக்கதாக இருந்ததுடன், 2003இல் முழுமையான இசைவுத் தன்மையைப் பூர்த்தி செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒப்பீட்டு நோக்கங்களுக்காக, முரணற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 2001இலும், 2002இலும் பின்வரும் கணக்கீட்டுக் கொள்கைகள் நடைமுறையிலிருந்தன.

2001இலிருந்து பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டதனாலும் இதற்கு முன் வேறுபட்ட கணக்கீட்டு அமைப்பு முறையிருந்தமையாலும், 2001இற்கான ஒப்பீட்டுத் தரவு, பன்னாட்டு கணக்கீட்டு நியம மற்றும் பன்னாட்டு கணக்கீட்டு நியமத்திற்கு முன்னதான அடிப்படைகளில். அடுத்தடுத்த பிரிவுகளில் ஐந்தொகை மற்றும் இலாப/நட்டக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 2001ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை நிதியியற் கூற்றுக்களினது பெறுமதிகளை பன்னாட்டு நியமத்திற்கு முன்னதான அடிப்படையில் வெளிப்படுத்தியது. இதன்படி, 2001இற்கான ஒப்பீட்டு எண் தொகை பொருத்தமான ஒப்பீட்டை இலகுவாக்குவதற்காகவும் இறுதி ஆண்டறிக்கையுடனான இணைப்பைப் பேணுவதற்காகவும் இரண்டு அடிப்படைகளிலும் தரப்பட்டுள்ளது.

### ஆ. பொது

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் பாகமொன்றாக வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மற்றும் கணக்கீட்டு நடைமுறைகளை சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுக்கு இசைந்த வகையில் முன்னேற்றுவதில் வங்கி கவனம் செலுத்தியது. இதன்படி வங்கி, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டிலும் இதனோடு இணைக்கப் பட்டிருக்கும் நிதியியற் கூற்றுக்களை பன்னாட்டு கணக்கியல் நியமங்களுடன் இசையும் விதத்தில் தயாரித்தது.

இதனோடிருக்கும் நிதியியற் கூற்றுக்கள், பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களில் குறித்துரைக்கப் பட்டவாறு கணக்கீட்டு கொள்கைகள் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட சில இணங்கி ஒழுகாதவை நீங்கலாக ஆனால்

# இலங்கை மத்திய வங்கி

## வருமானக் கூற்று

## 2002 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | குறிப்பு | 2002 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (ப.க.நி. முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (இ.க.நி. முறை அடிப்படையில்) ('000 ரூபா) |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்:** | | | | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | 1 | 8,958,028 | 13,263,983 | 13,961,091 |
| வட்டிச் செலவு | 2 | (5,042,311) | (9,623,360) | (9,623,360) |
| | | 3,915,717 | 3,640,623 | 4,337,731 |
| விலை மீள் மதிப்பீடுகளிலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபம் (நட்டம்) | | 3,793,359 | 1,483,959 | 1,260,365 |
| விலை மாற்றங்களிலிருந்து தேறல் செய்யப்பட்ட இலாபம் (நட்டம்) | | 2,642,735 | 1,273,846 | 1,393,474 |
| **வெளிநாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்த வருமானம்** | | **10,351,811** | **6,398,428** | **6,991,570** |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான செலவுகள்** | | | | |
| வட்டிச் செலவு | | ( 966,346) | (826,088) | (826,088) |
| இழப்பு நிலையில் காணப்பட்ட முதலீட்டு கருவிகள் | | - | (5,016) | |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவு** | | **(966,346)** | **(831,104)** | **(826,088)** |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம் | | 3,466,518 | 699,601 | 453,307 |
| **வெளிநாட்டு நாணய முதலீட்டு வருமானம்** | | **12,851,983** | **6,266,925** | **6,618,789** |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | 3 | 7,403,230 | 12,240,067 | 12,008,693 |
| வட்டிச் செலவு | | (540,766) | - | |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்தவருமானம்** | | **6,862,464** | **12,240,067** | **12,008,693** |
| பங்கிலாப வருமானம் | 4 | 49,172 | 38,758 | 30,008 |
| பல்வகை வருமானம் | | 272,061 | 690,046 | 128,091 |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | **20,035,680** | **19,235,796** | **18,785,581** |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்:** | | | | |
| புதிய நாணய வெளியீட்டுச் செலவுகள் | 5 | (661,867) | (570,247) | (579,006) |
| அறவிடமுடியா மற்றும் ஐயப்படுகடன்கள் | 6 | (22,328) | (406,406) | (262,574) |
| சொத்து, பொறிகள் மற்றும் கருவிகளின் மீள் மதிப்பீட்டிலிருந்தான வீழ்ச்சி | | (721,284) | - | - |
| ஒதுக்குகள் | 7 | (2,206) | (428,655) | - |
| நிருவாகம் | 8 | (872,409) | (430,019) | (488,779) |
| ஆளணிச் செலவுகள் | 9 | (1,069,059) | (3,328,250) | (2,333,624) |
| இலங்கை மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட சுயவிருப்பு ஒய்வூதியச் செலவுகள் | | - | (435,611) | |
| பெறுமானத்தேய்வு | 10 | ( 168,647) | (233,543) | (216,258) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **(3,517,800)** | **(5,832,731)** | **(3,880,241)** |
| **வருமான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்** | | **16,517,880** | **13,403,065** | **14,905,340** |
| வருமானவரி | | (529,069) | - | - |
| **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான தேறிய இலாபம்** | | **15,988,811** | **13,403,065** | **14,905,340** |

## 2002 திசெம்பர் 31இல் உள்ளவாறு ஐந்தொகை

| | குறிப்பு | 2002 திசெ.31 இறுதியில் (ப.க.நி.முறை அடிப்படையில்) (ரூபா'000) | 2001 திசெ.31 இறுதியில் (ப.க.நி.முறை அடிப்படையில்) (ரூபா'000) | 2001 திசெ.31 இறுதியில் (இ.க.நி.முறை அடிப்படையில்) (ரூபா'000) |
|---|---|---|---|---|
| ***சொத்துக்கள்*** | | | | |
| **வெளிநாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | | |
| காசு நிலுவைகள் | 11 | 55,873,107 | 34,545,000 | 34,996,680 |
| வர்த்தகப்படுத்தல் பிணைகள் | 12 | 90,851,682 | 67,362,354 | 66,434,843 |
| தங்கம் | 13 | 7,114,912 | 6,520,080 | 6,584,657 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள் | 14 | 54,588,730 | 47,253,415 | 47,253,415 |
| பெறத்தக்கவை | 15 | 91,046 | 1,075,868 | 1,029,653 |
| | | 208,519,477 | 156,756,717 | 156,299,248 |
| **உள்நாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | | |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும்- | 16 | 52,859,539 | 62,385,731 | 59,455,392 |
| திறைசேரி உண்டியல்களும் முறிகளும்-(நேர்மாற்று மீள் கொள்வனவு) | 16 | - | 1,500,000 | 1,968,684 |
| அரசுக்கான கடன்கள் | 17 | 31,033,000 | 30,126,600 | 39,275,047 |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் | 18 | 30,000 | 43,849 | 149,533 |
| பெறத்தக்கவை | 19 | 398,145 | 58,742 | 3,669,422 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு | 20 | 663,091 | 973,030 | 973,030 |
| | | 84,983,775 | 95,087,952 | 105,491,108 |
| **ஏனைய சொத்துக்கள்** | | | | |
| பொருட்களின் இருப்பு | | 760,345 | 567,258 | 560,986 |
| தங்க இருப்பு | | 425,780 | 430,537 | 430,537 |
| நானாவிதச் சொத்துக்கள் | | 1,335,085 | 1,778,133 | 6,363,909 |
| சொத்துக்கள், பொறிகள் உபகரணங்கள் | 21 | 8,127,448 | 8,021,398 | 8,022,116 |
| | | 10,648,658 | 10,797,326 | 15,377,548 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **304,151,910** | **262,641,995** | **277,167,904** |
| ***பொறுப்புக்கள்*** | | | | |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்தப்பட வேண்டியவை | 22 | 349,710 | 54,550 | 54,550 |
| ப.நா.நிதியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள் | 23 | 87,378,407 | 69,275,213 | 69,275,213 |
| ஆ. தீ. ஒன்றியத்திற்கு கொடுபடவேண்டிய தொகை | | 13,029,377 | 9,849,836 | 9,999,354 |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | | 122,969 | 176,944 | 171,928 |
| | | 100,880,463 | 79,356,543 | 79,501,045 |
| **உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகள், நிதியியல் நிறுவனங்களிலிருந்தான நிலுவை | | 38,085,775 | 35,951,929 | 35,951,929 |
| அரச, அரச முயற்சிகளிலிருந்தான நிலுவை | 24 | 769,005 | 4,572,294 | 4,310,368 |
| திறைசேரி உண்டியல்களினதும் முறிகளினதும் மீள்கொள்வனவு | | 11,155,684 | 2,715,179 | 2,715,179 |
| ஏனைய வைப்புக்கள் | | 193,848 | 2,850,777 | 2,976,155 |
| செலுத்தப்பட வேண்டியவை | | 459,844 | 1,668,964 | 1,670,261 |
| | | 50,664,156 | 47,759,143 | 47,623,892 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | | |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 25 | 88,307,773 | 76,561,172 | 76,561,172 |
| ஒதுக்கங்கள் | | 335,804 | 1,706,312 | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 26 | 362,966 | 259,271 | 8,650,616 |
| | | 89,006,543 | 78,526,755 | 85,211,788 |
| **பங்குடைமையாளர்களின் பங்கு** | | | | |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 27 | 63,600,748 | 56,999,554 | 64,831,179 |
| **மொத்தப் பங்குடைமையாளர்களின் பங்கு** | | **63,600,748** | **56,999,554** | **64,831,179** |
| **மொத்தப் பங்குகளும் பொறுப்புக்களும்** | | **304,151,910** | **262,641,995** | **277,167,904** |

***கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு***

*2002 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 இற்கு அமையவும் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42(1)இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.*

*எனது அபிப்பிராயத்தின்படி 2002 திசம்பர் 31இலுள்ளவாறு இ.ம.வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த அதன் தொழிற்பாடுகளிலிருந்தான பெறுபேறுகள் என்பன பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் (ப.க.நி) மற்றும் நிதியியல் கூற்றுக்கான 1-37 வரையான குறிப்புக்களில் குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் என்பனவற்றுக்கு இணங்க அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் நியாயமான வெளிப்படுத்தல்களை செய்வதற்காக நிதிக் கூற்றுக்கள் திருப்திகரமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன.*

*மேற்குறிப்பிட்ட நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2)இன் நியதிக்கிணங்க இக் கணக்குகள் மீதான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் நிதியமைச்சருக்கு முகவரியிடப்பட்ட எனது அறிக்கையில் உள்ளடப்பட்டுள்ளன.*

*கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்*
*கொழும்பு.7.*
*28 ஏப்பிறல் 2003*

| | | |
|---|---|---|
| எஸ். சீ. மாயதுன்ன<br>கணக்காய்வாளர் நாயகம் | ஏ. எஸ். ஜயவர்த்தன<br>ஆளுநர் | டி. எல். கட்டுவாவல<br>முதன்மைக் கணக்காளர் |

## குறிப்புக்கள்

| | 2002 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (இ.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) |
|---|---|---|---|
| **1. தேறிய வட்டி வருமானம் - வெளிநாட்டு நாணயம்** | | | |
| வட்டி வருமானம் | | | |
| காசு, குறுந்தவணை நிதிகள் | 1,148,303 | 1,008,698 | 1,779,513 |
| வர்த்தகப்படுத்தல் பிணைகள் | 7,731,377 | 12,227,175 | 12,153,468 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 78,348 | 28,110 | 28,110 |
| **உப மொத்தம்** | **8,958,028** | **13,263,983** | **13,961,091** |
| **2. வட்டிச் செலவினங்கள்** | | | |
| வெளிநாட்டுப் பிணைகள் | 5,042,311 | 9,623,360 | 9,623,360 |
| **உப மொத்தம்** | **5,042,311** | **9,623,360** | **9,623,360** |
| **மொத்தம்** | **3,915,717** | **3,640,623** | **4,337,731** |
| **3. தேறிய வட்டி வருமானம் - உள்நாட்டு நாணயம்** | | | |
| வட்டி வருமானம் - | | | |
| வர்த்தகப்படுத்தல், பிணைகள், அரச திறைசேரி உண்டியல் | 7,295,716 | 11,944,957 | 11,901,856 |
| கடன்களும் முற்பணங்களும் | 107,514 | 295,110 | 106,837 |
| | **7,403,230** | **12,240,067** | **12,008,693** |
| **4. பங்கிலாப வருமானம் - உள்நாட்டு முதலீடுகள்** | | | |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகளிலும் ஏனைய தொடர்பான நிறுவனங்களிலும் வைத்திருக்கப்பட்ட பங்குகள் | 49,172 | 38,758 | 30,008 |
| | **49,172** | **38,758** | **30,008** |
| **5. புதிய நாணய வெளியீட்டுக்கான செலவுகள்** | | | |
| புதிய தாள், குத்திகள் வெளியீட்டுச் செலவுகள் | 661,867 | 570,247 | 579,006 |
| | **661,867** | **570,247** | **579,006** |
| **6. அறவிடமுடியா, ஐயப்படுகடன் செலவுகள்** | | | |
| வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும் | - | - | - |
| குறித்துரைக்கப்பட்ட கொடுகடன் இடர்களுக்கான ஒதுக்குகள் | - | 406,406 | 240,223 |
| மீளப் பெறமுடியாத நிலுவைகளைப் பதிவழித்தல் | 22,328 | - | 22,351 |
| | **22,328** | **406,406** | **262,574** |
| **7. ஒதுக்கங்கள்** | | | |
| சொத்துக்கள் பொறிகள் மற்றும் கருவிகளின் திருத்தத்திற்கு | 2,206 | 69,855 | - |
| மெதுவான போக்கினைக் கொண்ட பொருட் பட்டியல்கள் | - | 64,700 | - |
| கொடுகடன் உத்தரவாதக் கோரல்களுக்கான ஒதுக்கு | - | 294,100 | - |
| | **2,206** | **428,655** | **-** |
| **8. நிருவாகச் செலவுகள்** | | | |
| திருத்தங்களும் பராமரிப்பும் | 79,015 | 39,722 | 53,722 |
| தகவல் | 53,809 | 68,404 | 68,404 |
| தொழிற்பாட்டுப் பிரயாணம் | 13,781 | 16,013 | 16,013 |
| வாடகை | 22,355 | 36,849 | 31,954 |
| அச்சு | 41,127 | 18,833 | 18,833 |
| கணக்காய்வாளர் நாயகத்திற்கான கணக்காய்வுக் கட்டணம் | 750 | 750 | 750 |
| மீளப்பெறமுடியாக் காசு நிலுவைகளுக்கான ஒதுக்கு | 20,093 | 10,611 | - |
| நாணயச்சபை உறுப்பினர்களுக்கான ஊதியம் | 287 | 226 | 226 |
| பல்வகை | 641,192 | 238,611 | 298,877 |
| | **872,409** | **430,019** | **488,779** |
| **9. அலுவலர்களுக்கான செலவுகள்** | | | |
| கூலிகள், சம்பளங்கள் , போன்றவையும் உழைக்கும்போது செலுத்தும்வரியும் | 626,779 | 1,013,012 | 1,366,617 |
| ஓய்வூதியச் செலவுகள் - உதவு தொகை திட்டங்களின்படி | 246,020 | 1,765,635 | 152,865 |
| ஓய்வூதியச் செலவுகள் - நன்மை அளிக்கும் திட்டத்தின்படி | 196,260 | 549,603 | 814,142 |
| | **1,069,059** | **3,328,250** | **2,333,624** |
| (இவ்வாண்டு வங்கியினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருந்த ஆட்களின் சராசரி எண்ணிக்கை 1,315) | | | |
| **10. பெறுமானத் தேய்வு** | | | |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 19,068 | - | 14,208 |
| கணனியும் கணனிக் கருவியும் | 11,379 | - | 25,040 |
| உந்து ஊர்திகள் | 5,712 | - | 6,206 |
| இணைப்புக்களும் பொருத்துக்களும் | 38 | 1,679 | 3,838 |
| நூலகப் புத்தகங்கள் | - | - | 1,833 |
| தன்னியக்கக் கருவிகள் | 13,827 | 13,510 | 10,351 |
| கட்டடங்கள் | 114,504 | 148,499 | 148,499 |
| ஏஎஸ் 400 பிரதான கணனி | 4,119 | 69,855 | 6,283 |
| | **168,647** | **233,543** | **216,258** |

| | 2002 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (இ.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நிதிச் சொத்துக்கள்** | | | |
| **11. காசு நிலுவைகள்** | | | |
| காசுநிலுவைகள் | 10,095,566 | 4,792,731 | 5,244,411 |
| வெளிநாட்டு நாணயத்தாள்களும் குத்திகளும் | 164 | 218 | 218 |
| தவணை வைப்புக்கள் | 45,777,377 | 29,752,051 | 29,752,051 |
| | **55,873,107** | **34,545,000** | **34,996,680** |
| **12. வர்த்தகப்படுத்தல் பிணைகள்** | | | |
| வெளிநாட்டு அரச பிணைகள் | 52,782,487 | 55,517,855 | 55,517,856 |
| வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்கள் | 29,658,870 | 6,365,654 | 6,365,654 |
| வெளிநாட்டுப் பிணைகள் - அரசல்லா | 8,410,325 | 5,478,845 | 4,551,333 |
| | **90,851,682** | **67,362,354** | **66,434,843** |
| **13. தங்கம்** | | | |
| தங்கம்/ வர்த்தப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படும் சான்றிதழ்கள் | 7,114,912 | 6,520,080 | 6,584,657 |
| | **7,114,912** | **6,520,080** | **6,584,657** |
| **14. ப.நா.நிதியத்துடன் தொடர்பான சொத்துக்கள்** | | | |
| ப.நா.நிதியத்துடனாளன சிஎஉ உடைமைகள் | 210,034 | 77,629 | 77,629 |
| ப.நா.நி அனுமதிப் பங்கு | 50,382,377 | 47,175,786 | 47,175,786 |
| ப.நா.நி பிரதிநிதித்துவ வீதத்தின் மீதான பெறுமதியின்படி நிலுவை | 50,592,411 | | |
| ஆண்டு இறுதியிலுள்ள செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்ட செலாவணி பெறுமதியிடலிருந்தான இலாபம் | 3,996,319 | | |
| | **54,588,730** | **47,253,415** | **47,253,415** |
| **15. பெறத்தக்கவை** | | | |
| சிஎஉ உடைமைகள் மீது பெறத்தக்க வட்டி | 10,107 | 13,226 | 13,226 |
| சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டச் செலவுகளுக்கான உலக வங்கியின் மீள்நிதியளிப்பு | - | 1,007,284 | 1,016,427 |
| நிலையான வைப்புக்கள் மீது பெறத்தக்க வட்டி | 71,080 | 32,390 | |
| தங்க நிலுவைகளின்மீது பெறத்தக்க வட்டி | 6,832 | 8,715 | |
| நிலையான வங்கிக்கணக்குகளின் மீது பெறத்தக்க வட்டி | 1,799 | 2,695 | |
| அழைப்புக்கணக்குகள் - யூரோ , ஸ்டேர்லிங்பவுண் என்பனமீது பெறத்தக்க வட்டி | 1,228 | 11,558 | |
| | **91,046** | **1,075,868** | **1,029,653** |
| **உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள்** | | | |
| **16. வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களும் முறிகளும்** | | | |
| இலங்கை அரச திறைசேரி உண்டியல் | 52,859,539 | 62,385,731 | 59,455,392 |
| இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் (நேர்மாற்று மீள் கொள்வனவு) | - | 1,500,000 | 1,968,684 |
| | **52,859,539** | **63,885,731** | **61,424,076** |
| **17. அரசுக்கான கடன்கள்** | | | |
| சுழலும் கொடுகடன்கள் | 31,033,000 | 30,126,600 | 30,126,600 |
| சிறப்பு முற்பணங்கள் | - | - | 9,148,447 |
| | **31,033,000** | **30,126,600** | **39,275,047** |
| **18. ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்** | | | |
| வெளிநின்ற மூலதனம் | 2,656,684 | 2,733,095 | 2,733,095 |
| **கூட்டுக:** பெறத்தக்க வட்டி | 3,967,675 | 3,577,713 | 3,577,713 |
| மொத்தப் பெறுகைகள் | **6,624,359** | **6,310,808** | **6,310,808** |
| **கழிக்குக:** தொங்கற் கணக்கிலுள்ள வட்டி | (3,967,675) | (3,577,713) | (3,577,713) |
| ஐயக் கடனுக்கான ஒதுக்கு | (2,626,684) | (2,689,246) | (2,583,562) |
| | **30,000** | **43,849** | **149,533** |
| **19. பெறத்தக்கவை (உள்நாடு)** | | | |
| முற்கொடுப்பனவுகள் | - | 4,699 | |
| பல்வகைப் பெறுகைகள் | 3,533 | 15,145 | |
| தொகுதிக்கடன்கள்மீது பெறத்தக்க வட்டி | 38,898 | 38,898 | |
| மீளப் பெறத்தக்க அலுவலர் சேமநிதியம் | 1,153 | | |
| சீடா நிறுவனத்திடமிருந்து பெறத்தக்க தொகை | 2,561 | | |
| திறைசேரி - பங்கு மாற்றலிருந்தான பெறுகைகள் | 352,000 | | |
| ஏனையவை | | | 3,669,422 |
| | **398,145** | **58,742** | **3,669,422** |

| | 2002 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (இ.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) |
|---|---|---|---|
| **20. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் முதலீடு** | | | |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 160,000 | 512,000 | 512,000 |
| இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 20,000 | 20,000 | 20,000 |
| கொடுகடன் தகவல் பணியகம் | 12,372 | 12,463 | 12,463 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 26,250 | 26,250 | 26,250 |
| டப் அன்ட கெல்ப்ஸ் கிரடிட் ரேட்டிங் லிமிட் | 3,500 | 3,500 | 3,500 |
| என்.டி.பீ. வங்கி | 10,500 | | |
| லங்கா கிளியர் லிமிட் | 29,500 | | |
| **துணை மொத்தம்** | **262,122** | **574,213** | **574,213** |
| **பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட தொகுதிக்கடன்** | | | |
| ருகுணு அபிவிருத்தி வங்கி | 107,355 | 107,355 | **107,355** |
| கந்துரட்ட அபிவிருத்தி வங்கி | 44,817 | 44,817 | **44,817** |
| ரஜரட்ட அபிவிருத்தி வங்கி | 27,892 | 25,740 | **25,740** |
| வயம்ப அபிவிருத்தி வங்கி | 135,161 | 135,161 | **135,161** |
| சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி | 85,744 | 85,744 | **85,744** |
| **துணை மொத்தம்** | **400,969** | **398,817** | **398,817** |
| **மொத்தம்** | **663,091** | **973,030** | **973,030** |
| **21. சொத்தும் பொறிகளும் கருவிகளும்** | | | |
| காணியும் கட்டடமும் | 5,610,692 | 7,654,329 | 7,654,329 |
| உந்து ஊர்திகள் | 51,405 | 66,832 | 55,852 |
| அலுவலகத் தளபாடங்களும் கருவிகளும் | 169,695 | 127,872 | 127,872 |
| பொருத்திகளும் பொருத்துக்களும் | 34,886 | 34,547 | 34,547 |
| கணனிக் கருவிகள் | 37,508 | 75,120 | 75,120 |
| ஏஎஸ் 400 பிரதான கணனி | 16,476 | 25,132 | 25,132 |
| தன்னியக்கப்படுத்தப்பட்ட கருவி | 96,714 | 110,541 | 41,403 |
| ஓவியங்கள் | 3,964 | 3,637 | 3,637 |
| நூலகம் | 5,872 | 3,666 | 3,666 |
| செயற்பாட்டிலுள்ள கட்டடங்கள் | 494 | 494 | 494 |
| சுவிப்ட் | 64 | 64 | 64 |
| காணிக் கணக்கு | 2,183,060 | | |
| கழிக்குக: நிலையான சொத்துக்களுக்கான ஒதுக்கம் | (83,382) | (80,836) | |
| | **8,127,448** | **8,021,398** | **8,022,116** |
| **வெளிநாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| **22.கொடுபடத்தக்கவை (வெளிநாடு)** | | | |
| ப.நா.நி. கடன்கள் மீதான செலுத்தவேண்டிய வட்டியும் கட்டணங்களும் | 157,088 | 34,048 | 34,048 |
| கொடுபடத்தக்க வட்டி - ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் | 16,670 | 20,502 | 20,502 |
| உலக வங்கிக்கு கொடுபடத்தக்கது - சுயவிருப்பு ஓய்வூதியம் | 4,860 | | |
| வங்கிக் கணக்கிணக்க தீர்ப்பனவுக் கணக்கு | 60,122 | | |
| கொடுபடத்தக்க நிலையான சொத்துக்கள் | 110,970 | | |
| | **349,710** | **54,550** | **54,550** |
| **23.பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள்** | | | |
| அனுமதிப் பங்கு அதிகரிப்புக்கள் | 23,842,965 | 23,842,965 | 23,842,965 |
| சிஎஉ ஒதுக்குகள் | 8,636,908 | 8,087,212 | 8,087,212 |
| கடன்கள் | 27,787,088 | 19,462,579 | 19,462,579 |
| ஏனைய கணக்குகள் | 20,714,669 | 17,882,457 | 17,882,457 |
| ப.நா.நி பிரதிநிதித்துவ வீதங்களில் பெறுமதியிடப்பட்ட நிலுவை | **80,981,630** | **69,275,213** | **69,275,213** |
| ஆண்டு இறுதியிலுள்ள செலாவணி வீத அடிப்படையில் பெறுமதியிடப்பட்ட செலாவணிப் இழப்புக்கள் | 6,396,777 | | |
| | **87,378,407** | **69,275,213** | **69,275,213** |

| | 2002 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (ப.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) | 2001 (இ.க.நி முறை அடிப்படையில்) ('000 ரூபா) |
|---|---|---|---|
| **உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| **24.அரசு, அரச முயற்சிகளுடனான நிலுவைகள்** | | | |
| அரச வைப்புக்கள் | 200,749 | 4,562,948 | 4,301,022 |
| அரச் முகவராண்மைகள் | 568,256 | 9,346 | 9,346 |
| | 769,005 | 4,572,294 | 4,310,368 |
| **25.சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | | |
| நாணயத் தாள்கள் | 85,023,029 | 73,463,680 | 73,463,680 |
| குத்திகள் | 3,284,744 | 3,097,492 | 3,097,492 |
| | 88,307,773 | 76,561,172 | 76,561,172 |
| **26.ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| இடைநிறுத்தப்பட்ட கடன்கொடுத்தோர் | 16,316 | 245,915 | 5,040,157 |
| ஏனையோர் | 346,650 | 13,356 | 3,610,459 |
| | 362,966 | 259,271 | 8,650,616 |
| **27.மூலதனமும் ஒதுக்குகளும்** | | | |
| நாணயவிதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கியின் மூலதனம் ரூபா 15மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | 15,000 | 15,000 | 15,000 |
| பொது ஒதுக்கு | 36,771,696 | 22,304,283 | 17,775,880 |
| கட்டடத்துக்கான ஒதுக்கு | | | 4,562,739 |
| கொடுகடன் உத்தரவாதத்துக்கான ஒதுக்கு | | | 500,000 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925,000 | 4,925,000 | 4,925,000 |
| இலாப நட்டக் கணக்கு | 15,988,811 | 13,403,065 | 14,905,340 |
| மிகை | 985,000 | 985,000 | 985,000 |
| மூலதன உதவு தொகைக் கணக்கு | 577,859 | 577,859 | |
| பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | 3,675,000 | 14,789,347 | 19,723,526 |
| நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு க/கு | 662,382 | | |
| ஏனைய ஒதுக்குகள் | | | 1,438,694 |
| | 63,600,748 | 56,999,554 | 64,831,179 |

ப.க.நி - பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள்
இ.க.நி - இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுக்கு (ப.நி.அ.நி) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இவை பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் விளக்கக் குறிப்புக்கள், நடைமுறையிலிருக்கும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நிலைப்பாட்டு பன்னாட்டு குழுவின் விளக்கக் குறிப்புக்களை உள்ளடக்குகின்றது.

வங்கிக்கான நிதியியற் கூற்றுக்கள் தனியொரு கூறுக்கானதாக அமைந்துள்ளதுடன் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களின் கீழ் வேண்டப்பட்டவாறு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கான ஒன்று திரண்ட நிதியியற் கூற்றுக்களை உள்ளடக்கவில்லை. இலங்கை அரசு மற்றும் ஏனைய அரச கட்டுப்பாட்டு நிறுவனங்கள் சார்பாக சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கொண்டிருப்பதால் அல்லது வைத்திருப்பதால் வங்கி ஓர் முகவராக அல்லது ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற ரீதியில் பொதுவாகத் தொழிற்படுகிறது. பாதுகாவலனாக மற்றும் நிருவாக ஒழுங்குகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் நிருவகிக்கப்படும் அவ்வாறான சொத்துக்களும், பொறுப்புக்களும் வங்கியின் சொத்துக்களாகவும், பொறுப்புக்களாகவும் இல்லாததால் இதனுடனிருக்கும் நிதியியற் கூற்றுக்களில் அவை உள்ளடக்கப்படவில்லை.

## இ. கணக்கீட்டுக் கொள்கைகள் மீதான கூற்று

### (i) அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதித்தளம்

இவை, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமையின் நிருவாகம், கண்காணிப்பு, ஒழுங்கு மேற்பார்வை என்பவற்றிற்கு பொறுப்பான முகவராண்மையாக காலத்துக்காலம் திருத்தப்பட்ட 1949இன் 58ஆம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனமான இலங்கை மத்திய வங்கியின் ("வங்கி" அல்லது இ.ம.வ.) நிதியியற் கூற்றுக்களாகும். இவ் அறிக்கைகள் 2002 திசெம்பர் 31இல் முடிவடைந்த நிதியியல் ஆண்டிற்கு ஏற்புடையதாகும். அவை, பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையால் (ப.க.நி.ச) ஒப்புதலளிக்கப்பட்ட நியமங்களும், விளக்கக்குறிப்புகளும் மற்றும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் குழுவால் (ப.க.நி.கு) ஒப்புதலளிக்கப்பட்ட பன்னாட்டு, கணக்கீட்டு நியமங்கள் (ப.க.நி) மற்றும் நிலைப்பாட்டு விளக்கக்குறிப்புகள் குழுவின் விளக்கக்குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கிய பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடும் நியமங்களுக்கு இணங்கி, ஆனால் வங்கியினால் முழுமையாகவோ

அல்லது பகுதியாகவோ இணங்கி ஒழுகுவது சாத்தியமில்லாத பின்வரும் தேவைப்பாடுகளை தவிர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஐ.ஏ.எஸ் 7 : காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்
- ஐ.ஏ.எஸ் 27: ஒன்று திரட்டிய நிதியியற் கூற்றுக்கள்
- ஐ.ஏ.எஸ் 32: நிதியியற் கருவிகள்; வெளிப்படுத்தலும் வழங்குமுறையும்
- ஐ.ஏ.எஸ் 39: நிதியியற் கருவிகள்: இனங்காணலும் அளிவிடலும்

வங்கிக்கான நிதியியற் கூற்றுக்கள் தனியொரு கூறுக்கானதாக விளங்குவதால் பன்னாட்டு கணக்கீட்டு நிதியத்தின் கீழ் வேண்டப்பட்டவாறு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கான திரண்ட நிதியியற் கூற்றுக்களை உள்ளடக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் இந் நிதியியற் கூற்றுக்களை 24 பெப்புருவரி, 2003இல் வெளியிடுவதற்கு ஒப்புதலளித்தனர்.

**(ii) அளவீட்டுத் தளம்**

வேறுவிதத்தில் கூறப்படாதவிடத்து, அளவீட்டுத் தளம் வரலாற்று ரீதியான செலவாகும்.

**(iii) வழங்கும் முறையின் நாணயம்**

வேறு விதத்தில் கூறப்படாதவிடத்து சகல தொகைகளும் இலங்கை ரூபா ஆயிரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**(iv) வெளிநாட்டு நாணய மாற்று வீதங்கள்**

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற திகதியில் ஏற்புடையதான செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. வெளிநாட்டு நாணயத்திலான நிதியியற் சொத்துக்கள் மற்றும் நிதியியற் பொறுப்புக்கள், ஐந்தொகைத் திகதியில் ஏற்படையதாகவிருந்த செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடும் நோக்கங்களுக்காக, இலங்கை ரூபாவிற்கு வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மாற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான இலங்கை ரூபா நாணய வீதங்கள் பின்வருமாறு:-

| | 2002 | 2001 |
|---|---|---|
| யூரோ | 101.3823 | 82.2731 |
| ஸ்ரேலிங் பவுண் | 155.1227 | 135.0615 |
| இந்திய ரூபா | 2.0176 | 1.9308 |
| யப்பானிய யென் | 0.8164 | 0.7091 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 96.7252 | 93.1587 |
| சிறப்பு எடுப்பனவுஉரிமைகள் (சிஎஉ) | 131.50 | 121.8732 |

**(v) நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

வங்கி நிதிச் சொத்துக்களையும், பொறுப்புக் களையும் மற்றும் இணைந்த வருமானம் மற்றும் செலவுப் பாய்ச்சல்களையும், உள்நாட்டு நாணய மற்றும் வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகளிடையே வேறுபடுத்திக் காட்டுகின்றது. வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவ தொழிற் பாட்டால் ஏற்படுகிறது. உள்நாட்டு நாணயத் தொழிற் பாடுகள் முக்கியமாக நாணயக் கொள்கை அமுல்படுத்தல், வழங்கப்படும் நாணயத்தின் பெறுகைகளின் முதலீடு மற்றும் வங்கித் தொழிற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட சொத்துக்களையும், பொறுப்புக்களையும் பிரதிபலிக்கிறது.

வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு தோற்றத்தை சிறந்த முறையில் வழங்குவதற்காக, இச் செயற்பாடுகள் தனித்தனியாக அறிக்கையிடப்படுகிறது. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயத் தொழிற்பாடுகளின் இணைந்த அறிக்கையிடல், நிதியியற் கூற்றுக்களின் தகவல் பெறுமதியை நலிவுபடுத்துமென வங்கி கருதுகிறது.

சகல முதலீடுகளும் ஆரம்பத்தில் செலவு நியதிகளில் இனங்காணப்பட்டதுடன், இச் செலவு முதலீட்டுடன் இணைந்த கொள்வனவுக் கட்டணங்கள் உட்பட கொடுக்கப்பட்ட பெறுமதியின் நியாயமான பெறுமதியாக விளங்குகிறது. ஆரம்ப இனங்காணலின் பின்பு, தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைத் தளங்கள் கீழே தரப்பட்டுள்ளன. நிதியியற் சொத்துக்களின் சகல கிரமமான விற்பனைகளும் தீர்ப்பனவுத் திகதியைக் கொண்டு இனங் காணப்படுகின்றன. கிரமமான வழியிலான கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் பொதுவாக ஒழுங்குவிதிகளினால் அல்லது சந்தையின் மரபு வழிமுறையினால் நிறுவப்பட்ட கால வரையறையினுள் சொத்துக்களின் வழங்கலைக் தேவைப்படுத்தும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் அல்லது விற்பனைகளாகும்.

**(vi) வர்த்தகப்படுத்தப்படும் பிணையங்கள்-வெளிநாட்டு நாணயத்திலான சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்கள்**

வெளிநாட்டு நாணயத்திலான சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்கள் விலை குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிப்படப் படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள், ஐந்தொகையில் சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களின் பெறுமதியில் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சி யொன்றாகவோ கருதப்படுகிறது. வெளிநாட்டு நாணயத்திலான சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களின் சந்தைப் பெறுமதியிலான மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்களும், இழப்புக்களும் வருமானக் கணக்கில் இனங்காணப்படுகின்றன. பிணையம் இன்னும் சொந்தமாக இருக்கும்போது இலாபம் அல்லது நட்டம் பெறப்படாத விலை மீள் பெறுமதியிடலிலிருந்தான இலாபமாக (நட்டமாக) பதிவு செய்யப்படும். இலாபமோ நட்டமோ பெறப்படுமிடத்து (பிணையத்தை விற்பதன் மூலம்), அது விலை மாற்றங்களால் பெறப்பட்ட இலாபமாக (நட்டமாக) பதிவு செய்யப்படும்.

**(vii) வர்த்தகப்படுத்தப்படும் பிணையங்கள்-தங்கம்**

வெளிநாடுகளிலுள்ள இணைக்கினை நிறுவனங்களில் வைத்திருக்கப்படும் தங்கம் ஆரம்பத்தில் கிரயச்செலவில் குறிப்பிடப்பட்டுள்ளது. சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள், ஐந்தொகையில் தங்கத்தின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்படும்.

தங்கத்தின் சந்தைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்தெழும் இலாபங்களும், நட்டங்களும் வருமானக்கூற்றில் இனங்காணப்படும். தங்கம் இன்னும் சொந்தமாயிருக்குமிடத்து, இலாபமாகவோ நட்டமோ பெறப்படாத விலை மீள் பெறுமதியிடலிலிருந்தான இலாபமாக (நட்டம்) அறிவிக்கப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (தங்கத்தை விற்பதன் மூலம்), அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட இலாபமாக (நட்டமாக) அறிவிக்கப்படுகிறது.

**(viii) பன்னாட்டு நாணய நிதியத்திலுள்ள நிலுவைகள்**

வங்கி, இலங்கை அரசின் முகவராக செயற்படுவதை விட அதன் சொந்த உரிமையுடன் பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. இந்த அடிப்படையில் ப.நா.நிதியத்துடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இந் நிதியியற் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான அனுமதிப்பங்கு ஓர் சொத்தாக வங்கியால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்குக்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதியப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவுகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பொன்றாக கணிக்கப்படுகிறது. பன்னாட்டு நாணய நிதியத்தால் வெளியிடப்பட்டவாறு ஐந்தொகை திகதியிலான செலாவணி வீதத்தைப் பிரயோகித்து, பன்னாட்டு நாணய நிதிய சொத்துக்களினதும், பொறுப்புக்களினதும் மீள் பெறுமதியிடலிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்படும். சொத்துக்களும், பொறுப்புக்களும் இன்னும் சொந்தமாக இருக்குமிடத்து, இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படாத விலை மீள் பெறுமதியிடலிலிருந்தான (இலாபம்) நட்டமாக அறிவிக்கப்படும். இலாபமோ அல்லது நட்டமோ பெறப்படுமிடத்து (சொத்துக்கள் அல்லது பொறுப்பின் மீள்செலுத்தல் மூலம், அது விலை மாற்றங்களிலிருந்து பெறப்பட்ட (இலாபமாக) நட்டமாக அறிவிக்கப்படும்.

பன்னாட்டு நாணய நிதியத்துடனான நிலுவைகள் சம்பந்தப்பட்ட ஏனைய அனைத்து கட்டணங்களும் வட்டியும் வருமானக் கணக்கில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகிறது.

**(ix) மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்**

மீள்கொள்வனவுக்கான உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள், ஐந்தொகையில் சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களாக தொடர்ந்து பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) கடப்பாடு, பொறுப்பொன்றாக காட்டப்பட்டுள்ளது. மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்கும் இடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்கும் இடையேயான வேறுபாடும் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருமானக் கூற்றில் செலவாகக் காட்டும்.

நேர்மாற்று-மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கும் பிணையங்கள், ஐந்தொகையில் ஓர் சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன(மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்). மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள், வருமதியான ஏதாவது வருமானம் அல்லது சென்மதியானசெலவு என்பன கொடுக்கல் வாங்கல் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன.

**(x) முதலீட்டுப் பட்டியல்- இலங்கை அரசின் பிணையங்கள்**

வங்கியின் முதலீட்டுப் பட்டியல் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களை உள்ளடக்குகிறது. இப்பட்டியல், வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட கடன்களை பிரதித்துவப்படுத்துவதால், ஐந்தொகையில் கடன் கிரயச்செலவில் பதிவு செய்யப்படுகிறது.

**(xi) அரசுக்கான கடன்கள்**

அரசுக்கான கடன்கள், திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் நாணய விதிச்சட்டம் இலக்கம் 58இன் திருத்தப்பட்ட பிரிவு 89இன் கீழ் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட நேரடியான தற்காலிக முற்பணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**(xii) ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்**

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் இனங்காணப்பட்டு, வழங்கப்பட்ட ஆரம்ப தொகையிலிருந்து சேகரிக்க முடியாத தொகை ஏதாவது இருந்தால் அதைக் கழித்த பின்பு பேணப்படுகிறது. முழுத்தொகையும் அறவிடப்படுவது சாத்தியமற்றதாகின்றபோது ஐயக்கடன்களுக்கு மதிப்பீடொன்று செய்யப்படுகிறது. அறவிடமுடியாக் கடன்கள் இனங் காணப்படும்பொழுது அவை பதிவழிக்கப்படுகிறது.

**(xiii) வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள்**

வெளிநாட்டு நாணய நியதியிலான பொறுப்புக்கள், பொறுப்புக்களின் கடன் தீர்ப்பனவு கிரயச்செலவில் பதிவு செய்யப்படுகிறது. இப் பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஐந்தொகையில் நிலையான பொறுப்புக்களின் பெறுமதியின் அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ இனங்காணப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணய நிலையான பொறுப்புக்களின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்தான இலாபங்களும், நட்டங்களும் உடனடியாகவே வருமானக் கணக்கில் செலவுகளாக இனங்காட்டப்படுகின்றது. பொறுப்பு இன்னும் செலுத்தப்பட வேண்டியிருந்தால், இலாபமோ அல்லது நட்டமோ பெற்றுக்கொள்ளப்படாத விலை மீள்

பெறுமதியிடலிருந்தான (இலாபம்) நட்டமாக அறிவிக்கப்படுகிறது. இலாபமோ அல்லது நட்டமோ பெற்றுக்கொள்ளப்பட்டால் (பொறுப்புக்களின் மீள்செலுத்தல் மூலம்), அது விலை மாற்றங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட) நட்டமாகப் (இலாபம்) பதிவு செய்யப்படுகிறது.

**(xiv) நவீன நிதியியற் கருவிகள்**

நவீன நிதியியற் கருவிகளிலான வங்கியின் ஈடுபாடு முக்கியமாக முன்னோக்கிய வெளிநாட்டு செலாவணி ஒப்பந்தங்களைக் கொண்டிருக்கிறது. இத்துடன், நவீன நிதியியற் கருவிகள், தீர்ப்பனவுத்திகதி அடிப்படையில் கிரமமான வழியிலான கொள்வனவுகளுக்கான வங்கியின் கணக்கீட்டு நடைமுறை காரணமாக எழுந்ததாகும். அவ்வகையான நவீன நிதியியற் கருவிகள் நியாயமான பெறுமதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

இலாப நிலையிலுள்ள சகல நவீன நிதியியற் கருவிகளும், ஐந்தொகையிலுள்ள வெளிநாட்டு நாணய சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களின் நிலுவையினுள் பதிவு செய்யப்படுகின்றன. நட்ட நிலையிலுள்ள நவீன நிதியியற் கருவிகள் ஐந்தொகையில் நட்ட நிலையிலுள்ள நவீன நிதியியற் கருவிகளாகப் பதிவு செய்யப்படுகின்றன. நட்ட நிலையிலுள்ள நவீன நிதியியற் கருவிகள், எதிரீடு செய்யும் சட்ட உரிமை இருக்குமிடத்து, இலாப நிலையிலுள்ள நவீன நிதியியற் கருவிகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படுகின்றன.

**(xv) ஏனைய நிதியியற் சொத்துக்களும் பொறுப்புக்களும்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயக் காசு, வைப்புக்கள் மற்றும் குறுங்கால முற்பணங்கள் என்பன கொடுக்கல் வாங்கல் திகதியிலான பெறுமதியில் பெறுமதியிடப்படுகின்றன.

**(xvi) தங்க இருப்பு**

கூடிய திரவத்தன்மையைக் கொண்ட பண்டமான தங்கஇருப்பு கிரயச்செலவில் வைத்திருக்கப்படுகிறது.

**(xvii) இருப்புக்கள்**

இருப்புகள் குறைந்த கிரயச்செலவிலோ அல்லது விற்றுப்பெறக்கூடிய பெறுமதியிலோ வைத்திருக்கப் படுகின்றன. கிரயம் முதலில் வந்தது, முதலில் வெளிச்செல்லல் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப் படுகின்றது. மெதுவாக வெளிச்செல்லும் இருப்புக்களுக்கு ஒதுக்கம் செய்யப்படுகிறது.

**(xviii) சொத்து, பொறி மற்றும் கருவி**

சொத்து, பொறி மற்றும் கருவியின் சகல விடயங்களும் ஆரம்பத்தில் கிரயச்செலவில் பதியப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து காணியும் கட்டடங்களும் ஒவ்வொரு சொத்து அடிப்படையில் அவற்றின் நியாயமான பெறுமதிகளுக்கு மீள் பெறுமதியிடப் படுகின்றன. முன்கொண்டு செல்லும் தொகை ஐந்தொகைத் திகதியிலான அவற்றின் நியாயமான பெறுமதியிலிருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, போதிய மீள் பெறுமதியிடல் ஒழுங்குமுறைகளுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

மீள் பெறுமதியிடப்பட்ட மற்றும் கிரயச்செலவில் அளவிடப்பட்ட கொண்டு செல்லும் தொகைகள் இரண்டும் அவற்றின் மீளப்பெறக்கூடிய தொகையைவிட விஞ்சிய அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா எனவும் முன்கொண்டு செல்லும் பெறுமதிகள் இம் மீளப்பெற க்கூடிய அளவை விஞ்சியிருப்பின் அதன் சொத்துக்கள் பெறுமதி கழிக்கப்பட்டனவா என்பதை அறிவதற்கும் ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகிறது.

சொத்து ஒன்று மீள்பெறுமதியிடப்படுமிடத்து, முன்பு செலவினமாக இனங்காணப்பட்ட அதே சொத்து சார்ந்த முன்னைய மீள்பெறுமதியிடல் வீழ்ச்சியை மாற்றாதவிடத்து, முன்கொண்டுசெல்லும் அளவிலான எந்தவொரு அதிகரிப்பும் நேரடியாக மீள்பெறுமதியிடல் மிகைக்கு வரவுவைக்கப்படும். இச் சந்தர்ப்பங்களில் அதிகரிப்பானது, முன்பு பதிவழிக்கப்பட்ட அளவுக்குச் சமனான வருமானமாக இனங்காணப் பட்டுள்ளது. மீள்பெறுமதியிடலின் விளைவு காரணமாக சொத்தொன்றின் முன்கொண்டுசெல்லும் பெறுமதி வீழ்ச்சியடைந்தவிடத்து, அவ்வீழ்ச்சியானது அச்சொத்து தொடர்பான முன்னைய அதிகரிப்பை மாற்றாதவிடத்து செலவினமாக இனங் காணப்பட்டுள்ளது.

இங்கு இது தொடர்பான மீள்பெறுமதியிடல் மிகைக்கு எதிராக வீழ்ச்சியானது இச் சொத்து சார்பான மீள்பெறுமதியிடல் மிகையில் வைத்திருக்கும் தொகையை விஞ்சாதவிடத்து பற்றுவைக்கப்படும். சொத்து சார்பான மீள்பெறுமதியிடல் மிகையில் ஏதாவது மீதி எஞ்சியிருப்பின், சொத்துக்களை ஓய்வுறச்செய்தல் அல்லது விற்றலின்போது அது நேரடியாக பிடித்துவைத்திருக்கும் வருவாய்களுக்கு மாற்றப்படும்.

பெறுமானத்தேய்வு சொத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரு வாழ்வுக்காலத்தின் அடிப்படையில்

| | |
|---|---|
| கட்டடங்கள் | 2% |
| ஓவிய வேலை சேகரிப்புக்கள் | இல்லை |
| உந்து ஊர்திகள் | 10% |
| அலுவலக தளபாடம் மற்றும் கருவி | 10% |
| இணைப்புக்களும் தளபாடங்களும் | 10% |
| கணனிக்கருவி | 25% |
| தன்னியக்க கருவி | 20% |
| ஏஎஸ் 400 முதன்மைநிலைக்கணனி | 20% |

குறைந்து செல்லும் மீதி முறையில் பின்வரும் முதன்மை ஆண்டு வீதங்களைப் பயன்படுத்தி கணிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயலாற்றத்தின் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதர நன்மைகளை மீள ஏற்படுத்தவோ அல்லது பேணும்பொருட்டு சொத்து, பொறி மற்றும் கருவியின் திருத்தவேலைக்கோ அல்லது பேணலுக்கோ செலவிடப்பட்ட செலவினம், அது ஏற்பட்ட வேளையிலான செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**(xix) பெறக்கூடிய கணக்குகள்**

பெறக்கூடிய கணக்குகள், சந்தேகத்துக்கிடமான படுகடனுக்கான ஒதுக்கத்தை ஏற்படுத்திய பின்பு எதிர்பார்க்கப்படும் பெறப்படத்தக்க பெறுமதியில் முன்கொண்டு செல்லப்படுகிறது.

**(xx) நானாவிதச் சொத்துக்கள்**

நானாவிதச் சொத்துக்கள் எதிர்பார்க்கப்படும் விற்றுப் பெறப்படத்தக்க பெறுமதிகளில் முன்கொண்டு செல்லப்படுகின்றன.

**(xxi) ஏற்பாடுகள்**

கடந்தகால சம்பவமொன்றின் விளைவால், வங்கி தற்போதைய கடப்பாட்டை கொண்டிருக்குமிடத்து (சட்டரீதியான அல்லது அமைப்புரீதியான) ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு, பொருளாதார நன்மைகளை ஒன்றிணைக்கும் மூலங்களின் வெளிப்பாய்ச்சல், கடப்பாட்டை தீர்ப்பதற்கான தேவையை ஏற்படுத்தி, இக் கடமைப்பாட்டின் நம்பத்தகுந்த மதிப்பீடொன்றை ஏற்படுத்த முடியும். வங்கி, ஏற்பாடொன்று மீளளிக்கப்படுமென எதிர்பார்த்தால், மீளளித்தல் உண்மையில் நிச்சயமாக ஏற்பட்டால் மட்டுமே தனியான சொத்தொன்றாக மீளளித்தல் இனங்காணப்படுகிறது.

**(xxii) சுற்றோட்டத்திலுள்ள நாணயம்**

இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நாணயம் இதை வைத்திருப்போர் சார்பாக வங்கி மீது ஓர் கோரலைக் கொண்டிருக்கிறது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு ஐந்தொகையில், முகப்பு பெறுமதியில் பதிவு செய்யப்படுகிறது.

**(xxiii) ஊழியர்களுக்கான நன்மைகள்**

***ஓய்வூதியங்கள்***

வங்கி, 1998 சனவரி 01இற்கு முன் வங்கியில் சேர்ந்த நிரந்தரமான ஊழியர்களுக்கு நன்கு திட்டமிடப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் செயற்படுத்துகிறது. இவ் ஓய்வூதியத் திட்டம் 1998 சனவரி 1இலிருந்து வங்கியில் சேரும் புதிய ஊழியங்களுக்கு திறந்துவிடப்படவில்லை. இது பங்களிப்புச் செய்யாத ஓய்வூதியத் திட்டமாக விளங்கியதுடன், நன்மைகளுக்கான செலவு முழுமையாக வங்கியால் பொறுப் பேற்கப்படுகிறது. புறம்பாக நிர்வகிக்கப்படும் நிதியத்துக்கு வங்கியால் பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குவதற்கான செலவு எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் உண்மைப் பெறுமதி முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு தனியாளுக்கான திட்டத்திற்கான திரண்ட இனங்காணப்படாத உண்மை இலாபங்களோ அல்லது நட்டங்களோ வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் 10 சதவீதத்தினை விஞ்சுமிடத்தும் மதிப்பிடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியையும் விஞ்சுமிடத்து உண்மை இலாபங்களும் நட்டங்களும் இலாபமாகவோ, நட்டமாகவோ இனங்காணப்படுகின்றன. இவ் இலாபங்களோ அல்லது நட்டங்களோ இத் திட்டங்களில் பங்கேற்கும் ஊழியர்களின் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய வாழ்வுக் காலத்தின் சராசரியால் இனங் காணப்படுகின்றன.

***ஓய்வூதிய வெகுமதி***

வெகுமதி, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நன்மையளிக்கும் திட்டமாகும். வங்கி, ஓய்வூதியத் திட்டத்திற்கு தகைமை பெறாத ஊழியர்களுக்கு வெகுமதியைச் செலுத்துவதற்குப் பொறுப்பாக இருக்கிறது. இப்பொறுப்பை எதிர்கொள்ளும் பொருட்டு, பணியின் முதல் ஆண்டிலிருந்தே தகைமைக்குரிய ஒவ்வோர் ஊழியருக்கும் பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு பணி ஆண்டுக்கும், நிதியாண்டின் இறுதி மாதச் சம்பளத்தின் அரைவாசியை அடிப்படையாகக் கொண்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி, கணக்கிடப்பட்ட அளவிற்குச் சமமான தொகை ஐந்தொகையில் ஏற்பாடொன்றாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்த முன்னோக்கிக் கொண்டுவரப்பட்ட ஏற்பாடுகளுக்கும், ஆண்டினிறுதியில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாடுகளுக்குமி கிடையிலான வேறுபாடு வருமானக் கூற்றினுள் கையாளப் படுகிறது. வெகுமதிப் பொறுப்பு நிதியிடப்பட்டதோ அல்லது உண்மையாக பெறுமதியிடப்பட்டதோ அல்ல. இவ்விடயம், ஐந்தொகையில் ஏற்பாடுகளின் கீழ் குழுப்படுத்தப்பட்டுள்ளது.

***ஊழியர் சேமநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்***

ஊழியர்கள் தொடர்பான சட்டங்களுக்கும், விதிகளுக்கும் இணங்கும் வகையில் ஊழியர் சேமநிதிய பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புக்களுக்கும் தகுதியுடைவோராவர். வங்கியானது ஊழியரின் திரட்டிய சம்பளத்தில் ஊழியர் சேமநிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீத்தினையும் பங்களிப்புச் செய்கிறது. இந் நிதியங்கள் தனித்தனியாக நிர்வகிக்கப்பட்டு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட திட்டங்களாகும்.

**(xxiv) கொடைகள்**

கொடைகள் பெறப்பட்டு அவற்றுடனிணைந்த நிபந்தனைகள் ஓரளவிற்கு நம்பிக்கையை ஏற்படுத்துமிடத்து கொடைகள் அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டு, இதற்கு இசையும் கொடைகள் ஏதாவதிருந்தால் மூலதனத்தின் கீழ் காட்டப்படுகிறது. கொடைகள் செலவு விடயம் சார்பாக இருக்குமிடத்து, ஒழுங்கு முறையான அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கு கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை ஒத்திருப்பதற்குத் தேவையான காலப்பகுதியிலான வருமானக் கணக்கில் இனங்காணப்பட்டுள்ளது.

**(xxv) ஆளணிச் செலவுகள்**

ஆளணிச் செலவுகள் சகல அலுவலர் நன்மைகளின் முழுச்செலவை உள்ளடக்குகிறது. சம்பளங்கள் மற்றும் ஆண்டிறுதியில் ஒன்று சேர்ந்த விடுப்புகளும், ஐந்தொகையில் பதிவு செய்யப்படுகின்றன.

**(xxvi) தொழிற்பாட்டிலுள்ள குத்தகைகள்**

வங்கிக் குத்தகை தாரராக இருக்குமிடத்து, தொழிற்படு குத்தகைகள் மீது செலுத்தத்தக்க வாடகைகள், குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளுடன் இசைந்து செல்லும் அடிப்படையில் குத்தகையின் தவணையைக் கருத்தில்கொண்டு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகிறது.

**(xxvii) வருமானவரி**

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் உட்பட்ட எந்த வைப்புப்பணம் மீது வங்கியால் செலுத்தப்

படக்கூடிய அல்லது அனுமதிக்கக்கூடிய வட்டி தவிர்ந்த வங்கியின் வருமானம், 2000ஆம் ஆண்டின் எண் 38 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் 8(அ)xxii பிரிவின் கீழ் வரியிலிருந்து விளக்களிக்கப்பட்டுள்ளது. 2002இன் 10ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை (திருத்தம்). சட்டத்தின்படி அவ்வாறான வட்டியோ அல்லது செலுத்தத்தக்க கழிவிடலோ செலுத்தப்படும் நேரத்திலோ அல்லது அவ்வாறான வட்டிகளை வரவு வைக்கும் நேரத்திலோ 10சதவீத பிடித்துவைக்கும் வரிக்கு உட்பட்டுள்ளது.

**(xxviii) நிருவாகத் தொழிற்பாடுகள்**

பாதுகாவலனாகவும், நிருவாக ஒழுங்குகளின் கீழும் இலங்கை மத்திய வங்கியால் நிருவகிக்கப்படும் சொத்துக்களும் பொறுப்புக்களும் இந் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.

**(xxix) வருமானமும் செலவினங்களும்**

வருமானமானது வங்கிக்கு பொருளாதார நன்மைகளை கொண்டுவருமொன்று என இனங் காணப்பட்டுள்ளதுடன் அவ் வருமானத்தை நம்பத்தக்க முறையில் அளவிடலாம். வருமானக் கூற்றில் இனங் காணப்பட்டுள்ள செலவினங்கள் ஏற்பட்ட செலவுக்கும் வருமானத்தின் விசேட விடயங்களின் வருவாய்க்கும் இடையேயான நேரடி இணைப்பின் அடிப்படையில், ஏற்பட்டதாகும். வியாபாரத்தை நடாத்துவதில் ஏற்பட்ட சகல செலவும், சொத்து, பொறி மற்றும் கருவியை வினைத்திறனுடன் பேணுவதற்கான செலவும், ஆண்டிற்கான இலாபத்தை கணிக்கும்போது வருமானத்தில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

வருமானத்தையும், செலவினங்களையும் இனங்காண முன்பு பின்வரும் குறித்துரைக்கப்பட்ட இனங்காணும் பிரமாணங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

***வட்டி***

உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி கொடுபட வேண்டிய அடிப்படையில் வட்டியைக் கொண்டிருக்கும் சகல கருவிகளுக்கான வட்டி வருமானமும் செலவினமும் வருமானக் கணக்கில் இனங் காணப்பட்டுள்ளது. வட்டி வருமானம் நிலையான வருமான முதலீடு மற்றும் வர்த்தகம் செய்யப்படும் பிணையங்கள் என்பன மீதான நறுக்கிலிருந்தான வருவாய்களையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகள் மீது கொடுபட வேண்டிய கழிவுகளையும் கட்டுப்பணத்தையும் உள்ளடக்குகிறது. கடன்கள் சேகரிக்கப்படுதல் நிச்சயமற்றிருந்தால் வட்டி வருமானம் இடைநிறுத்தப் படுகின்றதுடன் அவ் வருமானம் அது பெறப்படும் வரைக்கும் வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

***பங்கிலாபங்கள்***

பங்குதாரர்கள் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை ஸ்தாபிக்கப்பட்டவுடன் பங்கிலாபம் இனங் காணப்படுகிறது.

***பலதரப்பட்டவை***

பலதரப்பட்ட வருமானமும், செலவுகளும் கொடுபட வேண்டிய அடிப்படையில் இனங் காணப்படும்.

சொத்து, பொறி மற்றும் கருவியின் விற்பனவு மீதான வருமானத் தன்மையின் தேறிய இலாபங்களும் நட்டங்களும் விற்பனவு மூலம் பெற்ற பெறுகையிலிருந்து சொத்து கொண்டுள்ள பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக் கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளன. மீளப் பெறுமதியிடப் பட்ட சொத்து மற்றும் பொறி கருவியின் விற்பனவின்போது இச் சொத்து சார்பாக மீளப் பெறுமதியிடல் ஒதுக்கில் எஞ்சியிருக்கும் தொகை நேரடியாக திரண்ட இலாபத் திற்கு மாற்றப்படுகிறது.

தற்செயலான நடவடிக்கைகள் மற்றும் பிரதான வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் என்பன வற்றிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் குறிப்பிடதக்களவில் இல்லாத அவ்வாறான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகிறது.

**(xxx) பிரிவுரீதியான அறிக்கையிடல்**

வங்கி நிதியியற் சொத்துக்களையும், நிதியியற் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளுக்கிடையே வேறுபடுத்தி வெளிப்படுத்துகிறது. இவ் அறிக்கையிடும் அணுகுமுறை, கீழே பெருமளவு முழுமையாகக் காட்டப்பட்டுள்ள வங்கியின் நடவடிக்கைகளை உரிய பிரிவுரீதியில் அறிக்கையிடுதலை வழங்குவதாக வங்கி கருதுகிறது.

**(ஈ) நடவடிக்கைகளின் தன்மையும் அளவும்**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை திருத்தப்பட்டவாறான 1949இன் 58ஆம் இலக்க நாணயச்சட்டத்தின் கீழ் எடுத்த அல்லது பின்பற்று வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளை நிர்ணயிப்பதற்கு மேலதிகமாக மத்திய வங்கி தொழிற்பாடுகள், அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை கொண்டுள்ளதுடன் வங்கியின் முகாமை தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகத்திற்கும் பொறுப்பாகவிருக்கும். வங்கி, இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறையின் நிருவாகம், கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு முக்கியமாக பொறுப்பாக விளங்கியதுடன், அரசின் இறை முகவராகவும் தொழிற்படுகிறது. வங்கியின் தொழிற்பாடுகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

- நாணய மற்றும் செலாவணி வீதக்கொள்கைகளை அமுல்படுத்தல்.
- நாணயத்தை வெளியிடல்.
- சுதந்திரமான போட்டித்தன்மையையும் நிதியியல் முறையின் உறுதிப்பாட்டையும் ஊக்குவித்தல்.
- வரைவிலக்கணம் செய்யப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கலும் கண்காணித்தலும்.

- வங்கிகளுக்கிடையேயான தீர்ப்பனவு முறையை ஒழுங்கு செய்தலும் முகாமைப்படுத்தலும் மற்றும் கொடுப்பனவு முறையின் சுமுகமான தொழிற்பாட்டை ஊக்குவித்தலும்.
- பலதரப்பட்ட வசதிகளின் கீழ் அரசு, வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்கல்.
- அரசுடனும் அரசின் சார்பில் தொழிற்படும் முகவர்களுடனும் விசேட ஒழுங்குமுறைகளின் கீழ் அரசின் வைப்பாளராகத் தொழிற்படல்.

இலங்கையின் உற்பத்தியாற்றல்மிக்க மூலவளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்குடனும், முன்னேற்றும் பொருட்டும் அதன் பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு நோக்கங்களை எய்தும்பொருட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றை வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணயத் தொழிற்பாடுகளாக பரந்தளவில் வேறுபடுத்தமுடியும்.

## வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள்

வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவ தொழிற்பாட்டின்கீழ் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை வைத்திருப்பதன் மூலம் முக்கியமாக ஏற்படுகிறது. வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவப் பட்டியல், வெளிநாட்டு செலாவணி தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் (வெளிநாட்டு ஒதுக்குகள்) வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கும் ஏனைய வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.

வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் பலதரப்பட்ட நாணயங்களில் வைத்திருக்கப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை ஐக்கிய அமெரிக்க டொலர்கள், யூரோ, ஸ்ரேலிங் பவுண் மற்றும் யப்பானிய யென்னில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. இவ் வெளிநாட்டு நாணயப் பட்டியல்களிடையே உள்ளடக்கப்பட்டுள்ள நிதியியல் கருவிகள் முக்கியமாக வேறு நாடுகளினது பிணையங்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வைத்திருக்கப்பட்ட பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் தீர்ப்பனவு நிறுவனங்களுடன் வைத்திருக்கப்பட்ட நிலுவைகள் என்பவற்றை உள்ளடக்குகிறது.

இலங்கை மத்திய வங்கி காலத்துக்குக்காலம் உள்நாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வைத்திருக்கின்றது.

அதன் வெளிநாட்டு நாணயத் தொழிற்பாடுகளின் செயல்திறன்மிக்க முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது. மீள்கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் வங்கியால் விற்கப்பட்ட பிணையங்கள், வங்கியின் ஐந்தொகையில் சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களாக தொடர்ந்து பதிவு செய்யப்படுகிறது. இக் கொடுக்கல் வாங்கல்கள் வங்கியின் ஐந்தொகையில் மீள்கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்ட பிணையங்களுக்கான பொறுப்பொன்றாகவும் இனங்காட்டப்படுகின்றது. வங்கி, அதன் உள்நாட்டு நாணயத் தொழிற்பாட்டில் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் பிணையங்களையும் கொள்வனவு செய்கிறது.

## உள்நாட்டு நாணயத் தொழிற்பாடுகள்

உள்நாட்டு நாணயத் தொழிற்பாடுகள் பின்வருமாறு எழுகின்றன.

(i) திரவத்தன்மை முகாமைத் தொழிற்பாடுகள் திரவத்தன்மை முகாமைத்துவம், வங்கித்தொழில் முறைக்கு நிதியங்களை முற்பணமாக வழங்கல் மூலம் அல்லது வங்கித்தொழில் முறையிலிருந்து நிதியங்களை மீளப்பெறல் மூலம் அரசுக்கான நாளாந்த தேறிய பாய்ச்சல்களையும் அல்லது அரசிடமிருந்தான தேறிய நாளாந்தப் பாய்ச்சலை இலங்கை மத்திய வங்கி எதிரீடு செய்தலுடன் பெருமளவிற்கு சம்பந்தப்படுகிறது. இக் கருமங்களில் அநேகமானவை நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுடாக மேற்கொள்ளப்படுகின்றது.

(ii) சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பிற்கு உதவுவதற்காக இலங்கை அரச பிணையங்களை உள்ளடக்கிய முதலீட்டு பட்டியலொன்றை கொண்டிருத்தலும் இலங்கை மத்திய வங்கியின் தேறிய மூலதனத்தின் முதலீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தலும். வங்கியின் கொள்கை, நாணயத் தொழிற்பாடுகளுக்காக இம் முதலீடுகளை வைத்திருப்பதாகும்.

## 2. சொத்துக்கள்/ பொறுப்புக்கள் 2002

2002 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்களும் பொறுப்புக்களும், 2001 இறுதியிலான ரூ262.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.304.2 பில்லியனாக விளங்கி ரூ.41.6 பில்லியன் அல்லது 15.8 சதவீத அதிகரிப்பை 2002இல் பிரதிபலித்தன. வங்கியின் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டு நிதிச் சொத்துக்களிலான அதிகரிப்புக்களில் (ரூ.51.8 பில்லியனால்) பிரதிபலிக்கப்பட்டது. எனினும், வங்கியின் உள்நாட்டு நிதியியல் மற்றும் ஏனைய நானாவிதச் சொத்துக்கள் ரூ.10.2 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. இது, திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளிலான ரூ.9.5 பில்லியன் கொண்ட வீழ்ச்சியினதும், நேர்மாற்று மீள்கொள்வனவில் ஏற்பட்ட ரூ.1.5 பில்லியன் கொண்ட வீழ்ச்சியினதும் அரசுக்கான கடன்களில் ஏற்பட்ட ரூ.1.0 பில்லியன் கொண்ட அதிகரிப்பினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும்.

வங்கியின் பொறுப்புக்களில் (ரூ.41.6 பில்லியன்) ஏற்பட்ட அதிகரிபப்பு, வெளிநாட்டு நிதியியற் பொறுப்புக்கள் (ரூ.21.5 பில்லியனால்), சுற்றோட்டத்திலுள்ள நாணயம் (ரூ.11.8 பில்லியனால்), உள்நாட்டு நிதியியற் பொறுப்புக்கள் (ரூ.2.9 பில்லியனால்), ஏனைய பொறுப்புக்கள் (ரூ.1.2 பில்லியனால்), மூலதனமும் ஒதுக்குகளும் (ரூ.6.6 பில்லியனால்) என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டது.

## (அ) சொத்துக்கள்

### (i) வெளிநாட்டு நிதியியற் சொத்துக்கள்

வங்கியின் மொத்தச் சொத்துக்களின் 68.6 சதவீதத்திற்கு வகைகூறும் சொத்துக்களின் மிகப்பெரிய வகையைக் கொண்டிருந்த வெளிநாட்டு நிதியியற் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் மட்டத்துடன் ஒப்பிடுகையில், 2002இல் 33 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்வதிகரிப்பானது, பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஒழுங்குகள் வசதியின் கீழ் பெறப்பட்ட மீள்கொடுப்பனவுகளும் வட்டியும் நீங்கலாக இரண்டாம், மூன்றாம் தவணைமுறைத் தேறிய பெறுகைகள் (ஐ.அ.டொலர் 86 மில்லியன்), வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர்களின் தேறிய கொள்வனவுகள் (ஐ.அ.டொலர் 177 மில்லியன்), அரசால் திரட்டப்பட்ட மூலதன மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகளுக்கான தொகை நீங்கலாக பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் பெறுகை (ஐ.அ.டொலர் 16 மில்லியன்), அரசு சார்பாக மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளுக்கெதிரான வெளிநாட்டுச் செலாவணியின் பெறுகை (ஐ.அ.டொலர் 92 மில்லியன்) மற்றும் இவ்வாண்டில் முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமானத்தேய்விலிருந்து எழும் வெளிநாட்டுச் சொத்துக்களின் ரூபாப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பின் பகுதியளவு காரணத்தாலும் ஏற்பட்டது.

வங்கியின் வர்த்தகப்படுத்தல் பிணையங்களின் (வெளிநாட்டு நிதியியற் சொத்துக்கள்) பெறுமதி, இவ்வாண்டில் வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்களிலான பிணையங்களினதும் முதலீட்டினதும் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 33 சதவீதத்தால் அதிகரித்தது.

### (ii) உள்நாட்டு நிதியியற் சொத்துக்கள்

வங்கியின் மொத்தச் சொத்துக்களில் 28 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டு நிதியியற் சொத்துக்கள், திறைசேரி உண்டியல்களும் முறிகளும் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவும், அரசுக்கான கடன்களும் முறையே ரூ.11.0 பில்லியனாலும், ரூ.0.9 பில்லியனாலும் வீழ்ச்சியடைந்ததன் முக்கிய காரணத்தினால் 2001 இன் ரூ95.1 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.85.0 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகளும் கீழே விவரிக்கப்பட்டவாறு ரூ.300 மில்லியனால் வீழ்ச்சியடைந்தன.

### *நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான முதலீடுகள்*

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க இலங்கை நாணய விதிச்சட்டம் இலங்கை மத்திய வங்கி வர்த்தகத்தில் ஈடுபடுவதையோ அல்லது ஏதாவது வர்த்தக, கைத்தொழில் அல்லது ஏனைய நிறுவனங்களில் நேரடி நலவுரித்துக்களை கொண்டிருப்பதனையோ அல்லது அதன் வழமையான வாணிப நடவடிக்கைகளில் ஏனைய வங்கித்தொழில் நிறுவனங்களின் பங்குகளைக் கொள்வனவு செய்வதனையோ தடை செய்கிறது. எனினும் நாணயச்சபையின் நோக்கில், வங்கித்தொழில் மற்றும் நிதியியற்துறையில் மனிதவள மூலவளங்களையும் தொழில்நுட்ப அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளுக்கிடையே கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவை இலகுபடுத்துவதற்குமாக ஏதாவது கம்பனி நிறுவப்படுமிடத்து அக்கம்பனிகளிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு இச்சட்டம் அங்கீகாரமளிக்கிறது. மேலும், பிரதேச அபிவிருத்தி வங்கிகள (பி.அ.வ), தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ.), கொடுகடன் தகவல் பணியகம் (கொ.த.ப), மற்றும் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் (இ.ஏ.கொ.கா.கூ) என்பவற்றுடன் தொடர்புபட்ட குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்கள் வங்கி முறையே பி.அ.வ, தே.அ.வ, கொ.த.ப மற்றும் இ.ஏ.கொ.கா.கூ என்பவற்றின் பங்குகளில் முதலீடு செய்ய வழிவகுத்தன.

மேலுள்ள தேவைகளின் அடிப்படையில் வங்கி பின்வரும் முதலீடுகளைக் கொண்டிருக்கிறது

| கம்பனி | வாணிபம் | கொண்டிருக்கும் உடமை% 2002 | 2001 | ஆண்டு முடிவில் |
|---|---|---|---|---|
| வ.ப. றுகுணு அ.வங்கி | அ.வ.தொ | 20 | 68 | திசெ.31 |
| வ.ப. றஜரட்ட அ.வங்கி | அ.வ.தொ | 20 | 52 | திசெ.31 |
| வ.ப. கந்துரட்ட அ.வங்கி | அ.வ.தொ | 20 | 68 | திசெ.31 |
| வ.ப. வயம்ப அ.வங்கி | அ.வ.தொ | 20 | 68 | திசெ.31 |
| வ.ப. சப்ரகமுவ அ.வங்கி | அ.வ.தொ | 20 | 68 | திசெ.31 |
| வ.ப. ஊவா அ.வங்கி | அ.வ.தொ | 20 | 52 | திசெ.31 |
| வ.ப.இலங்கைஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி.கூ | ஏற்று.கொ.கா கொடு. | 67 | 67 | திசெ.31 |
| வ.ப. இலங்கை கொடுகடன் தகவற் பணியகம் | கொ.தகவல் வழங்கல் | 50 | 50 | திசெ.31 |
| வ.ப தே.அ.வங்கி | அபி.நிதியிடல் | 5 | 5 | திசெ.31 |
| வ.ப. இலங்கை பிச் ரேற்றிங் | கொடு.தரமிடல் | 10 | 10 | திசெ.31 |
| வ.ப.லங்காகிளியர் | தன்னியக்கமாக்கப்பட்டதீர்ப்பனவு | 20 | - | மாச்.31 |
| வ.ப. என்.டி.பீ வங்கி | வர்த்தகவங்கி | 2 | - | திசெ.31 |

வங்கியால் வைத்திருக்கப்படும் முதலீடுகளின் பொதுவான உள்ளடக்கம் வருமாறு

| | 2002 ரூ.000 | 2001 ரூ.000 |
|---|---|---|
| துணைக்கம்பனியின் பங்குகளிலான முதலீடு (பிரதேசஅபிவிருத்தி வங்கிகள் உட்பட) | 180,000 | 532,000 |
| துணைக்கம்பனிகளின் தொகுதிக்கடனிலான முதலீடு | 400,969 | 398,817 |
| இணைக்கம்பனிகளின் பங்குகளிலான முதலீடுகள் | 12,372 | 12,463 |
| பங்குகளிலான ஏனைய முதலீடுகள் | 69,750 | 29,750 |
| | **663,091** | **973,030** |

எதிர்காலத்தில் துணைக்கம்பனிகளிலுள்ள முதலீடுகளை விற்பனை செய்வது வங்கியின் நோக்கமாதலால், இம் முதலீடுகள் துணைக்கம்பனிகளாக திரட்டப்படவில்லை. பதிலாக, அவை ஐந்தொகையில் பெறப்பட்ட செலவில் பதியப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்ட உரிமை மாற்றலின் அமுலாக்கத்தில், வங்கியால் உடமையாக வைத்திருக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் மூலதனப் பங்குகளின் ஒரு பகுதியை உரிய

விதத்தில் அரச தொழில்முயற்சிகள் மறுசீரமைப்புக்குழு மூலம் விற்பனை செய்வதற்காக அரசுக்கு மாற்றுவதற்கு 2002 திசெம்பர் 29ஆம் திகதியன்று நாணயச்சபை ஒப்புதலளித்தது. நிதியமைச்சின் செயலாளர் 2002 திசெம்பர் 16 திகதியிடப்பட்ட அவரது கடிதத்தின் மூலம் அவ்வாறான ஒப்புதலுக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லையெனத் தெரிவித்துள்ளார். இதன்படி, பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் பங்கு மூலதனத்திலான முதலீடுகளின் உடமைகள், 20 சதவீதத்துக்கும் மேலாக வைத்திருக்கப்பட்ட பங்குகளை பொது திறைசேரியின் பெயருக்கு ரூ.352 மில்லியன் கொண்ட விற்பனை பெறுமதிக்கு மாற்றல் செய்ததன் மூலம், 20 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது.

## (ஆ) பொறுப்புக்கள்

### (i) வெளிநாட்டு நிதியியற் பொறுப்புக்கள்

வெளிநாட்டு நிதியியற் பொறுப்புக்கள், வங்கியின் மொத்தப் பொறுப்புக்களின் 33.1 சதவீதத்திற்கு வகை கூறுகின்றன. 2002இல் பன்னாட்டு நாணய நிதி சார்ந்த பொறுப்புகக்ள், பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான துணைநில் ஒழுங்குமுறைகள் வசதியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் பெறுகைகள் காரணமாகவும் வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்களின் மீள்பெறுமதியிடல் பெறப்பட்டதன் காரணமாகவும் ரூ.18.1 பில்லியனால் அல்லது 26 சதவீதத்தினால் அதிகரித்தன.

### (ii) உள்நாட்டு நிதியியற் பொறுப்புக்கள்

மொத்தப் பொறுப்புக்களில் 16.6 சதவீதத்திற்கு வகைகூறும் உள்நாட்டு நிதியியற் பொறுப்புக்கள் இவ்வாண்டில் ரூ.2.9 பில்லியனால் அல்லது 6 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டு நிதியியற் பொறுப்புக்களின் அதிகரிப்பிற்கு வர்த்தக வங்கி வைப்புக்கள் ரூ.2.1 பில்லியனாலும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் (மீள்கொள்வனவு உடன் படிக்கைகள்) ரூ.8.4 பில்லியனாலும் அதிகரித்தமையே காரணமாகும்.

### (iii) ஏனைய பொறுப்புக்கள்

வங்கியின் மொத்தப் பொறுப்புக்களில் 29.3 சதவீதத்திற்கு வகைகூறும் பொறுப்புக்களின் மிகப்பெரிய வகையாக ஏனைய பொறுப்புக்கள் அமைகின்றன. ஏனைய பொறுப்புக்களினுள் முக்கிய விடயமாக விளங்கும் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 2001 இன் ரூ.76.6 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.88.3 பில்லியனுக்கு ரூ.11.7 பில்லியனால் அல்லது 15.3 சதவீதத்தால் அதிகரித்தது. மூலதனமும் ஒதுக்குகளும் 2001இன் ரூ 57 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.63.6 பில்லியனுக்கு ரூ.6.6 பில்லியனால் அல்லது 11.6 சதவீதத்தால் அதிகரித்தன.

## (இ) வருமானம்

இவ்வாண்டில் தொழிற்பாட்டு வருமானம் (வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் ரூ.19.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.20 பில்லியனாக விளங்கியது. இத் தேறிய தொழிற்பாட்டு வருமானத்தின் பெரும்பாகமான ரூ.6.8 பில்லியன் வங்கியின் உள்நாட்டு நிதியியல் தொழிற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி மற்றும் இலாபங்களிலிருந்து பெறப்பட்டதாகும். இது முன்னைய ஆண்டின் ரூ.12.2 பில்லியனுடன் ஒப்பிடத்தக்கதாகும். இம் முனைப்பான வீழ்ச்சியானது, வங்கியால் வைத்திருக்கப்பட்ட பிணையங்களின் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட குறைந்த அளவினதும், இவ்வாண்டில் நிலவிய ரூபா வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினதும் இணைந்த விளைவால் ஏற்பட்டதாகும்.

எனினும், வெளிநாட்டு நிதியியற் தொழிற்பாடுகளிலிருந்தான மொத்த வருவாய்களின் பங்கு முன்னைய ஆண்டின் ரூ.6.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.12.8 பில்லியனாக விளங்கியது. இவ் அதிகரிப்பானது, பல முக்கிய நாணயங்களின் குறை வடைந்து செல்லும் வட்டி வீதங்களிலான போக்குடன் இணைந்ததாக சந்தை விலைகளில் மேல்நோக்கிய போக்கைக் கொண்டிருந்த நிலையான வட்டியைக் கொண்டிருக்கும் வெளிநாட்டுப் பிணையங்களை வர்த்தகம் செய்வதன் மூலம் கிடைத்த வருமானத்தால் ஏற்பட்டதாகும். இவ்வாண்டின் இறுதியில், வங்கியிடமிருந்த வெளிநாட்டுப் பிணயைங்களின் சந்தைப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு கணிசமானதாக அமைந்து முன்னைய ஆண்டின் ரூ.1.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.8 பில்லியன் (ப.க.நி அடிப்படையில்) கொண்ட பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானத்தை தோற்றுவித்தது. இதுபோலவே, இவ்வாண்டில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் இணைந்த செலாவணி வீதங்களிலான மாற்றங்களிலிருந்து எழும் இலாபங்கள் மற்றும் இழப்புக்கள் சார்பாகவும் மற்றும் ஆண்டு இறுதியில் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப் பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதியினை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதாலும் இனங்காணப்பட்ட தேறிய வருமானம், முக்கிய நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமதி தேய்வடைந்ததன் காரணமாக முன்னைய ஆண்டின் ரூ.0.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.3.5 பில்லியனாக விளங்கியது.

## (ஈ) செலவினம்

வங்கியின் மொத்தத் தொழிற்பாட்டு செலவினம் 2001இன் ரூ.5.82 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.3.46 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து, 40 சதவீத வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. அநேகமாக சகலதுறையிலும் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, நிருவாகச் செலவு 2001இன் ரூ.4.86 பில்லியனிலிருந்து ரூ.2.06 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இது பெரும்பாலும் சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டத்தின் காரணமாக சம்பளப் பட்டியலில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் (ரூ.0.4 பில்லியன்) உண்மையான மதிப்பிடலைத் தொடர்ந்து குறைந்த ஓய்வூதியப் பங்களிப்புக்களினாலும் (ரூ.0.15 பில்லியன்) விளக்கப்படுகிறது. நிர்வாகமல்லாத் துறையிலான பாரிய அளவிலான படிப்படியான குறைவு ப.க.நி தத்துவங்களின் கீழ் வேண்டப்பட்டவாறு வங்கியின் சொத்துப் பெறுமதியிடலில் ஏற்பட்ட ரூ.0.72 பில்லியன் கொண்ட வீழ்ச்சிக்கு ஒதுக்கம் செய்யவேண்டிய தேவையிலிருந்து ஏற்பட்டதாகும்.

## (உ) பொதுவானவை

வங்கி, பொதுப்பேரேட்டு முறைகள் மற்றும் இது சார்ந்த துணை முறைகளில் விரிவான கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம்

அதன் நிதியிடல் அறிக்கையிடும் அமைப்பை தரமுயர்த்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்கிறது. வங்கிகளுக்கிடையேயான அதேநேரத்தில் தீர்ப்பனவு செய்யும்முறை, மற்றும் உள்நாட்டுப் பிணையங்களுக்கான (பத்திரங்களற்றவை) வைப்பக முறையும், நிதியியல் அறிக்கையிடும் முறையில் உடனடியாகப் பூரணப்படுத்தலை வழங்குவதற்காக, பொதுப்பேரேட்டு முறையுடன் இணைக்கப்படவிருக்கிறது. இம் முன்னேற்றங்கள் ஒரு பக்கத்தில் நிதியியல் இடர் நேர்வுக்குள்ளாவதை முகாமைப்படுத்துவதற்கான வங்கியின் இயலுந்தன்மையை பலப்படுத்துவதற்கும், மறுபுறத்தில் நிதியியற் கூற்றுக்கள் சார்பாக நியமங்கள், அறிக்கையிடல், மற்றும் தெரியப்படுத்தல் என்பன உட்பட கணக்கீடு மற்றும் நிதித்துறையில் சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன் இசைந்து செல்வதற்கு மாகும்.

## கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

2001ஒகத்தில் நாணயச்சபையின் கணக்காய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவானது நாணயச்சபையின் நியமன உறுப்பினர் திரு.சி.சண்முகம் (கண்காய்வுக்குழுவின் தலைவர்) திரு.ஜி.சி.பீ. விஜேசிங்க மற்றும் திரு. ஜே. மேதர் ஆகிய மூன்று உறுப்பினர்களை உள்ளடக்குகிறது. ஆளுநரின் உதவியாளர் முனைவர் ஆர்.ஜயமகா குழுவின் செயலாளராகத் தொழிற்படு கின்றார்.

மத்திய வங்கியின் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, தற்போதுள்ள நிதியியல் அறிக்கையிடும் மாதிரியைஆய்வு செய்வதற்கும் கம்பனி ஆளுகையின் சிறந்த நடைமுறைகளைப் பிரதிபலிப்பதற்காகவும் கணக்காய்வுக்குழு நிறுவப்பட்டது. கணக்காய்வுக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள்:

(அ) துல்லியமானதும், பொருத்தமானதுமான தகவல்களை நாணயச்சபைக்கும் பொது மக்களுக்கும் சரியான நேரத்தில் வழங்கும் பொருட்டு, பன்னாட்டு ரீதியில் ஏற்றுக் கொள்ளப் பட்ட நிதியியல் அறிக்கையிடும் முறையினை நிறுவுவதிலும் முகாமைப்படுத்துவதிலும் நாணயச் சபைக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் மதியுரை வழங்குவதும் உதவுவதும்;

(ஆ) உத்தேச வெளிக்கணக்காய்வு செயற்பரப்பினை நிர்ணயிப்பதில் இலங்கை மத்திய வங்கிக்கு உதவுவது. இது கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினைப் பூரணப்படுத்தும் என்பதுடன் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க ஆண்டுக் கணக்குகளையும் நிறைவுசெய்யும்:

(இ) வெளிக்கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்களை குறிப்பாக ஆண்டுக் கணக்காய்வு தொடர்பான மற்றும் இதற்கான மத்திய வங்கியின் பதில் என்பனவற்றை ஆய்வு செய்வதும் சரியான நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் நாணயச்சபைக்கு மதியுரை வழங்கலும்;

(ஈ) புதிய முகாமைத்துவ கணக்காய்வுப் பட்டயத்தினைப் பின்பற்றுவதில் நாணயச்சபைக்கு மதியுரைத்தல்; இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் ஆண்டுக்கணக்காய்வுத் திட்டத்தினை முன்னாய்வு செய்து ஒப்புதலளித்தல்மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்ட பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகளுக்கிணங்க முகாமைத்துவ கணக்காய்வினை வலுப்படுத்தல்.

(உ) பன்னாட்டு நியமங்களுக்கிணங்க நிதியியல் அறிக்கையிடலை மேம்படுத்துவதற்கு பொருத்தமான முகாமைத்துவ உடனடி கணக்காய்வுக் குழுவினை/குழுக்களை ஏற்படுத்தல். முகாமைத்துவ கணக்காய்வாளர்களின் அறிக்கையை ஆய்வு செய்து மீட்பு வழிமுறைகள் மீதான உடனடி நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்;

(ஊ) இலங்கை மத்திய வங்கியில் உயர்மட்ட, பயனுறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுவுவதிலும் முறைசார்ந்த இடர்நேர்வு முகாமைத்துவ செய்முறைகளை அபிவிருத்தி செய்வதிலும் மதியுரை வழங்குதல் மற்றும் உதவுதல்.

நியமனம் செய்யப்பட்டதன் பின்னர் கணக்காய்வுக்குழு 19 கூட்டங்களை நடத்தியதுடன் இவற்றின்போது, முக்கிய திணைக்களங்களின் மைய தொழிற்பாடுகள் தொடர்பான ஆழ்ந்த அறிவினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு குறிப்பாக, தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை அவர்கள் எவ்வாறு அடையாளங்கண்டு கையாளுகின்றார்கள் என்பதனை அறிவதற்காக அம் முக்கிய திணைக்களத் தலைவர்களைக் குழு சந்தித்தது. கணக்காய்வுக்குழுவின் அறிக்கை நேரடியாக நாணயச்சபைக்கு வழங்கப்படுவதுடன் கணக்காய்வாளர் அறிக்கை மிக வினைத்திறன் உள்ளமுறையிலும் பயனுள்ள முறையிலும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களையும் உள்ளடக்குவதுடன், பல்வேறு திணைக்களங்களினதும் பொதுவாக வங்கியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர் முகாமைத்துவத்தினையும் உள்ளடக்குகிறது.

பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடுகின்ற நியமங்களை முழுமையாக உள்ளடக்கத்தக்க விதத்தில் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்ட இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கையிடுகின் கட்டமைப்பினை மாற்றியமைப்பதற்கான முன்னோக்கிய ஒரு உபாயத்தினைக் கண்டறிவதற்காக கணக்காய்வாளர் நாயகத்துடன் கணக்காய்வுக்குழு கலந்துரையாடியது.

## வங்கி மேற்பார்வை

வங்கித்தொழில் முறையின் பாதுகாப்பினையும், வலுவாற்றலையும் உறுதிப்படுத்தும் பொருட்டும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் தொடர்பான மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் வங்கி மேற்பார்வை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வை என்பன தொடர்பான செயற்பாடுகள்

முக்கியமாக வங்கித்தொழில் சட்டம் மற்றும் நாணயவிதிச்சட்டம் என்பவற்றின் மூலம் நிருவகிக்கப் படுகின்றன. தற்போதைக்கு ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்களாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் காணப்படுகின்றன. ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொழிற்பாடுகளானது பணிப்புரைகள் விடுத்தல், சட்டவிதிகளின் கீழ் தீர்மானித்தலும் கட்டளை யிடுதலும், முன்மதியுடைய தேவைப்பாடுகள் மற்றும் வழி காட்டல்களை வழங்குதல், வங்கிகள் மற்றும் வங்கிகளின் கிளைகளை திறத்தல் அல்லது மூடிவிடல் என்பவற்றிற்கு விதந்துரை செய்தல், தலப்பரீட்சிப்புக்கள் மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் வங்கி தீர்மானங்களை அமுல்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவற்றிற்கு மேலதிகமாக வங்கி மேற்பார்வைத் திணைக்களம் சுயவிருப்பிலான வைப்புக் காப்புறுதித் திட்டத்தினையும் நிருவகிக்கின்றது.

## முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள்

1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் (திருத்தம்) திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் காலத்திற்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள் தேவைப்பாடுகளுடன் மூலதனம் திரவத்தன்மை, பாரிய வெளிப்படுத்தல்கள், வங்கிகளிலுள்ள பங்குடமை, வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், சொத்துக்களின் தரம், வருமான இனங்காணல் செயற படா முற்பணங்களுக்கான உருவாக்க ஏற்பாடுகள் வங்கிகளினால் கொள்வனவு செய்யப்பட்ட அசையா சொத்துக்களின் கொள்வனவு, கையேற்பு மற்றும் சம்பந்தப்பட்ட கட்சியினரின் கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகளினால் வெளிப்படுத்தல் செய்யவேண்டியதன் தேவைப்பாடுகள், வங்கிகளின் கணக்காய்வு, வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளின் ஒழுங்குவிதிகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட ஏனைய முன்மதியுடைய தேவைப்பாடுகள், ஆகியவற்றுடன் வங்கிகள் இணங்கி ஒழுகுகின்றனவா என்பதனையும் வங்கி மேற்பார்வை திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது.

## 2002ஆம் ஆண்டில் வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நாணயச்சபையின் பின்வரும் பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் ஏனைய முன்மதியுடைய தேவைப்பாடுகள் என்பனவும் வங்கி மேற்பார்வை திணைக்களத்தினால் விடுக்கப்பட்டன.

i. 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 86(எ) இன் நியதிகளுக்கிணங்க நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி டொலரினால் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி முறிகள் 2002 ஒகத்து 15 இலிருந்து திரவச் சொத்துக்களாக அறிவிக்கப்பட்டன. எனவே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் இலங்கை அபிவிருத்தி முறிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் நாளாந்த சந்தைப் பெறுமதி 2002 ஆகத்து 15 முதல் திரவச்சொத்துக்களாக கருதப்படுகின்றது.

ii. இதுவரையிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பொருந்தக்கூடியதாகவிருந்த முன்மதியுடைய பிரமாணங்கள் கரைகடந்த வங்கித்தொழில் அலகுகளுக்கும் பொருந்தக் கூடியதாக செய்யப்பட்டது. இதற்கிணங்க உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் சம்பந்தமாக வங்கித்தொழில் சட்டத்தின் 24(2) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கீழ்வரும் தீர்மானங்கள் 2002 திசெம்பர் 30இல் அறிவிக்கப்பட்டுள்ளன.

### (அ) மூலதன போதுமை விகிதத்தின் பிரயோகம்

கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கை சம்பந்தமாக வர்த்தக வங்கிகளினால் பேணப்பட வேண்டிய மூலதன போதுமை விகிதம் 2003 யூன் 30இல் குறித்துரைக்கப்பட்ட மூலதன போதுமை விகிதத்தின் 50 சதவீதமாகவும் (அதாவது மைய மூலதன போதுமை விகிதத்தின் 2.5 சதவீதத்திற்கு குறையாமலும் மொத்த மூலதன போதுமை விகிதத்தில் 5 சதவீதமாகவும்) மற்றும் ஒன்றுதிரட்டிய முறையில் கரைகடந்த வங்கித்தொழில் வாணிபம் மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் வாணிபம் என்பன தொடர்பில் வர்த்தக வங்கிகள் 2003 திசெம்பர் 31இல் குறித்துரைக்கப்பட்ட விகிதங்களையும் பேணவேண்டும். (அதாவது மையமூலதன போதுமை விகிதம் 5 சதவீதத்திற்கு குறையாமலும், மொத்த மூலதன போதுமை விகிதம் 10 சதவீதத்திற்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

2003 திசெம்பர் அளவில் புதிய ஒழுங்குமுறையின் கீழான மூலதன தேவைப்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுவதன் அடிப்படையிலேயே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இலாபத்தினை வெளியனுப்பவும் பங்கிலாபங்களை கொடுப்பனவு செய்யவும் முடியும்.

### (ஆ) நியதி திரவ சொத்து விகிதத்தின் பிரயோகம்

2003 சனவரி 1ஆம் நாளிலிருந்து கரைகடந்த வங்கித்தொழில் மற்றும் உள்நாட்டு வங்கித்தொழில் நடவடிக்கை தொடர்பில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஒன்றுதிரண்ட முறையில் நியதி திரவச்சொத்து விகிதத்தினை பேண வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

### (இ) தனிக் கடன்பாட்டாளர் வரையறையின் பிரயோகம்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் அலகு தொடர்பில் 1999ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் (தனிக் கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரைகளிற்கு அமைவாக வழங்கப்பட்ட தனிக் கடன்பாட்டாளர் வரையறைகள் 2004 சனவரி 1ஆம் நாளிலிருந்து கரைகடந்த வங்கித்தொழில் அலகினால் வழங்கப்படும் கடன்களுக்கு பிரயோகிக்கக்கூடியதாக இருக்கும்.

வங்கியொன்று தனிக்கடன்பாட்டாளர் வரையறை யின்மை பின்பற்றாதுவிடின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று இலாபங்களை வெளியனுப்புவதை அல்லது பங்கிலாபங்களை பிரகடனப்படுத்துவதை தடுக்கும் பொருட்டு மேலுள்ள பணிப்புரை திருத்தப்பட்டது.

## பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வங்கித்தொழில் உரிமம் ரத்துச்செய்யப்படல்

தலப்பரீட்சிப்புக்களினால் கண்டறியப்பட்டவை மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்பு முறைகளினூடாக பெறப்பட்ட தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் வங்கி மேற்பார்வை திணைக்களம், பலவீனங்கள், குறைபாடுகள், வங்கிகளின் அத்துமீறல்கள் என்பவற்றின் ஆழம் மற்றும் தன்மை, என்பவற்றைப் பொறுத்து ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியிலான தலையீட்டினை மேற்கொண்டது. சிறிய வங்கியான பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிக்கு 1997ஆம் ஆண்டில் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கான உரிமம் வழங்கப்பட்டதோடு அது கேள்வி வைப்புக்களை பேணல், அந்நியச்செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பன தவிர்ந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. தலப்பரீட்சிப்புக்கள் மற்றும் தலத்திற்கு வெளியேயான பரீட்சிப்புக்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கி 75 சதவீதத்திற்கு மேலானதொரு செயற்படா சொத்துக்கள் விகிதத்தை கொண்டிருப்பதுடன் நிதியியல் ரீதியில் மிகமோசமானதொரு நிலையில் இருப்பதனை காட்டியதை அடிப்படையாக வைத்து வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் நாணயச்சபையானது வங்கித்தொழில் சட்டத்தின் 76(எம்) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வியாபார நடவடிக்கைகளை 2002 ஒத்தோபர் 25முதல் இடைநிறுத்தியது. இந்த இடைநிறுத்தமானது வைப்பாளர்களினதும் கடன்கொடுத்தோரினதும் நலவுரித்துக்களைப் பேணும் வகையில் வங்கியின் எஞ்சியுள்ள சொத்துக்களை பாதுகாக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டது. இடைநிறுத்தத்தினை தொடர்ந்து வங்கியின் உண்மையான நிதிநிலைமைகளை கண்டறியும் பொருட்டு வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 (எல்) இன் கீழான நியதிகளுக்கமைய பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் அலுவல்களை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் முழுமையாக பரீட்சிப்பதனை உடனடியாக ஆரம்பித்தது. முன்னைய பரீட்சிப்பு வங்கியின் முறைகேடு இடம்பெற்றமையை காட்டியிருந்தமையினால் வங்கி தொடர்பான விசேடமான, சுயாதீனமான, கணக்காய்வு ஒன்றை மேற்கொள்வதற்காக "அர்னஸ்ட் அன்ட் யங்" என்ற கணக்காய்வு நிறுவனத்தின் பணி பெற்றுக் கொள்ளப்பட்டது.

இப்பரீட்சிப்புக்களிலும் விசேட கணக்காய்விலும் கண்டறியப்பட்டவை பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் அலுவல்களுக்கு பொறுப்பானவர்களின், வலுவற்ற, முறையற்ற மற்றும் முன்மதியற்ற நடைமுறைகள் மற்றும் தவறான முகாமைத்துவம் என்பன வங்கியின் முறிவடைவுக்கு காரணமாயினவென வெளிப்படுத்தின. இக்கண்டுபிடிப்புக்கள் பற்றி பிரமுக சேமிப்பு வங்கியின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு கருத்து தெரிவிப்பதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது. இதற்கான பதிலை பணிப்பாளர்கள் 2002 திசெம்பர் 13இல் நடைபெற்ற நாணயச்சபையினது கூட்டத்தில் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் அளித்தனர். இவ்வாறு கண்டறியப்பட்டவை குறித்தும் மத்திய வங்கியின் அவதானிப்பு குறித்தும் அவர்கள் ஆட்சேபனையெதுவும் தெரிவிக்காத வேளையில், அவர்கள் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முன்மொழிவினை முன்வைத்தனர். மீண்டும் தொழிற்பாடுகளை தொடங்குவதற்கு பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கிக்கு ரூ.600 மில்லியன் கொண்ட தொகை கிடைக்கச்செய்வது அவசியமாகும். ஆனால் அவர்கள் வங்கியினை மீள ஆரம்பிப்பதற்கான நிதியினை அவர்களது அல்லது வங்கியின் பங்குதாரர்களின் சார்பில் வழங்குவதற்கான எந்தவொரு கடப்பாட்டினையும் வெளிப்படுத்தவில்லை. மத்திய வங்கியின் மதிப்பீட்டின்படியும் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்களது மதிப்பீட்டின் படியும் வங்கியினை மீள ஆரம்பிப்பதற்கு ரூ.600 மில்லியனிலும் பார்க்க மிகப் பாரிய தொகை தேவைப் படுகின்றது. பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கிக்கு மேலதிக நிதிகளை கொண்டுவருவதற்கு பணிப்பாளர் களும் பங்குதாரர்களும் எதுவித கடப்பாட்டினையும் வெளிப்படுத்தாமையினால் இவ் வங்கிக்கான ஏதேனும் பங்களிப்பு வரி இறுப்போரின் நிதிகளிலிருந்தே பெறப்பட வேண்டும். எனவே நாணயச்சபைக்கு மாற்றுத் தெரிவு எதுவுமில்லையாதலினால் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்துச் செய்யுமாறு வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்தது. முடிவுறுத்தலின்போது பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் கிடைக்கத்தக்கதாகவிருக்கின்ற சொத்துக்கள் சட்ட விதிகளுக்கமைய கலைப்பாளரினால் வைப்பாளர் களுக்கும் கடன்கொடுத்தோருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து வங்கியை ஒடுக்கிவிட்டு உரிமத்தை இரத்துச்செய்வதற்கான நாணயச்சபையின் தீர்மானத்தை எதிர்த்து சில வைப்பாளர்களும் பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியும் பல வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்குகள் தற்போது நீதிமன்ற விசாரணையிலுள்ளன.

## வங்கித்தொழில் துறையின் ஒன்றிணைப்பு

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஒன்றிணைவு மற்றும் கையேற்பு என்பவற்றோடு உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினை மூடிவிடல் போன்றன 2002ஆம் ஆண்டில் வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட திரட்சியாக கூறலாம்.
- 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி தீவிரமான விரிவாக்கல் தந்திரோபாயம் ஒன்றை செயற்படுத்தியது. இதன்படி 2002 ஆகத்தில் ஸ்ராண்டட் சார்ட்டட் கிரீன்லேஸ் வங்கியின் கண்டிக் கிளையின் வாடிக்கையாளர் பட்டியலையும் 2002 செத்தெம்பரில் டொயிஸ் வங்கி ஏஜி கொழும்பு கிளையின் தனியாள் மற்றும் தனிப்பட்ட வங்கித்தொழில் நடவடிக்கைகளையும், 2002 ஒத்தோபரில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியின்

வங்கித்தொழில் நடவடிக்கைகளையும் நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பொறுப்பேற்றுக் கொண்டது.

- 2002 ஒத்தோபரில் ஹபீப் வங்கி ஏஜி சூரிச் இன் இலங்கை கிளையின் செயற்பாடுகளை அட்டன் நசனல் வங்கி பொறுப்பேற்றுக் கொண்டது.
- இதேவேளை 2002 திசெம்பர் 31இல் ஸ்ரான்டட் சார்ட்டட் வங்கி பீஎல்சி மற்றும் ஸ்ரான்டட் சார்ட்டட் 'கிரீன்லேஸ் வங்கி என்பவற்றின் இணைவு இறுதிப்படுத்தப்பட்டது.
- இவ்வாறான மூன்று வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் இலங்கையில் அவற்றின் தொழிற்பாடுகளை முடிவுறுத்திக் கொண்டன. முன்பு குறிப்பிட்டது போன்று பிரமுக சேமிப்பு அபிவிருத்தி வங்கியின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டது.
- இதன் விளைவாக, தொழிற்பாட்டிலிருந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் தொடர்பான தொகைகளான முறையே 25 மற்றும் 14 உடன் ஒப்பிடும்போது 2002இன் இறுதியில் முறையே 22 மற்றும் 13 ஆக குறைந்தது.

வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பவற்றினால் கிளைகளை திறத்தல், மூடிவிடுதல் மற்றும் வேறு இடங்களுக்கு மாற்றுதல் என்பன தொடர்பாக செய்யப்படும் கோரிக்கைகளையும் திணைக்களம் தொடர்ந்தும் கவனித்தது. இவ்வாண்டில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் 83 புதிய கிளைகளையும் மற்றும் வங்கித்தொழில் பிரிவுகளை திறப்பதற்கும், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றின் கிளையொன்றை மூடிவிடுவதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பவற்றின் 49 கிளைகளை வேறு இடத்தில் நிறுவுவதற்கும் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் ஒப்புதல் வழங்கியது.

## தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறை

தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின்கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினாலும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் அவர்களின் தொழிற்பாடுகள் தொடர்பாக காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவ்வங்கிகளின் நிதியியல் நிலைமைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து கண்காணித்தது.

பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள், தனிப்பட்ட வங்கிகள் மற்றும் முழு வங்கி முறைமையினதும் இடர்நேர்வு வெளிப்படுத்தல்களை அளவிடுவதற்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இது தனிப்பட்ட வங்கிகளின் நிதியியல் தரத்தினையும், செயலாற்றத் தினையும் அவர்களது போட்டியாளர்கள் மற்றும் இத் துறையின் பிரமாணங்களுக்கு எதிராக ஒப்பிடுவதனை இயலச் செய்கின்றது. மேலும், வங்கிகளின் நிதி நிலைமைகளிலான வழமைக்கு மாறான கணிசமான மாற்றங்களை இனங்கண்டு குறிப்பிட்ட வங்கிகளினது பாதிப்புக்குள்ளாகக் கூடிய தன்மை குறித்து எடுத்துக்காட்டுவதற்கான முன்னெச்சரிக்கை ஒன்றை வழங்குவதற்கு அல்லது மேலதிக புலனாய்வு மற்றும் பரீட்சிப்பு தேவைப்படும் விடயங்களைக் கண்டறிவதற்கு இந்த தகவல்கள் உதவுகின்றன. முன்னெச்சரிக்கையான சமிக்ஞைகளின் அடிப்படையில் பாதுகாப்பற்ற மற்றும் வலுவற்ற வங்கித்தொழிலுக்கு இட்டுச்செல்கின்ற முன்மதியற்ற நடைமுறைகளை திருத்துவதற்கு பொருத்தமான உடனடி சரி செய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

2000ஆம் ஆண்டில் சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரினால் அனுசரணை வழங்கப்பட்ட நிபுணர்களினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் தலத்திற்கு வெளியேயான புதிய கண்காணிப்பு முறையினை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2002ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொண்டது. 2002 யூன் மாதத்தில் இம்முறைமையின் உத்தேசிக்கப்பட்ட புதிய விபரத்திரட்டின் மீதான அவதானிப்புக்கள் மற்றும் கருத்துக்கள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக உத்தேசிக்கப்பட்ட விபரத்திரட்டுக்கள் சம்பந்தமாக வங்கிகளினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் மீதான மேலதிக தெளிவினைப் பெறவும் மற்றும் கலந்துரையாடவுமென உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் இதனுடன் தொடர்புள்ள அலுவலர்களுடனான கூட்டமொன்று நடாத்தப்பட்டது. உத்தேச முறைமையின் நடைமுறைச் சாத்தியம் பற்றி பரீட்சிப்பதற்காகவும் மற்றும் இந்த முறைமை செயல்திறனுள்ளதாக அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் மேலதிக சீராக்கல் செய்யப்படவேண்டுமா என்பதையும் இனங்கண்டு கொள்வதற்காக இப்புதிய விபரத்திரட்டுக்கள் வர்த்தக வங்கிகளுக்கு பரீட்சார்த்த அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தலப்பரீட்சிப்புக்கள்

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களும் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களுக்கு அதாவது தற்போது இரண்டாண்டுகளாகவுள்ள ஒவ்வொரு பரீட்சிப்பு காலப்பகுதியிலும், ஆகக் குறைந்தது ஒரு முறையாவது அல்லது தேவையேற்படும் பட்சத்தில் குறைந்த கால இடைவெளியில் தலப்பரீட்சிப்புக்கு உட்பட வேண்டும்.

தகவல்களை திரட்டிக் கொள்வதற்காக வங்கி மேற்பார்வைத் திணைக்கள பரீட்சிப்போர் ஒவ்வொரு வங்கியினதும் தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட கிளைகளுக்கும் சமூகம் அளிப்பர். தலத்திற்கு உள்ளேயான பரீட்சிப்புக்காக இடர்நேர்வு/ மூலவளப் பொருத்தப்பாட்டினூடாக வங்கிகளின் இடர்நேர்வு அடிப்படையிலான பரீட்சிப்புக்களைக் கொண்ட புதிய அணுகுமுறையொன்றினை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் பின்பற்றுகின்றது. இதன்படி இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய வங்கியின் இயலாற்றலை நிச்சயப்படுத்தி

கொள்வதற்காக கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு போன்ற பல்வேறுபட்ட வங்கித்தொழில் இடர்நேர்வுகளுக்கு வங்கியானது உட்படுகின்ற அளவு அளவிடப்பட்டு கிடைக்கத்தக்கதாகவிருக்கும் மூலவளங்களின் போதுமையும் மதிப்பிடப்படுகின்றது. இடர்நேர்வினை தணிப்பதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்களாக மூலதனம், வருவாய்கள் மற்றும் முகாமைத்துவ தரம் என்பன கருதப்படுகின்றன. மேலும் நியதித் தேவைப்பாடுகள், ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் உள்ளக கட்டுப்பாடுகள் அதேபோன்று மற்றைய முன்மதியுடைய தேவைப்பாடுகள் என்பவற்றுக்கு வங்கிகள் இணங்கி ஒழுகுகின்றனவா என்பதும் பரீட்சிக்கப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 8 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 2 உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் தலப்பரீட்சிப்புக்களை தொடங்கியது.

## வங்கி மேற்பார்வையின் புதிய போக்குகளும் ஏனைய நடவடிக்கைகளும்

### I. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கம்பனி ஆளுகை நடைமுறைக்கோவை

மத்திய வங்கியினால் நிறுவப்பட்டகம்பனி ஆளுகைக்கான தேசிய செயலணிக்குழுவினால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கம்பனி ஆளுகை நடைமுறைக்கோவை 2002 யூன் மாதத்தில் இறுதிப்படுத்தப்பட்டது. கம்பனி ஆளுகைக்கான தேசிய செயலணிக்குழு மத்திய வங்கி, ஏனைய வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 16 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இந்த நடைமுறைக் கோவையானது 2002 யூன் 25இல் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் சிறந்த கம்பனி ஆளுகையை மேம்படுத்தலே இந்த நடைமுறைக் கோவையின் மையக் குறிக்கோளாகும்.

இந்த நடைமுறைக்கோவை 12 கோட்பாடுகளைக் கொண்டுள்ளதோடு ஒவ்வொரு கோட்பாடும், அக்கோட்பாடு உள்ளடக்கும் விடயங்கள் சம்பந்தமான பல வழிகாட்டல்களைக் கொண்டுள்ளன. பிரதான கோட்பாடுகள், பணிப்பாளர் சபை பணிப்பாளர்களின் தகைமைகள், பணிப்பாளரின் நியமனம் மற்றும் கடமைகள், தலைவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர், தலைவரின் கடமைகள் முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேஷ்ட முகாமையின் கடமைகள், கம்பனி செயலாளரின் கடமைகள் பணிப்பாளர்களுக்கான பயிற்சி, சபைக்கான குழு அமைப்பு, ஒழிவு மறைவற்ற தன்மை, இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள், முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பவற்றுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றன. பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு, கம்பனி ஆளுகைக்கான பொதுநலவாய சங்கம், பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புக்களினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெரும்பாலான கோட்பாடுகள் பெறப்பட்டுள்ளன.

நிதிமுறைமையின் ஒழுங்கு மற்றும் நிலையான தன்மை என்பவற்றை பேணும் வகையில் இந்த நடைமுறைக்கோவையானது ஒரு நியமங்களின் நடைமுறைக்கோவை என்பதாக கருதப்பட வேண்டுமென வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### II. நிதிநிறுவனங்கள் குறித்த பொதுமக்களின் விழிப்புணர்வு

நிதியியல் முறைமை, சட்டரீதியாக பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் வங்கித்தொழில் மற்றும் நிதிநிறுவனங்களின் மீதான ஒழுங்குமுறைப் படுத்தலினதும் மேற்பார்வையினதும், தன்மை மற்றும் நோக்கங்கள் குறித்த பொதுமக்களின் அறிவை அதிகரிப்பதற்காக வங்கி மேற்பார்வை திணைக் களத்தால் கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

(அ) 2002 சனவரி 20இல் “இலங்கையிலுள்ள நிதியியல் பணிகளுக்கான ஒரு வழிகாட்டி” என தலைப்பிடப்பட்ட இருபக்க பத்திரிகை இணைப்பொன்று பத்திரிகையில் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டது.

(ஆ) 2002 ஏப்பிறலில் “இலங்கையிலுள்ள நிதியியல் பணிகளுக்கான ஒரு வழிகாட்டி” என்ற விசேட வெளியீடு ஒன்றை புத்தகவடிவில் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டது.

(இ) 2002 செத்தெம்பர் 11, 12, 13 மற்றும் 22ஆம் திகதிகளில் “பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ள சட்டரீதியாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள்” என்ற தலைப்பிலான பத்திரிகை அறிவித்தல் (சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டது.

(ஈ) மேற்குறிப்பிட்ட வெளியீடுகள் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்திலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது.

பொதுமக்களுக்கு வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் குறித்து விழிப்பாக இருப்பதற்கும் அவற்றுடனான அவர்களது கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவது சம்பந்தமாகவும் இவ் வெளியீடுகள் துணைபுரிகின்றன. மேலுள்ள வெளியீடுகள் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ள வங்கிகளினதும் நிதிக்கம்பனிகளினதும் பெயர்ப்பட்டியலை வழங்கு கின்றன. ஆனால் அவை அப்பட்டியலிலுள்ள ஏதேனுமொரு நிறுவனத்தில் முதலீடு செய்யுமாறு பொதுமக்களுக்கு விதந்துரைப்பு எதனையும் செய்யவில்லை. குறிப்பிட்ட ஏதாவதொரு நிறுவனத்தில் முதலீடு செய்வது குறித்து பொதுமக்கள் தமது சொந்த தெரிவை மேற்கொள்ளல் வேண்டும். எனினும் இவ் வெளியீடுகள் பொதுமக்களுக்கு தெரி வொன்றை செய்வதற்கான வழி காட்டல்களை கொண்டுள்ளன.

### III. 2002 சனவரி 24-25 ஆம் திகதிகளில் நெருக்கடி மிகுந்த சந்தைகளிலான இடர்நேர்வு-முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையாளரின் பங்கு தலைப்பில் நடைபெற்ற செயலமர்வு

இலங்கை மத்திய வங்கி, வங்கி மேற்பார்வை யாளர்களுக்கான ("சியன்ஸா") தென்கிழக்கு ஆசியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா அமைப்பு மற்றும் பன்னாட்டு தீர்ப்பனவு வங்கியின் நிதியியல் உறுதிப்பாட்டு நிறுவனம் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து நடத்திய மேற்கூறப்பட்ட செயலமர்வை வங்கி மேற்பார்வை திணைக்களம் ஒழுங்கு செய்தது. பொதுநலம் கொண்ட விடயங்கள் மற்றும் பிரச்சனைகள் தொடர்பில் பிராந்தியத்தில் தகவல் பரிமாற்றம் மற்றும் அறிவினை பகிர்ந்துகொள்ளல் என்பவற்றின் மூலம் வங்கித்தொழில் மேற்பார்வையை முன்னேற்றுவதற்கு தென்கிழக்கு ஆசிய, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா முதன்மை மன்றினால் 1984இல் வங்கி மேற்பார்வை தொடர்பான தென்கிழக்கு ஆசியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மன்றின் உபகுழு நிறுவப்பட்டது. இந்தச் செயலமர்வு மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றதோடு இதில் தென்கிழக்கு ஆசியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மன்றின் 16 அங்கத்துவ நாடுகளிலிருந்து 28 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பிரதான உரை பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கியின் பிரதான முகாமையாளரினால் "பேரண்ட பொருளாதார அதிர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கும் நுண்பாக முகாமைத்துவம்" எனும் தலைப்பில் வழங்கப்பட்டதோடு கருத்தரங்கின் எஞ்சிய பகுதி கீழ்வருவனவற்றை கருத்தில் கொண்டதாக காணப்பட்டது.

- அடிக்கடி மாறுபாடடையும் சந்தைகளில் இடர்நேர்வு முகாமைத்துவ தொழினுட்பம்
- பாஸ்லே II சம்பந்தமான மேற்பார்வையாளர்களின் பதிலிறுப்பு
- உறுதியான கம்பனி ஆளுகை
- ஆசியாவில் பாஸ்லே II
- பன்னாட்டு மூலதன நியமங்களின் அமுலாக்கம்

### IV. வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான சந்திப்புக்கள்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுடனான மாதாந்த கூட்டங்களை ஆளுநரின் தலைமையில் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்தும் ஒழுங்கு செய்தது. இக்கூட்டங்கள் மத்திய வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்குமிடையில் நெருங்கிய உறவினை கட்டியெழுப்புவதற்கு உதவுவதோடு வங்கித்தொழில் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்களை கலந்துரையாடுவதற்கும் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான ஒரு அரங்காக உதவுகின்றது. உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் கரை கடந்த வங்கித்தொழில் அலகு மீதான முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் முறை தொடர்பான பிரயோகம், வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வங்கி வட்டி வீதங்களை வெளியிடல், வங்கிகளின் வட்டி வீதங்களுக்கிடையேயான வீச்சினை குறைத்தல், மற்றும் காலாண்டுக்கொருமுறை வங்கிகளின் நிதித் தகவல்களை பத்திரிகைகளில் வெளியிடுதல் போன்ற முக்கிய விடயங்கள் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன.

### V. நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு

நிதிமுறைமையின் பலம், பலவீனம் மற்றும் அபிவிருத்தி, என்பவற்றை மீளாய்வு செய்து நிதியியல் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் நிதிநிறுவனங்களை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் என்பன தொடர்பாக தேவையான கொள்கை வழிமுறைகளை பரிந்துரை செய்து நிதிமுறைமையின் நிலைமை பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரித்தல் என்பவற்றினூடாக நாட்டின் நிதிமுறைமையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதனை குறிக்கோளாகக்கொண்டு நாணயச்சபையினால் நிறுவப்பட்ட நிதியியல் உறுதிப்பாட்டுக்குழு, 2002இல் அதன் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இக் குழு அதன்முதலாவது அறிக்கைக்காக பின்வரும் விடயங்களை இனங்கண்டுள்ளதுடன் அவை தொடர்பான வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

(அ). தேசிய பொருளாதாரத்தில் நிதியியல் முறைமையின் தாக்கம்.

(ஆ). நிதியியல் முறைமை மீதான செலாவணி வீதங்கள், வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பவற்றின் மாற்றங்களிலிருந்தான தாக்கம்.

(இ). அரசபடுகடன் பிணையங்களுக்கான முதனிலை வணிகர்கள் முறையின் கண்காணிப்பு.

(ஈ). பத்திரங்கள் அற்ற பிணையங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கம்.

(உ). நாட்டின் கொடுப்பனவு முறைகளில் நிதி நிறுவனங்களின் பங்கு.

(ஊ). நிதிநிறுவனங்களின் உறுதிப்பாடு மற்றும் ஆற்றல் என்பன மீதான கொடுப்பனவு முறையின் இடர்நேர்வு மற்றும் கொடுப்பனவு முறை மீதான நிதிநிறுவனங்களின் தொழிற்பாடுகளின் இடர்நேர்வு.

(எ). நிதியியல் முறையில் ஒரு ஒழுங்குபடுத்துனர் இருக்க வேண்டுமோ அல்லது ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியான ஒழுங்குபடுத்துனர் தேவையா என்பது பற்றி ஆராய்தல்.

(ஏ). ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மீதான பாஸ்லே மையக் கோட்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுதல்.

### VI. வைப்புக் காப்புறுதித்திட்டத்தினை நிருவகித்தல்

1987இல் செயற்பாட்டினை தொடங்கிய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நிருவகிப்பதனை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கித்தொழில் நிறுவனங்களுக்கும், 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் வங்கித்தொழில் நடவடிக்கைகளில்

ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கும் இந்த சுயவிருப்பிலான வைப்புக் காப்புறுதி திட்டம் வழங்கப்படுகின்றது. தற்போது நான்கு பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே அதன் கிராமிய வங்கிகளின் வைப்பு பொறுப்புக்கள் சம்பந்தமாக இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்து கொண்டுள்ளன. காலாண்டொன்றுக்கு ஒவ்வொரு ரூ.100 இற்கும் ரூ.3.75 காப்புறுதி கட்டுப்பணமாக செலுத்த வேண்டும். 2002ஆம் அண்டில் காப்புறுதி கட்டுப்பணமாக வைப்புக்காப்புறுதி நிதிக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.1.4 மில்லியனாகும். 1997ஆம் ஆண்டில் மத்திய வங்கியினால் ஒதுக்கப்பட்ட ரூ.50 மில்லியனையும் சேர்த்து 2002 திசெம்பர் 31இல் இந்நிதி ரூ.140 மில்லியனாக இருந்தது. இந்நிதிகள் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

## நாணயவெளியீடு

இலங்கையில் நாணயத்தினை வெளியீடு செய்கின்ற தனியொரு அதிகார சபையான மத்திய வங்கி, சட்டமுறையான நாணயத் தொழிற்பாடுகளைக் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்தும், 2002 மே 31ஆம் நாள்வரை அநுராதபுரத்திலும், மாத்தறையிலுமுள்ள பிரதேச அலுவலகங்களிலிருந்தும் மேற்கொண்டது. இவ்விரு நிலையங்களிலும் தொழிற்படுகின்ற இரு அரச வங்கிகளும் மற்றைய வங்கிகளும் மே மாதம் 31ஆம் நாளுக்குப் பின்னர் தொடர்பான பிரதேசங்களிலுமுள்ள பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் நாணயப் பணிகளை வழங்கின. 2002 இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயத்தாள்களினதும், குத்திகளினதும் அளவு 2001இன் இறுதியில் காணப்பட்ட ரூ.76,561 மில்லியனுக்குப் பதிலாக ரூ.88,308 மில்லியனாகக் காணப்பட்டன. சுற்றோட்டத்திலுள்ள தாள்கள் சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயத்தில் 96 சதவீதத்தினை உள்ளடக்கியருந்தன. திணைக்களம் நாணய அறிவியலாளர்களுக்கும் அதனைச் சேகரிப்பவர்களுக்கும் ஞாபகார்த்த நாணயக்குத்திகைளத் தொடர்ந்தும் விற்பனை செய்து வந்தது. இலங்கை மத்திய வங்கியில் விற்பனைக்குக் கிடைக்கத் தக்கதாகவுள்ள அனைத்து ஞாபகார்த்த நாணயக்குத்திகளினதும், தாள்களினதும் விபரங்கள் அவை விற்கப்படும் விலைகளுடன் அட்டவணை II.1 இல் தரப்பட்டுள்ளன.

வங்கியின் சுயவிருப்பு ஒய்வூதியத்திட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் 2002இல் திணைக்களத்தின் அலுவலர் தொகை 2001 இறுதியில் காணப்பட்ட மட்டத்திலும் பார்க்க அரைவாசியாகக் குறைந்து காணப்பட்டது. எனினும், கடமைகள் மீள ஒழுங்கமைக்கப்பட்டு மீள ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திணைக்களம் அதன் பணிகளை முன்னர் போலவே பயனுறு முறையில் வழங்கக்கூடியதாயிருந்தது.

போலி நாணயத்தாள்களை இனங்காண்பதில் எடுக்கப்பட்ட முயற்சிகளைக் கருத்திற்கொண்டு ரூ.1000 மற்றும் ரூ.500 நாணயத்தாள்களின் பாதுகாப்புப் பண்புகளை அதிகரிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாண்டில், போலி நாணயங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், போலிகளை மிகக்குறைப்பதற்குமாக, திணைக்களம், குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் போலி நாணயத்தாள் பணியகத்துடன் மிக நெருக்கமாக ஒன்றிணைந்து செயற்பட்டது.

2001இன் பின்னரைப்பகுதியில் தரமுயர்த்தப்பட்ட இரு நாணய சரிபார்ப்புக்கான பொறிகளிலான கணக்கிடல் மற்றும் பிரிப்பு பொறிகள் இவ்வாண்டில் பாவிக்கக்கூடிய, பாவிக்கமுடியாத ஆகிய இரு நாணயத்தாள்களையும் உள்ளடக்கிய பெருமளவு

அட்டவணை II-1

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள ஞாபகார்த்த நாணயக் குத்திகளும் தாள்களும்

| விடய எண். | விபரணம் | வழங்கப் பட்ட ஆண்டு | உலோகம் | விட்டம் (மி.மீற்). | நிறை (கிறாம்) | முகப்புப் பெறுமதி (ருபா) | விற்பனை விலை (ருபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இலங்கை மத்திய வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1990 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 500 |
| 2. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | 12 கரட் தங்கம் | 14.00 | 1.60 | 500 | 600 |
| 3. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (உறை) | 1991 | 12 கரட் தங்கம் | 14.00 | 1.60 | 500 | 500 |
| 4. | 5ஆவது தென் ஆசியா விளையாட்டுப் போட்டி (பாதுகாப்பான பெட்டி) | 1991 | வெள்ளி | 22.00 | 10.20 | 100 | 200 |
| 5. | 5ஆவது சுதந்திரதின விளையாட்டுப்போட்டி(உறை) | 1991 | வெள்ளி | 22.00 | 10.20 | 100 | 100 |
| 6. | சனாதிபதி ஆர். பிரேமதாசா (உறை) | 1992 | செப்பும் நிக்கலும் | 25.40 | 7.13 | 1 | 250 |
| 7. | 2300 மிகுந்து ஜெயந்தி (பாதுகாப்புப் பெட்டி) | 1993 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 700 |
| 8. | 2300 மிகுந்து ஜெயந்தி (உறை) | 1993 | வெள்ளி | 38.61 | 28.28 | 500 | 500 |
| 9. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவு (உறை) | 1995 | நிக்கல் செம்பு | 23.50 | 9.50 | 5 | 200 |
| 10. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | 22 கரட் தங்கம் | 22.05 | 7.98 | 5,000 | 8,000 |
| 11. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1998 | வெள்ளி | 38.61 | 28.28 | 1,000 | 1,200 |
| 12. | இலங்கை சுதந்திரமடைந்த 50ஆவது ஆண்டு நிறைவு (தாள் மடிப்பு) | 1998 | பொலிமர் | | | 200 | 400 |
| 13. | 1996 கிரிக்கெட் உலக கிண்ணம் (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | வெள்ளி | 38.61 | 28.28 | 1,000 | 1,200 |
| 14. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | உருக்கு | 25.40 | 7.13 | 1 | 400 |
| 15. | இலங்கை இராணுவத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 1999 | உருக்கு | 25.40 | 7.13 | 1 | 150 |
| 16. | இலங்கை மத்திய வங்கியின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | வெள்ளி | 38.61 | 28.28 | 1,000 | 1,200 |
| 17. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | செம்பும் நிக்கலும் | 25.40 | 7.13 | 1 | 500 |
| 18. | இலங்கைக் கடற்படையின் 50ஆவது ஆண்டு நிறைவு சிறப்புவாய்ந்த சுற்றோட்டத்திற்கு விடப்படாதவை (பாதுகாப்புப் பெட்டி) | 2000 | உருக்கு | 25.40 | 7.13 | 1 | 200 |

நாணயத்தாள்களை செய்முறைப்படுத்தும் வசதிகளை வழங்கியது. மேசையில் வைத்துப் பாவிக்கக்கூடிய எண்ணும் பொறிகள் பாவிக்கக்கூடிய தாள்களின் கணக்கிடும் வேலையை சிறியளவு அலுவலர்களுடன் விரைவாக செய்து முடிப்பதனை இயலச்செய்தது. தலைமை அலுவலகத்திலுள்ள பிரதான நிலவறையின் திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னர், திறைசேரி கட்டடத்திலுள்ள நிலவறையில் கணிசமானளவு காலம் வைக்கப்பட்டிருந்த பெரும்தொகையான நாணயங்கள் பிரதான நிலவறைக்கு கொண்டுவரப்பட்டன. பல்வேறு சமய நிலையங்களிருந்து நாணயக்குத்திகளைச் சேகரிப்பதற்கான நாணயக்குத்திகள் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன், 2002இல் சேகரிக்கப்பட்ட குத்திகளின் பெறுமதி ரூ.10.0 மில்லியனாகக் காணப்பட்டது.

போலி நாணயங்களை இனங்காண்பது தொடர்பாக திணைக்களமானது வங்கி அலுவலர்கள், பள்ளிக்கூடப் பிள்ளைகள், அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு பகிரங்க விரிவுரைகள் மற்றும் மின்னியல் ஊடகங்கள் என்பனவற்றினூடாக தொடர்ந்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. நாணயத்தின் பரிணாமம் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டும் சிறப்பு வானொலி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடத்தப்பட்டது. தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு நிதிய அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் 2002 செத்தெம்பரில் இலங்கைக்கு வருகைதந்த நேபாள ராஸ்ட்ர வங்கியிலிருந்தான பேராளர் குழுவொன்றிற்கு நாணயத் தொழிற்பாடுகளில் அவர்களாகவே பழக்கம் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

நாணயத்திணைக்களம், அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுக்கொண்டது.

(அ) கைத்தொழில் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2002 ஓகத்து 16 இலிருந்து 20 வரை திருகோணமலையில் நடத்தப்பட்ட "யுக தெக்மா" கைத்தொழில் பொருட்காட்சி.

(ஆ) நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சினாலும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினாலும் 2002 செத்தெம்பர் 30ஆம் நாளிலிருந்து ஒத்தோபர் 6ஆம் நாள்வரை கல்நேவாவில் நடத்தப்பட்ட "மகாவலி மகிம" வில் கலந்து கொண்டது. இந் நாணயபீடம் நாணய பொருட்காட்சியில் போலி நாணயத்தாள்களை இனங்கண்டு கொள்வதற்கான செயல்முறை விளக்கத்தையும் உள்ளடக்கியிருந்தது.

(இ) வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சினால் ஆண்டின் பின்னரைப்பகுதியில் கோட்டே, கதிர்காமம் மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட மகாபொல வர்த்தகச்சந்தை மற்றும் கண்காட்சி.

(ஈ) கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் 2002ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 18ஆம் நாளிலிருந்து 20ஆம் நாள்வரை கண்டி, மகாமாயக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட "சாகித்ய கலா பிரசாதின்" பொருட்காட்சி.

# உள்நாட்டுத் தொழிற்பாடுகள்

2002ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாள் நிறுவப்பட்ட உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், முக்கியமாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாகவும் முக்கியமாக வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது வர்த்தக வங்கிகளுக்கும், அரசாங்கத்திற்கும் வங்கியாளராகப் பணியாற்றுவது ஆகிய இரட்டைத் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

## அ. நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

### (i) *திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்*

2002இல், தொடர்ந்தும் முக்கியமானதொரு கருவியாக இருந்துவரும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக மத்திய வங்கி நாணயக்கொள்கையினை நடைமுறைப்படுத்தியது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் அரச பிணையங்களை உடனடியாக வாங்குதல் மற்றும் விற்றல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அரச திறைசேரி உண்டியல்கள் மட்டும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கான பிணையமாகப் பயன்படுத்தப்பட்டன. எனினும், நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கு திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டன.

மிகக்கடுமையான திரவப்பற்றாக்குறைத்தன்மை காணப்பட்ட 2001ஆம் ஆண்டிற்கு மாறாக, ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல், அரசின் வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில் வங்கியினால் வெளிநாட்டு நாணயங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை என்பனவற்றினைத் தொடர்ந்து 2002இல் குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் சந்தையில் ரூபாத்தன்மை மேம்பட்டுக் காணப்பட்டதுடன் மிகையான தன்மையும் தோற்றம்பெற்றது. இரண்டாந் தரச்சந்தையில் மிகையானது நேர்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை என்பனவற்றினூடாக ஈர்த்துக்கொள்ளப்பட்டது. அதேபோன்று இரண்டாந்தரச்சந்தையில், நேர்மாற்று மீள்கொள்வளவுக் கொடுக்கல் வாங்கல்களிலும் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அரச பிணையங்களின் உடனடி கொள்வனவு களிலும் குறிப்பிடத்தக்க குறைப்புக் காணப்பட்டது.

### (ii) *மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்*

2002ஆம் ஆண்டில் திரவச்சந்தையில், திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு உடன் படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்கள் என்போரை உள்ளடக்கிய

பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கியின் உள்ளகரீதியாக முகாமைப் படுத்தப்பட்ட நிதியும் தமது மிகையான நிதியினை ஓரிரவிலிருந்து ஏழு நாட்கள் வரையான காலப்பகுதிக்கு முதலீடு செய்வதற்கான முக்கியமான வழியொன்றாக மாறின. இம் முதலீடுகள் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களில் கீழ்மட்டத்தினை சமநிலைப்படுத்த உதவின. மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்த அளவு (ஓரிரவிற்குச் சமமானது) 2001ஆம் ஆண்டின் ரூ.203 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.1,7640 பில்லியனுக்கு அதிகரித்தது. இம்முதலீடுகளில் பெரும்பகுதி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பெறப்பட்டிருந்தது.

ஓரிரவு மீள்கொள்வனவு வீதமானது, நிதியியல் சந்தைகளிலும் அதேபோன்று நாணய கொள்கை நிலையிலும் காணப்படுகின்ற நிலைமைகளைக் கருத்திற்கொண்டு வங்கியினால் நிர்ணயிக்கப் படுகின்றது. முன்னேற்றங்கண்ட நிதியியல் சந்தைகள் மற்றும் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு இவ்வீதமானது 2002 மாச்சு 20ஆம் நாளன்று 12.0 சதவீதத்திலிருந்து 11.5 சதவீதத்திற்கும், 2002 யூலை 26ஆம் நாளன்று மேலும் 10.50 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது. இது பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து திரவச்சந்தையின் வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குடன் இணைந்து செல்லும்விதத்தில் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மீட்சிக்கு உதவும் விதத்திலும் 2002 நவெம்பர் 22ஆம் நாளன்று 9.75 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்பட்டது.

**வரைபடம் II - 1**
**மாதாந்த மீள்கொள்வனவு அளவும் வீதங்களும் 2001 மற்றும் 2002**




### (iii) *நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்*

கடந்த இரு ஆண்டுகளில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை வீதங்களின் மேல்எல்லையை சமநிலைப்படுத்த உதவிய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியானது சந்தைத் திரவத்தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக ஒப்பீட்டு அடிப்படையில் 2002ஆம் ஆண்டு செயற் பாடற்றதாகக் காணப்பட்டது. வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவுச்சந்தையில் வர்த்தக வங்கிகளினதும் முதனிலை வணிகர்களினதும் நேர்மாற்று மீள்கொள்வனவின் மொத்த அளவின் ஓரிரவிற்குச் சமமான தொகை 2001ஆம் ஆண்டின் ரூ.7,544 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.216.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இக்கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டின் முதலரைப்பகுதியில் செறிந்து காணப்பட்டன. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளகரீதியில் முகாமைப் படுத்தப்படும் நிதியுடன் மேற்கொள்ளப்பட வில்லை.

மீள்கொள்வனவு வீதத்தினை போன்றே, நேர்மாற்று மீள்கொள்வனவுவீதமும் நாணய கொள்கை நிலை மற்றும் நிதியியல் சந்தை நிலைமைகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு வங்கியினால் நிர்ணயிக்கப்படுகிறது. நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 2002 மாச்சு 20ஆம் நாளன்று 14.00 சதவீதத்திலிருந்து 13.5 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதெனினும் 2002 ஏப்பிறல் 4ஆம் நாளவில் 13.85 சதவீதத்திற்கு மூன்று தடவைகளில் அதிகரிக்கப்பட்டது. இது 2002 யூன் 4ஆம் நாளன்று 13.75 சதவீதத்திற்கும் 2002 நவெம்பர் 22ஆம் நாளன்று மேலும் 11.75 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டது.

**வரைபடம் II - 2**
**நேர்மாற்று மீள்கொள்வனவு மாதாந்த அளவும் வீதங்களும் 2001 மற்றும் 002**




### (iv) *இரண்டாந்தரச்சந்தையில் உடனடிக் கொடுக்கல் வாங்கல்கள்*

வங்கியின் இரண்டாந்தரச்சந்தையில் பங்கேற்கும் நிறுவனங்களுக்கான திறைசேரி உண்டியல்களின் மொத்த உடனடி விற்பனைகள் (கழிவிடல்) 2002இல் ரூ.45.5 பில்லியனாக அமைந்து 2001 ஆம் ஆண்டின் ரூ.20.4 பில்லியனிலிருந்து 100 சதவீதத்திற்கும் கூடுதலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. இவ்வபிவிருத்திக்கான முக்கிய உதவு காரணிகளாக சந்தையில் ரூபாத் திரவத் தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றமும், முதலாந்தரச்சந்தையில் காணப்பட்ட திறைசேரி உண்டியல் விளைவு வீதங்களில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கும் காணப் பட்டன. இவை ஆண்டின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் வங்கியின் இரண்டாந் தரச்சந்தையில் பங்கேற்கும் நிறுவனங்கள் சிறந்த விளைவு வீதங்களைப் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்தன. திறைசேரி உண்டியல்களை

**வரைபடம் II - 3**
**இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் உடனடி விற்பனை 2001 மற்றும் 2002**




கொள்வனவு செய்கின்ற உரிய சாராருக்கு அவற்றை நேரடியாக வழங்குவதென 2000ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தீர்மானமானது சந்தையில் அத்தகைய திறைசேரி உண்டியல் களை விற்பனை செய்வதற்குப் பயன்படுத்தும் சந்தர்ப்பத்தினை வழங்குவதுடன் வங்கியின் இரண்டாந்தரச் சந்தையினையும் மிகக் கவர்ச்சிகரமாக்கியது. மொத்தமாக ரூ.10.6 பில்லியன் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் வங்கியினால் உள்ளகரீதியில் முகாமைப்படுத்தப்படும் நிதியத்தினால் வாங்கப்பட்டன.

தொடர்பான முதலாந்தரச்சந்தை விளைவு வீதங்களிலிருந்து இலாபத்தினைக் கழிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட வங்கி கழிவிடல் விளைவு வீதங்கள் முதலாந்தரச்சந்தை வீதங்களில் காணப்பட்ட போக்குகளுக்கு இணைவாக நகர்ந்தன. சந்தையில் காணப்படும் அபிவிருத்தி களையும் அதேபோன்று நாணயக் கொள்கை நிலையையும் பரிசீலனையில் கொண்டு வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட இலாப வீதங்களிலான திரிபுகளை ஒழிப்பதற்காக 2002 ஓகத்தில் உயர்த்தப்பட்டது. திரவத்தன்மையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினைத் தொடர்ந்து வங்கியின் இலாபத்தினைவிட முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைவதால் இத்திரிபு உருவாக்கப்படுகின்றது. இலாபத்தில் ஏற்படும் குறைப்பானது வணிகர்கள் வங்கியின் இரண்டாந்தரச்சந்தையில் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக முதலாந்தரச் சந்தையில் போட்டித் தன்மையுடன் அவர்கள் விலை கோருவதனைத் தூண்டுகின்றது. 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்கள் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான வங்கியின் ஆண்டிற்கான கழிவிடல் விளைவு வீதங்கள் முறையே 2001ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 12.93 சதவீதம், 13.21 சதவீதம் மற்றும் 13.69 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதியில் முறையே ஆண்டிற்கு 8.67 சதவீதத்திற்கும், 8.64 சதவீதத்திற்கும் மற்றும் 8.66 சதவீதத்திற்கும் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது.

வங்கியின் திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவு (மீள்கழிவிடல்) 2001இன் ரூ.645

**வரைபடம் II - 4**
**இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் உடனடிக் கொள்வனவு 2001 மற்றும் 2002**




மில்லியனிலிருந்து 2002இல் ரூ.1.1 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 71 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். (ரூ.483மில்லியன்) இதற்கு, உள்ளகரீதியாக முகாமைப்படுத்தப்படும் நிதியம் அவற்றின் எதிர்பாரா நிதியத்தேவைகளை ஈடுசெய்வதற்காக மீள்கழிவிடலை ரூ.1 பில்லியனால் அதிகரித்தளவில் நாடியமையே காரணமாகும். இவ்வாண்டில் சந்தையில் திரவத்தன்மை மேம்பட்டமையைப் பிரதிபலிதது மொத்த உடனடிக் கொள்வனவுகளுக்கான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும், முதனிலை வணிகர்களினதும் பங்களிப்பு ரூ.495 மில்லியனால் (83 சதவீதம்) ரூ.102 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. திறைசேரி உண்டியல்களின் முதலாந்தர ஏலங்களிலுள்ள விளைவு வீதங்களில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்த போக்குடன் இணைந்த விதத்தில் 91 நாட்கள், 182 நாட்கள் மற்றும் 364 நாட்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான மீள்கழிவிடல் வீதம் 2002இன் தொடக்கத்தில் முறையே ஆண்டிற்கு 14.23 சதவீதம், 14.51 சதவீத, 14.99 சதவீதத் திலிருந்து ஆண்டின் இறுதியில் முறையே 11.17 சதவீதத்திற்கும் 11.14 சதவீதத்திற்கும் 11.16 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன.

### (V) தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

நாணய முகாமைத்துவத்தில் வங்கியின் நுணுக்கங்களை மேம்படுத்தும் பொருட்டு வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டிவீத வீச்சிற்குட்பட்ட விதத்தில் சந்தை வட்டி வீதங்களில் திறந்தசந்தைத் தொழிற்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இது தொடர்பான உத்தேச முறை பகுதி 1இன் சிறப்புக்குறிப்பு 19 இல் விபரிக்கப்பட்டுள்ளன. உத்தேச முறையின் கீழ் அனுபவங்களைப் பெறும் பொருட்டு, மாதிரித் தொழிற்பாடுகள் 2002 திசெம்பர் 9ஆம் நாள் தொடங்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. தொழிற்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளிட்ட அவசியமான ஆரம்ப வேலைகள் முடிவடைந் துள்ளதுடன் உத்தேச முறை 2003 மாச்சிலிருந்து நடைமுறைக்கிடப்படும்.

(VI) ***நியதி ஒதுக்குத் தேவைப்பாடு***

இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிரான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு இவ்வாண்டில் 10 சதவீதத்தில் காணப்பட்டது.

(VII) ***வங்கி வீதம்***

நாணயவிதிச்சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் இவ்வாண்டில் 18 சதவீதமாகக் காணப்பட்டது.

### (ஆ) வர்த்தக வங்கிகளுக்கும் அரசிற்கும் வங்கியாளராகத் தொழிற்படுகின்றமை

(i) ***நிதியியல் நிறுவனங்களின் கணக்குகள்***

வங்கியாளர்களின் வங்கியாக தொழிற்படும் விதத்தில் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறையின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் மத்திய வங்கி தொடர்ந்தும் நடைமுறைக்கணக்கு வசதிகளை வழங்கியது.

(ii) ***அரச கணக்குகள்***

அரசிற்கான வங்கியாளர் என்ற முறையில், வங்கியானது அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட நியதிச்சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியதுடன் தேவையான வங்கித்தொழில் வசதிகளையும் அவற்றிற்கு வழங்கியது. வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2002ஆம் ஆண்டின் இறுதியில் 119 ஆக விளங்கியது. அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் 2002ஆம் ஆண்டில் தொழிற்படாத 29 கணக்குகள் மூடப்பட்டதுடன் 5 புதிய கணக்குகள் திறக்கப்பட்டன. நாணயவிதிச் சட்டத்தின் 89ஆவது பிரிவின் நியதிகளில் வங்கி தொடர்ந்தும் அரசிற்கு தற்காலிக முற்பணங்களை வழங்கிவருகிறது. அத்தகைய முற்பணங்களின் வரையறை (மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறையில் 10 சதவீதம்) 2002ஆம் ஆண்டில் ரூ.1,159 மில்லியனால் ரூ.31,367 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

(iii) **ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித்தீர்வைத் தள்ளுபடி**

ஏற்றுமதியாளர்களுக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் வங்கியானது 2001ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூ.249 மில்லியன் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் 2002இல் ரூ.304 மில்லியனை அவ்வங்கிகளுக்கு மீளளித்தது.

(iv) **இந்தியாவிற்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964ஆம் ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கையின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள்அனுப்புவதற்காக அரசின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் 2001ஆம் ஆண்டின் ரூ.95,103 உடன் ஒப்பிடுகையில் 2002இல் ரூ.42,250 ஆகக் காணப்பட்டது. வெகுமதிக் கொடுப்பனவும் 2001இன் ரூ.7,425உடன் ஒப்பிடுகையில் 2002இல் ரூ.3,300 ஆகக் காணப்பட்டது.

## ஊழியர் சேமநிதியம்

நாணயச் சபையானது தொழில் திணைக் களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் ஊழியர் சேமநிதியத்தின் காவலனாக தொடர்ந்தும் தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டது. இவை ஊழியர் சேமநிதியச் சட்ட நியதிகளின்படி, உதவு தொகைகள், மிகைக் கட்டணங்கள் மற்றும் முதலீடுகளிலிருந்தான வருமானம் என்பவற்றைப் பெறுதல், பதிவு செய்யப்பட்ட தொழில்வாய்ப்புக்கள், உறுப்பினர்கள் மற்றும் நிதியத்தின் சரியான கணக்குகளைப் பேணுதல், மேலதிகமான பணத்தைப் பொருத்தமான முதலீடுகளில் முதலீடு செய்தல் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களுக்கான நன்மைகளைச் செலுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

ஊழியர் சேமநிதியம் அதன் ஆரம்ப காலத்திலிருந்து, முதல் தடைவையாக, அதன் 2001இன் ஆண்டுக் கணக்குகளை, அதன் நடவடிக்கைகளை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தலை முன்னேற்றும் பொருட்டு திசெம்பர் 2002இல் ஊடகங்களில் வெளியிட்டது. வங்கியின் தகவல் தொழினுட்பத் திணைக்களத்தின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட ஊழியர் சேமநிதிய வெப்தளம் (www.epf-cbsl.lk), பெப்புருவரி 2002 இலிருந்து தொழிற்படத் தொடங்கியதுடன், இது நிதியம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட உரித்துடையவர்களுடன் நேரடித் தொடர்பு முறையை மேலும் மேம்படுத்தும்.

ஊழியர் சேமநிதியம் ஒகத்து 2002இல் திருகோணமலையில் நடாத்தப்பட்ட "யுக தக்ம" என்ற கைத்தொழில் பொருட்காட்சியில் வங்கியின் ஏனைய திணைக்களங்களுடன் பங்குபற்றியது. இது, சேமநிதிய விடயங்களை போதியளவில் புரிந்திராத உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் பிரச்சனையைத் தீர்த்து அவர்களுக்கு உதவும் ஓர் நல்ல சந்தர்ப்பமாக, ஊழியர் சேமநிதியத்துக்கு அமைந்தது. உறுப்பினர்கள், வங்கியிலுள்ள பிரதான தரவுத்தளத்துடன் இணைக்கப்பட்ட கணனி முனைக்கோடியின் மூலம் அவர்களது நிலுவைகளை சரிபார்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர்களது விசாரணைகளில் பெரும்பாலானவை அவ்வப்போது தீர்க்கப்பட்ட வேளையில், எஞ்சியவை பொருட்காட்சியின் பின்னான 10 நாட்களினுள் முற்றாகத் தீர்க்கப்பட்டன.

2001இற்கான உறுப்பினர்களின் வருடாந்தக் கூற்றுக்களும் 2002இன் முதல் அரைப்பகுதியின் உறுப்பினர்களின் அரையாண்டுக் கூற்றுக்களும் தொழில் வழங்குவோர் ஊடாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன. சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தின் கீழ் திணைக்களத்திலுள்ள நிலையான பதவிகளின் 51 சதவீதம் ஓய்வுபெற்றதையடுத்து உலகில் நிலவும்

தற்போதைய போக்குடன் இசையும்வகையில், சில தொழிற்பாட்டு நடவடிக்கைகளை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் திணைக்களத்தின் உத்தி அதன் பணிகளை சுமூகமாகத் தொழிற்படுவதை இயலச்செய்தது.

### அமைப்பு முறையிலான முன்னேற்றங்கள்

ஊழியர் சேமநிதியம், வினைத்திறன், செலவைச் சிக்கனப்படுத்தல், நல்ல ஆளுகை மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மை என்பவற்றிற்கான அதன் அமைப்புமுறையில் தேவையான முன்னேற்றங்களை அறிமுகப்படுத்தி அதனை மேலும் மீளாய்வு செய்தது. நிதியத்தின் தொழிற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் 100 சதவீதத்தை உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வாய்வு அமைப்புமுறையின் முக்கியத்துவம் நீண்டகாலமாக இனங்காணப்பட்டுள்ளது. இவ்வாண்டில், பிறைஸ்வாட்டர் கவுஸ் கூப்பர்ஸ் என்ற தனியார் கண்காய்வாளர் நிறுவனம், ஊழியர் சேமநிதியத்துக்கான உள்ளகக் கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டது. அதன் வேலையின் பூரணத்துவ கணக்காய்வின் நன்மைக்கு மேலதிகமாக செயல்முறை முன்னேற்றத்துக்கான விதந்துரைப்புக்களும் பணிகளை வெளியிலிருந்து பெற்றுக்கொண்டமை நிதியத்துக்கான செலவைச் சிக்கனப்படுத்த உதவின.

ஊழியர் சேமநிதியத்தின் பிரதான தகவல் தொழினுட்ப முறை, இம்முறைக்கு மேலும் கணனிக் கருவிகளை உள்ளடக்கும் வகையில் மேலும் விரிவாக்கப்பட்டது. இம்முறை மூலம் பற்றுச்சீட்டைத் தயாரிப்பதில் மேலும் கணனி மயமாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், உரிய நேரத்தில் கணக்கைத் தயாரிப்பதில் நிதியத்தின் இயலுந் தன்மையையும் முன்னேற்றியது. மாவட்ட தொழில் அலுவலர்களுக்கு, மீளளிப்பு மேற்கொள்ளும் செயல்முறையை பன்முகப்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடன், முனைகோடிகள் மூலம் ஊழியர் சேமநிதிய தகவல் தளத்திலிருந்து தேவையான தகவல் பணிகளை தொழில் அலுவலகங்கள் பெற்றுக்கொள்வதை ஊழியர் சேமநிதியம் உறுதிசெய்தது. இப் பொறிமுறை, உறுப்பினர் ஒருவர் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த நேரத்திலிருந்து ஊழியர் சேமநிதிய தரவுத் தளத்திலான அவரது விபரங்களின் ஒப்பீட்டிற்காக அவரது மீளளிப்பு செயல்முறையிலான வினைத்திறனை கணிசமானளவில் அதிகரித்தது. புடவை அனுமதிப் பங்குச்சபைக்கு தகவலை வழங்கும் மின்மயப்படுத்தப்பட்ட முறை, ஊழியர் சேமநிதியத்தின் வேலைப்பளுவைக் குறைத்துடன், போலியான பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் சாத்தியத்தையும் இல்லாதொழித்தது. ஊழியர் சேமநிதியத்தின் கணனி மயப்படுத்தப்பட்ட சகல நடவடிக்கைகளிலும், வங்கியின் தகவல் தொழினுட்பத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

### முதலீடுகள்

இவ்வாண்டில் நிதியத்தின் மொத்த முதலீட்டுப் பட்டியல் 14.5 சதவீதங் கொண்ட விதத்தில் மேலும் வளர்ச்சியடைந்து 2002 இறுதியில் ரூ.283 பில்லியன் கொண்ட கிரயப் பெறுமதியை பதிவு செய்தது. சந்தையை அடிப்படையாகக் கொண்ட கருவிகள் மூலம்

அட்டவணை II.2
ஊ.சே.நி.2001 மற்றும் 2002 காலப்பகுதியில் பங்குச் சொத்துப்பட்டியலின் செயலாற்றம்

ரூ.மில்லியன்

| விடயம் | 2001 | 2002 |
|---|---|---|
| சராசரி சொத்துப்பட்டியல் | 1,182 | 1,219 |
| மொத்த பங்கிலாபவருமானம்(அ) | 92 | 90 |
| மொத்த மூலதன நன்மைகள் | 22 | 143 |
| பெறப்பட்டமிகை இலாபப் பங்குகள் (காலமுடிவில் பெறுமதி) | 1 | 2 |
| **மொத்த பங்கிலாபங்கள் மூலதன நன்மைகள் மற்றும் மிகை இலாபப் பங்குகள்** | **115** | **235** |

(அ) வரிவிலக்குப் பெற்ற பங்கிலாபங்கள் மீதான வரிச்சேமிப்பினை உள்ளடக்குகிறது.

மூலம்: ஊழியர் சேமநிதியம்

அதன் முதலீடுகளைப் பன்முகப்படுத்தும் ஊழியர் சேமநிதியின் முதலீட்டுக் கொள்கையுடன் இணங்கத் தக்கதாக சந்தையை அடிப்படையாகக் கொண்ட அரச கருவியான திறைசேரி உண்டியல்களில் அதன் மொத்த முதலீடுகள், 2002இன் இறுதியில் மொத்த முதலீட்டுப் பட்டியலில் 36 சதவீதத்திற்கு மேலும் விரிவாக்கப்பட்டது. முன்னைய ஆண்டில் இது 25 சதவீதம் ஆக விளங்கியது. சந்தைக்குப் புறம்பான அரச கருவியான ரூபாப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள் மொத்த முதலீட்டுப் பட்டியலின் 61 சதவீதத்திற்கு மேலும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இது 2001 இறுதியில் 72 சதவீதம் ஆக காணப்பட்டது.

பங்குச்சந்தைத் தொழிற்பாடுகளை பொறுத்த மட்டில், ஊழியர் சேமநிதியம் அதன் மதிநுட்பமான முதலீட்டு அணுகுமுறை மூலம் நல்ல பலனை பெறக்கூடிய ஆண்டாக 2002 விளங்கியது. சமாதான செயற்பாடு, பொருளாதார மீட்சிக்கான எதிர்பார்ப்பு மற்றும் குறைந்துசெல்லும் வட்டி வீதங்கள் என்பன ஒன்றுசேர்ந்து முதலீட்டாளர் நம்பகத்தன்மையை அதிகரித்தமையின் காரணமாக பங்குச்சந்தை அதன் எருது ஓட்டத்தைத் தொடர்ந்தது. 1998இலிருந்து 2001 வரையிலான காலப்பகுதியில் பங்குச்சந்தையை பகுப்பாய்வு செய்து கண்காணித்த பின்பு, மிகக் குறைவாக கழிவிடப்பட்ட விலைகளில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் ஊழியர் சேமநிதியத்திற்கு கூடியளவு மூலதன இலாபத்தை ஈட்டிக்கொடுத்தது. பட்டியலிடப்பட்ட பங்குப்பட்டியலானது உண்மையில் பெறப்பட்ட மூலதன இலாபம், பங்கிலாப வருமானம் மற்றும் உபகாரப் பங்குகள் மூலம் 2002இல் சராசரி பட்டியல் மீது ரூ.235 மில்லியன் அல்லது 19.2 சதவீத இலாபத்தை ஏற்படுத்தின. இத்துடன், சந்தை விலைகளில் பட்டியல் ஆண்டிறுதியில் ரூ.433 மில்லியன் கொண்ட இன்னமும் பெறப்படாத மூலதன இலாபங்களையும் கொண்டிருந்தது. பட்டியலிடப்பட்ட பங்குகளிலான மொத்த முதலீடுகள் 31 திசெம்பர் 2002இல் ரூ.1,311 மில்லியனாகவோ அல்லது மொத்த முதலீட்டுப் பட்டியலில் 0.5 சதவீதமாகவோ விளங்கியது.

### இரண்டாந்தரச் சந்தை வர்த்தகப்படுத்தல் செயற்பாடுகள்

மேலும், ஊழியர் சேமநிதியம், இரண்டாந்தரச் சந்தையில் பங்குபற்றுவதன் மூலம் திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீது உண்மையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமான வீதத்தை

அதிகரிப்பதில் முயற்சிகளை மேற்கொண்டது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில், ஊழியர் சேமநிதியம் ரூ1,623 மில்லியனை இரண்டாந்தரச்சந்தை நடவடிக்கைகளிலிருந்து மூலதன இலாபமாகப் பெற்றதுடன், இதில் ரூ.1,480 மில்லியன், திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்கள் மீதான இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டது. 2001இல் இவை முறையே ரூ.295 மில்லியனாகவும், ரூ.273 மில்லியனாகவும் காணப்பட்டன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை II.3 ஆய்விற்குரிய ஆண்டில், ஊழியர் சேமநிதியத்தின் இரண்டாந்தரச்சந்தைத் தொழிற்பாடுகளின் விபரங்களைத் தருகின்றது.

அட்டவணை II-3
ஊ.சே.நி: 2002இல் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகள்

ரூ.மில்லியன்

| விடயம் | கொள்வனவு அளவ(அ) | விற்பனவு அளவு(அ) | மூலதன நன்மைகள் |
|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | 15,525 | 21,795 | 1,474 |
| திறைசேரி உண்டியல்கள் | 3,431 | 480 | 6 |
| பங்குகள் | 345 | 299 | 143 |
| **மொத்தம்** | **19,301** | **22,574** | **1,623** |

(அ) செலவுப் பெறுமதிகளில் மூலம் ஊழியர் சேம நிதியம்

### ஊழியர் சேமநிதிய உறுப்பினர் நிலுவைகளின் மீதான வீடமைப்புக்கடன்கள்

வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினரொருவர் அவரது நிதிய நிலுவையினை பிணையாக வைத்து அத்தகைய நிலுவையில் ஆகக்கூடியது 75 சதவீதம் வரையான தொகையை ஒப்புதலளிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனமொன்றிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவராவர். முதலாவது

அட்டவணை II- 4
ஊ.சே.நி : அடிப்படைப் பண்புகள்

| விடயம் | 2001 | 2002 |
|---|---|---|
| உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை | | |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தும் உறுப்பினர் கணக்குகள் | 1,913,201 | 1,984,000 |
| தற்பொழுது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் | 7,083,002 | 7,324,000 |
| மொத்த உதவு தொகைகள் (ரூ.மில்.) | 17,738 | 18,927 |
| மொத்த மீளளிப்புக்கள் (ரூ.மில்.) | 11,194 | 12,553 |
| மீளளிப்புக்களின் எண்ணிக்கை | 93,008 | 91,493 |
| மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ரூபில்.) | 247 | 283 |
| மொத்த முதலீடுகளின் %மாக அரசபிணையங்களின் முதலீடுகள்(%) | 97.9 | 97.5 |
| மொத்த முதலீடுகளின் %மாக தனியார்துறை முதலீடுகள்(%) | 2.1 | 2.5 |
| சராசரிச் சொத்துச் பட்டியலின் மீதான பெறப்பட்டவருமான வீதம் | 13.10 | 13.64 |
| மொத்த உறுப்பினர் நிலுவை (ரூ.பில்) | 256 | 295 |
| மொத்த வருமானம் (ரூ.மில்.) | 30,401 | 36,171 |
| வருமான வரி (ரூ.மில்.) | 2,991 | 3,327 |
| நிருவாகச் செலவுகள் (ரூ.மில்.) | 260 | 333 |
| மொத்த வருமானத்தின் % நிருவாகச் செலவுகள் (%) | 0.86 | 0.92 |
| வீடமைப்புக் கடன்களுக்காக வழங்கப்பட்ட உறுப்பினர் நிலுவைச்சான்றிதழ் | 16,066 | 19,502 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட ஆண்டு வட்டிவீதம் (%) | 11.50 | 12.10 |
| உறுப்பினர் நிலுவைகளின்மீது பிரகடனப் படுத்தப்பட்ட பயனுறு வட்டிவீதம் (%) | 11.69 | 12.26 |

மூலம் : ஊழியர் சேம நிதியம்

கடனை வெற்றிகரமாக தீர்ப்பனவு செய்யுமிடத்து இரண்டாவது கடனையும் பெற்றுக்கொள்ளலாம். 2002இல், ஊழியர் சேமநிதியம் ரூ.2,673 மில்லியன் தொகை கொண்ட மொத்த ஒப்புதல் பெற்ற கடன்களுக்காக 19,502 உறுப்பினர் நிலுவைச் சான்றுப் பத்திரங்களை வழங்கியது.

### தற்போது உதவு தொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள்

2002 இறுதியில், 9.3 மில்லியன்களாகவிருந்த மொத்த உறுப்பினர் கணக்குகளில் தற்போது உதவுதொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகள், 7.3 மில்லியன்களாகும். முக்கியமாக உறுப்பினர் ஒருவர் நிதியத்துடன் ஒன்றிற்கும் மேலான கணக்கைக் கொண்டிருப்பதால் உதவுதொகை செலுத்தாத கணக்குகள், தொடர்ந்து வளர்ச்சியடைகிறது. இவ்வாறான தற்போது உதவு தொகை செலுத்தாத உறுப்பினர் கணக்குகளுக்கு நிதியம் வருடாந்தம் வட்டியை வரவு வைத்து உறுப்பினர் ஓய்வு பெறுகையில் அவற்றை மீளளிப்புச் செய்தபோதிலும் மேற்குறிப்பிட்ட கணக்குகளின் ஒன்றுதிரளல், நிருவாகத் திறன்களை தடங்கலுறச் செய்யக்கூடும். எனவே உறுப்பினர்கள் தமது தொழில்நிலையை மாற்றும்போது புதிய தொழில்தருநர் மூலம் "பத்திரம் ஜீ" இனை சமர்ப்பிப்பதன் மூலம் அவர்களின் கணக்குகள் இரட்டிப்பதைத் தவிர்ப்பதற்கு ஊக்கப்படுத்தப்படுகிறார்கள்.

## செலாவணிக் கட்டுப்பாடு

2002ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாடு சம்பந்தமாக ஏற்பட்ட பிரதானமான மாற்றம் யாதெனில் இலங்கையில் வதியாதோரால் நிதித்துறை செயற்பாடுகள், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் தொழில் திறன்சார் பணிகள் ஆகிய முக்கிய துறைசார்ந்த கம்பனிகளின் மூலதனத்தில் முதலீடு செய்வதற்கிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமையாகும். வட்டி உழைக்கும் கணக்குகளை வதிவு விசாவுடைய வெளிநாட்டுக் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்களும் கொண்டிருக்க அனுமதித்தல், ஏற்றுமதியாளர்கள் கப்பற் கட்டணங்களை வெளிநாட்டு நாணயத்தில் செலுத்துவதற்கு அனுமதித்தல், வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர் வீடமைப்புக் கடன்களை அந்நியச் செலாவணியில் பெற்றுக் கொள்ள அனுமதித்தல், இலங்கைக்கு வெளியில் எடுத்துச் செல்வதற்கான ரூபாவின் அளவை அதிகரித்தல், வதிவோர் தமது முன்னைய பயணத்தின் போது கொள்வனவு செய்து பயன்படுத்தாத அந்நியச் செலாவணியை எதிர்கால பயணங்களில் பயன்படுத்துவதற்காக வைத்திருப்பதற்கு அனுமதித்தல் போன்றன 2002ஆம் ஆண்டில் நடைமுறைப் படுத்தப்பட்ட ஏனைய கொள்கை வழிமுறைகளாகும். மேலும், ஏற்கனவே தளர்த்தப்பட்டுள்ள நடைமுறைப் பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான கொடுப்பனவு நியதிகளிலிருந்த தடைகளை நீக்குவதோடு மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களையும் மேலும் தளர்த்துவது தொடர்பில் நிதித்துறை மறுசீரமைப்பு குழு செய்த விதந்துரைகளுக்கேற்ப 2002ஆம் ஆண்டு நவெம்பரில் 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளாக அறிவிக்கப்பட்டன. 2003ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இம்முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கேற்ப பயங்கரவாதத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிதல், செலாவணி முறை கேடுகளை கண்டறிந்து, தடுத்துநிறுத்தல் அங்கீகாரமற்ற முகவர்களின் செயற்பாடுகளை கண்டறிதல் எனும் பன்முக குறிக்கோள்களை கருத்திற்கொண்டு தனது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. கப்பல் சரக்குகளை அனுப்பும் முகவர்களைப் பதிவு செய்தல், பயண முகவர்கள் நாணயமாற்றுனர்கள் மற்றும் அந்நியச் செலாவணியை ஏற்றுக் கொள்ளும் அனுமதி வழங்கப்பட்டுள்ள ஏனைய ஆட்கள்; நிறுவனங்கள் என்பவற்றிற்கு அனுமதி வழங்கலும் அனுமதியைப் புதுப்பித்தலும் இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. நாணய மாற்றுனர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கைகள் இவ்வாண்டில் தீவிரப்படுத்தப்பட்டதன் விளைவாக நாணய மாற்றுனர்களினது வியாபாரத்தின் விற்பனைப் புரழ்வு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.

## மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) வதியாதோரால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள்

இலங்கையை ஒரு நிதித்துறை மையமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வங்கித்தொழில், நிதியியல், காப்புறுதி, பங்குத்தரகு தொழில் போன்ற நிதித்துறை செயற்பாடுகளுக்காக நிறுவப்படும் ரூபா கம்பனிகளின் பங்கு மூலதனத்தில் 100 சதவீதம் வரையிலான மூலதனத்தைக் கொண்டிருக்க வதியாதோரை அனுமதிப்பதென 2002ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குடியிருப்பு நோக்கங்களுக்கான கட்டடங்கள் மற்றும் வீதிகளின் கட்டுமானம், நீர் விநியோகம், பொதுப்போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், வலு மற்றும் சக்தியின் உற்பத்தியும் விநியோகமும் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திகளுக்கான முயற்சிகளிலும் வதியாதோர் முதலீடுகள் 100 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டன. மேலும் தொழில் தகைமைசார் பணிகளில் 100 சதவீதம் வரை கட்டுப்பாடுகளின்றி முதலீடு செய்யவும் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் கிளைகள்/தொடர்பு அலுவலகங்களை இலங்கையில் நிறுவவும் வதியாதோர் அனுமதிக்கப்பட்டனர். 2002ஆம் ஆண்டு ஏப்பிறல் 19ஆந் திகதியிடப்பட்ட எண்.1232/14 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட வழிமுறைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

### (ஆ) இலங்கையில் வதிவோரின் வெளிநாட்டு முதலீடுகள்

இலங்கையில் வதிவோர் வெளிநாடுகளில் முதலீடுகளைச் செய்வதற்கான அனுமதிகளை வழங்கும் நடைமுறை யானது 2002ஆம் ஆண்டில் சில நியமங்களின் நியதிகளின் உருவாக்கத்தினூடாக ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2002ஆம் ஆண்டில் வதிவுக் கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஒப்புதல்கள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 2002ஆம் ஆண்டில் இருபத்தியொரு வதிவுக் கம்பனிகள் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன. இம் முதலீடுகள் தைத்த ஆடைகள், கணனி மென்பொருள் தயாரிப்பு, குத்தகை நிதியிடல் தரகுத் தொழில், கப்பல் சரக்கேற்றல் போன்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் மொத்த பெறுமதி சுமார் ஐ.அ.டொ 11.4 மில்லியன்களாகும். மேலும் மூன்று வதிவுக் கம்பனிகளின் ஊழியர்கள் தாய்க்கம்பனிகளால் ஊழியர் நலன்கருதி ஏற்படுத்தப்பட்ட ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டங்களில் பங்குபற்றவும் அனுமதிக்கப்பட்டனர்.

### (இ) வதிவற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கான ரூபாக்கடன் வழங்கல்

1999ஆம் ஆண்டில் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட அனைத்து வர்த்தக வங்கிகள் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் டி.எப்.சீ. என்பன முதலீட்டுச் சபைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த முதலீட்டுச் சபைகம்பனிகள் ஏனைய வதிவற்றோரினால் கட்டுப்படுத்தப்படும் கம்பனிகளுக்கு கடன்கள் மற்றும் முற்பணங்கள் உள்ளிட்ட வசதிகளை ரூபாவில் வழங்க அனுமதிக்கப் பட்டன. 2000ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்திலிருந்து முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட வதிவற்றோரின் கட்டுப்பாட்டிலுள்ள கம்பனிகளுக்கும் இந்த அனுமதி விரிவுபடுத்தப்பட்டது. எனினும், வதிவற்றோரினால் கட்டுப்படுத்தப்படும் முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் முன்மதியுடைய வரையறைகளுக்கு உட் பட்டிருந்தன. அரச வங்கிகளைப் பொறுத்தவரை இக்கடன்கள் தனியார்துறைக்கான அவற்றின் மொத்தக் கடன்களின் 2 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த வேளையில் உள்நாட்டு தனியார் வங்கிகள் 3 சதவீதம் வரையுமான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தன. டி.எப்.சி.சி வங்கி மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றிற்கு ஏற்புடையதான முன்மதியுடைய வரையறை ஆரம்பத்தில் 5 சதவீதமாகவும் பின்னர் 2001ஆம் ஆண்டு ஏப்பிறல் 10 இலிருந்து 10 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டது. எனினும் நிதித்துறை மறுசீரமைப்புச் சம்பந்தமான குழு, முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளுக்கும் சாதாரண சட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளுக்கும் இடையில் வேறுபாடெதுவும் இருக்கக் கூடாதென்பதை கொள்கையளவில் ஏற்று இத்தகைய முன்மதியுடைய வரையறைகளை நீக்குவதற்கான முன்மொழிவுகளைச் செய்துள்ளது.

### (ஈ) வதிவுள்ளோரால் பெறப்படும் அந்நியச் செலாவணிக் கடன்கள்

தற்போது அனைத்து வர்த்தக வங்கிகளும் நேரடி மற்றும் குறித்துரைக்கப்பட்ட மறைமுக ஏற்றுமதியாளர் களுக்கு அந்நியச் செலாவணிக் கடன்களை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுள் தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் டி.எவ்.சி.சி வங்கி என்பனவும் அவற்றிடம் வெளிநாட்டு கடன் வசதிகளூடாகக் பெறப்பட்ட அந்நியச் செலாவணி மூலவளங்கள் இருப்பின் மட்டும் அந்நியச் செலாவணியிலான கடன்களை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய அந்நியச்

செலாவணியிலமைந்த கடன்கள் மீளச் செலுத்தப்படாதுவிடின் வங்கிகள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதி பெற்றே இத்தகைய கடன்கள் தொடர்பில் பிணையமாகப் பெற்ற சொத்துக்களை விற்றுக் கிடைக்கும் ரூபாவிலான பெறுகைகளை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றிக்கொள்ள முடியும். இருகடன்கள் தொடர்பில் ரூ. 79.8 பெறுமதியான விற்பனை பெறுகைகளை இவ்வாறு மாற்றிக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அந்நியச் செலாவணியிலான கடன்களுக்கு நிலவுகின்ற குறைந்த வட்டிவீதங்களின் நன்மைகளை வெளிநாட்டில் பணிபுரியும் வீடுகளை கட்டுவதற்கு கடன்களை வேண்டி நிற்கும் வேலையாட்களுக்கு கிடைக்கச் செய்வதற்காக வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையருக்கு அவர்களின் வெளிநாட்டுச் சம்பாத்தியத்திலிருந்து மீளச் செலுத்தத்தக்க வகையில் அந்நியச் செலாவணியிலான கடன்களை வழங்குவதற்கு 2002ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதல் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**(உ) வதிவுள்ள கம்பனிகளின் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான கடன்பாடுகள்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து விலக்குப் பெற்ற முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகள் தவிர்ந்த ஏனைய வதிவுள்ள கம்பனிகளால் வெளிநாட்டில் பெறப்படும் கடன்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். இவ்வாண்டில் ஐந்து வதிவுள்ள கம்பனிகள் வெளி நாட்டுக் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அந்நியச் செலாவணியில் கடன்பெற அனுமதிக்கப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட மொத்தக் கடன்களின் தொகை ஐ.அ.டொலர் 8.21 மில்லியன்களாகும்.

**(ஊ) இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோர் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகளினால் வைத்திருக்கப்படும் தடுத்துவைக்கப்பட்ட நிதிகள்**

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோருக்குரிய மூலதனச் சொத்துக்களை விற்றுப் பெறப்பட்ட நிதிகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப்படும் வேளையில் அத்தகைய நிதிகளுக்கான வட்டியானது செலுத்த வேண்டியுள்ள ஏதேனும் வரிப் பொறுப்புக்கள் செலுத்தியதன் பின்னர் வெளியில் எடுத்துச்செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. கடந்த காலத்தைப் போன்றே இத்தகைய தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து வர்த்தக வங்கிகளூடாக தனியொருவருக்கு ரூ.750,000 மற்றும்குடும்ப அலகொன்றுக்கு ரூ.1.0 மில்லியன் எனும் வரையறைகளுக்குட்பட்டு பணம் விடுவிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. இதன்படி, இவ்வாண்டில் நிரந்தர வதிவுரிமை பெற்று வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடமிருந்து கிடைத்த 199 விண்ணப்பங்கள் தொடர்பில் ரூ.135.9 மில்லியன் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. மேலும், ரூ.13.9 மில்லியன் கொண்ட தொகை வெளிநாடுகளுக்கு முன்னர் புலம் பெயர்ந்துசென்ற இலங்கையர்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்களின் விற்பனையிலிருந்த கிடைத்த பெறுகைகளென்ற வகையில் இவ்வாண்டில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

**(எ) வெளிநாட்டுக் கடவுச்சீட்டு வைத்திருப்போரின் ரூபாக் கணக்குகள்**

இலங்கையிலுள்ள தூதுவராலயங்கள் உள்ளிட்ட வதிவற்றோர்கள் வட்டி பெறத்தக்க ரூபாக் கணக்குகளை வைத்திருக்க 2001ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்திலிருந்து அனுமதிக்கப்பட்டனர். 2002ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இந்த அனுமதி இலங்கையில் வதியும் வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்போருக்கும் வழங்கப்பட்டது.

**(ஏ) கப்பற்படுத்தல் மற்றும் வானூர்தி கம்பனிகளுக்கான அந்நியச் செலாவணிக் கணக்கு வசதிகள்**

2002ஆம் ஆண்டு மார்ச்சு 22ஆம் திகதியிலிருந்து 17ஆம் பிரிவின் கீழான முதலீட்டுச்சபை கம்பனிகளும் முதலீட்டுச்சபை சாராத ஏற்றுமதியாளர்களும் தமது வெளிநாட்டுக் கணக்குகளிலிருந்து கப்பல் வானூர்தி கட்டணங்களை செலுத்த அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய கொடுப்பனவுகளுக்கான வரவுகளை செய்யும்பொருட்டு தமது வெளிநாட்டு முதல்வர்களது சார்பில் கணக்குகளை பேணும் அனுமதி கப்பல் மற்றும் வானூர்தி முகவர்களுக்கு வழங்கப்பட்டது.

## 2. இலங்கை நாணயத்தின் ஏற்றுமதியும் இறக்குமதியும் பயன்படுத்தப்படாத அந்நியச் செலாவணியை வைத்திருத்தலும்.

2002ஆம்ஆண்டு மார்ச்சு 16ஆம் திகதியிலிருந்து வெளிநாடு செல்லும் மற்றும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு திரும்பும் ஆட்களால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படக்கூடிய இலங்கை நாணயத்தின் வரையறை ரூ.1,000 இலிருந்து ரூ.5,000ஆக அதிகரிக்கப்பட்டது. வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பிரசைகள் மீள திரும்பும்போது வாகனக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்த வசதியாகவே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இதே திகதியிலிருந்து இலங்கையில் வதியும் ஒருவர் 2,000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்குச் சமமான வேறு மாற்றத்தக்க செலாவணிகளில் 500 அமெரிக்க டொலர்களுக்கு மேற்படாத நாணயத் தாள்கள் உள்ளிட்ட நாணயத் தாள்களையும் பயணிகள் காசோலையையும் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. அத்தகைய வெளிநாட்டு நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வணிகரிடமிருந்து அத்தகைய வெளிநாட்டு பயணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டதாகவும் குறித்த பயணத்திற்கு பயன்படுத்தப்படாததாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு வைத்திருக்கப்படும் அந்நியச் செலாவணியானது அதே ஆளினால் எதிர்காலத்தில் பயணிக்கும்போது பயன்படுத்தப்படலாம்.

## 3. வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள்

இவ்வாண்டில் 22.11.2002 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி எண் 1263/ 10இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சில விதிகளுக்கும்

நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கொண்ட கம்பனிகள் ஒப்படைக் கணக்கு முறையில் தங்கத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதனூடாக தங்க இறக்குமதி மேலும் தளர்த்தப்பட்டது. அதுவரை இவ் அனுமதி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மட்டுமே இருந்தது. மேற்படி அனுமதிக்கான தகைமையை இறக்குமதியாளர் ஒருவர் பொறுப்பு வரையறுத்த கம்பனியாகவும் அதன் பிரதானமான செயற்பாடு தங்க வியாபாரம் அல்லது தங்கஆபரணங்கள் அல்லது அதையொத்த பொருட்கள் உற்பத்தியாக இருக்க வேண்டுமென்பதோடு குறிப்பிட்ட கம்பனியின் மூலதனம் ஐ.அ.டொலர் 10 மில்லியன்களுக்கு குறையாமலும் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்கு சிறந்த நிதியியல் நிலையினையும் தங்க வியாபாரத்தில் அனுபவத்தையும் பெற்றிருத்தலும் வேண்டும். மூன்று ஆண்டுகள் செயற்பட்டிராத கம்பனிகளைப் பொறுத்தவரை குறிப்பிட்ட கம்பனி சார்ந்துள்ள கம்பனித் தொகுதியின் அனுபவமும் நிதிச் செயலாற்றமும் கருத்திற் கொள்ளப்படும்.

## 4. 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட தாராளமயமாக்கல் நடைமுறைகள்

மத்திய வங்கியின் நிதித்துறை மறுசீரமைப்புக்கான குழு 2002ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டு வரையறைகளில் மேலும் தளர்த்தல்களை மேற்கொள்ளுவது தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளவென ஒரு செயலணிக்குழுவை நியமித்தது. நிதித்துறை மறுசீரமைப்புக்கான குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட முன்னரே தாராளமயமாக்கப்பட்டிருந்த பன்னாட்டு நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலிருந்த சில தடைகளை நீக்குவது பற்றியும் மூலதனக்கணக்கு கொடுக்கல் வாங்கல்களை மேலும் தாராயமயப் படுத்துவது குறித்தும் இச் செயலணியினால் செய்யப்பட்ட சில பரிந்துரைகள் 2002ஆம் ஆண்டு நவெம்பரில் அறிவிக்கப்பட்ட 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இப்பரிந்துரைகள் வருமாறு ;

**(அ) இலங்கைச் சுங்கத் திணைக்களம் அனைத்து இறக்குமதிகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்காமலேயே விடுவிக்கும் வகையில் இறக்குமதிகள் மீதான தற்போதைய கொடுப்பனவு நியதிகளைத் தளர்த்தல்.**

எண்: 1022/6 கொண்ட 1998ஆம் ஆண்டின் ஏப்பிறல் 8ஆந் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையானது இலங்கைச் சுங்கம் இக் கொடுப்பனவு நியதிகளில் அடங்காத இறக்குமதிகளை விடுவிப்பதற்கு இயலச்செய்யும். அந்நியச் செலாவணி சம்பந்தமற்ற அடிப்படையில் 1000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட பரிசுப்பொருட்கள், வர்த்தக மாதிரிகள், இலங்கையிலிருந்து கொடுப்பனவு எதுவுமின்றி வெளிநாட்டு முதலீட்டாளர்களால் இலங்கையிலுள்ள தமது செயற்றிட்டங்களுக்காக அனுப்பப்படும் உபகரணங்கள், இயந்திரங்கள் போன்ற இறக்குமதிகள் இதனுள் அடங்கும். நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள வரையறைகளை நீக்குவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரை VIII இன் கீழான கடப்பாடுகளை 1994இல் இலங்கை ஏற்றுக்கொண்டதற்கிணங்கவும் பொது மக்களுக்கேற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாகவும், "அந்நியச் செலாவணிச் சம்பந்தமற்றதெனும் அடிப்படையில்" இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளினுள் முழுமையாக அடங்காத இறக்குமதிகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்திற்கு அறிவிக்காது விடுவிப்பதற்கு இலங்கை சுங்கத்திற்கு அனுமதியளிப்பது பொருத்தமானதென உணரப் பட்டிருக்கின்றது. எனினும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது தொடர்ந்தும் பொருட்களின் இறக்குமதிகளுக்கு மேற்கொள்ளப்படும் முன்கொடுப்பனவு களை உரிய பொருட்கள் வந்து சேருவதனை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்பு செய்துவரும்.

**(ஆ) வெளிநாட்டவரினால் கட்டுப்படுத்தப்படும் முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கம்பனிகளுக்கு வங்கிகளால் வழங்கப் படும் ரூபாவிலான கடன்கள் மீதான முன்மதியுடைய வரையறையை நீக்குதல்.**

"மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்" என்ற தலைப்பின் மேலே (இ)இல் குறிப்பிடப்பட்ட முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டவர்களது கட்டுப் பாட்டிலுள்ள கம்பனிகளுக்கான ரூபாக் கடன்கள் மீதான முன்மதியுடைய வரையறைகள் வதிவற்றோரால் கட்டுப்படுத்தப்படும் அனைத்து கம்பனிகளும் வங்கிகளிடமிருந்து ரூபாக்கடன் வசதிகளைப் பெறும் விடயத்தில் ஒரே விதமாக நடாத்தப்படுவதை உறுதிப் படுத்தும் வகையில் நீக்கப்பட்டன.

**(இ) கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதியை நியாயமான வட்டி வீதத்தில் அனுமதித்தல்**

இதுவரைக் காலமும் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் பிற்போடப்பட்ட கொடுப்பனவு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டவேளையில் அத்தகைய கடன் வசதிகளுக்கு வட்டி அறவிடப்படுமிடத்து செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதி தேவைப்பட்டது. எனினும் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அறவிடப்படும் வட்டி வீதம் நியாயமானதாக இருக்கும் பட்சத்தில் கடனடிப் படையிலான இறக்குமதிகளை அனுமதிக்கும் அதிகாரம் வர்த்தக வங்கிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

**(ஈ) அந்நியச் செலாவணியில் வழங்கப்பட்ட கடன்களுக்கு பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களை, அத்தகைய கடன்களை திருப்பிச்செலுத்த தவறும் பட்சத்தில் அவற்றை விற்று கிடைக்கும் ரூபாவிலான பெறுகைகளை அந்நியச் செலாவணிக்கு மாற்ற அனுமதித்தல்.**

அந்நியச் செலாவணியில் வழங்கப்பட்ட கடன்களுக்காக பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களை அத்தகைய கடன்கள் மீளச் செலுத்தப்படாவிடின் விற்பனை செய்து பெறப்படும் ரூபாவிலான பெறுகைகளை அந்நியச் செலாவணிக்கு மாற்ற அனுமதிக்கும் அதிகாரம் இதுவரை செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடமே இருந்தது. பின்வரும் சான்றுகள் இருக்குமிடத்து இவ் அதிகாரம் கடன் வழங்கிய வங்கிகளுக்கு கையளிக்கப்படும்;

(i) கடன் வழங்கப்பட்டபோது கடன் இடர்நேர்வு குறித்து முறையாக ஆய்வு செய்யப்பட்டிருந்த தென்பதும்: அத்துடன்

(ii) பிணையமாக வழங்கப்பட்ட சொத்தை இன்னொருவருக்கு அந்நியச் செலாவணிக்கே விற்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தது.

**(உ) வங்கிகளிடமிருந்து அந்நியச் செலாவணியை முன்னோக்கிய கொள்வனவு அடிப்படையில் பெறுவதற்கான கால அளவை அதிகரித்தல்.**

கடன்களை மீளச் செலுத்துதல் போன்ற தேவைகளுக்காக வங்கிகளிடமிருந்து அந்நியச் செலாவணியை முன்னோக்கிய கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யத்தக்க கால அளவு 360 நாட்களிலிருந்து 720 நாட்கள் வரை அதிகரிக்கப்பட்டது.

**(ஊ) இறக்குமதிகளுக்கான அந்நியச் செலாவணியை முன்னோக்கிய அடிப்படையில் இறக்குமதி ஆவணங்கள் அனுப்பப்பட்ட வங்கி தவிர்ந்த ஏனைய வங்கி யொன்றிடமிருந்து கொள்வனவு செய்ய அனுமதித்தல்.**

இறக்குமதியாளர்கள் 360 நாட்கள் வரையிலான முன்னோக்கிய அடிப்படையிலான அந்நியச் செலாவணிக் கொள்வனவை இறக்குமதி ஆவணங்களைக் கையாளும் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர். வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம், எதிர்காலத்தில் இறக்குமதிகளுக்கான கடன் பத்திரங்களை வழங்கி, ஒப்புக்கொண்டதன் பின்பு ஆவணங்கள் அல்லது கொடுப்பனவின் பின் ஆவணங்கள் என்ற இறக்குமதி பட்டியல்களுக்கான கொடுப்பனவைச் சேகரிக்கும் வங்கி தவிர்ந்த வேறொரு வங்கியிடமிருந்து, குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்பான சான்றினை அந்நியச் செலாவணியை விற்பனை செய்யும் வங்கிக்கு சமர்ப்பித்து எதிர்காலத்தில் முன்னோக்கிய கொள்வனவுகளை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

**(எ) வதிவற்றோருக்கு கேட்பு பிணைகள், செயலாற்றுப் பிணைகள் மற்றும் பிற கொடுக்கல் வாங்கல்களுக்கு உத்தர வாதங்களை வழங்க அனுமதித்தல்.**

2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைக்கிணங்க அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இலங்கையில் வதியும் ஆளொருவரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களுக்கு அந்நியச் செலாவணியில் கொடுப்பனவொன்றைக் கொண்டுள்ள ஏற்கப்பட்ட கடப்பாடுகள் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்கவும் புதுப்பிக்கவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

i. ஏற்றுமதிகள் அல்லது ஏனைய பணி ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்கள் சார்பாக எந்தவித உச்ச எல்லையுமின்றி கேள்வி அல்லது விலைக்கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளுக்குட்பட்ட கேட்பு பிணைகள்.

ii. இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்கள் தொடர்பில் ஏற்றுமதிகள் அல்லது ஏனை பணி ஒப்பந்தங்கள் தொடர்பில் எந்த உச்ச எல்லையு மின்றி ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஆதாரம் மற்றும் ஒப்பந்தவிதி முறைகளுக்கு அமைவாக செயற்பாட்டுப் பிணைகள்.

iii. கொடுக்கல் வாங்கல்களுக்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்படின் மேலே விடயம் (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கல்லாத பிற தேவைகளுக்கு 500,000 அமெரிக்க டொலர்கள் வரைக்குமான உத்தரவாதக் கடிதங்கள்.

**(ஏ) வதியாதோரரின் உள்நோக்கிய பணவனுப்பல்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட உண்மைச் சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளை செலாவணிக் கட்டுப்பாட்டிற்கு தெரியப்படுத்தாமல் இலங்கைக்கு வெளியில் கொண்டு செல்ல அனுமதி வழங்கல்.**

வதியாதோர் குடியிருப்புத் தேவைகளுக்காக சொத்தொன்றை, நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட உள்நோக்கிய பணவனுப்பல்களிலிருந்து கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டாலும் அத்தகைய சொத்துக்களை விற்பனை செய்து கிடைக்கும் பெறுகைகளை இலங்கைக்கு வெளியில் கொண்டு செல்ல செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதி கூறப்பட்ட மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிர காரம் இத்தகைய சொத்துக்களை கொள்வனவு செய்ய அல்லது அபிவிருத்தி செய்ய இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட அந்நியச் செலாவணி அளவிற்கு அவற்றின் விற்பனை பெறுகைகளை முதலீட்டாளர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள் செலாவணிக் கட்டுப்பாட்டுக்கு தெரியப்படுத்தாமலே வர்த்தக வங்கிகளூடாக வெளியில் அனுப்ப முடியும். ஏதாவது மூலதன இலாபம் ஈட்டப்பட்டிருப்பின் உரிமம் பெற்ற வணிக வங்கியொன்றிலுள்ள கணக்கொன்றில் அவ் இலாபம் வைக்கப்பட வேண்டும்.

**(ஐ) கிளை அல்லது தொடர்பு அலுவலகமொன்றை இலங்கையில் வதியாதோர் திறப்பதற்கிருந்த கட்டுப்பாடுகளை நீக்குதல்.**

மேலுள்ள முன்மொழிவுகளுக்கிணங்க வதியாதோர் இலங்கையில் கிளை, தொடர்பு அலுவலங்களை, அக்கிளை தொடர்பு அலுவலகம் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஆகக் குறைந்தது ஐ.அ.டொலர் 100,000 அல்லது அதற்குச் சமமான தொகையை ஏனைய அந்நியச் செலாவணிகளில் இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான சான்றை சமர்ப்பிப்பதனூடாகவோ அல்லது அக்கிளை அலுவலகம் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடாவிடின் உள்நாட்டிலேற்படும் எல்லாச் செலவினங்களையும் இலங்கைக்கு கொண்டுவரப்படும் அந்நியச் செலாவணியினூடாக ஈடுசெய்வதாக உத்தரவாதம் தந்தாலோ அனுமதியைப் பெறலாம்.

2003ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறிய முன்மொழிவுகளை 2003ஆம் ஆண்டின் முதற்பாகத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 5. கப்பல் சரக்கேற்றுவோரை பதிவு செய்தலும் அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட உரிமப் பத்திரங்களை வழங்கலும்

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது கப்பல் சரக்கேற்றுவோரை பதிவு செய்தல், பயண முகவர்களுக்கு பயணிகள் காசோலைகளை வழங்கும்

அதிகாரத்தை வழங்கல், பண மாற்றுனர்களுக்கும் சுற்றுலா விடுதிகள், தீர்வையற்ற கடைகள், பயண முகவர்கள் மற்றும் பணி வழங்குனர்கள் போன்ற ஏனைய நிறுவனங்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கு அவர்கள் மேற்கொண்ட விற்பனை மற்றும் பணிகள் தொடர்பில் அந்நியச் செலாவணியை ஏற்பதற்கான உரிமம் வழங்கல்/ புதுப்பித்தல் போன்ற கருமங்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

**(அ) கப்பல் சரக்கேற்றுவோரை பதிவு செய்தல்**

2002ஆம் ஆண்டில் 8 புதிய கம்பனிகள் கப்பல் சரக்கேற்றுவாராக பதிவு செய்யப்பட்டதனூடாக கப்பல் சரக்கேற்றுவோரின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 117 ஆக காணப்பட்டது. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் அதனுடன் பதிவு செய்து கொண்டுள்ள கப்பல் சரக்கேற்றுவோரின் நடவடிக்கைகளை கண்காணித்து வருகிறது.

**(ஆ) பயணிகள் காசோலை வழங்குவதற்கு பயண முகவர்களுக்கு அதிகாரம் வழங்கல்**

2002ஆம் ஆண்டில் மேலுமொரு பயணமுகவர் பயணிகள் காசோலையை வழங்க அனுமதிக்கப் பட்டதைத் தொடர்ந்து அதிகார மளிக்கப்பட்ட பயண முகவர்களின் மொத்த எண்ணிக்கை 8ஆக அதிகரித்தது.

**(இ) நாணய மாற்றுனர்களின் நியமனமும் அவர்களை மேற்பார்வை செய்தலும்.**

நடப்பாண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் நாணயம் மாற்றும் வியாபாரத்திலீடுபட ஆறு கம்பனிகளுக்கு புதிதாக அனுமதிப் பத்திரங்களை வழங்கியதுடன் 32 பண மாற்றுனர்களது அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதனூடாக அதிகாரமளிக்கப் பட்ட மொத்த பணமாற்றுனர்களின் எண்ணிக்கை 38ஆக அதிகரித்தது. எனினும் புதிய அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியாகும் காலம் 6 மாதங்களாக வரையறுக்கப் பட்டு இக் கம்பனிகள் மாதமொன்றிற்கு குறைந்தது 5000 அமெரிக்க டொலர்களை சராசரி புரழ்வாக கொண்டிருந்தாலேயே அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படுமென்ற நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. இத்தகைய கடுமையான தகுதித் தேவைப்பாடுகள் பண மாற்றும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதிலும் புதுப்பிப்பதிலும் பின்பற்றப்பட்டதுடன் ஆகக் குறைந்த சராசரி புரழ்வாக மாதமொன்றிற்கு 5000 அமெரிக்க டொலர்களை மாதமொன்றிற்கு காட்டத் தவறிய வற்றின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்பட்டமை மற்றும் பண மாற்றுனர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை என்பன வற்றின் விளைவாக கடந்த இரு ஆண்டுகளில் பண மாற்றும் வியாபாரத்தில் விரைவான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. பண மாற்றுனர்களின் அறிக்கை ஆண்டுப் புரழ்வு 2000ஆம் ஆண்டிலிருந்த ஐ.அ.டொலர் 39.7 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2001இல் ஐ.அ.டொலர் 100.9 மில்லியன்களுக்கும் 2002இல் ஐ.அ.டொலர் 142.9 மில்லியனிற்கும் மேலும் அதிகரித்தது. இதன் காரணமாக முறைசாரா சந்தைக்கான அந்நியச் செலாவணியின் கசிவு கணிசமாகக் குறைக்கப்பட்டது.

## 6. கண்காணிப்பு

1994ஆம் ஆண்டில் நடைமுறைக் கணக்கு கொடுக்கல் வாங்கல் தாராளமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் அனுமதிக்கப்பட்ட பயணமுகவர்களும் நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களுக்காக தமது தற்றுணிபு அதிகாரத்தையும் மதிமானத்தையும் பயன்படுத்தி கோரிக்கைகளின் மெய்த்தன்மை தொடர்பில் திருப்தியடைந்தால் வரை யறை எதுவுமின்றி அந்நியச் செலாவணியை வழங்க அனுமதிக்கப்பட்டனர்.

அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் அனுமதிக்கப்பட்ட பயணமுகவர்களும் செலாவணி விற்பனைகளையும் கொள்வனவுகளையும் திணைக்களம் ஒழுங்கானதொரு முறையில் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் வகையில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அறிக்கைப்படுத்துமாறு வேண்டப் பட்டனர். 1999முதல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலத்திரனியல் நிதிப் பரிமாற்ற அட்டைகளூடான அந்நியச் செலாவணி வழங்கல்களையும் அறிக்கைப்படுத்துமாறு வேண்டப்பட்டனர். தற்போது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாதாந்த அந்நியச் செலாவணியிலான எடுப்பனவுகள் அட்டை யொன்றுக்கு 5000 அமெரிக்க டொலர்களைக் காட்டிலும் விஞ்சியவை தொடர்பான இலத்திரனியல் நிதி பரிமாற்ற அட்டையூடான கொடுக்கல் வாங்கல் தொடர்பான விரிவான மாதாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர். அந்நியச் செலாவணியின் விற்பனைகள் மற்றும் கொள்வனவுகளைக் கண்காணிக்கும் பணிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் இறக்குமதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகளை அவற்றுக்குரிய பொருட்களும் பணிகளும் நாட்டுக்கு வருவதனை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணித்து வந்தது. கப்பல் மற்றும் வானூர்தி முகவர்கள் மற்றும் கப்பல் சரக்கேற்றுவோர் ஆகியோரால் வெளிநாட்டு முதல்வர்கள்/ முகவர்கள் சார்பில் பராமரிக்கப்படும் ரூபா கணக்குகளுக்கு, செய்யப்பட்ட வரவுகளும் பற்றுக்களும் இவ் ஆண்டிலும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டன.

## 7. பயங்கரவாதத்திற்கான நிதியிடல்களைக் தடுத்துநிறுத்தல்

வெளிவிவகார அமைச்சினால் 2001ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்கு விதிமுறைகளின் இல.1 பிர காரம் விதிக்கப்பட்ட நியதிகளின்படி வங்கிகள், பண மாற்று முகவரகங்கள், பணமாற்றுனர்கள், பயண முகவர்கள் மற்றும் அந்நியச் செலாவணியை ஏற்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் அமைப்புக்கள் ஒழுகி வருகின்றனவா என்பதை கண்காணிக்கவும் ஏனைய பயங்கரவாத நிதிப்படுத்தல் மூலங்களைக் கண்டறியவும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமானது ஒரு விசேட கண்காணிப்புப் பிரிவை 2001ஆம் ஆண்டில் உருவாக்கியது. இவ்வாண்டிலும் இந் நடவடிக்கைகள் தொடர்ந்ததோடு வர்த்தகவங்கிகள், சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரோடு கூட்டாகவும்) பணமாற்றுனர்கள் பயணிகள் காசோலைகளை விநியோகிக்க அதிகாரமளிக்கப்பட்ட பயணமுகவர்கள்

மற்றும் அந்நியச் செலாவணியை ஏற்க அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய ஆட்கள் மற்றும் அமைப்புக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையினை 2001ஆம் ஆண்டின் இல 1 ஒழுங்குவிதிகளின் நியதிகளின் பிரகாரம் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஒழுகுமாறு பல்வேறு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

## 8. புலனாய்வு

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்ட மீறல்கள் தொடர்பிலான புலனாய்வுளை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ச்சியாக மேற்கொண்டது. இவ்வாண்டில் நிறைவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பில் விதிக்கப்பட்ட தண்டப் பணங்களின் மொத்த தொகை ரூ.6.06 மில்லியன் ஆக இருந்தது. புலனாய்வு தொடர்பில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் இரண்டு பாரிய அந்நியச் செலாவணி மோசடிகளில் சம்பந்தப்பட்டோரை மேல் நீதிமன்றம் குற்றவாளிகளாக இனம் காண முடிந்தமையாகும். செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சட்டரீதியற்ற முறையில் அந்நியச்செலாவணி வைத்திருப்பவர்களுக்கெதிராக நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதிலும் ஈடுபட்டது. இந்திய இலங்கை இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின்போது இந்தியச் சுங்கத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் சட்டரீதியற்ற முறையில் உழைத்த பணத்தை சட்டபூர்வ பணமாக மாற்றுவதற்கு வழிவகுக்கும். இலங்கையில் தொழிற்படுகின்ற மாற்று பணவனுப்பல்கள் பொறிமுறை தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளை புலனாய்வு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## தகவல்

தகவல் திணைக்களம் வங்கியின் தகவல் பிரிவாகத் தொடர்ந்து தொழிற்படுவதுடன், வங்கியின் அலுவலர்களுக்கும், பொதுமக்களுக்கும் தகவல்களைப் பரப்புவதற்கு பொறுப்பாக விளங்கியது. திணைக்களம், வங்கியின் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த எண்ணிக்கையான அலுவலர்களுடன் அதன் தொழிற்பாடுகளையும் ஏனைய விசேட ஒப்படைப்புக்களையும் செயற்படுத்தியதுடன் அதன் நடவடிக்கைகளில் சிலவற்றை வெளியிலிருந்து பெற்றுக்கொண்டது.

ஊழியர்களுக்கும், முகாமைத்துவத்துக்குமிடையே பயன்தரும் இருவழித் தொடர்பூட்டல் முறையை ஏற்படுத்தி உள்ளகச் செய்தியை வழங்கும் சிறப்பு இதழாக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "கவுலுவ" (சாளரம்) இவ்வாண்டு பூராவும் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

நாளாந்த செலாவணி வீதங்கள், வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள், நுகர்வோர் விலைச்சுட்டெண்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான தகவல்கள்ஆகியன பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு கிரமமாக வெளியிடப்பட்டன. இத்துடன், திணைக்களம் அலுவலர்சார் பத்திரிகை வெளியீடுகளையும் வங்கியின் விளம்பரம் மற்றும் ஏனைய விளம்பரப்படுத்தும் வேலையையும் கையாண்டது. திணைக்களம் மின்னூடகங்களினூடாக பலதரப்பட்ட பயன்படுத்துனர்களுக்கும் தகவலைப் பரப்ப ஆரம்பித்தது. இது பொருளாதாரச் சீர்திருத்தம் தொடர்பான ஊடக செயலமர்வு உட்பட பலதரப்பட்ட விடயங்கள் பற்றி ஊடக மாநாடுகள் பலவற்றை ஒழுங்கு செய்தது. மாதாந்த வெளியீடான "சட்டான" மற்றும் மாதத்திற்கு இருமுறை வெளிவரும் "நியூஸ்சேர்வே" என்பன தொடர்ந்து வெளியிடப்பட்டன. திணைக்களம் தமிழ் வாசகர்களின் நன்மைகருதி "சட்டான" இன் தமிழ் மூலமான "குறிப்பேடு" என்ற வெளியீட்டையும் ஆரம்பித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, அச்சகம் வங்கியின் அச்சிடல் தேவைப்பாடுகளைத் தொடர்ந்து பூர்த்திசெய்தது. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கிரமமான அச்சிடல் வெளியீடுகள் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை, இலங்கை சமூக பொருளாதாரத் தரவு, இலங்கையின் பொருளாதார சமூக தரவுகள், "நியூஸ்சேர்வே" "சட்டான" மற்றும் "உயர் அலுவலர் ஆய்வுகள்" என்பவற்றை உள்ளடக்குகின்றன. "கெறிற்றேஜ் ஒப் சபரகமுவ" என்பதன் ஆங்கில மற்றும் சிங்கள மூலங்கள் மற்றும் "இலங்கையில் வங்கித்தொழில் மற்றும் நிதி தொடர்பான சட்டங்கள்" இன் மூன்றாவது திருத்தம் இவ்வாண்டில் வெளியிடப்பட்ட விசேட வெளியீடுகள் ஆகும். மேலே குறிப்பிட்ட வெளியீடுகளின் அச்சிடலுடன், அச்சகம் ஆய்விற்குரிய ஆண்டில், வங்கியின் புத்தாண்டு வாழ்த்து மடல்கள் மற்றும் மத்திய வங்கிக் கையேடு-2003 உள்ளிட்ட 250 அச்சிடல் வேலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது. நிதியமைச்சின் மூன்று வெளியீடுகளின் அச்சிடலையும் அச்சகம் பொறுப்பேற்றது.

இத் திணைக்களம் பிராந்திய அபிவிருத்தித் திணைக்களத்தின் சார்பில் முன்னோக்கிய ஒப்பந்த முறையின் பயன்களை வேளாண்மைப் பொருட்கள் உற்பத்தி செய்வோர், கொள்வனவு செய்வோர் மற்றும் வங்கியாளர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கான முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் தொடர்பான "சகன் எலிய" என்ற கல்விசார்ந்த தொலைக்காட்சி விவரணத்தைத் தயாரித்தது. இவ்விவரணத் திரைப்படம் திருகோணமலையில் ஒகத்து 2002இல் நடாத்தப்பட்ட "யுக தெக்ம" என்ற கைத்தொழில் பொருட்காட்சியில் முதன்முதலாக பொதுமக்களுக்கு காண்பிக்கப்பட்டது.

## நூலகமும் தகவல் நிலையமும்

ஆய்விற்குரிய ஆண்டில், நூலகம் மற்றும் தகவல் நிலையம் இணையத்தள செய்திகள், புதிதாக அண்மையில் சேர்க்கப்பட்டவை தற்போதைய உள்ளடக்க விடயங்கள், அண்மைய கட்டுரையிலிருந்தான பிரிவெடைகள், உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கித்தொழில், உலகம் முழுவதிலுமுள்ள வங்கித்தொழில் மற்றும் நிதியியல் போன்ற மின்னியல் வெளியீடுகளைத் தொடர்ந்தும் திரட்டியதுடன், இணையத்தினூடாக நடைமுறைத் தகவல்களையும் பரப்பியது. அச்சு வடிவத்தில் வங்கியின் மூத்த முகாமையாளர்களுக்கு பரப்பப்பட்ட "செய்தி நறுக்குப் பணிகள்" தன்னியக்கப்படுத்தப்பட்டிருந்ததுடன் "செய்தி விழிப்பு" என்ற தலைப்பின் கீழ் பரந்தளவிற்கு பயன்படுத்தும் குழுவினருக்கு இணையத்தினூடாகக் கிடைக்கச் செய்யப்பட்டது.

2002இல், முதன்மை நூலகத்தின் நூல் சேகரிப்பு 10,107 இலிருந்து 11,273 நூல்களுக்கும் 762 சி.டி.றோம் களிலிருந்து 799 சி.டி.றோம்களுக்கும் அதிகரித்த வேளையில் இணையத்தள நேரடி வசதிகளைக் கொண்ட 49 உடன் சேர்த்து 299 பருவகால வெளியீடுகளுக்காகச் சந்தா செலுத்தப்பட்டது. அத்துடன் முக்கிய நேரடி வசதி Centre Bank.com மற்றும் .ft.com இணையத்தளத்தில் பெறப்பட்டது. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் நூலகத்தினது நூல்களின் சேகரிப்பு 4,012இலிருந்து 4,292 இற்கு அதிகரித்ததுடன் 39 பருவகால வெளியீடுகளுக்கும் சந்தாப்பணம் செலுத்தப்பட்டது.

2002 ஏப்பிறலில் நூலக தகவல் நிலையம் பொருளியல், வங்கித்தொழில், நிதியியல் என்பன வற்றுடன் தொடர்புடைய 17 உள்ளூர் நூலகங்களுடன் மின் அஞ்சலை அடிப்படையாகக் கொண்ட வலையமைப்பான இலங்கை மின்னியல் வங்கி நூலக வலையமைப்பை நிறுவியதுடன் அந்தந்த நூலகங்களிடையே தகவல்களை செயற்றிறன் மிக்க முறையில் பகிர்ந்து கொண்டது.

2002ஆம் ஆண்டில் மேலதிகமாக இரண்டு (2) இணையத்தள வசதிகள் பயன்படுத்துவோர்க்கு வழங்கப்பட்டதுடன் பயன்பாடு முன்னேற்றகர மானதாகவும் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டில் முதன்மை நூல் நிலையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட வங்கித்தொழில் சந்தைகளுக்கான ஆய்வுநிலையம் 2002இன் பின்னரைப்பகுதியில் கணனியுடன் கூடிய மின் அஞ்சல் மற்றும் இணையத்தள வசதிகளை வழங்கியது.

ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில் நூலக மற்றும் தகவல் நிலையம், மத்திய வங்கி அலுவலர்கள் நூலக மற்றும் தகவல் நிலையத்திலுள்ள கிடைக்கத்தக்கவுள்ள வசதிகளை பயன்படுத்துவதனை இயலச்செய்யும் பொருட்டு அவர்களுக்கு பல பயன்படுத்துநர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது

## தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பச் சூழலினை மேலும் விரிவாக்கும் அதன் முயற்சிகளையும் அதேபோன்று வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை தரமுயர்த்துவதனையும் தொடர்ந்தும் மேற்கொண்டது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் திணைக்களத்தின் முழுக்கவனமும் (அ). திணைக்களங்களின் நாளாந்த தொழிற்பாடுகளில் தகவல் தொழில்நுட்பத்திற்கு வளர்ந்துவரும் கேள்வியினை ஈடுசெய்வதற்காக புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதும், ஏற்கனவேயுள்ள வசதிகளை தரமுயர்த்துவதும்; (ஆ) உடனடியாக அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்வது மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேட்டு முறையின் செயற்றிட்ட வேலைகளை விரைவுபடுத்துவது; (இ) வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் தொழிற்பாட்டுச் செலவினைக் குறைப்பதற்கும் மேலும் தன்னியக்கப்படுத்துவது; (ஈ) மத்திய வங்கி அலுவலர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினையும், தேர்ச்சியினையும் தரமுயர்த்துவது என்பனவற்றில் செறிந்து காணப்பட்டது. நவீனமயப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் நீண்டகால தொலைநோக்கினை முன்னெடுத்துச்செல்வதில் காணப்படக்கூடிய எதிர்கால அறைகூவல்களை சந்திப்பதற்கு ஏற்ற விதத்தில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை வழங்கும் நோக்குடன் இவை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2002இல் உள்ளகப்பகுதி வலையமைப்பு மேலும் விரிவடைந்து, வலையமைப்புடன் இணைக்கப்பட்ட தனியாள் கணனிகளின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டின் 355 இலிருந்து 462இற்கு அதிகரித்தது. ஆய்விற்குரிய ஆண்டின் மின்அஞ்சல் இணைப்புக்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்ததுடன் பெரும்பாலும் அனைத்து வங்கி உயர் அலுவலர்களுக்கும் தற்பொழுது மின்அஞ்சல் வசதி வழங்கப்படுகிறது. இணையத்தளத் தொடர்பின் இணைப்பு இயலளவு 2 எம்பீபிஎஸ் (MBPS) இற்கு அதிகரிக்கப்பட்டதன் விளைவாக இணையத்தள செய்தியினை பெற்றுக்கொள்ளும் நேரம் விரைவடைந்ததுடன், இது அதிகரித்த மின்அஞ்சல் மற்றும் இணையத்தள செய்திப் பரிமாறல்களை உள்வாங்க அவசியமானதாக இருந்தது.

பொதுமக்களுக்கு தகவல்களைப் பரப்புவதற்கு வசதியளிக்கும் பொருட்டு, ஊழியர் சேமநிதியத்திற்காக பெப்புருவரியில் இணையத் தளமொன்று நிறுவப்பட்டது. பயிற்சி மற்றும் மனித மூலவள அபிவிருத்தியுடன் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்காக பயிற்சித் திணைக்களத்திற்கு உள்ளக வெப்தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்குமான நியமனங்கள் உடனடியாக இத் தளத்தினூடாக பெறப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின், திணைக்களம் சார்ந்த வெப்தளம் இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தினைப் பரப்பவும், திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முன்னேற்றத்தினை அறிக்கையிடவும் பயன் படுத்தப்படுகிறது. வெப்தளங்களும் திணைக்கள ரீதியான சேர்வர்களும் மத்திய வங்கியிலுள்ள திணைக்களங்களுக்கிடையே தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் வசதியை வழங்கின.

தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அலுவலர்கள் விரிவுரைகளை நடாத்துவதற்கு விடுவிக்கப்படுவதுடன், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கான மூலவள-ஆட்களாகவும் தொழிற்பட்டனர்.

### பேரழிவிலிருந்து மீட்சிபெறும் செய்முறையினையும் தொடர்ச்சியான நடவடிக்கையினையும் வலுப்படுத்தல்

மத்திய வங்கியின் பேரழிவு மீட்சி தொழிற்பாடுகளை வலுப்படுத்தியுள்ள ஒரு நடவடிக்கையாக முன்னர் பதியப்பட்ட விடயங்களை பின்தளமாக விளங்கும் வேறொரிடத்தில் பதியும் கணனி முறை அதிகரித்த இயலளவுடனும், விரைவான செய்முறைப்படுத்தலுடனும் கூடிய விதத்தில் ஏஎஸ்/ 400 மாதிரி 270 முறை தரமுயர்த்தப்பட்டது. ஏஎஸ்/ 400 முறையிலான மாற்றங்கள் பின்தள தரவுத்தளத்திற்கு நாளாந்தம் பிரதிபண்ணப்படும். முக்கியமான வேலைகள் வேலைநாளின் முடிவில் விடயங்களை வேறொரிடத்தில பதியும் பின்தளத்திற்கும் முதன்மைத் தளத்திற்குமிடையில் இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி வழியினூடாக

அதே நேரத்திலேயே பூரணப்படுத்தப்படுகின்றன. இவ் வசதி வேறோரிடத்தில் விடயங்களைப் பதியும் பின்தளத்தின் தொழிற்பாட்டு வசதிகளைக் கொண்டிருக்கும் தன்மையானது, முதன்மைத் தளத்தில் பாரிய பழுதுகள் அல்லது பேரழிவுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் வேறு இடத்தில் விடயங்களைப் பதியும் பிற்தளத்திற்கு முக்கிய தொழிற்பாடுகளை மாற்றிக் கொள்வதனை இயலச் செய்யும். மீட்சி செய்முறைகளை மேலும் வலுப்படுத்து வதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அலுவல்களைத் தொடருகின்ற திட்டமொன்றினைத் தயாரிப்பதனை அதாவது முதலில் தகவல் தொழில் நுட்பத் திணைக்களத்திற்கான திட்டத்தினை வடிவமைப் பதனைத் தொடங்கியுள்ளது.

கணனி வலையமைப்பின் விரிவாக்கம் காரணமாக, தொடர்பான திணைக்களங்களின் அனைத்து தகவல் தொழிற்பாடுகளையும், தகவல் தொழில்நுட்ப திணைக்களம் தனித்து பேணமுடியாது என்பது வெளிப்படை. இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு திணைக்களத்திலிருந்தும் நியமிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப தொடர்பு அலுவலர்களின் பொறுப்பாண்மையின் செயற்பரப்பு விசாலிக்கப் பட்டிருக்கிறது. தொடர்பு அலுவலர்களிடம் கணனியுடன் தொடர்பான அனைத்து விடயங்களையும் கவனிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன் ஏதாவது உதவி தேவையாயின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்திற்கு அவர்கள் அறிவிக்க வேண்டும். தொடர்பு அலுவலர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பான விடயங்களில் நேரடிச் செய்முறைப் பயிற்சிகளை வழங்கும் செயலமர்வை உள்ளடக்கிய பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

## கணனிப் பிரயோக அபிவிருத்தி

வங்கியின் திணைக்கள பயன்படுத்துனர்களின் நன்மைக்காக தகவல் தொழில்நுட்ப திணைக்களம் ஏஎஸ்/400 மாதிரி வின்டோஸ் என்.ரி தளங்கள் இரண்டின் மீதும் தொடர்ந்தும் பல பிரயோகங்களை அபிவிருத்தி செய்தது. சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தின்கீழ் விலகிச்சென்ற அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைவேலைச் செயற்பாடுகளில் பெரும்பாலானவற்றினை பதிலீடு செய்யும் ஒரு நடவடிக்கையாக, தன்னியக்க நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதற்காகவும் கைவேலை தொழிற்பாடுகளை பதிலீடு செய்வதற்குமாக தகவல் தொழில்நுட்ப திணைக்களம் பல செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தினை பெற்றுக்கொண்ட ஆட்களுக்கு, குறித்துரைக்கப்பட்ட நேர வரையறைக்குள் சுயவிருப்பு ஓய்வூதியதிட்ட நன்மைகளின் கொடுப்பனவுகளையும், கணக்கீடுகளையும் நிறைவு செய்யும் பொருட்டு தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் அதன் மூலவளங்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. புதிய நேரம் மற்றும் இடாப்பு பதிவிடும் முறையொன்று நடைமுறைப்படுத்தப் பட்டதுடன் இது, சுழல் முறை அமைப்பிலிருந்து ஊழியர்களின் உள்வரும்/ வெளிச்செல்லும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதுடன் ஏஎஸ்/400 முறையினூடாக பயன்படுத்தும் திணைக்களங்களுக்குத் தகவல்களைப் பரப்புகின்றது. இம் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நேரம் பதிவிடும் பொறிகள் தேவையற்றனவாக மாறின. தரவுத் தளத்தில் விடுப்பு மற்றும் குறுகிய கால விடுப்புக்களைப் பதிவு செய்வதற்கேற்ற விதத்தில் பிரயோகங்களை விரிவாக்கும் பொருட்டு மென்பொருள்கள் ஏற்கனவே பரீட்சிக்கப் பட்டிருப்பதுடன் இது இறுதியாக ஊழியர்களின் தனிப்பட்ட விடுப்பு பதிவேடுகளில் தகவல்களை சேமித்து வைக்கும் முறையின் மூலமாக கையினால் விடுப்பு பதியும் முறையினை பதிலீடு செய்யப்படும். நிதித் திணைக்களத்தின் நலன்புரிக் கடன்வழங்கல், கடன் ஒப்புதல்கள் என்பனவற்றிற்கும் நாணயத் திணைக்களத்தின் காசு அல்லது "சிலிப்ஸ்" என அழைக்கப்படும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைக் கொடுக்கல் வாங்கல் முறையினூடாக பகிர்ந்தளிப்புக்கள் என்பவற்றிற்காக ஒருங்கிணைக்கப்பட்ட பிரயோகங்கள் நடைமுறைக்கிடப்பட்டன. நாணயத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை கணனி மயப்படுத்துவதற்கான செயற்றிட்டமொன்றும் வைப்புக்கள் மற்றும் நாணய தாள் சரிபார்ப்பு மற்றும் எண்ணிக்கையிடும் பிரிவும் கணனி மயப்படுத்தப்பட்டவேளையில் ஒதுக்குப் பிரிவினைக் கணனி மயப்படுத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயலகத் திணைக்களத்தின் பொதுப்பணிகள் பிரிவிலுள்ள கொடுப்பனவுகளைக் கண்காணிப்பதற்காகவும் நூலகம் மற்றும் தகவல் நிலையத்திற்கான நூல்கள் மற்றும் சஞ்சிகைக்கான கட்டளைகள் மற்றும் கொடுப்பனவுகளைக் கண்காணிக்கும் முறை மற்றும் நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டத்திலுள்ள புள்ளிவிபர புலனாய்வாளர்களினால் வழங்கப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவு முறை என்பனவற்றிற்கான பிரயோகங்களும் நடைமுறைக்கிடப்பட்டன.

செயலகத் திணைக்களத்தின் பொதுவழங்கல்கள் களஞ்சியம், பணிமனைத் திணைக்களத்தின் பொறியியற் களஞ்சியம் என்பனவற்றிற்காக தனியாள் கணனியை அடிப்படையாகக் கொண்ட இருப்புக் கட்டுப்பாட்டு முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. பணிமனைத் திணைக்களத்தின் வாடகை ஊர்திப் பணிகளுக்கான கொடுப்பனவுகளைக் கண்காணிக்கும் முறையொன்றும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்காக வெளிநாட்டுக் கடன்களை கண்காணிக்கும் முறையொன்றும் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

நலன்புரி திணைக்களத்தின் மருத்துவ நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தின் தனியார் கணனியை அடிப்படையாகக் கொண்ட கணனி மயப்படுத்தப்பட்ட முறையானது, மிகக் கூடியளவிற்கு அனைத்தையும் உள்ளடக்கியதும் பாதுகாப்பானதுமான ஏஎஸ்/400 பிரயோகத்தின் மூலம் பதிலீடு செய்யப்பட்டது. இது 2003 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் கொள்கைத் தீர்மானங்களின் காரணமாக கணனி முறைக்குச் செய்யப்பட்ட மாற்றங்களும் இப் பிரயோகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மத்திய வங்கி வலையமைப்பு பிரயோகங்கள்

இலங்கை மத்திய வங்கியின் வலையமைப்பினது பயன்பாட்டினை அதிகரிக்கும் பொருட்டு, வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு நேரடியாக அறிக்கை

யிடுவதனை இயலச்செய்யும் விதத்தில் பின்வரும் பிரயோகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

- செலாவணிக் கட்டுப்பாட்டு படிவம் 1 மற்றும் 2இன் ஊடாக விடுவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மீதான அறிக்கை
- பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கின் அசைவுகள்
- முறைக்கான திரவத்தன்மையினை ஈர்த்தல்/ உட்புகுத்தலுக்காக இரண்டாந்தரச்சந்தை தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள வங்கிகள் மற்றும் முதனிலை வணிகர்ளுக்கான மின்னியல் விலைக்கோரல் முறை
- திரவத்தன்மை கண்காணிப்பு முறை

## ஊழியர் சேமநிதிய முறைப் பிரயோகம்

தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஊழியர் சேமநிதிய பிரயோக முறையை தொடர்ந்தும் பேணியதுடன், ஆய்விற்குரிய ஆண்டில் மேலும் தன்னியக்கப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஊழியர் சேமநிதிய வலையமைப்பு விரிவாக்கப்பட்டதுடன், ஊழியர் சேமநிதிய முறையுடன் தற்பொழுது 130 கணனி தொகுதிகள் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றன. பல பிராந்திய தொழில் அலுவலகங்கள் வாடகைக்குப் பெறப்பட்ட இணைப்புக்களினூடாக கணனி முறையுடன் இணைக்கப்பட்டுள்ளன. பல கணக்கீட்டு செய்முறைகள் கணனி மயப்படுத்தப் பட்டதுடன் தன்னியக்க பற்றுச்சீட்டு உருவாக்கம் வேலைப்பழுவைக் குறைத்து கணக்குகளைக் குறித்த நேரத்தில் தயாரிப்பதற்கான இயலாற்றலையும் அதிகரித்தது.

அரச துறைக்கான உத்தேச உதவுதொகை செலுத்தலுடனான ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளைப் பேணுகின்ற பொறுப்பும் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் புதியமுறையினை மதிப்பிடுவதிலும் அதனை வடிவமைப்பதிலும் ஊழியசேம நிதியத்துடன் சேர்ந்துகொண்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்ட ஊழியர் சேம நிதியத்தின் வெப்தளம் 'epf.cbsl.lk' என்ற முகவரியின் கீழ் 2002 பெப்புருவரியிலிருந்து தொழிற்படத் தொடங்கியதுடன் இணையத் தளத்தினூடாக அடையத்தக்கதுமாகும். சேமநிதிய விடயங்கள் தொடர்பாக தொழிற் திணைக்களத்திற்கும் ஏனைய தொடர்பான நிறுவனங்களுக்கும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் தொடர்ந்தும் தகவல்களை வழங்கியது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் ஊழியர் சேம நிதியத்தில் நிறுவப்பட்டுள்ள கணனிகளை முழுமையாகப் பேணுவதற்குப் புறம்பாக, இவ்வசதிகளை வழங்கியது.

## இலங்கை தன்னியக்க தீர்வகத்தின் உரிமைமாற்றம்

இலங்கைத் தன்னியக்க தீர்வகத்தினை (முன்னர் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஒரு பிரிவு) அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் மத்திய வங்கிக்கும் கூட்டுச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனியான லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டிற்கு உடமை மாற்றம் செய்யும் செயன்முறையில் தகவல் தொழில்நுட்பத் திணைக்களம் பிரதான பங்கினை வகித்தது. உரிமை மாற்றலின் குறிக்கோள் யாதெனில் வினைத்திறனைப் பேணுவதற்கும் தொழிற்பாட்டுச் செலவினைக் குறைப்பதற்குமான தேசியக் கொடுப்பனவு முறையுடன் தொடர்பான தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளுக்காக, வங்கித்தொழில் துறையின் கூட்டுமுயற்சியினால் உதவியளிக்கப்பட்ட புதிய தொழில் நுட்பத்தினைச் சரியான நேரத்தில் அறிமுகப்படுத்துவதற்கு வசதியளிப்பதேயாகும். உடமை மாற்றம் நிறைவு பெற்றதுடன் தொழிற்பாடுகள் 2002 ஏப்பிறல் 1ஆம் நாளன்று லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டுக்கு வெற்றிகரமாக மாற்றல் செய்யப்பட்டன. புதிய கம்பனியினால் பொறுப்பேற்கப்பட்ட பணிகள் சுமுகமாக தொழிற்படுவதனை உறுதிப்படுத்திய பின்னர் இலங்கை தன்னியக்க தீர்வகத்தில் கடமையாற்றிய அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்பணிக்கு மீண்டனர்.

## அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறை/ பொதுப்பேரேட்டு செயற்றிட்டம்

வங்கியின் கணக்கீட்டு முறையினை ஒழுங்கு முறைப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி உலக வங்கியின் உதவியுடன் அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும்முறை/பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட பொதுப்பேரேடு என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கான கேள்விக் கோரலை தொடங்கியது. ஆண்டின் முதலரைப்பகுதியில் அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பவற்றுக்கான தொழில்நுட்ப விபரங்கள் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் பங்களிப்புடன் தொழில்நுட்பம் மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான உள்ளீடுகளுடன் வடிவமைக்கப்பட்டது. பன்னாட்டுக் கோரலில் தேவைப்படுத்தப்படும் நியமங்களுக்கேற்ப தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் மூத்த அலுவலர்களிடமிருந்து இம் முயற்சிக்கு கிடைத்த குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் கேள்விக்கோரல் ஆவணத் தயாரிப்புக்களின்போது வேலை விபர அளவுகளின் வடிவமைப்பு பின்பற்றப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் அலுவலர்கள் விலைக்கோரலுக்கு முன்னோடியான மாநாட்டில் கலந்து கொண்டதுடன் அதனைத் தொடர்ந்து விலைக்கோருநர்களினால் எழுப்பப்பட்ட வினாக்களுக்கும் விடையளித்தார்கள். இறுதியாக்கப்பட்டதைத் தொடர்ந்து, வெற்றி பெற்ற விலைக்குறிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதில் கணிசமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்களைத் தீர்மானம் செய்யும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலமான மதிப்பீட்டுச் செயன்முறையில் தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். தற்பொழுது தகவல் தொழில்நுட்பத் திணைக்களம், திணைக்களப் பணிப்பாளரைச் செயற்றிட்டத் தலைவராகவும் திணைக்களத்தின் பல அலுவலர் உறுப்பினர்களை செயற்றிட்டத்தின் மீது முழுநேரப் பணி புரிபவர்களாகவும் கொண்டு செயற்றிட்டத்தினை இயக்கி வருகின்றது. திணைக்களம் தள உட்கட்டமைப்பினை தயாரித்து ஆண்டின் இறுதிக்கு முன்னர் அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும்முறை/ பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைச் செயற்றிட்டங்களின் வன் பொருட்களின் நிறுவுகையையும் இறுதிப்படுத்தியது.

# பன்னாட்டு தொழிற்பாட்டுகள்

## (அ) 2002ஆம் ஆண்டின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை

சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுக்கிணங்க வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து தீர்ப்பனவு மற்றும் கணக்கீட்டு தொழிற்பாடுகளை புறம்பாக்குவதனை முக்கிய நோக்காகக் கொண்டு வங்கித்தொழில் திணைக்களத் தினை நான்கு திணைக்களங்களாக மீள்நிறுவுதலினூடாக 01.01.2002இல் உருவாக்கப்பட்ட நான்கு திணைக் களங்களில் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களமும் ஒன்றாகும்.

நாட்டின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்கினை முகாமை செய்வதே பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடாகும். இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதித்தன்மையினை பேணுவதற்காகவும் அதன் தற்போதைய பன்னாட்டு கொடுக்கல் வாங்கல்களில் சாத்தியமானளவிற்கு பேரளவு சுதந்திரத்தினை அனுமதிப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கி திரவ நாணயங்களில் போதுமான பன்னாட்டு ஒதுக்கினை பேணி வருவதனையும் அதன் சொத்துக்களில் தங்கக் கட்டிகளின் ஒதுக்கினையும் பேணிவர வேண்டுமென, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயச்சட்டம் குறிப்பிடுகின்றது. இதற்கிணங்க திரவத்தன்மைக்கும் வங்கிச் சொத்துக்கள் மீதான வருவாய் வீதத்திற்கும் இடையிலான பொருத்தமான நிலுவையினைப் பேணிவருதலின் ஊடாக, முகாமையின் அங்கீகரிக்கப் பட்ட எல்லைக்குட்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட மாற்று இணையாளர்களின் அனுமதியுடன் பன்னாட்டு தொழிற் பாட்டு திணைக்களம், அலுவல்சார் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை பன்னாட்டு நாணய மற்றும் மூலதன சந்தைகளில் முதலிடுகின்றது. பன்னாட்டு ஒதுக்கின் பெரும்பகுதி நிலையான வருவாய் பிணைகளிலும், எஞ்சியவை நிலையான வைப்புக்கள், அழைப்பு மற்றும் நடைமுறைக் கணக்குகள் மற்றும் தங்கத்திலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு நாணயத்தினதும் உறுதித்தன்மையினை பொறுத்து பொருத்தமான மாற்றங்களுக்குட்பட்டு 2002ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர், இசுடேர்லிங் பவுண் மற்றும் யூரோ ஆகிய முக்கிய நாணயங்களிலேயே ஒதுக்குகள் வைத்திருக்கப்பட்டன. நாணய உள்ளமைப்பினை தீர்மானிப்பதில் பொதுப்படுகடன் திருப்பிச் செலுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் நாணயங்களின் வருவாய் உழைக்கும் இயலளவு என்பனவும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைப்படுத்தலினூடாக உருவாக்கப்பட்ட மொத்தத் தேறிய வெளிநாட்டு வருவாய் 2002ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 68.5 மில்லியனாக அல்லது ரூ.6.5 பில்லியனாக காணப்பட்டது.

செலாவணி வீதங்கள், நாணயச்சந்தை வீதங்கள், வணிக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் மற்றும் வணிக வங்கிகளின் ஆரம்ப இருப்பு, ஓரிரவு தேறிய வெளிநாட்டு செலாவணி என்பவற்றின் அசைவுகளை பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம் நாளாந்த அடிப்படையில் நுணுக்கமாக கண்காணிக்கிறது. சந்தை தொழிற்பாட்டுக் குழுவுக்கு நாளாந்தமும் நாணயக்கொள்கை குழுக்களின் கூட்டங்களுக்கும் தேவையான பெறுமதிமிக்க தகவல்களை இது வழங்குகின்றது. பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம் பணச்சந்தை மற்றும் செலாவணி வீதங்களின் இருவழிக் குறிப்பீடுகள் மற்றும் உள்ளக கணனி வலையமைப்பினூடாக சந்தையிலிருந்து பெறப்பட்ட உண்மையான வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் என்பனவற்றை இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமை மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்களுக்கு தகவல் அளிப்பதற்காக நாளொன்றின் ஒவ்வொரு அரை மணித்தியாலத்திற் கொருமுறை பூரணப்படுத்தப் படுகின்றது. பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக் களத்தின் நடுக்காரியாலயம் வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு முகாமை நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை கண்காணித்து அது சம்பந்தமான அறிக்கைகளை முகாமைக்கு சமர்ப்பிக்கின்றது.

2001ஆம் ஆண்டு சனவரியில் அறிமுகப்படுத்தப் பட்ட மிதக்கும் செலாவணி வீத முறைமை 2002இலும் தொடர்ந்தது. உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் சுமுகமான செயற்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலும், செலாவணி வீதத்தின் ஒழுங்கான சீராக்கலை உறுதிப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு இலங்கை மத்திய வங்கி உள்ளூர் வெளிநாட்டு செலாவணி சந்தையின் நிகழ்வுகளை தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்தது. இதேநேரம் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம் அதன் ஒதுக்குகளை கட்டியெழுப்பும் நோக்கில் அதிகளவான வெளிநாட்டு செலாவணிகளை சந்தையிலிருந்து கொள்வனவு செய்யக் கூடியதாகவிருந்தது. 2002ஆம் ஆண்டில் வங்கியின் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காக அது உள்ளூர் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மொத்தமாக ஐ.அ.டொலர் 177 மில்லியன் (தேறிய) தொகையினை கொள்வனவு செய்தது. உள்ளூர் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்தின் நடவடிக்கைகள் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் செலாவணி வீதத்தின் உறுதிப்பாட்டை பேணுவதற்கு பங்களிப்புச் செய்தது. 2001 திசெம்பர் இறுதியில் ரூ.93.15 ஆக இருந்த ஐ.அ.டொலர்/ரூபாய் வீதம் 2002 திசெம்பர் இறுதியில் ரூ.96.74 ஆக தேய்வடைந்து 2001இன் 9.4 சதவீதத்துடன் ஒப்பிடும்போது இது 3.7 சதவீத தேய்வினை பதிவு செய்தது.

2002ஆம் ஆண்டின் வெளிநாட்டு செலாவணி சந்தை தொடர்பான குறிப்பிடத்தக்க அம்சமாக மிகக்குறைந்த ஐ.அ.வட்டி வீதங்களும் ஈராக்கிற்கு எதிரான யுத்த அச்சுறுத்தல்களும் காரணமாக ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் தொடர்ச்சியாக தேய்வடைந்தமையையும் குறிப்பிடலாம். நலிவுற்ற ஐ.அ.டொலருக்கான சந்தை எதிர்பார்க்கைகள் உள்ளூர் சந்தையின் முன்னோக்கிய கட்டுப்பணங்கள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைவதற்கு காரணமாயின. அதிகரித்த விற்பனை அழுத்தம் மற்றும் வெளிநாட்டு செலாவணி முன்னோக்கல் என்பவற்றை பதிவு செய்வதில் இறக்குமதியாளர்களின் தயக்கம், என்பன காரணமாக முன்னோக்கிய கட்டுப்பணம், ஐ.அ.டொலர் மற்றும் ரூபாய்க்கிடையிலான வட்டிவீத வித்தியாசத்திற்கு கீழாக வீழ்ச்சியடைந்தது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2001இன்

இறுதியிலிருந்த ஐ.அ.டொலர் 42 மில்லியனிலிருந்து 2002இன் இறுதியில் ஐ.அ.டொலர் 173 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

உள்ளூர் சந்தையிலான இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் அட்டவணை II.6 மற்றும் II.7 இல் தரப்பட்டுள்ளது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் அட்டவணை III.8 இல் தரப்பட்டுள்ளன.

### (ஆ) 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிருவாக வழிமுறைகள்

2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் எடுக்கப்பட்ட மிக முக்கியமான நிருவாக நடவடிக்கைகளுள் ஒன்றாக தீர்மானமெடுத்தல் மற்றும் தொழிற்பாடுகள், அறிக்கையிடும் வழிகள் ஆகிய ஒவ்வொரு மட்டத்திலுமான பொறுப்புக்கள் மீளக் குறித்துரைக்கப்பட்டு வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு முகாமை செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையிடும் வழிமுறைகள் என்பன வெளிநாட்டு ஒதுக்கு முகாமைக்குழு மீளமாற்றியமைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். வெளிநாட்டு ஒதுக்கு முகாமைக்குழு கொள்கைகளையும் பொதுவான மூலோபாயங்களையும் வகுத்து தற்போதைய நடைமுறைகளின் வழிகாட்டல்கள், பொறுப்புக்கள், சொத்துப்பட்டியல் ஏற்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமை என்பவற்றினை மீளாய்வு செய்து ஏற்புடையதாக திருத்தியமைத்து ஆளுநரினதும், நாணயச்சபையினதும் ஒப்புதலுடன் திறன்வாய்ந்த ஒதுக்குமுகாமை மற்றும் இடர்நேர்வு முகாமைக்கு

அட்டவணை II-6
2002ஆம் ஆண்டில் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையிலான அந்நியச்செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் மாதாந்த சுருக்கம்

(மில்லியனில்)

| மாதம் | கொள்வனவுகள் | | விற்பனைகள் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொ | ரூபா | ஐ.அ.டொ | ரூபா |
| சனவரி | 13.5 | 1,260.2 | | |
| பெப்புருவரி | 19.0 | 1,781.7 | 2.1 | 194.1 |
| மாச்சு | 5.5 | 614.1 | 1.5 | 148.4 |
| ஏப்பிறல் | 67.7 | 6,500.8 | 2.9 | 283.1 |
| மே | 5.0 | 480.8 | 19.9 | 1911.1 |
| யூன் | 17.0 | 1,635.8 | 20.1 | 1930.3 |
| யூலை | 26.2 | 2,522.3 | | |
| ஒகத்து | 7.2 | 697.7 | | |
| செத்தெம்பர் | 31.2 | 3,003.9 | | |
| ஒத்தோபர் | 19.5 | 1,780.8 | | |
| நவெம்பர் | 5.7 | 555.1 | | |
| திசெம்பர் | 5.8 | 565.6 | | |
| **மொத்தம்** | **223.7** | **21,398.9** | **46.6** | **4,467.0** |

அட்டவணை II-7
இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட, விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டு செலாவணியின் ஆண்டு அளவு(காசு, மறுநாள், உடன்)

(ஐஅடொ.மி)

| ஆண்டு | கொள்வனவுகள் | விற்பனைகள் | தேறிய |
|---|---|---|---|
| 1996 | 96.2 | 198.0 | -101.8 |
| 1997 | 136.7 | 154.0 | -17.3 |
| 1998 | 61.0 | 214.8 | -153.8 |
| 1999 | 0.4 | 58.2 | -57.8 |
| 2000 | 2.0 | 303.6 | -301.6 |
| 2001 | 179.2 | 51.8 | +127.4 |
| 2002 | 223.7 | 46.6 | +177.1 |

அட்டவணை II-8
வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல் அளவு-2002

| மாதம் | காசு | மறுநாள் | உடன் | முன்னோக்கிய |
|---|---|---|---|---|
| சனவரி | 4.2 | 3.8 | 27.6 | 14.9 |
| பெப்புருவரி | 12.2 | 16.4 | 75.0 | 56.5 |
| மாச்சு | 14.5 | 10.9 | 89.0 | 46.6 |
| ஏப்பிரல் | 22.2 | 14.8 | 154.0 | 36.5 |
| மே | 18.1 | 16.7 | 108.0 | 50.2 |
| யூன் | 18.6 | 25.1 | 85.4 | 85.2 |
| யூலை | 13.0 | 16.3 | 110.3 | 149.2 |
| ஒகத்து | 20.1 | 26.0 | 63.0 | 90.1 |
| செத்தெம்பர் | 11.7 | 16.3 | 94.5 | 137.9 |
| ஒத்தோபர் | 23.7 | 34.8 | 89.6 | 101.1 |
| நவெம்பர் | 21.3 | 42.7 | 60.3 | 78.9 |
| திசெம்பர் | 29.0 | 24.4 | 59.0 | 69.4 |
| மொத்தம் | **208.2** | **248.0** | **1,015.6** | **916.4** |

தேவையான கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றுகிறது.

பன்னாட்டு ஒதுக்கின் மீதான முதலீடு பன்னாட்டு தொழிற்பாட்டுத்திணைக்களத்திற்கு பொறுப்பாகவிருக்கும் ஆளுநரின் உதவியாளரின் தலைமையின் கீழ் இயங்கும் வெளிநாட்டு ஒதுக்கு முகாமைக்குழுவின் நெருங்கிய வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்படுகின்றன. பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சி திணைக்களப் பணிப்பாளர், முகாமைத்துவ கணக்காய்வுப் பணிப்பாளர், நிதித்திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளர் மற்றும் இக்குழுவின் செயலாளராக செயற்படும் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களத்தின் வெளிநாட்டுச் செலாவணி முன்னரங்க அலுவலக முதன்மை வணிகர் ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாகும்.

### (இ) 2002ஆண்டு காலப்பகுதியில் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்/ சுற்றறிக்கைகள்/ அறிவுரைகள்

01.01.2002இல் முதலில் சந்தைக்கு அறிமுகப் படுத்தப்பட்ட யூரோ நாணயத்தாள்களை பாவிப்பது தொடர்பான தகவல்களை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வழங்குவதோடு சந்தை வாய்ப்பினையும் வழங்கியது. இதற்கிணங்க, யூரோ பிரதேசத்தின் நாணயச்சுற்றோட்ட முறைமையிலிருந்து புழக்கத்திலிருந்த நாணயத்தாள்கள் புறக்கீடு செய்யப்படும் கால அட்டவணை பற்றி 20.02.2002 இல் செலாவணி கட்டுப்பாட்டு திணைக்களமும் பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களமும் இணைந்து வர்த்தகக வங்கிகளுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கின. இது 28.11.2001இல் செலாவணி கட்டுப் பாட்டாளரும் அப்போதைய வங்கித்தொழில் திணைக்கள முதன்மைக் கணக்காளராலும் யூரோ நாணயத்தாள்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானதாக அமைந்திருந்தது.

வெளிநாட்டு நாணயமாற்று சந்தையின் நெகிழ்ச்சித்தன்மை மற்றும் உறுதிப்பாட்டினை மேலும் முன்னேற்றும் நோக்கில் மத்திய வங்கி, 2002 மாச்சு 1இலிருந்து வணிக வங்கிகளின் நாளாந்த தேறிய நேர் திறந்த நிலைமையின் வரையறையை மூலதனம் மற்றும் ஒதுக்கின் 10 சதவீதத்திலிருந்து 15 சத வீதத்திற்கு

உயர்த்தி வெளிநாட்டு நாணய மாற்றுகளின் மீதான முன்னோக்கிய ஒப்பந்தங்களின் கால எல்லையை ஒரு ஆண்டிற்கு விரிவுபடுத்தியது. அதிகரிக்கப்பட்ட இவ் எல்லையானது பாரிய இறக்குமதி பட்டியல்களுக்கு நிதியிடப்படும் வேளையிலும் வெளிநாட்டு நாணயமாற்று சந்தையில் மிகையாக அடிக்கடி மாறும் தன்மைகளை ஏற்படுத்தாத வகையில் வணிக வங்கிகளின் வெளிநாட்டு செலாவணி இருப்புக்களை முகாமை செய்வதனை இயலச் செய்யும். தேறிய திறந்த நிலைமை ஒவ்வோர் நாளின் முடிவிலும் வணிக வங்கிகளினால் வைத்திருக்கப் படும் அனைத்து வெளிநாட்டு நாணயங்களிலுள்ள தொழில்படு நிலுவைகளை பிரதிபலிக்கின்றது.

2001 சனவரியில் ரூபா சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் அடிக்கடி மாறும் தன்மை அளவுக்கதிகமாவதனைத் தடுப்பதற்காக வணிக வங்கிகளுடனான ஆலோசனையுடன் முன்மதிகரமான பல நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வனைத்து வழிமுறைகளும் தற்போது அகற்றப்பட்டுள்ளன அல்லது தளர்த்தப்பட்டுள்ளன. 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் அளவு நியதிகளிலும் மற்றும் பெறுமதி அடிப்படையிலும் முன்னோக்கிய சந்தை நடவடிக்கைகள் முன்னேற்றமடைந்து காணப்பட்டன. முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அபிவிருத்தியானது மிகையாக அடிக்கடி மாறும் தன்மைகளை தவிர்ப்பதற்கு உதவுவதுடன் ஆழமான வெளிநாட்டு செலாவணி சந்தைக்கும் உதவுகின்றது. முன்னோக்கிய சந்தையை மேலும் விருத்தியடையச் செய்யும் நோக்கில் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் கால எல்லையை ஒரு வருடமாக மத்திய வங்கி நீடித்தது.

## சட்டம்

சட்டத்திணைக்களம் சட்ட விடயங்களில் வங்கிக்கு மதியுரைகளை வழங்கியதுடன் நீதிமன்றங்களிலும் மற்றைய சட்ட மன்றங்களிலும் வங்கியினைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இது வங்கித்தொழில்/ நிதியியல் துறைகளில் சட்டங்களை மறுசீரமைக்கவும் பங்களித்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, திணைக்களம் வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கும் மதியுரைப் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. 2002ஆம் ஆண்டுப் பகுதியில் திணைக்களம் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை மற்றும் அரச பிணையங்கள் தீர்ப்பனவு முறை என்பனவற்றின் நவீனமயப்படுத்தல் உள்ளிட்ட வங்கியின் நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்துடன் தொடர்பான சட்ட வேலைகளிலும் ஈடுபட்டிருந்தது. 2002 திசெம்பரில் சட்டமியற்றப்பட்ட 2002ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணயவிதிச் (திருத்தச்) சட்டம் உட்பட நிதித்துறையுடன் தொடர்பான பல சட்டங்களுக்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தவும் திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டது.

## முகாமைக் கணக்காய்வு

தற்பொழுது நடைபெற்றுவரும் நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் நியதிகளில், வங்கி, இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட **கணக்காய்வு** மற்றும், இடர்நேர்வு ஏற்படக்கூடிய சாத்தியமான துறைகளை நேரகாலத்துடன் இனங்காணல் என்பனவற்றிற்கு முக்கியத்துவமளிக்கும் விதத்தில் அதன் முகாமைத்துவ கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மீளமைப்பதற்கான தேவையை அங்கீகரித்திருக்கிறது. இக் குறிக்கோளினை அடையும் விதத்தில், திணைக்களத்தினை மீள அமைப்பதற்காக 2002 காலப்பகுதியில் பல நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. திணைக்களத்திற்கு தலைமை தாங்குவதற்காகப் புதிய பணிப்பாளர், ஒருவர் நியமிக்கப்பட்டார். புதிய கணக்காய்வு உத்திகளையும் நடைமுறைகளையும் (இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை) உள்ளடக்கும் விதத்தில் கணக்காய்வுப் பட்டயத்தினைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஆண்டுக் கணக்காய்வுத் திட்டத்தினை நிறைவேற்றும் விதத்தில், மத்திய வங்கியின் தொழிற்பாடுகளினது வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதன்மை என்பனவற்றை அதிகரிக்கின்ற குறிக்கோளுடன் 2002இல் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் அதன் உள்ளக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ பணிகள் தொழிற்பாடுகளை மேற்கொண்டது.

2001ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாணயச் சபையின் கணக்காய்வுக்குழு மற்றைய விடயங்களுடன் கணக்காய்வு செய்முறைப்படுத்தல், மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்கள், தொடர்பான நிதியியல் அறிக்கையிடல் நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் என்பனவற்றையும் மேற்பார்வை செய்தது.

இவ்வாண்டுப் பகுதியில் திணைக்களம் பாவிக்க முடியாத மற்றும் பழுதடைந்த பல்வேறு நாணய இனங்களையும் கொண்ட ரூ.24 பில்லியன் பெறுமதி கொண்ட நாணயத்தாள்களை அவை அழிக்கப் படுவதற்கு முன்னர் கணக்காய்வு செய்ததுடன் நாணய சரிபார்ப்பு எண்ணுதல் மற்றும் தரம் பிரித்தல் பிரிவின் வேலைகளையும் திணைக்களம் மேற்பார்வை செய்தது. தங்கம், நாணயத்தாள் மற்றும் குத்திகளினது இருப்புக்களின் ஆண்டு சரிபார்த்தலையும் திணைக்களம் மேற்கொண்டது. நாணய இருப்புப் பதிவேடுகள் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் எனபன ஒப்பீடு செய்யப்பட்டமையின் பின்னர் கணக்காய்வு அலுவலர்களினால் சரிபார்க்கப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டது.

வங்கித்தலைமை அலுவலகக் கட்டிடத்தின் நிருமாணம் மற்றும் புத்தாக்கம் தொடர்பான அனைத்துக் கொடுப்பனவுகளும் முன் கணக்காய்வு செய்யப்பட்டன. இறுதிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கி வங்கி ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட அனைத்து ஊதியங்களினதும் கணக்காய்வுடன், ஓய்வூதியநிதி. ஊழியர் சேமநிதி, விதவைகள் மற்றும் தாரமிழந்த வர்களின் ஓய்வூதிய நிதி மற்றும் மத்திய வங்கியின் மற்றைய நலன்புரித்திட்டங்கள் என்பனவும் முன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும், ஓய்வு பெறுதல்

அல்லது வங்கிப் பணியிலிருந்து நிறுத்தப்படுதல் தொடர்பிலான மீளளிப்புக்கள் மற்றும் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட இழப்பீடு என்பனவும் இத் திணைக் களத்தினால் முன்கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியின் வினைத் திறனையும் பயனுறு தன்மையினையும் மேம்படுத்தும் நோக்குடன் திணைக்களம் பல முகாமைத்துவ ஆய்வுகளையும் மேற் கொண்டது.

புதிய கணக்காய்வுப் பட்டயத்துடன் இணங்கிச்செல்லும் விதத்தில், இடர்நேர்வினை அடிப்படையாகக் கொண்ட கணக்காய்வு அணுகுமுறை தொடர்பாக 2003ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்காய்வு திட்டத்தினைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## முகாமை அபிவிருத்தி நிலையம்

தொழில்சார் தேர்ச்சிகளை மேம்படுத்துவதனையும் வங்கியின் மூத்த அலுவலர்களது அறிவினை பூரணப்படுத்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட முகாமை அபிவிருத்தி நிலையம் அதன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 2002இல் தொடர்ந்து மேற் கொண்டது. மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதன் மூலம் மூத்த அலுவலர் களின் மனித வள இயலாற்றல்களை அபிவிருத்தி செய்வதனையும் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் நோக்காகக் கொண்டிருந்தது.

**அட்டவணை II-9**

**2002இல் நடத்தப்பட்ட உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

| எண் | பாடநெறித் தலைப்பு | காலப்பகுதி | மூலவள ஆட்கள் |
|---|---|---|---|
| 1. | பன்னாட்டு வர்த்தகக் கோட்பாடும் கொள்கையும் இதற்கு மேலதிகமாக உலக வர்த்தக அமைப்பு. வர்த்தகக் கொள்கை மீதான தாக்கங்கள் | 04-09 மாச்சு 2002 மற்றும் 13-15 மாச்சு 2002 (9 நாட்கள்) | 1. பேராசிரியர். பிரனாப்குமார் பார்டன் பன்னாட்டு ஆய்வுகள் நிறுவனம் கலிபோர்ணியா பல்கலைக்கழகம் பேர்க்லி ஐக்கிய அமெரிக்கா. 2. நிமால் பிறெக்கன்றிட்ஜ் (இலங்கை முன்னால் GATT மற்றும்WTO . |
| 2. | முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-II "இன்றைய குழப்ப சூழலில் நிறுவனங்களை முகாமைத்துவம் செய்தல்" | 20-31 மே 2002 (10 நாட்கள்) | பேராசியரியர் டி.எஸ்.விதான வியாபார நிருவாகப்பீடம் வின்சர் பல்கலைக்கழகம், கனடா |
| 3. | தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நிதியியல்சந்தை | 20-31 மே 2002 (10 நாட்கள்) | பேராசியரியர்.றொபட்.பீ.எச்.கவுஸ்வால்ட் றொபட் ஸ்மிர் ஸ்கூல் ஒப் பிசினஸ் மேரிலாண்ட் பல்கலைக்கழகம் ஐக்கிய அமெரிக்கா |
| 4. | முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-II கட்டம் II - மத்திய வங்கியின் திணைக்களத் தலைவர்களுக்காக | 7-13 யூன் 2002 (1600 - 1830 மணி) 5 நாட்கள் | பேராசிரியர் டி.எஸ்.விதான வியபார நிருவாகப்பீடம் வின்சர் பல்கலைக்கழகம் கனடா |
| 5. | அரச செலவின முகாமைத்துவம் | 10-21 யூன் 2002 (10 நாட்கள்) | முனைவர்.ஏ.பிறேம்சன்ற் (முன்னாள் ப.நா.நி) (ஐ.அ) ஆலோசனையாளர் அரசசெலவின் முகாமைத்துவம் அத்துடன் ஒன்பது உள்ளூர் மேலதிக விரிவுரைகளும் |
| 6. | அரச பொருளாதாரம்: அரச செலவின பகுப்பாய்வுகள் | 08-16 யூலை 2002 (7 நாட்கள்) | பேராசியர்.ரபீந்திரா ஜா அவுத்திரேலியா தென் ஆசியா ஆராய்ச்சி நிலையம், அவுத்திரேலியா தேசிய பல்கலைக்கழகம் அவுத்திரேலியா |
| 7. | முதலீட்டுப் பகுப்பாய்வுகள் | 29யூலை-09 ஓகத்து 2002 (10 நாட்கள்) (பிற்பகலில்) | பேராசிரியர்-லலித் பீ.சமரக்கோன் கொலிஜ் ஒவ் பிசினஸ் சென்ற் தோமஸ் பல்கலைக்கழகம் மின்னிபொலிஸ், ஐக்கிய அமெரிக்கா |
| 8. | பன்னாட்டு பேரண்டப் பொருளாதாரமும் நிதியும் | 02- 13செத்தெம்பர் 2002 (10 நாட்கள்) | பேராசிரியர்.கென்னெத் மைல்.எஸ் கிறெற்சர் யூனியர் பொருளாதார திணைக்களம் கலிபோர்னியா பல்கலைக்கழகம் சாந்தகுருஸ் ஐக்கிய அமெரிக்கா |
| 9. | இடர்நேர்வு முகாமைத்துவம்* | 23-24 செத்தெம்பர் 2002 (2 நாட்கள்) | திரு.கிருஷ்ண மஜிதியா துணைத்தலைவர் சிற்றிபாங் என்.ஏ, மும்பாய் இந்தியா இலங்கை மற்றும் பங்காளதேசம் என்பனவற்றுக்கான சந்தை இடர்நேர்வு முகாமையாளர் |

*ஆய்வரங்கு

இத் தேர்ச்சிகளை மேம்படுத்தும் பொருட்டு, உயர்ந்ததரம் வாய்ந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழங்கங்கள் மற்றும் பன்னாட்டு அமைப்புக்களிலிருந்து பொருளாதாரம், முகாமைத்துவம் வங்கித்தொழில் வர்த்தகம் மற்றும் நிதி போன்ற துறைகளில் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்போரின் பணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. மூலவள ஆட்களின் விரிவுரைக் கட்டணங்கள், வாழ்க்கைப் படிகள் மற்றும் பாடநெறிக் குறிப்புக்கள் போன்ற பாட நெறிகளின் செலவுக்கூறின் பெரும் பங்கினை சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவராண்மை நிதியிடுகின்றது.

உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எட்டு பாடநெறிகளும் ஒரு ஆய்வரங்கும் நடத்தப்பட்டன (அட்டவணை 11.9). உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பாடநெறிகளில் கலந்துகொண்டு பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 178 ஆக இருந்ததுடன் இதில் 111பேர் மத்திய வங்கியிலிருந்தும் 31 பேர் நிதியமைச்சு மற்றும் கொள்கை அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல் அமைச்சிலிருந்தும் மீதி 36 பேர் மற்றைய நிறுவனங்களான இரு அரச வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், பல்கலைக்கழகங்கள், கொள்கை ஆய்வு நிறுவனங் களிலிருந்தும், இடையிடையே வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்தும் கலந்துகொண்டனர்.

இப்பாடநெறிகளை நடத்துகையில் கவனிக்கப்பட்ட முக்கியமானதொரு பண்பு யாதெனில் இப்பாடநெறிகளில் கலந்துகொள்வதற்கு மற்றைய நிறுவனங்களிலிருந்து காணப்பட்ட உயர்ந்த கேள்வியாகும். அவர்களது பங்கேற்பு, வங்கியிலிருந்து கலந்து கொண்டவர்கள், பாடநெறிகளில் கற்பிக்கப்பட்ட கொள்கைகளுக்கும் பிரயோகிக்கத்தக்க புதிய கருத்துக்களை அவர்களுடன் பயனுறு முறையில் பரிமாறிக் கொள்வதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கியமையினால், இது பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்திக் கொள்ள உதவியது.

பாடநெறியின் முடிவில் பங்கேற்பாளர்கள் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்ட அனைத்து பாடநெறிகளையும் மதிப்பீடு செய்தனர். இம் மதிப்பீடுகளின்படி, பெரும்பாலான விடயங்களில், பங்கேற்பாளர்கள் மூலவள ஆட்களை "மிகத்திறமை" என்ற தரத்தினை வழங்கியிருந்ததுடன் இப்பாடநெறிகளில் கலந்து கொள்வதன் மூலம் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்கான தரமிடல் மிக உயர்வாகக் காணப்பட்டது. பங்கேற்றவர்களில் பெரும்பான்மையோர் இப்பாடநெறிகள் எதிர்காலத்திலும் மீள நடத்தப்பட வேண்டுமென யோசனை தெரிவித்துள்ளனர். எனினும், பாடநெறிகளின் உள்ளடக்கத்தின் பிரயோகத்தன்மையானது முழுமையான கோட்பாட்டுத் தன்மையில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க நாளாந்த வேலைச்சூழலிலேயே மிகக்கூடுதலாக கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டது.

தொடர்பான விடயம் ஒன்றின் கீழ் பயிற்சிகள் பெறப்படுவதன் விளைவாக வங்கிக்குக் கிடைக்கும் பெறுமதி கூட்டல்களை கண்டறியும் பொருட்டு, 2002ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நடத்தப் பட்ட பாடநெறிகளின் மீது பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களது திணைக்களத் தலைவர்கள் என்போரின் மாதிரிகளைப் பயன்படுத்தி உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மீது முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் பின்தொடர் அளவீடொன்றினையும் நடத்தியது.

அளவீட்டில் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டதுடன் பாடநெறிகள் பின்வரும் விதத்தில் மீளவடிவமைக்கப்பட்டன.

i. கொள்கை மதியுரை அல்லது கொள்கை வகுத்தலுக்குப் பொறுப்பான ஆட்களுக்காக ஒவ்வொரு பாடநெறியின் தொடக்கத்திலும் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு கொள்கைக் கலந்துரையாடல் தொடரொன்றை நடத்தல்.

ii. பாடநெறியின் எஞ்சிய பாகம் ஆராய்ச்சிகளிலும் தொடர்பான களப்பயிற்சிகளிலும் ஈடுபட்டுள்ள ஆட்களின் நன்மைக்கானதாக இருந்ததுடன், கோட்பாட்டு விடயங்களில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க கோட்பாடுகளின் ஏற்புடைய தன்மையில் கவனம் செலுத்தக் கூடியளவிற்கு வலியுறுத்தப்படுகின்றன.

முகாமைத்துவ அபிவிருத்தி மீதான தொடர்ச்சியான மூன்று அரைநாள் கூட்டச்செயலமர்வுத் தொடர்களை நடாத்தியதன் மூலம் வங்கியின் மூத்த அலுவலர்களின் முகாமைத்துவரீதியான தேர்ச்சியினை மேம்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக, திணைக்களங்களின் தலைவர்களுக்காக முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம் தொடங்கியது.

வங்கியின் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதிய திட்டத்தினைத் தொடர்ந்து வங்கியின் அலுவலர்கள் குறைவடைந்தமையின் விளைவாகத் தோன்றிய பிரச்சனைகளை திணைக்களத் தலைவர்கள் எவ்வாறு தீர்க்க வேண்டுமென்பது தொடர்பான சில ஆலோசனைகளை வழங்குவதே இக்கூட்டச் செயலமர்வுகளின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இச்செயலமர்வுத் தொடர்களின் தொடர்ச்சியாக, தெளிவான கட்டமைப்பொன்றுடனும் தொலைநோக்கு, குறிக்கோள் இலக்குகளின் வடிவமைப்பு போன்றவற்றுடன் நிறுவனமொன்று அதன் செயலாக்கப்பணி திட்டமொன்றினை விருத்தி செய்யக்கூடிய விதத்தில் மூத்த முகாமைத்துவத்திற்கு பயன்மிக்க அறிவினை வழங்கும் விதத்தில் "கம்பனி திட்டமிடல்" என்பதன் மீதான தனியானதொரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்

நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையை வளர்ச்சியடையச் செய்வதற்காக கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைகளின் பாதுகாப்பு, செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை உறுதி செய்யும் நோக்கில் 2002 சனவரி 1இல் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதற்கிணங்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் குறிக்கோள்கள் வருமாறு.

- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

என்பவற்றின் இடர்நேர்வுகளை குறைத்தல், செயல்திறன் மற்றும் பாதுகாப்பினை அதிகரித்தல்.

- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்படவுள்ள அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறைமையின் செயல்திறன் வாய்ந்த மற்றும் சுமுகமானதொழிற்பாட்டினை உறுதிப்படுத்தல்.
- பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியினால் பிரசுரிக்கப்பட்ட முறைசார்ந்த முக்கிய கொடுப்பனவு முறைமையின் மையக் கோட்பாடுகளுக்கு இசைந்த விதத்தில் பாதுகாப்பு இலகுத் தன்மை மற்றும் நியமங்களுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப் படுத்துவதற்கென விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஏதேனும் நடைமுறைகளை பின்பற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறைமை மற்றும் கொடுப்பனவு முறையின் செயற்பாடுகளை பின்தொடர்தலையும், அவதானிப்புக்களையும் மேற்கொள்ளல்.
- வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (தனியார்) லிமிட்டெட்டின் தீர்ப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவம் மற்றும் திறந்த சந்தை தொழிற்பாடுகள் என்பவற்றின் இலங்கை மத்திய வங்கியின் பின்னரங்க அலுவலகங்களின் செயற்பாடுகளின் இடர்நேர்வுகளை குறைத்தல் மற்றும் செயற்றிறனை அதிகரித்தல்.
- ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் சுமூகமான மற்றும் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தல்.

பரந்தளவிலான தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களம் பொறுப்பாக இருக்கும்.

- முக்கியத்துவம் வாய்ந்த முறைசார்ந்த கொடுப்பனவு முறைகளுக்கான மையக் கோட்பாடுகளின் அடிப்படையில் கொடுப்பனவு முறைகளின் பாதுகாப்பு செயற்றிறன் மற்றும் கொடுப்பனவு முறைகளின் நம்பகத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்காக கொடுப்பனவு முறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த கொள்கை தயாரித்தலை வசதிப்படுத்தல்;
- நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிப் படுத்தலினூடாக வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவத்திற்கான பின்னரங்க அலுவல்களின் தொழிற்பாடுகள் மீதான இலங்கை மத்திய வங்கியின் சொந்த கொடுக்கல் வாங்கல்களின் கொடுப்பனவை தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு அறிவுறுத்தல்களை செயற்படுத்தல்;
- முறைசார்ந்த இடர்நேர்வுகளை குறைக்கும் நோக்கில் கொடுப்பனவு முறைகளை மேற்பார்வை செய்தல்;
- உத்தேச அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறையை தொழிற்படுத்தல்.
- சட்டதிட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் வழிகாட்டல்கள் பங்கேற்பாளர்களினால் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறையின் தொழிற்பாடுகளை கண்காணித்தல்;
- ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கீழான கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்தல்; அத்துடன்
- தற்போதைய மற்றும் எதிர்கால கொடுப்பனவு முன்னேற்றங்கள் மீது கொடுப்பனவு முறை மையினை பயன்படுத்துபவரின் பொதுவான புரிந்துணர்வையும், விழிப்புணர்வையும் அதிகரித்தல்.

ஆய்விற்குரிய ஆண்டுக்காலத்தில் கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களம் பின்வருவனவற்றில் ஈடுபட்டிருந்தது.

- வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் சிறந்த சந்தை தொழிற்பாடுகள் மீதான இலங்கை மத்திய வங்கியின் சொந்த கொடுக்கல் வாங்கல்களின் “பின்னரங்கு அலுவலகங்களின் தொழிற்பாடுகள்”
- அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறை/ பத்திரங்கள் அற்ற பிணையங்கள் முறை என்பவற்றின் தொழிற்படுத்தலை ஆரம்பிப்பதற்கான சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு துணைபுரிதல்.
- இடர்நேர்வுகளை குறைத்து செயற்றிறனை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் சொந்த கொடுக்கல் வாங்கல்களின் மீதான பின்னரங்க அலுவலகங்களை மீள வலுப்படுத்தல்.

ஆய்விற்குரிய ஆண்டில் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாக நடைமுறைக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளினை பகுப்பாய்வு செய்தலோடு கீழ்வரும் குறிக்கோள்களுடன் எதிர்கால அபிவிருத்திகளை சுட்டிக்காட்டுவதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் சம்பந்தமான தகவல்களை சேகரித்து ஒன்றிணைத்து அவற்றை (http:/www.centralbank lanka.org/psd.html.) இலங்கை மத்திய வங்கியின் வெப் தளத்தில் காலாண்டுக்கொருமுறை வெளியிடப்படும் கொடுப்பனவு விபரத்திரட்டில் பிரசுரிப்பதன் மூலம் பரப்புவதாகும்.

(i) கொடுக்கல் வாங்கல்களின் தன்மையைப் பொறுத்து எந்த முறைமையை தெரிவு செய்வது என்பது சம்பந்தமாக தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு கொடுப்பனவு முறையினதும் வகை, வேகம், அளவு, பெறுமதி நிகழக்கூடிய இடர்நேர்வு மற்றும் அம் முறைகளின் நன்மைகள் மற்றும் சிக்கல் தொடர்பாக பயன் படுத்துனர்

## கொடுப்பனவு முறைகளின் மேற்பார்வை

*சிறப்புக்குறிப்பு II - 2*

நாட்டின் பொருளாதாரம் மற்றும் நிதியியல் அமைப்பு ஆகிய இரண்டிலும் கொடுப்பனவு முறை மிக முக்கியமானதொரு மூலமாகக் கருதப்படுகின்றது. வலுவானதும் வினைத்திறன் மிக்கதுமான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை, திரவத்தன்மை, கொடுகடன் மற்றும் முறைசார்ந்த இடர்நேர்வு போன்ற இடர்நேர்வுகளை குறைப்பதன் காரணமாக பொருளாதார நடவடிக்கையினை மேம்படுத்துவதில் மிக முக்கியமான விடயமாகவுள்ளது. கொடுப்பனவு முறையிலுள்ள முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளை மிகக் குறைப்பதில் மத்திய வங்கிக்கு பாரிய பொறுப்புக் காணப்படுகின்றது. அத்தகைய பொறுப்புக்கள் பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள முறையியல் சார்ந்த முக்கிய கொடுப்பனவு முறைக்கான மையக் கோட்பாடுகளில் விபரமாக விளக்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவு முறை மேற்பார்வை (i) பொதுவாக கொடுப்பனவு முறையின் சுமுகமான, பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் மிக்க தொழிற்பாடு, (ii) எவ்வித தடங்கலுமில்லாமல் முறை தொழிற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல், (iii) நுகர்வோரின் நம்பத்தன்மையை பேணுதல், (iv) நாணயக் கொள்கைக்கான ஊடுகடத்தல் வழிமுறை களைப் பாதுகாத்தல் என்பனவற்றில் கூடிய கவனத்தைச் செலுத்துகிறது. ஆகவே, இது முறைமையின் தனிப்பட்ட பங்கேற்பாளரிலும் பார்க்க, குறித்துரைக்கப்பட்ட முறைகளிலுள்ள முறை சார்ந்த விடயங்கள் சார்ந்தே நெறிப்படுத்தப்படுகின்றது.

கொடுப்பனவு பணிகளை வழங்குவதில் வங்கிகள் மிக முக்கியமான பங்கினை ஆற்றிய வேளையில் மற்றைய நிறுவனங்கள் சிறு உற்பத்திகளை வழங்கின. முக்கியமானவையோ இல்லையோ எதுவாயினும் நிதியியல் நிறுவனங்கள் தவிர்ந்த தொழில் நிறுவனங்களினால், வங்கிகளினால் அல்லது மத்திய வங்கியினால் உடைமையாக கொள்ளப்பட்டுள்ள தொழிற்படுத்தப்படும் அனைத்துக் கொடுப்பனவு முறைகளையும் மேற்பார்வை உள்ளடக்குகிறது. எனினும் மேற்பார்வையின் செறிவு, முறையியல் முக்கியத்துவத்தின் தொடர்பான அளவினைப் பொறுத்து வேறுபடும்.கொடுப்பனவு முறையின் மேற்பார்வையும் வங்கிப் பங்கேற்பாளர்களின் நிதியியல் மேற்பார்வையும் ஒன்றை மற்றொன்று பூரணப்படுத்துகின்றது. பங்கேற்பாளர்களின் உரிமைகளும் பொறுப்புக்களும் சாதாரணமானவை, தெளிவானவை, மிக உறுதியான சட்ட அடிப்படைகளைக் கொண்டனவா என்பதனையும் பங்கேற்பாளர்கள் தாமாகவே அவற்றிற்கு இணங்கி ஒழுகின்றார்களா என்பதனையும் மதிப்பிடுவதற்காக கொடுப்பனவு முறையின் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்வதனையும் மேற்பார்வை உள்ளடக்குகின்றது.

### மேற்பார்வைக்கான அடிப்படையும் அதன் குறிக்கோள்களும்

மேற்பார்வைக்கான அடிப்படை இரு வேறுபட்ட வடிவங்களைக் கொண்டுள்ளது. முதலாவது ஒழுங்குவிதிகள், விதிகள், பணிப்புரை மற்றும் வழிகாட்டல்களையும், இரண்டாவது தார்மீக ரீதியான தூண்டுதலையும் உள்ளடக்கும். 2002ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணயவிதி (திருத்தச்) சட்டம் இலங்கையின் நாணயம், நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைகளின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பனவற்றிற்கான பொறுப்புக்களை இலங்கை மத்திய வங்கியிடம் கையளித்துள்ளது. இது கொடுப்பனவு முறையினை மேற்பார்வையிடும் அதிகாரத்தினை மத்திய வங்கிக்கு வழங்குகிறது.

நாணயவிதிச் சட்டத்தின் 98ஆவது பிரிவின் நியதிகளின்படி, இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கான வசதிகளை வழங்கும் பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் வழங்கப்பட்டிருக்கிறது. நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 112 (ஆ) இன் கீழான ஏற்பாட்டு நியதிகளில் இலங்கை மத்திய வங்கி, காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்ட விதத்தில், இலங்கையில் தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கி லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டெட்டிற்கு அனுமதியளித்தது.

### இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை தொழிற்பாடும் உள்ளடக்கமும்

இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைத் தொழிற்பாடானது கொடுப்பனவு முறையின் சுமுகமான, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக ஏற்புடையதான கட்டமைப்புக்கள், செயன்முறைகள் மற்றும் உற்பத்திகள் என்பன உள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு தீர்ப்பனவுத் திணைக்களம் கொடுப்பனவு முறையின் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.

இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை நடவடிக்கைகளின் உள்ளடக்கப் பரப்பு நிதிய மாற்றல் முறைகள் மற்றும் முக்கிய கொடுப்பனவுகள் கருவிகள் என்பவற்றின் வடிவமைப்பு மற்றும் தொழிற்பாட்டினை மதிப்பிடுவதுடன் தொடர்பானதாக இருந்தது. எனினும், முறைகளின் பாதுகாப்பினையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு தொடர்பான முறைகளின் தொழிற்படுத்துனர்களைச் சார்ந்ததேயாகும்.

### நியமங்கள்

மேற்பார்வைக்கான நியமங்களாக, பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியினால் வெளியிடப்பட்ட மையக் கோட்பாடுகள் கொடுப்பனவு தீர்ப்பனவு முறைகள் மீதான குழு, பிணையங்கள் ஆணைக்குழுக்களின் பன்னாட்டு அமைப்பு (CPSS/IOSCO) என்பவற்றின் பிணையங்களின் தீர்ப்பனவுகள் மீதான விதந்துரைப்புக்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பன்னாட்டுரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப நியமங்கள் என்பன விளங்குகின்றன.

### மேற்பார்வை வழிமுறைகள்

மேற்பார்வை வழிமுறைகள், தகவல் சேகரிப்பினூடாக கொடுப்பனவுமுறைத் தொழிற்பாடுகள், பங்கேற்பாளர்கள் மற்றும் கருவிகள் என்பன பற்றிய தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் சந்தை நிகழ்வுகளை கண்காணித்து பகுப்பாய்வு செய்வதற்காக பங்கேற்பாளர்களுடன் கிரமமாக நடாத்தப்படும் கலந்துரையாடல்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

களின் பொதுவான புரிந் துணர்வையும் விழிப்புணர்வையும் அதிகரித்தல்;

(ii) கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பாக எதிர்கால ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுகளை முன்னேற்றும் நோக்கில் தற்போதைய மற்றும் எதிர்கால கொடுப்பனவு அபிவிருத்திகளை அறிவித்தல்;

(iii) மத்திய வங்கியின் அனைத்தையும் உள்ளடக்கிய கொள்கை வழிகாட்டலுக்கு இசைந்ததாக பரந்த கொடுப்பனவு மறுசீரமைப்பில் தனியார் துறையின் முன்முயற்சியினையும், போட்டித் தன்மையினையும் அதிகரித்து வழிநடத்துதல்;

(iv) நாணயக்கொள்கை அமுல்படுத்தலில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறை கொண்டிருக்கக்கூடிய சாத்தியமான விளைவுகளை மதிப்பிடுவதற்காக கொடுப்பனவு தீர்ப்பனவு முறையிலான நிகழ்வுகளை கண்காணித்தல்;

(v) பன்னாட்டு சமூகத்தின் விழிப்புணர்வை அதிகப்படுத்தும் நோக்குடன் இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைகள் சம்பந்தமான தகவல்களை வழங்குவதற்காக ஏனைய மத்திய வங்கிகளுடன் இணைந்து கொள்ளல்.

கொடுப்பனவு செய்தித்திரட்டுக்கான தகவல்களை சேகரிப்பது சம்பந்தமான கொடுப்பனவு மறுசீரமைப்பு வழிகாட்டல் குழுவினால் வடிவமைக்கப்பட்ட மாதிரி குறித்து கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களம் ஏனைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை வணிகர்களினதும் உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளது. மேலும் பன்னாட்டு தீர்ப்பனவுக்கான வங்கியினால் தேவைப் படுத்தப்பட்டவரான கொடுப்பனவு செய்தித்திரட்டினை “சிவப்பு புத்தக” தரத்திற்கு தரம் உயர்த்துவது சம்பந்தமாக கொடுப்பனவு விபரத்திரட்டின் தேவைக்காக தகவல்களை சேகரிப்பதில் பயன்படுத்தப்படும் புள்ளிவிபர மாதிரிகளை மீளாய்வு செய்வதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கருத்துக்கள் பெறப்பட்டன.

## ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொழிற்பாடுகள்

பல்புடைய அடிப்படையில் எட்டு உறுப்பு நாடுகள் கொடுப்பனவு ஏற்பாடுகளின் கீழ் பிராந்தியத் திற்குள்ளேயான கொடுக்கல் வாங்கல்கள் மீதான கொடுப்பனவு ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்தால் செயல்படுத்தப்பட்டன. அவை ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறிமுறையின் கீழான கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களத்தால் வழிப்படுத்தப்பட்ட மொத்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி 2001இன் ரூ.72.4 பில்லியனிலிருந்து 2002ஆம் ஆண்டில் ரூ.77.1 பில்லியனாக உயர்வடைந்தது. 2002ஆம் ஆண்டில் வெளிநாட்டு நாணயம் மூலமாக செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி ரூ.67.6 பில்லியனாக கணக்கிடப்பட்டிருந்தது.

### ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர்சபையின் 31ஆவது கூட்டம்

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் பணிப்பாளர் சபையின் 31ஆவது கூட்டம் இலங்கை மத்திய வங்கியில் 2002 மே 30இல் நடைபெற்றது. 2002ஆம் ஆண்டின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தலைவரான இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் ஏ.எஸ்.ஜயவர்த்தன கூட்டத்திற்கு தலைமைதாங்கி நடாத்தினார். வங்காளதேச வங்கி, இந்தியாவின் ரிசேர்வ் வங்கி, ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மத்திய வங்கி, நேபாள ராஷ்ரா வங்கி, பூட்டானின் அரச நாணய அதிகாரசபை என்பவற்றின் ஆளுநர்களும், மியன்மார் மத்திய வங்கியின் துணை ஆளுநர், பாக்கித்தான் அரச வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் ஏனைய 10 பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். நிதி அமைச்சர் மாண்புமிகு கே.என்.சொக்ஸி, ச.ச, பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள், உறுப்பு நாடுகளின் பிரச்சனைகள் மற்றும் மறு சீரமைப்புக்கள் மற்றும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் எதிர்கால பங்கு என்பன குறித்து பணிப்பாளர் சபையினர் கலந்துரையாடினர். உறுப்பு நாடுகளில் அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும் முறையினை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் தீர்ப்பனவு ஏற்பாடுகளில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை பரீட்சிப்பதற்காக ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பட்டயத்தினை மீளாய்வு செய்து தேவையான பொறுப்புக்களை ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொழிநுட்ப குழுவிடம், ஒப்படைக்க பணிப்பாளர் சபை இணங்கியது. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் தற்போதைய அமைப்பு முறையினை தொடர்ந்தும் பேணுவதுடன் மீளாய்வின் அடிப்படையில் மேலதிக முன்னேற்றங்களை செய்யும்நோக்கில் எஸ்கெப் அல்லது அங்ராட் என்பவற்றின் உதவியினைப் பெறுவதற்கும் பணிப்பாளர் சபை இணங்கியது.

ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தின் 2003/2004ஆம் ஆண்டிற்கான தலைவர் மற்றும் துணைத் தலைவர்களாக முறையே இந்தியாவின் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பணிப்பாளர் சபையின் 32ஆவது கூட்டத்தை 2003 மேயில் இந்தியாவில் நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

## பணிமனைத் திணைக்களம்

2002ஆம் ஆண்டில் பணிமனைத் திணைக்களம் வங்கியின் சொந்தப் பணிமனைகளைப் பேணுவதனையும் சுத்தமாக வைத்திருப்பதனையும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தமைக்கு புறம்பாக, வங்கியின் மற்றைய திணைக்களங்களுக்கு போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் பணிகள் போன்ற ஆதரவுப் பணிகளையும் வழங்கியது.

பெரும்பாலான பேணல் பணிகளும் போக்குவரத்துப் பணிகளின் ஒரு பகுதியும் அத்தகைய பணிகளை மிகப்பயனுறு முறையிலும் வினைத் திறனுடனும் குறைந்த செலவில் பெற்றுக்கொள்வதனைக் கருத்திற்கொண்டு வெளிமூலங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாண்டுக் காலத்தில் வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் மேற் கொள்ளப்பட்டதன் காரணமாக, 1987 இலிருந்து வங்கித்தொழிலுக்கான கல்வி ஆய்வு நிலையத்தின் விருந்து வளாகத்தில் தங்கியிருந்த சிறப்பு அதிரடிப்படையணி திசெம்பர் இறுதியில் கட்டிடத்தை

விட்டு வெளியேறியமையானது, இந்நிலையம் வங்கியாளர்களுக்கு தங்கியிருந்து பயிற்சி பெறும் வசதிகளை இனிவரும் ஆண்டுகளில் மீண்டும் தொடங்க இயலச்செய்யும்.

திணைக்களம் குத்தகைக்கு பெறப்பட்ட யோர்க் வீதியிலுள்ள காணியிலான உத்தேச ஊர்தித் தரிப்பிடத்திற்குப் பதிலாக வங்கிப் பணிமனைக்கு முன்னால் ஊர்தித் தரிப்பிடத்தினை நிருமாணிப்பதற்கு ஒப்புதலைப் பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சுடனும், சனாதிபதி செயலகத்துடனும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றது.

திணைக்களம் சதாம் வீதியிலுள்ள வெளிச்சவீட்டு மணிக்கூட்டு கோபுரத்தினை தொடர்ந்தும் பேணி வருகின்றது.

## பொதுப்படுகடன் திணைக்களம்

பொதுப்படுகடன் திணைக்களம் திறைசேரியின் நெருங்கிய ஒத்துழைப்புடன் இலங்கையின் அரச படுகடனை முகாமைப்படுத்தி வருகின்றது. நாணயவிதிச் சட்டத்தின் 106 (1)ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க, மத்திய வங்கி அரசிற்கும் எழுதப்பட்ட ஏதாவது சட்டத்தின்படியோ அல்லது வேறுவிதமாகவோ நிறுவப் பட்ட அரசின் சார்பில் செயற்படும் முகவர்கள் அல்லது நிறுவனங்களுக்கு இறைமுகவராகவும் வங்கியாளராகவும் தொழிற்படும். மேலும், 113ஆம் பிரிவு குறிப்பிடுகின்ற வாறு அரசாங்கத்தின் முகவராக, மத்திய வங்கி அரசபடுகடனின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக விருக்கும் என்பதற்கேற்ப நாணயவிதிச் சட்டம் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளை நாணயச்சபையிடமும் மத்திய வங்கியிடமும் ஒப்படைத்திருக்கிறது. நாணயவிதிச் சட்டத்தின் 114 ஆவது பிரிவின்படி இலங்கையில், அரசாங்கத்தினால் திரட்டப்படுகின்ற படுகடன் நாணயச்சபையின் நுண்ணாய்வினை தேவைப் படுத்துகின்றது. இப்பிரிவு உத்தேச கடன்கள் அல்லது வழங்கல்களின் நாணய உள்விளைவுகள் தொடர்பாக நாணயச்சபையின் மதியுரையினை முதலில் பெற்றிருந்தாலொழிய, எந்த ஒரு எழுதப்பட்ட சட்டம் அல்லது வேறுவிதமாக இருப்பினும் 106ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படுகின்றவாறு அரசாங்கத்தினாலோ அல்லது எந்த ஒரு முகவரினாலுமோ அல்லது எந்த ஒரு நிறுவனத் தினாலுமோ புதிய கடன்களைத் திரட்டவோ பங்குகளை அல்லது தொகுதிக்கடன்களைப் புதிதாக வழங்கவோ முடியாதெனக் குறிப்பிடுகிறது. புதிய படுகடனிலிருந்து எழும் நாணய விளைவுகள் பற்றி நாணயச்சபைக்கு பொதுப்படுகடன் திணைக்களத்தினாலும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினாலும் அறிக்கையிடப் பட்டுவருகின்றது.

பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணையங்கள் கட்டளைச்சட்டம், உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம், திறைசேரி வைப்புக்கள் சான்றிதழ் சட்டம் மற்றும் வரி ஒதுக்கு சான்றிதழ்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க பொதுப்படுகடன் திணைக்களத் தினால் உள்நாட்டுப்படுகடன் திரட்டப்படு கின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டவாக்கங்களின் நியதிகளுக்கிணங்க பொதுப்படுகடன் திணைக்களத் தலைவர் பொதுப்படுகடன் பதிவாளராகவும், பணியாற்றி வருகின்றார். பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப்படுகடன் ஆகியவிரண்டினையும் தீர்ப்பனவு செய்துவருகின்றது.

பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு புறம்பாக திறைசேரியும் பொதுப்படுகடனைத் திரட்டுகின்றது. திறைசேரியானது வெளிநாட்டு மூலவளத் திணைக் களத்தினூடாக சலுகை அடிப்படையிலான வெளிநாட்டுப்படுகடனைத் திரட்டுகின்றது. கடந்த காலங்களில், திறைசேரி அவ்வப்போது குறுங்கால உள்நாட்டுப் படுகடனையும் திரட்டியிருக்கிறது.

பொதுப்படுகடன் திணைக்களத்தின் முக்கிய குறிக்கோள் யாதெனில் இடர்நேர்வுகளின் முன்மதியுடைய அளவுடன் ஒத்துச்செல்லும் விதத்தில், நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையில் சாத்திய மானளவிற்கு குறைந்தசெலவில் அரசின் நிதியிடல் தேவைகளும் அதன் கொடுப்பனவுக் கட்டுப்பாடுகளும் ஈடுசெய்யப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அரச படுகடனை முகாமை செய்வதேயாகும். இறைமையுள்ள அரசின் படுகடன் செலுத்தத் தவறுதலின் பேரண்டப் பொருளாதார விளைவுகளையும் வெளியீட்டு இழப்புக்களின் விளைவுகளினது அளவினையும் கருத்திற் கொள்கையில் முன்மதியுடைய இடர்நேர் முகாமைத்துவமானது மிக முக்கியமான தாகவுள்ளது. இவ்விழப்புக்கள் வியாபார மற்றும் வங்கித்தொழிலின் கடன்தீராற்றல் அற்ற தன்மை அதேபோன்று நீண்டகால நம்பகத்தன்மையும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சேமிப்புக்களைத் திரட்டுவதில் அரசிற்குள்ள இயலாற்றலும் குறைவடைந்து போகின்றமை என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

இலங்கையில், வெளிநாட்டுப் படுகடன்கள் பெரும்பாலும் சலுகை ரீதியானவையாகவும் நீண்டகாலத்தினவாகவும் காணப்படும் வேளையில், உள்நாட்டுப் படுகடன்கள் அப்போதைக்கு சந்தையில் நிலவுகின்ற வட்டி வீதங்களில் திரட்டப்படுகின்றன. எனவே வெளிநாட்டுப் படுகடனில் காணப்படும் செலவு மற்றும் இடர்நேர்வு எதிரீடுகளை தீர்மானிப்பது ஒப்பீட்டுரீதியில் உள்நாட்டுப்படுகடன் தொடர்பான செலவு மற்றும் இடர்நேர்வு எதிரீடுகளைத் தீர்மானிப்பதனைவிட இலகுவானதாகும். உள் நாட்டுப்படுகடன் முகாமைத்துவக் குழு உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவ உத்திகளை வடிவமைப் பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக் குழுவானது பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களத்தின் மேலதிக கண்காணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர், புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது.

### 2002ஆம் ஆண்டின் நிகழ்வுகள்

### கடன் வழங்கலும் அதன் செலவும்

மொத்த உள்நாட்டு கடன்படுகையாக ரூபா 328,706 மில்லியனை திரட்டுவதும் இரண்டு அரச வங்கிகளிடமுள்ள திறைசேரியின்மேலதிகப்பற்று

நிலுவையை தீர்ப்பதற்காக மேலதிகமாக ரூபா 30 பில்லியன்களை திரட்டுவதென்பதுமே 2002ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பொறுப்பாகும். கடன்பெறல் செலவைக் கணிசமாக குறைப்பதற்காக பொதுப்படுகடன் திணைக்களம் நன்கு திட்டமிடப்பட்ட படுகடன் நிகழ்ச்சி நிரலையும் பொருத்தமான ஒரு குறுகிய கால, நீண்டகால கடன் பெறுகை கலப்பொன்றினை 2002ஆம் ஆண்டில் பயன்படுத்தியது. இம் முயற்சி பேரண்டப் பொருளாதார காரணிகளால் எளிதாக்கப்பட்டது. மீள்கொள்வனவு வீதத்தைப் படிப்படியாக குறைத்ததன் மூலம் நாணயக் கொள்கை தளர்த்தப்பட்டது. 2002ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் நிலவிய சாதகமான பொருளாதார சூழ்நிலைகள் எதிர்காலத்தில் குறைவான பணவீக்கத்துக்கும், வட்டி வீதங்களுக்குமான சந்தை எதிர்பார்ப்புக்களுக்கும் இட்டுச்சென்றுள்ளன.

பொதுப்படுகடன் திணைக்களம் வெளிநாட்டு நாணயத்திலான கடன்களை உள்நாட்டில் திரட்டியதன் மூலம் உள்நாட்டு வட்டி வீதங்கள் குறைவடைந்தன. 2001ஆம் ஆண்டில் அரசாங்கம் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட 250 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகளை

### அட்டவணை II-10
### பொதுப்படுகடன் உள்ளடக்கம்(அ)

| வகை | 2001 முடிவில் ரூ.மில். | % | 2002 முடிவில் ரூ.மில். | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டு படுகடன் | 731,056 | 54.4 | 899,040 | 55.9 |
| திறைசேரிஉண்டியல்கள் | 170,995 | 12.7 | 210,995 | 13.1 |
| திறைசேரி முறிகள் | 229,174 | 17.1 | 347,128 | 21.6 |
| ரூபாக் கடன்கள் | 292,813 | 21.8 | 287,700 | 17.9 |
| இலங்கைஅபிவிருத்தி முறிகள் | 14,766 | 1.1 | 24,181 | 1.5 |
| வெ.நா.வ.தொ. பிரிவுகளிலிருந்தான கடன்பாடு | 23,290 | 1.7 | 29,018 | 1.8 |
| திறைசேரிவைப்புச்சான்றிதழ்கள் | 11 | 1.0 | 11 | 0.0 |
| திறைசேரிஒதுக்குச்சான்றிதழ்கள் | 7 | 0.0 | 7 | 0.0 |
| வெளிநாட்டுக் கடன்பாடு(ஆ) | 611,050 | 45.5 | 709,517 | 44.1 |
| மொத்தம் | 1,342,106 | 100 | 1,608,557 | 100 |

தற்காலிகமானவை — மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முகாமைப்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட படுகடன்.

(ஆ) தற்காலிகமானவை.

வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியது. 2001இல் 158.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கல் செய்யப்பட்டன. எஞ்சிய 91.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகள் இரு ஆண்டு முதிர்ச்சிக் காலத்துடன் ஆண்டொன்றுக்கு வட்டியாக இலண்டன் வங்கிகளுக்கிடையேயான ஆறுமாத (6) வீதத்துடன் மேலதிகமாக 194 அடிப்படைப் புள்ளிகளை நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதத்தில் அரையாண்டுக்கொருமுறை வட்டி செலுத்தும் வகையில் 2002ஆம் ஆண்டு யூன் மாதம் 26ஆம் திகதி வழங்கப்பட்டன.

நீண்டகால கடன் பத்திரங்களை விலையிடல் தொடர்பான ஒரு அளவுகோலை சந்தைக்கு வழங்கும் முகமாகவும் சுழற்சிமுறை இடர்நேர்வை குறைக்கும் முகமாகவும் நீண்டகால சந்தைப் படுத்தக்கூடிய கடன் பத்திரங்களை வெளியிட்டு,

### அட்டவணை II-11
### 2002இல் உள்நாட்டுப்படுகடனின் வழங்கலும் முதிர்ச்சியும்

ரூ.மில்லியன்

| | முதிர்ச்சி | வழங்கல் | மீள் கொடுப்பனவு | தேறிய வழங்கல் |
|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல் | 91நாள் | 134,229 | 124,150 | 10,079 |
| | 182நாள் | 35,627 | 16,546 | 19,081 |
| | 364நாள் | 148,619 | 81,902 | 66,717 |
| | மற்றையது | 24,198 | 80,075 | (55,877) |
| | **மொத்தம்** | **342,673** | **302,673** | **40,000** |
| திறைசேரி முறிகள் | 2 வருடம் | 21,422 | 58,321 | (36,899) |
| | 3 வருடம் | 77,810 | 26,448 | 51,362 |
| | 4 வருடம் | 19,221 | 4,400 | 14,821 |
| | 5 வருடம் | 45,170 | - | 45,170 |
| | 6 வருடம் | 43,500 | - | 43,500 |
| | **மொத்தம்** | **207,123** | **89,169** | **117,954** |
| ரூபாக் கடன்கள் | 2/5வருடம் | 38,419 | - | 38,419 |
| | 5/7வருடம் | - | 33,215 | (33,215) |
| | 4/6வருடம் | - | 10,317 | (10,317) |
| | **மொத்தம்** | **38,419** | **43,532** | **(5,112)** |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஐ.அ.டொலர்91.5மில்) | 2 வருடம் | 8,799 | - | 8,799 |
| | **மொத்தம்** | **8,799** | **-** | **8,799** |
| வெ.நா.வ.தொ. பிரிவுகளிலிருந்தான கடன்கள் (ஐ.அ.டொலர் 100 மி) | 3 1/2 வருடம் | 9,671 | - | 9,671 |
| (ஐ.அ.டொலர் 50 மி) | 1 வருடம் | - | 4,829 | (4,829) |
| | **மொத்தம்** | **9,671** | **4,829** | **4,842** |
| **மொத்தம்** | | **606,686** | **440,203** | **166,483** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பொதுப்படுகடன் திணைக்களம் தனது விளைவு வளைகோட்டை நீடிக்கக்கூடியதாயிருந்தது. விளைவு வளைகோட்டை 15 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடியதாக 10 ஆண்டு திறைசேரி முறிகளை 2003-சனவரி மாதத்திலும் 15 வருட திறைசேரி முறிகளை 2003 மாச்சிலும் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டில் பொதுப்படுகடனின் இருப்பு ரூ.1,608.6 பில்லியன்களாகும். அட்டவணை II-10இல்

### அட்டவணை II-12
### ரூபாக்கடன்களின் வழங்கலும் மீள்கொடுப்பனவும்-2002

| | வட்டிவீதம் ஆண்டுக்கு% | முதிர்ச்சிக்காலம் (ஆண்டுகள்) | தொகை ரூ.மில் |
|---|---|---|---|
| மிதக்கவிடப்பட்டவை | | | |
| | 13.00 | 2-5 | 38,419.4 |
| | **மொத்தம்** | | **38,419.4** |
| மீளச்செலுத்தப்பட்டவை | | | |
| | 14.00 | 5-7 | 33,250,0 |
| | 14.00 | 4-6 | 10,316,7 |
| | **மொத்தம்** | | **43,531.7** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

காட்டப்பட்டுள்ளது போன்று 2002ஆம் ஆண்டில் ரூபாக்கடன்கள் போன்ற சந்தைப்படுத்தப்படாத கடன்களின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

இது அட்டவணை II-11இல் காட்டப்பட்டுள்ள வாறு 2002ஆம் ஆண்டில் ரூபாக்கடன்கள் போன்ற சந்தைப்படுத்தப்படாத உபகரணங்கள் குறைவாகவும் மற்றும் திறைசேரி உண்டியல் திறைசேரி முறிகள் போன்ற சந்தைப்படுத்தக்கூடியதான உபகரணங்கள்







## அட்டவணை II-13
## திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக்கடன்களின் நிறையேற்றப்பட்ட ஆண்டு சராசரி விளைவுவீதங்கள்

ஆண்டொன்றுக்கான சதவீதம்

| கருவி | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002(அ) |
|---|---|---|---|---|---|---|
| திறைசேரி உண்டியல் (மாதங்கள்) (ஆ) | | | | | | |
| 3 | 11.03 | 11.77 | 11.69 | 12.78 | 16.11 | 12.89 |
| 6 | 11.95 | 12.13 | 12.03 | 12.97 | 17.33 | 13.04 |
| 12 | 12.29 | 12.20 | 12.55 | 14.23 | 18.41 | 13.81 |
| மொத்த சராசரி | 11.60 | 11.98 | 12.06 | 13.68 | 17.41 | 13.33 |
| திறைசேரி முறி (ஆண்டுகள்) | | | | | | |
| 2 | 12.81 | 12.84 | 13.01 | 16.71 | 19.82 | 14.88 |
| 3 | 11.42 | 13.43 | 13.31 | 15.00 | 15.60 | 14.29 |
| 4 | 11.67 | 13.72 | 13.53 | 12.52 | - | 14.54 |
| 5 | - | - | 13.78 | 12.78 | - | 14.69 |
| 6 | - | - | 13.65 | 12.88 | - | 14.83 |
| மொத்த சராசரி | 12.50 | 13.08 | 13.37 | 15.10 | 18.07 | 14.57 |
| ரூபாக்கடன்கள் (ஆண்டுகள்) (இ) | | | | | | |
| 2 | - | - | - | - | 15.00 | - |
| 5 | - | 11.35 | - | - | 14.03 | 13.00 |
| 6 | - | 12.00 | - | 11.00 | - | - |
| 7 | 12.05 | 11.25 | - | - | - | - |
| 8 | 11.72 | 12.25 | 12.25 | - | - | - |
| 10 | - | 11.50 | 12.50 | 12.00 | 13.00 | - |
| மொத்த சராசரி | 11.98 | 11.61 | 12.36 | 11.68 | 14.31 | 13.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 10% பிடித்துவைத்தல் வரியையும் உள்ளடக்குகிறது. 2002 மே 3ஆம் நாள் தொடக்கம் அரசாங்கம் அரச பிணையங்கள் வட்டி மீது பிடித்துவைத்தல் வரியினை விதித்தது

(ஆ) 3,6,12 மாத முதிர்ச்சிகளுக்குப்பதிலாக முறையே 91நாள், 182நாள், 364 நாள் முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் வழங்கல் 1999 ஒத்தோபரில் தொடங்கியது.

(இ) அழைக்கத்தக்க ரூபாக்கடன்களின் மீள்கொடுப்பனவின் கட்டாய நாள் (ஆகக் கூடிய நாள்) பரிசலீக்கப்பட்டது.

கூடுதலாகவும் புதிய வழங்கல் செய்யப்பட்டமையின் தேறிய விளைவினால் ஏற்பட்டதாகும்.

அட்டவணை II-12 மற்றும் II-13இல் காட்டப் பட்டுள்ளதைப் போன்று ஒவ்வொரு கருவியினதும் ஆண்டுச் சராசரி விளைவானது கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் வழங்கப்பட்ட திறை சேரி முறிகளின் விபரங்கள் அட்டவணை II-14இல் காட்டப்படுகிறது. தெளிவாக நோக்குமிடத்து தொடர்களின் எண்ணிக்கையானது மிதமிஞ்சியதாக இருந்ததுடன் இது இரண்டாந்தரச் சந்தையின் வியாபார நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். இதற்கான பரிகாரமாக பொதுப்படுகடன் திணைக்களம் 2003ஆம் ஆண்டில் தொடர்களை குறைப்பதற்கு முயற்சிசெய்யும். வரைபடம்II-5 இரண்டாம்தர சந்தையின் விளைவு வளைகோட்டை தெளிவாகக் காட்டுகிறது. இந்த விளைவு வளைகோடு 2002ஆம் ஆண்டில் கீழ்நோக்கி நகர்ந்திருக்கின்றது. மேலும், இது சந்தை எதிர்காலத்தில் குறைந்தளவு வட்டி வீதத்தை எதிர்பார்ப்பதையும் அதனால் நீண்டகால முறிகளின் மீதான விளைவுவீதம் மிகவும் குறைவடைந்துள்ளமையையும் காட்டுகின்றது.

## அட்டவை II-15
## 2002 இறுதியிலுள்ளவாறு உள்நாட்டுப்படுகடன் கடப்பாடுகள்

ரூ.மில்

| ஆண்டு | கொடுப்பனவுவகை | | |
|---|---|---|---|
| | முதல் தொகை | வட்டி | மொத்தம் |
| 2003(அ) | 328,258,15 | 99,493.92 | 427,752.06 |
| 2004 | 104,353.89 | 62,600.84 | 166,954.73 |
| 2005 | 126,475.11 | 50,319.80 | 176,794.91 |
| 2006 | 110,126.58 | 37,618.96 | 147,745.54 |
| 2007 | 87,683.66 | 30,037.42 | 117,721.08 |
| 2008 | 39,562.09 | 17,018.29 | 56,580.38 |
| 2009 | 11,410.00 | 6,462.48 | 17,872.48 |
| 2010 | 23,210.59 | 5,195.83 | 28,406.43 |
| 2011 | | 2,890.56 | 2,890.56 |
| 2012 | | 2,890.56 | 2,890.56 |
| 2013 | | 2,890.56 | 2,890.56 |
| 2014 | | 2,890.56 | 2,890.56 |
| 2015 | | 2,890.56 | 2,890.56 |
| 2016 | | 2,890.56 | 2,890.56 |
| 2017 | | 2,890.56 | 2,890.56 |
| 2018 | | 2,890.56 | 2,890.56 |
| 2019 | | 2,890.56 | 2,890.56 |
| 2020 | | 2,890.56 | 2,890.56 |
| 2021 | | 2,890.56 | 2,890.56 |
| 2022 | | 2,890.56 | 2,890.56 |
| 2023 | 24,088.00 | 1,445.28 | 25,533.28 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) 2002 இறுதியில் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்களையும் உள்ளடக்குகிறது

வரைபடம் II-6 மற்றும் அட்டவணை II-15 என்பன 2002ஆம் ஆண்டு இறுதியில் வெளிநின்ற மொத்தக்கடன்களின் பேரிலான எதிர்கால உள்நாட்டுக் கடன் கடப்பாடுகளின் சுருக்கத்தை வழங்குகின்றன. 2002 திசெம்பர் 31இல் உள்நாட்டுக்கடன் இருப்பின் சராசரி கால அளவு 1.97 ஆண்டுகளாகும். உள்நாட்டு கடன்களின் கால அளவானது உள்நாட்டுக் கடன்களின் நிறையேற்றப்பட்ட சராசரி முதிர்ச்சியாக கணிக்கப் பட்டது. இங்கே கொடுப்பனவு கடப்பாடுகளின் (காசு வெளிப்பாய்ச்சல்) நிகழ்கால பெறுமதி, நிறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. உள்நாட்டுப் படுகடனின் சராசரிச் செலவு 2002ஆம் ஆண்டு இறுதியில் 13.13 சதவீதமாக காணப்பட்டது.

**அட்டவணை II-14**
**திறைசேரி முறிகளின் முதலாந்தர வழங்கல் மீதான தகவல்கள் - 2002**

| முறிதலைப்பு | முதிர்ச்சி (ஆண்டுகள்) | பெறப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகள் (ரூ.மில்.) | நி.ஆ.ச.வீதம் முதிர்ச்சி வீச்சு (ஆண்டிற்கு சதவீதம்) | நறுக்கு வீதம் (ஆண்டிற்கு சதவீதம்) |
|---|---|---|---|---|---|
| 12.50% 2004 ஏ | 2 | 3,947 | 2,922 | 14.94-14.94 | 12.50 |
| 12.50% 2004 பி | 2 | 4,085 | 500 | 13.73-13.73 | 12.50 |
| 12.50% 2004 சி | 2 | 15,962 | 11,500 | 15.46-15.64 | 12.50 |
| 12.50% 2004 டி | 2 | 10,350 | 3,000 | 14.16-14.22 | 12.50 |
| 12.50% 2004 ஈ | 2 | 7,441 | 1,500 | 13.27-13.27 | 12.50 |
| 12.50% 2004 எவ் | 2 | 6,960 | 2,000 | 13.18-13.18 | 12.50 |
| 12.25% 2005 ஏ | 3 | 6,250 | 6,250 | 14.50-14.50 | 12.25 |
| 12.25% 2005 பி | 3 | 16,040 | 4,590 | 14.30-14.46 | 12.25 |
| 12.25% 2005 சி | 3 | 9,190 | 3,370 | 14.20-14.21 | 12.25 |
| 12.25% 2005 டி | 3 | 14,418 | 4,000 | 13.98-14.15 | 12.25 |
| 12.25% 2005 ஈ | 3 | 13,691 | 7,000 | 13.88-13.88 | 12.25 |
| 12.25% 2005 எவ் | 3 | 21,430 | 6,100 | 13.76-13.81 | 12.25 |
| 12.25% 2005 ஜி | 3 | 5,000 | 5,000 | 13.76-13.80 | 12.25 |
| 12.25% 2005 எச் | 3 | 13,681 | 6,000 | 13.76-15.32 | 12.25 |
| 12.25% 2005 ஜே | 3 | 17,085 | 5,250 | 15.20-15.46 | 12.25 |
| 12.25% 2005 கே | 3 | 15,695 | 8,500 | 15.21-15.32 | 12.25 |
| 12.25% 2005 எல் | 3 | 5,930 | 3,100 | 15.26-15.26 | 12.25 |
| 12.25% 2005 எம் | 3 | 5,225 | 2,800 | 14.79-14.83 | 12.25 |
| 12.25% 2005 என் | 3 | 4,352 | 2,000 | 14.20-14.20 | 12.25 |
| 12.25% 2005 ஓ | 3 | 9,634 | 3,600 | 13.56-13.68 | 12.25 |
| 12.25% 2005 பி | 3 | 8,479 | 3,500 | 13.57-13.68 | 12.25 |
| 12.25% 2005 கியூ | 3 | 17,230 | 6,750 | 12.37-13.56 | 12.25 |
| 12.00% 2006 ஏ | 4 | 9,501 | 3,000 | 13.79-13.79 | 12.00 |
| 12.00% 2006 பி | 4 | 4,825 | 4,550 | 13.79-15.43 | 12.00 |
| 12.00% 2006 சி | 4 | 5,860 | 3,471 | 15.43-15.83 | 12.00 |
| 12.00% 2006 டி | 4 | 2,725 | 1,000 | 15.47-15.47 | 12.00 |
| 12.00% 2006 ஈ | 4 | 3,523 | 1,500 | 15.23-15.23 | 12.00 |
| 12.00% 2006 எவ் | 4 | 7,055 | 2,700 | 13.80-13.80 | 12.00 |
| 12.00% 2006 ஜி | 4 | 7,510 | 3,000 | 12.05-13.77 | 12.00 |
| 11.75% 2007 ஏ | 5 | 8,755 | 4,500 | 15.76-16.00 | 11.75 |
| 11.75% 2007 பி | 5 | 12,550 | 4,200 | 15.81-15.93 | 11.75 |
| 11.75% 2007 சி | 5 | 5,252 | 4,470 | 15.93-15.93 | 11.75 |
| 11.75% 2007 டி | 5 | 6,886 | 3,250 | 15.11-15.93 | 11.75 |
| 11.75% 2007 ஈ | 5 | 7,521 | 1,250 | 14.84-14.84 | 11.75 |
| 11.75% 2007 எவ் | 5 | 7,540 | 5,000 | 14.37-14.37 | 11.75 |
| 11.75% 2007 ஜி | 5 | 7,010 | 4,500 | 14.43-14.43 | 11.75 |
| 11.75% 2007 எச் | 5 | 12,320 | 6,000 | 14.27-14.46 | 11.75 |
| 11.75% 2007 ஜே | 5 | 43,777 | 12,000 | 12.24-14.17 | 11.75 |
| 11.50% 2008 ஏ | 6 | 10,795 | 9,000 | 15.76-15.98 | 11.50 |
| 11.50% 2008 பி | 6 | 1,000 | 1,000 | 15.98-15.98 | 11.50 |
| 11.50% 2008 சி | 6 | 4,000 | 4,000 | 15.33-15.98 | 11.50 |
| 11.50% 2008 டி | 6 | 8,105 | 5,000 | 15.13-15.33 | 11.50 |
| 11.50% 2008 ஈ | 6 | 6,231 | 1,500 | 14.44-14.52 | 11.50 |
| 11.50% 2008 எவ் | 6 | 2,500 | 2,500 | 14.52-14.52 | 11.50 |
| 11.50% 2008 ஜி | 6 | 12,040 | 7,500 | 14.49-14.56 | 11.50 |
| 11.50% 2008 எச் | 6 | 41,873 | 13,000 | 12.31-14.53 | 11.50 |
| **மொத்தம்** | | **471,229** | **207,123** | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் பொதுப்படுகடன் திணைக்களம் கடன்களை திரட்டுவது மற்றும் தீர்ப்பது தொடர்பாக 54 திறைசேரி உண்டியல் ஏலங்களையும் 80 திறைசேரி முறிகளின் ஏலங்களையும் நடாத்தியதுடன் இவற்றுக்கான கோரல்கள் வழங்கலை விட விஞ்சிக் காணப்பட்டன. திறைசேரி உண்டியல்களைப் பொறுத்தவரை ரூபா.342,673 மில்லியன் கொண்ட மொத்த வழங்கலுக்கு எதிராக ரூ.596,590 மில்லியன் கொண்ட கேள்விப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றன. திறைசேரி முறிகளைப் பொறுத்தவரை ரூ.207,123 மில்லியன் வழங்கலுக்கெதிராக ரூ.471,229 மில்லியன் பெறுமதியான கேள்விப்பத்திரங்கள் கிடைக்கப்பெற்றன.

**அட்டவணை II-16**
**2002இல் வழங்கப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை**

| கருவி | பத்திரங்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.மில்) |
|---|---|---|
| **திறைசேரி உண்டியல்** | | |
| வழங்கப்பட்டது | 140,396 | 342,673 |
| முதிர்ச்சியடைந்தது | 137,900 | 302,673 |
| **முறிகள்** | | |
| வழங்கப்பட்டது | 16,444 | 207,123 |
| முதிர்ச்சியடைந்தது | 11,475 | 89,169 |
| வட்டி நறுக்கு | 44,245 | 29,499 |
| **ரூபாக்கடன்கள்** | | |
| வழங்கப்பட்டது | 99 | 38,419 |
| முதிர்ச்சியடைந்தது | 104 | 43,532 |
| உத்தரவாதப்படுத்தப்பட்ட வட்டி | 828 | 38,161 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பத்திரமற்ற முறை இன்னும் நடைமுறைக்கு வராத நிலையில் பொதுப்படுகடன் திணைக்களமானது பத்திரமுறையிலான சான்றிதழ்களை தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. திறைசேரி உண்டியல், திறைசேரி முறிகள் மற்றும் ரூபாக்கடன்கள் தொடர்பான 2002ஆம் ஆண்டுக்கான வழங்கல் மற்றும் வட்டிக் கொடுப்பனவு சம்பந்தமான சான்றிதழ்களின் எண்ணிக்கை அட்டவணை II.16குறிப்பிட்டவாறு கணிசமானதாகும்.

அட்டவணை II-17
வெளிநாட்டுப் படுகடனின் முதிர்ச்சி, வட்டிவீதங்கள், கொடை மூலம்

| கொடை வகை | முதிர்ச்சிக் காலம் (ஆண்டுகள்) | | | | வட்டிவீதம்/பணிக் கட்டணம் (ஆண்டுக்கு %) | | கொடை மூலம் (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சலுகைக் காலம் | | மீள்கொடுப்பனவு காலம் | | | | | |
| | நிறையேற்றப்பட்ட சராசரி | வீச்சு | நிறையேற்றப்பட்ட சராசரி | வீச்சு | நிறையேற்றப்பட்ட சராசரி | வீச்சு | நிறையேற்றப்பட்ட சராசரி | வீச்சு |
| இருபுடை | 7 | 1-16 | 27 | 7-40 | 2.25 | 00.0 - 5.68 | 69 | 28 - 91 |
| பல்புடை | 10 | 3-11 | 30 | 9-40 | 0.97 | 0.75 - 8.25 | 79 | 5 - 94 |
| வர்த்தகம் | 6 | 0-10 | 19 | 1-30 | 3.07 | 1.35 - 7.70 | 19 | 2 - 65 |
| ஏற்றுமதிக் கொடுகடன் | 4 | 1-10 | 10 | 7-13 | 3.42 | 1.45 - 9.20 | 34 | 11 - 74 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களின் விபரங்கள் அட்டவணை II.17 மற்றும் 9இல் காட்டப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடனானது வர்த்தக கடன்களில் ஒரு குறைப்பையும், சலுகைக் கடன்களில் ஒரு அதிகரிப்பையும் காட்டி நிற்கின்றது.

## உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

பொதுப்படுகடன் திணைக்களம் உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவ முறையொன்றை 2002ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்தது. இது வெளிநாட்டு படுகடன்களை ஆய்வுசெய்தல் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கு பயன்படும் பொதுநலவாய செயலகப் படுகடன் பதிவு மற்றும் முகாமை முறைக்கு ஒத்ததாக செயற்படுகிறது. இந்தப் புதிய முறை பொதுப்படுகடன் திணைக்களம் நீண்டகால கடன்பாடுகளுக்கான கால அட்டவணையை சந்தைக்கு முன் கூட்டியே வழங்குவதற்கு வசதியளிக்கின்றது.

பொதுப்படுகடன் திணைக்களம் வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்ததுடன் இணைந்து முதன்மை வணிகர்களுக்கிடையே உடனுக்குடன் தகவல்களை பரவச்செய்யும் முகமாக இரண்டு முறைகளை அபிவிருத்தி செய்தது. ஒன்று கடன் பத்திரங்களின் உண்மையான விலைகூறலைப் பரவச்செய்யும். மற்றையது உண்மையான கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் புளும்போர்க் தகவல் முறையானது பொதுப்படுகடன் திணைக்களத்திலும், முதன்மை வணிகர்களின் அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் படுகடன் சந்தையின் அபிவிருத்திகள் தொடர்பாக அவசியமான தகவல்களை உலக நாடுகளுக்கு வழங்கும்முகமாக இலங்கைக்கு ஒரு முறி குறித்தவிபரங்களைக் கொண்ட பக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்காக இந்த முறை பயன்படுத்தப் படும்.

அதே நேர மொத்த தீர்ப்பனவு முறை (அ.நே.மொ.தீ.மு) பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை (ப.பி.தீ.மு) மற்றும் பிணையங்களின்

அட்டவணை II-18
2002இல் வெளிநாட்டுப்படுகடன் பகிர்ந்தளிப்புக்களும், முதல் தொகை மீள்கொடுப்பனவுகளும், 2002 இறுதியில் வெளிநின்ற தொகையும் (அ) (ஆ)

(ரூ.மில்லியன்

| வகை | பகிர்ந்தளிப்புக்கள் | | முதல் தொகை மீள்கொடுப்பனவுகள் | | தேறிய பகிர்ந்தளிப்புக்கள் | | வெளிநின்றவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(இ) | 2001 | 2002(இ) | 2001 | 2002(இ) | 2001 | 2002(இ) |
| **1. கொடைகள்** | 40,934 | 47,170 | 19,434 | 22,686 | 21,500 | 24,484 | 611,050 | 709,517 |
| இருபுடை | 26,455 | 18,792 | 11,986 | 15,122 | 14,469 | 3,670 | 305,509 | 348,294 |
| பல்புடை | 12,500 | 23,531 | 4,829 | 5,839 | 7,671 | 17,692 | 289,687 | 340,868 |
| வர்த்தகம் | - | - | 1,038 | 597 | (1,038) | (597) | 7,962 | 7,849 |
| ஏற்றுமதிக் கொடுகடன்கள் | 1,979 | 4,847 | 1,581 | 1,128 | 398 | 3,719 | 7,892 | 12,506 |
| **2. நிதிகளின் பயன்பாடு** | **40,934** | **47,170** | **19,434** | **22,686** | **21,500** | **24,484** | **611,050** | **709,517** |
| காசு | - | - | 229 | 212 | (229) | (212) | 1,447 | 1,354 |
| பண்டம் | 871 | 317 | 2,726 | 3,091 | (1,855) | (2,774) | 28,974 | 30,158 |
| உணவு | 701 | - | 1,446 | 1,645 | (745) | (1,645) | 37,126 | 36,928 |
| பொருட்களும் பணிகளும் | - | 976 | - | - | - | 976 | - | 988 |
| இராணுவம் | 553 | - | - | - | 553 | - | 563 | 584 |
| நிகழ்ச்சித்திட்டம் | 2,252 | 7,027 | 1,471 | 1,620 | 781 | 5,407 | 55,904 | 67,709 |
| செயற்றிட்டம் | 36,557 | 38,850 | 13,546 | 16,107 | 23,011 | 22,743 | 486,850 | 571,614 |
| தொழிநுட்ப உதவி | - | - | 16 | 11 | (16) | (11) | 186 | 182 |

(அ) புகைவண்டித் திணைக்களத்திற்கான ப.நா.நிதியத்தின் நிதிஉதவிகளும், கடன்களும் நீங்கலாக
(ஆ) உண்மையான மீள்கொடுப்பனவுத்தரவுகளிலுள்ள வேறுபாடுகளுக்கு குறுக்கு செலாவணிவீத வேறுபாடுகளே காரணமாகும்.
(இ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மத்திய வைப்பகம் (பி.ம.வை) போன்றவற்றின் அறிமுகத்துக்கான வேலைகளுடன் தொடர்பான உதவிகளை 2002ஆம் ஆண்டில் பொதுப்படுகடன் திணைக்களம் வழங்கியது. இம்முறைமை 2003ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் செயற படுத்தப்படும். பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவுமுறை பிணையங்களில் மத்திய வைப்பகம் என்பவற்றின் அமுலாக்கத்துடன் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பின்னரங்க அலுவலகத் தொழிற்பாடுகள் தன்னியக்கமாக்கப்படும். இது நறுக்குகளை எடுத்துச் செல்வதிலுள்ள சிரமங்களை இல்லாதொழித்து வர்த்தகப்படுத்தப்படும் பிணையங்களின் கொடுப்பனவு தீர்ப்பனவுகளில் செயற்றிறனை அதிகரிப்பதனால் படுகடன் சந்தையை அபிவிருத்தி செய்ய உதவும். நறுக்குகளற்ற முறையிலான அரசாங்க கடன் பத்திரங்களின் வழங்கல்களுக்கான சட்ட ஏற்பாடு உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பன வற்றிற்கான திருத்தங்களுடன் மேற்கொள்ளப்பட்டன. வரையறுக்கப்பட்ட லொஜிக்கா யூ.கே நிறுவனம் அ.நே.மொ.தீ.மு/ ந.பி.தீ.மு போன்றவற்றிற்கான தொழில்நுட்பத்தை வழங்குகிறது. உலக வங்கியும், மத்திய வங்கியும் இத்திட்டத்துக்கு கூட்டாக நிதியளிக்கின்றன.

விநியோகம் எதிர் கொடுப்பனவு /பெறுவனவுகள் எதிர் கொடுப்பனவு அல்லது விநியோகம் இலவசம்/ பெறுவனவு இலவசம் என்ற அடிப்படையில் பங்குபற்றுவோரின் தேவைக்கேற்ப ப.பி.தீ. முறையின் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படும். கடன் பத்திரங்களுக்கான தீர்ப்பனவு மொத்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வேளையில் நிதிகள் அ.நே.மொ.தீ முறையினூடாக தீர்க்கப்படும். அ.நே.மொ.தீ. முறையின் பங்கு பற்றுனர்களுக்கு கடன் பத்திரங்களின் மத்திய வைப்பகத்தில் பேணப்படும் பத்திரங்களற்ற பிணையங் களினூடாக வழங்கப்படும் பிணைகளை அடிப் படையாகக் கொண்டு பிணையங்கள் மீதான கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கான நிதியளித்தல் நாளொன்றுக்குள்ளேயான திரவத் தன்மை வசதி மூலம் கிடைக்கச் செய்யப்படும். அனைத்து கடன்பத்திரங்களை வைத்திருப்பவர்களின் விபரத்தையும் பிணையங்கள் மற்றும் வைப்பகம் பராமரிக்கும். அ.நே.மொ.தீ. முறையில் பங்குபற்றுவர்களுக்கிடையேயான எந்த ஒரு கடன் பத்திர கொடுக்கல் வாங்கல்களும் மத்திய வங்கியினால் பிணையங்கள் மற்றும் வைப்பகங்களில் பதிவு செய்யப்படும்.அந்தந்த முதன்மை வணிகர்கள், பொதுமக்களால் செய்யப்படும் கடன்பத்திர கொடுக்கல் வாங்கல்களை பிணையங்கள் மத்திய வைப்பகத்திற்கு அறிவிப்பார்கள். எல்லா கொடுக்கல் வாங்கல்களும் சம்பந்தப்பட்ட அனைத்து கட்சியினருக்கும் மத்திய பிணையங்கள் வைப்பகத்தினால் அறிவிக்கப்படும்.

## முதனிலை வணிகர்முறை, ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வையும்

முதனிலை வணிகர் சிறப்பு ஒதுக்கமாக ரூபா.150 மில்லியன் வைத்திருக்க வேண்டுமென்ற குறிப்பிட்ட சில நியதிகள், நிபந்தனைகளின் அடிப்படையில், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை உள்ளூர் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின் கீழான ஒழுங்கு விதிமுறைகளினால் முதனிலை வணிகர்களாக அனுமதிக்கப்பட்டமையினால் முதனிலை வணிகர் முறை 2002இல் விரிவு படுத்தப்பட்டது. இரண்டு விதமான முதன்மை வணிகர்கள் உள்ளனர். அவை சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுமாகும். முதனிலை வணிகர் முறையை விரிவாக்குவதற்கான காரணம் யாதெனில் இந்த முறையின் இடையீட்டு இயலுமையை அதிகரிப்பதும், சந்தைக்கு மேலதிக திரவத் தன்மையையும், போட்டித்தன்மையையும் உட்செலுத்துவதாகும்.உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது நிதிமூலங்களையும் கிளை வலையமைப்பையும் பயன்படுத்தி பிணையங்களை மக்களிடையே விசாலமாக சந்தைப்படுத்தவும் அதன் மூலம் முதலீட்டாளர்களை அடையும் முறைகள் அதிகரிக்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி 2002இல் நியமம் பெற்ற இரு வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமித்தது.

முதனிலை வணிகர்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை மற்றும் அரசாங்க பிணையங்களின் சந்தைப்படுத்தல் என்பன தொடர்பான சட்ட ஏற்பாடுகள் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி பொதுப்படுகடன் திணைக்களத்தினூடாக முதனிலை வணிகர்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைகளை செய்கிறது. இந்த மேற்பார்வையின் முக்கிய நோக்கங்களாக முதலீட்டாளர்களது உரிமைகளை பாதுகாப்பதனூடாக அவர்களை காப்பது, முதனிலை வணிகர்கள் வலுவாகவும், பாதுகாப்பாகவும், திறமையான வர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்தல், அரச பிணையங்கள் சந்தை நியாயமானது, வெளிப்படையானது, திறமையானது என்பதை உறுதிப்படுத்தல் மற்றும் முறைசார்ந்த இடர்நேர்வுகளை குறைவடையச் செய்து உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தல் என்பன விளங்கின.

பொதுப்படுகடன் திணைக்களம் தலத்திற்கு வெளியேயான தொடர்ச்சியான கண்காணிப்பினை நடத்தவதன்மூலம் காலத்திற்குக்காலம் மேற் கொள்ளப்படுகின்ற தலப்பரீட்சிப்புக்கள் மூலமும் முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்கிறது. தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பின்கீழ், மூலதனப் போதுமை மற்றும் ஏனைய முக்கிய நிதியியல் தன்மையினையும் இலாபம், வருவாய்கள், பயன்பாட்டுச்சக்தி, திரவத்தன்மை போன்ற செயலாற்றக் குறிகாட்டிகளையும் கண்காணிப்பதன் மூலம் முதனிலை வணிகர்களின் வலுவாற்றலும் நிதியியல் செயலாற்றமும் மதிப்பிடப்படுகின்றது. பணிப்புரைகளும் வழிகாட்டல்களும் இணங்கி ஒழுகப்படுகின்றனவா என்பதும் கண்காணிக்கப்பட்டது. இந் நோக்கத்திற்காக முதனிலை வணிகர்கள் தமது தொழிற்பாடுகள் மீதான நாளாந்தக் கூற்றுக்களையும் மாதாந்த மற்றும் ஆண்டு நிதியியல் கூற்றுக்களையும் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். தலப்பரீட்சிப்புக்களின் போது, அவர்களது முகாமைத் துவத்தின் போதுமை, உள்ளகக் கட்டுப்பாடுகள்

மற்றும் முறைகள் என்பனவற்றை மதிப்பிடு வதற்காகவும் வாடிக்கையாளரின் உடமைகளின் பாதுகாப்பினை பரிசோதிப்பதற்காகவும் முதனிலை வணிகர்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் சரிபார்க்கப்படுகின்றன. தலத்திற்கு வெளியேயான கண் காணிப்பு தகவல்கள் கரிசனைகளுக்குரிய காரணிகள் எதனையும் எடுத்துக்காட்டுமாயின் தலப்பரீட்சிப்புக்களும் நடாத்தப்படும். தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினதும் தலப்பரீட்சிப்புக்களினதும் பெறுபேறுகள் முதனிலை வணிகர்களுக்கு தெரியப் படுத்தப்படுவதுடன் இணங்கி ஒழுகாத தன்மை காணப்படுமிடத்து சரியான நடவடிக்கைகளை எடுக்குமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுவர். ஒழுங்குவிதிகளுக்கும் பணிப்புரை களுக்கும் நீண்டகாலம் இணங்கி ஒழுகத்தவறும் அல்லது கடுமையான குற்றங்களை இழைத்திருக்கும் முதனிலை வணிகர்கள் அவர்களது நியமனங்கள் இடைநிறுத்தப்பட அல்லது இரத்துச் செய்யப்படுவதற்கு ஆளாவர்.

2002இல் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் மற்றும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் என்பனவற்றின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் முதனிலை வணிகர்களை மேற்பார்வை செய்வதனை வலுப்படுத்தக்கூடிய, குறிப்பாக மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் நம்பிக்கை பொறுப்புக்கள், கட்டுக்கோப்பு ஒழுங்குகள் போன்ற குறித்துரைக் கப்படக்கூடிய முன்மதியுடைய தேவைப்பாடுகள், பணிப்பாளர்சபை மற்றும் மூத்த முகாமைத்தவத் திற்கான தகுதி, நியமங்கள், இடர்நேர் முகாமைத்துவ முறை மற்றும் உட்கட்டமைப்பு போன்றவற்றின் நடைமுறைப்படுத்தல் ஆகிய வரைச்சட்டங்களைக் கொண்டிருந்தன.

2002இல் பொதுப்படுகடன் திணைக்களம் முன்மதியுடைய தேவைப்பாடுகள், முதலீட்டாளர் பாதுகாப்பு மற்றும் சந்தைகளை உருவாக்கல் என்பன தொடர்பாக முதனிலை வணிகர்களுக்கு பல பணிப்புரை களை வழங்கியது. முதனிலை வணிகர்களின் நிதியியல் ஆற்றலை மேம்படுத்துவதற்காக, பொதுப்படுகடன் திணைக்களம் 2002 யூனிலிருந்து மூலதனப் போதுமை மீதான பணிப்புரையை வழங்கியது. மூலதனப் போதுமை மீதான பணிப்புரைகளின் நியதிகளின்படி, வட்டிவீத இடர்நேர்வுகளிலிருந்து தோன்றும் இழப்புக்களுக்கெதிரான பாதுகாப்பொன்றாக, 3 சதவீதம் கொண்ட மூலதனப் போதுமை விகித மொன்றினைப் பேணுமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மூலதனப் போதுமை விகிதம் முதனிலை வணிகர்கள் அவர்களது மூலதனத்தினை 33 மடங்குவரை உயர்த்திக்கொள்ள அனுமதிக்கும். 2003 ஏப்பிறலிலிருந்து மூலதனப் போதுமை விகிதம் 5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட வுள்ளதுடன் இது மூலதனத்தினை 20 மடங்கு வரை யில் உயர்த்திக்கொள்வதற்கு மட்டுப்படுத்தும். முதனிலை வணிகர்களுக்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடும் 2003 சனவரியிலிருந்து ரூ.200 மில்லியனுக்கு அதிகரித்ததுடன் இதில் குறைந்தது ரூ.150 மில்லியன் அடுக்கு 1 மூலதனத்தில் இருக்க வேண்டும்.

2002 சனவரியில் வழங்கப்பட்ட கணக்குகளைப் புறம்புபடுத்தல் மற்றும் பிணையங்களின் மீள்மதிப்பீடு என்பன மீதான பணிப்புரைகள், முதனிலை வணிகர்கள் அவர்களது வர்த்தகப்படுத்தல் மற்றும் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களை புறம்புபடுத்தலைக் கொள்ளுமாறும் சந்தை இடர்நேர்வுகளை கட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு வாராந்த அடிப்படையில் தமது சொத்துப் பட்டியல்களை சந்தைக்குக் குறித்தல் வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். 2002 சனவரியில் வழங்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மீதான பணிப்புரையும் முதனிலை வணிகர்கள் தமது கணக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் நியதிகளுக்கிணங்க தயாரித்துக்கொள்ள வேண்டு மெனவும், சந்தை ஒழுக்காற்றலை மேம்படுத்தும் விதத்தில் பொதுமக்களுக்கான தகவல்களை அதிகரித்தளவில் வெளிப்படுத்தும் பொருட்டு குறித்துரை க்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் அவர்களது கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளைச் செய்தித்தாளில் வெளியிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது.

கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் பிணையங்களின்மீது 2002 சனவரியில் வழங்கப்பட்ட பணிப்புரைகள், முதனிலை வணிகர்கள் வாடிக்கையாளர்களின் சார்பில் வைத்திருக்கும் பிணையங்களை அவர்களது சொந்த சொத்துப் பட்டியலிலிருந்து வேறாக்கிக் கொள்ள வேண்டுமெனவும், முதலீட்டாளர்களைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு வாடிக்கையாளரின் உடமைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது தொடர்பான நடைமுறைகளை குற ித்துரைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது. திறை சேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் மீதான முதிர்ச்சிக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டிப் பெறுகைகள் தொடர்பான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

சந்தைத் திரவத்தன்மையினையும், முதனிலை வணிகர்கள் சந்தையை உருவாக்கிக் கொள்வதனையும் மேம்படுத்துவதற்கு பொதுப்படுகடன் திணைக்களம், குறுங்கால முதிர்ச்சிகளின் மீது (1ஆண்டு வரை) உறுதியான விலைக்கோரல்களைச் செய்யுமாறு முதனிலை வணிகர்களைக் கேட்டுக்கொள்வதற்காக 2002இல் இருவழி விலைக்குறிப்பீடுகள் மீது பணிப்புரை களை வழங்கியது. பொதுப்படுகடன் திணைக்களமானது நடுத்தர மற்றும் நீண்டகாலப் பிணையங்களின் அளவுக் குறியீடுகளை குறித்துரைப்பதற்காக உறுதியான விலைக்குறிப்பீடுகளுக்கான தேவைப்பாடுகளை விரிவாக்குவதற்கு உத்தேசித்துள்ளது.

அதே நேர அடிப்படையில் உண்மையான இர ண்டாந்தரச் சந்தை வீதங்களைக் கண்காணிப்பதற்காக, நாளொன்றின்போது கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட பிணையங்களின் அனைத்து முதிர்ச்சிகளுக்குமான உண்மையான வாங்குகின்ற விற்கின்ற வீதங்களை சமர்ப்பிக்குமாறு முதனிலை வணிகர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். நாளாந்த அடிப்படையில் இரண்டாந்தரச்சந்தை விளைவு வீதங்களைப் பிர திபலிக்கத்தக்க விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் கழிவிடல் சந்தை வீதங்களைச் சீராக்கும் பொருட்டு உண்மையான சந்தை விளைவு வீதங்களின் மீது விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் அடிப்படையில் முதனிலை வணிகர்களிடமிருந்து திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் உண்மையான

வாங்குகின்ற, விற்கின்றவீதங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

2002இல் பொதுப்படுகடன் திணைக்களம் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான பணிப்புரைகளையும், புதிய கருவிகளின் மீதான பணிப்புரைகளையும் புதிய கிளைகள்/ அலுவலகங்கள் மீதான பணிப்புரைகளையும் வழங்கியது.

முதனிலை வணிகர்களின் ஒன்று சேர்ந்த செயலாற்றம் கீழேயுள்ள அட்டவணை II -19 காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை II - 19

முதனிலை வணிகர்களின் முக்கிய நிதியியல் குறிகாட்டிகள்

| | | 2001 | 2002(அ) |
|---|---|---|---|
| சொத்துப்பட்டியல் சொத்துக்கள் | (ரூ.மில்) | 21,664.0 | 40,138.2 |
| வரிக்கு முன்னான இலாபம் | (ரூ.மில்) | 321.4 | 1,417.2 |
| மொத்த வருவாய்கள் | (ரூ.மில்) | 448.2 | 1,714.1 |
| மொத்த மூலதன நிதியம் | (ரூ.மில்) | 1,361.0 | 2,297.2 |
| பங்குகளிலிருந்தான வருவாய் | | 13.48% | 58.00% |
| பங்கொன்றிற்கான வருவாய் | (ரூ) | 2.42 | 16.39 |
| மூலதனப் போதுமை விகிதம் | | 6.18% | 9.72% |
| மூலதன நிகழ்வு | (தடவைகள்) | 17.34 | 12.17 |

(அ) தற்காலிகமானவை-முதனிலை வணிகர்களின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டது.

## முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கிரயக்கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள், மீள்கொள்வனவுகள் மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவுகள் என்பனவற்றின் கணிசமானதொரு அளவு முதனிலை வணிகர்களுக்கிடையேயும் முதனிலை வணிகர்களுக்கும் அவர்களது வாடிக்கையாளருக்கு மிடையேயும் இடம்பெற்றன. முதனிலை வணிகர்களை ஒருசாரராகக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான முதனிலை வணிகர்களின் வாராந்த அறிக்கையிடல் முறையினூடாக திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2002 காலப்பகுதியில் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களினால் செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தக் கிரய விற்பனைகளும், கொள்வனவு களும் முறையே ரூ.214,917 மில்லியனாகவும் ரூ.27,092 மில்லியனாகவும் விளங்கியவேளையில் முதனிலை வணிகர்களினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகளின் கிரய விற்பனைகளும் கொள்வனவுகளும் முறையே ரூ.185,814 மில்லியனாகவும் ரூ.107,987 மில்லியனாகவும் காணப்பட்டன. திறைசேரி உண்டியல்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு என்பன முறையே ரூ.396,523 மில்லியனாகவும், ரூ.201,931 மில்லியனாகவும் விளங்கியவேளையில் திறைசேரி முறிகளின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் முறையே ரூ.1,006,379 மில்லியனாகவும் ரூ.225,896 மில்லியனாகவும் காணப்பட்டன.

முதனிலை வணிகர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் இரண்டாந்தரச்சந்தை நடவடிக்கைகளின் நாளாந்த மற்றும் வாராந்த சந்தை அறிக்கைகளை பொதுப்படுகடன் திணைக்களம் திரட்டிக்கொண்டது. அறிக்கைகள் கிரய மற்றும் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முதிர்ச்சி அடிப்படையில் வர்த்தகம் செய்யப்பட்ட அளவுகள் மற்றும் விளைவு வீதங்கள் மீதான ஒன்று சேர்ந்த தரவுகளைத் தருகின்றன. இவ்வறிக்கை திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் பல்வேறு முதிர்ச்சிகளுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி சந்தை விலைகளையும் வேறுபட்ட காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளுக்கான சராசரி இருவழி விலைக்குறிப்பீடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

## தொழில்நுட்ப உதவி

பொதுப்படுகடன் திணைக்களம் 2002இல் மூன்று தொழில்நுட்ப குழுக்களின் உதவியைப் பெற்றுக் கொண்டது. இடர்நேர்வு முகாமைத்துவ முறையினை அபிவிருத்தி செய்வதற்கு உதவுவதற்காக சுவீடிஸ் தேசிய படுகடன் அலுவலகத்திலிருந்து குழுவொன்று பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு ஒத்தோபரில் விஜயம் செய்தது. இக்குழு தீவிரமான இரண்டாந்தரச் சந்தை தலையீடு, முறி வழங்கல்களின் எண்ணிக்கையினையும், ஏலமுறைகளையும் ஒழுங்கு முறைப்படுத்தல் என்பன மீதான ஏனைய பல புதிய அபிவிருத்திகள் பற்றி மதியுரை வழங்கியது.

இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவம் மற்றும் படுகடன் சந்தை அபிவிருத்தி என்பன பற்றி பன்னாட்டு நாணய நிதியமும் உலக வங்கியும் கூட்டாக ஆய்வுகளை மேற்கொண்டன. இவ்வறிக்கை தற்போதைய நிலைமையினை முழுமையாக மீளாய்வு செய்ததுடன் சீர்திருத்தங்களும், தொழில்நுட்ப உதவியும் தேவைப்படும் முக்கிய துறைகளையும் அடையாளங் கண்டது. அறிக்கையின் விதந்துரைப்புக்களை மத்திய வங்கியும், இலங்கை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டதும் பன்னாட்டு நிதியமும்- உலக வங்கியும், புறம்பான படுகடன் அலுவலகமொன்றினை நிறுவுவதற்கும், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தை அபிவிருத்திகள் மற்றும் படுகடன் சந்தையின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை என்பனவற்றிற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும். நடவடிக்கைகளை பின்தொடர்ந்து கண்காணிப்பதற்காக 2003ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியில் மீண்டும் வருகைதர திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவிக்கான மற்றைய துறைகளைக் கண்டறிவதற்காக ஐக்கிய அமெரிக்காவிலிருந்தும் குழுவொன்று விஜயம் செய்தது.

### 2003 இல் அறைகூவல்கள்

2003இல் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் எதிர்நோக்கப்பட்ட முக்கியமான அறைகூவல் 2003ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின்படி ஆகக் குறைந்த செலவிலும் இடர்நேர்வுகளிலும்ரூ.240 பில்லியன் கொண்ட மொத்த உள்நாட்டு நிதியிடலை உள்ளடக்கி ரூ.316 பில்லியன் கொண்ட மொத்தக் கடன்பாடுகளைத் திரட்டுவதாகும். நிதியிடல் முக்கியமாக அட்டவணை II-20இல் காட்டப்பட்டுள்ள படுகடன் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதேயாகும். படுகடன் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கு மேலும் வசதியளிப்பதற்காக, விளைவு வளைகோடு ஏற்கனவே 15

ஆண்டுகளுக்கு விரிவாக்கப் பட்டிருப்பதுடன் இது மேலும் நீடிக்கப்படவுள்ளது.

2003இன் பிற்பகுதியில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பத்திரங்களற்ற பிணையங்கள் முறையுடன், பத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட பிணையங்களிலிருந்து பத்திரங்களற்ற சூழலொன்றிற்கு மாறிச்செல்வதனை திணைக்களம் சமாளிக்க வேண்டியிருக்கும். பத்திரங்களற்ற பிணையங்கள் முறையை வழங்குவதற்கும் பிணையங்களின் பத்திரங்களை இல்லாமல் செய்வதற்கும் ஏற்றவிதத்தில் சட்டங்கள் திருத்தம் செய்யப் பட்டிருக்கின்றன. மேலும், தொழிற்பாட்டு நடைமுறைகளும் இப்பணியினைக் கையாளத்தக்க விதத்தில் மாற்றப்பட்டுள்ளன. அரச பிணையங் களுக்கான மத்திய பிணையங்கள் வைப்பகமொன்றினை பொதுப்படுகடன் திணைக்களத்தில் ஏற்படுத்துவதற்கான வேலைகளும் நடந்துவருகின்றன. பத்திரங்களற்ற புதிய மின்னியல் முறைக்கும் இடரெதுவுமற்ற தன்மையைக் கொண்ட தன்னாதிக்கமுள்ள படுகடனை வைத்திருப்பதற்குமான மாற்றம் தொடர்பாக பொதுமக்களுக்கு தகவல்களையும் கல்வியையும் வழங்குவதற்காக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

2003இல் முதனிலை வணிகர்களுக்கு பல புதிய பணிப்புரைகளை விடுக்க பொதுப்படுகடன் திணைக்களம் உத்தேசித்துள்ளது. இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பதற்கும், சொத்துப் பட்டியலை மீள சமநிலைப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள் மற்றும் வட்டி வீத மாற்றம் போன்ற வழிவந்த பெறுகைகளின் அறிமுகம் மூலதன தேவைப்பாடுகளின் வடிவமைப்பினையும் ஒழுங்கானதும் பாதுகாப்பானதுமான சந்தையை உறுதிப் படுத்துவதற்காக விதிகள் மற்றும் நடைமுறைகளையும் தேவைப்படுத்துகின்றன. பொதுப்படுகடன் திணைக்களம் 2003இன் தொடக்கப்பகுதியில் முன்னோக்கிய வீத உடன்படிக்கைகள் மற்றும் வட்டிவீத மாற்றம் என்பனவற்றின்மீது, குறிப்பாக மூலதனப் போதுமை மற்றும் சந்தைக்கு குறிப்பிடல் தேவைப்பாடுகள், வெளிப்படுத்துகை வரையறைகள், கணக்கீட்டு விதிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர் முகாமைத்துவ முறைகள், ஆவணப்படுத்தல் மற்றும் ஏனைய நடைமுறைகள் என்பனமீது பணிப்புரைகளை வழங்குவதற்கு எண்ணியுள்ளது. மீள்கொள்வனவு உடன்படிக்கையின்மீது தரப்படுத்தப்பட்ட விதிகளையும் ஆவணங்களையும் குறித்துரைக்கின்ற புதிய பணிப்புரையொன்று 2003இல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அட்டவணை II - 20
2003 இல் மதிப்பிடப்பட்ட படுகடன் பணிக்கடப்பாடுகள்(அ)

ரூ.மில்

| மாதம் | உள்நாட்டுப்படுகடன் | | வெளிநாட்டுப்படுகடன் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | முதல் தொகை | வட்டி | முதல் தொகை | வட்டி | |
| சன - 03 | 38,584 | 15,282 | 1,145 | 739 | 55,750 |
| பெப் - 03 | 9,344 | 7,089 | 1,250 | 925 | 18,608 |
| மாச்சு - 03 | 26,488 | 8,276 | 2,960 | 1,246 | 38,970 |
| ஏப்பி - 03 | 8,557 | 10,191 | 2,336 | 925 | 22,009 |
| மே - 03 | 4,607 | 9,116 | 2,219 | 913 | 16,854 |
| யூன் - 03 | 13,175 | 7,523 | 1,679 | 859 | 23,235 |
| யூலை - 03 | 2,557 | 13,817 | 1,291 | 1,070 | 18,734 |
| ஓகத்து- 03 | 19,185 | 7,706 | 1,760 | 1,322 | 29,974 |
| செத் - 03 | 14,004 | 8,646 | 3,580 | 1,792 | 28,023 |
| ஒத் - 03 | 9,276 | 11,316 | 2,754 | 1,166 | 24,512 |
| நவெம் - 03 | 17,537 | 7,760 | 2,237 | 1,102 | 28,635 |
| திசெ - 03 | 10,295 | 5,802 | 1,979 | 1,135 | 19,210 |
| **மொத்தம்** | **173,607** | **112,523** | **25,190** | **13,194** | **324,514** |

மூலம் இலங்கை மத்திய வங்கி

(அ) 2003இல் எறிவு செய்யப்பட்ட வழங்கல்களின் பேரிலான மதிப்பிடப்பட்ட படுகடன் பணிக்கொடுப்பனவுகளை உள்ளடக்குவதுடன் திறைசேரி உண்டியல்களின் மூலதன மீள்கொடுப்பனவுகளை தவிர்க்கின்றது.

நிதியியல் ஆற்றல், உள்ளக ஆளுகை மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவற்றை மேம்படுத்துவதற்காகவும், பணிப்பாளர்சபைக்கு அறிக்கையிடுகின்ற கணக்காய்வுக் குழுவொன்றினைக் கொண்டிருக்குமாறு முதனிலை வணிகர்களைத் தேவைப்படுத்தும் பணிப்புரையை விடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் உள்ளமைப்பு மற்றும் பணிப்பாளர்கள், மூத்த முகாமைத்துவத்திலுள்ளவர்கள் கொண்டிருக்க வேண்டிய பொருத்தமானதும் சரியானதுமான தகைமைகள் என்பன மீதான பணிப்புரைக்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர் நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்கும் சிறந்த நடைமுறைகளையும் சந்தையின் வெளிப் படையான தன்மையினையும் மேம்படுத்துவதற்காகவும் பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுக்கு வியாபார நடத்தைக் கோவையொன்றை அறிமுகப்படுத்தும். இது, வர்த்தகப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தலுடன் தொடர்பான சிறந்தநிறைவேற்று விதிகளையும் வாடிக்கையாளரின் சொத்துக்களைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துகின்ற கோட்பாடுகளையும், சட்டக்கோவைக்கு இணங்கி ஒழுகுவதற்கான மூத்த முகாமைத்தவ பொறுப்புக்களையும் குறித்துரைக்கும். நடத்தைச் சட்டக்கோவை 2003ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் வெளியிடுவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு தனியொரு படுகடன் அலுவலகம் உருவாக்கப்படும். எதிர்பார்க்கப்படும் மாற்றம் படுகடன்களைத் திரட்டுகின்ற மற்றும் தீர்ப்பனவு செய்கின்ற தற்போதைய செயற்பாடுகளுக்கு இடையூறின்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

## பிரதேச அபிவிருத்தி

மத்திய வங்கி மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க அபிவிருத்தி நிதித் திணைக்களமும் கிராமியக் கொடுகடன் திணைக்களமும் ஒருங்கிணைக்கப்பட்டு 2002 சனவரி 1 முதல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் என்ற புதிய திணைக்களம் உருவாக்கப்பட்டது. மேலும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் ஒரு பகுதியாக தொழிற்பட்ட பிரதேச அபிவிருத்தி வங்கிகள் சம்பந்தமான கொள்கை விடயங்களை கையாள்வதில் பொறுப்பாகவிருந்த ஒரு பிரிவு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதற்கு மேலதிகமாக அபிவிருத்தி நிதித் திணைக்களம் மற்றும் கிராமிய கொடுகடன் திணைக்களம் என்பவற்றினால் கையாளப்பட்ட செயற்றிட்டங்கள், தொடர்புபட்ட வங்கித் தொழில் திணைக்களத்தினால் பேணப்பட்ட கணக்குகளின் பொறுப்பு பிரதேச அபிவிருத்தி

திணைக்களத்திற்கு மாற்றப்பட்டது. இதன் பெறுபேறாக மத்திய வங்கியின் பல்வேறு திணைக்களங்களினால் கையாளப்பட்ட பிரதேச அபிவிருத்தி சம்பந்தமான தொழிற்பாடுகள் ஒரு திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. பிரதேச அபிவிருத்தி திணைக்களம் பல்வேறு கொடை முகவர்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கான மீள் நிதியினைத் தொடர்ந்தும் வழங்குவதோடு, பல்வேறுபட்ட கொடுகடன் செயற்றிட்டங்களின் கொடுகடன் உத்தரவாத திட்டத்தினை நிருவகித்தலிலும் ஈடுபட்டது. மேலும் மத்திய வங்கியில் நிறுவப்பட்டுள்ள அதன் மத்திய செயற்றிட்ட அலுவலகத்தினூடாக சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் என்பவற்றினை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் தொடர்ந்தும் செயற்படுத்தியது. ஏற்கனவே முற்றுப்பெற்ற கொடுகடன் செயற்றிட்டங்களின் மீதான பின்தொடர்தல் வேலைகளையும், செயற்றிட்ட பரிசோதனைகளையும் திணைக்களம் தொடர்ந்தும் நடாத்தியது.

## கொடுகடன் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

நிதியிடலின் மூலங்களைப் பொறுத்து திணைக்களத்தால் கையாளப்படுகின்ற கொடுகடன் திட்டங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**(அ) கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்**

***அ. ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியிட்ட செயற்றிட்டங்கள்***

(i) தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம்

(ii) இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டம்

(iii) தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம்

(iv) பெருந்தோட்டத்துறை சீராக்கற் செயற்றிட்டம்

(v) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறை செயற்றிட்டம்

(vi) வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

***ஆ. ஏனைய கொடையாளர்களினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்***

(i) வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி முகவர், உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்)

(ii) நகரச்சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கியஅமெரிக்கா நாடுகள் முகவராண்மை)

(iii) உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டம் (யப்பானிய அரசு)

(iv) வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கி)

(v) மாத்தளை பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித்திட்டம் (வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம்)

**(ஆ) அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் அல்லது அரசின் வட்டி உதவிக் கொடுப்பனவுகளுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களும் சுழல் நிதியத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும் செயற்றிட்டங்களும்.**

(i) முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை உள்ளடக்கிய புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

(ii) சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (இசுறு)

(iii) சபரகமுவ மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

(iv) சுறதுற நிகழ்ச்சித்திட்டம்-நுண்பாக தொழில்முயற்சி கொடுகடன்களினூடாக சுயவேலை வாய்ப்பினை மேம்படுத்தல் அத்துடன்

(v) தென்மாகாண கிராமிய அபிவிருத்தி (சுழல் நிதிய) கொடுகடன் செயற்றிட்டம்

## தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

தேயிலை பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் 2002ஆம் ஆண்டில் அதன் மூன்றாவது ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவுசெய்தது. இச் செயற்றிட்டத்தின் பரந்த குறிக்கோளாக உறுதியான அடிப்படையில் தேயிலை சிறு உடமையாளர்களின் வருமானத்தினை அதிகரித்தல் மற்றும் செயற்றிட்ட பிரதேசத்தில் இயற்கை சூழலை மேம்படுத்தல் என்பன விளங்கின. இச் செயற்றிட்டம் நான்கு முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளன. அவையாவன (அ) நிறுவன ரீதியான சீரமைப்புக்களும் அவற்றினை வலுப்படுத்தலும். (ஆ) தேயிலை அபிவிருத்தி (இ) சமூக உட்கட்டமைப்பும் காடு வளர்ப்பும் (ஈ) செயற்றிட்ட முகாமைத்துவம்

மத்திய வங்கியானது பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட துணைக்கடன்களுக்கு நிதியிடுவதற்கு முக்கிய பொறுப்பாக இருந்தது. செயற்றிட்டத்தின் கீழ் கடனைப் பெறத்தகுதியுடைய நடவடிக்கைகளாக தேயிலை மீள்நடுகை, தேயிலை நாற்று மேடைகளை நிறுவுதல், தேயிலைத் தொழிற்சாலைகளை புத்தாக்கம் செய்து நவீனமயப்படுத்தல், தேயிலைக் கொழுந்தை ஏற்றிச்செல்வதற்கான ஊர்திகளின் கொள்வனவு மற்றும் தேயிலைக் கொழுந்து சேகரிக்கும் நிலையங்களை நிருமாணித்தல் என்பன விளங்கின.

ஆய்வுக்குரிய ஆண்டுக் காலப்பகுதியில், 2002 செத்தெம்பரில் இலங்கைக்கு விஜயம் செய்த நடுத்தரகால, மீளாய்வுக்குழு கொடுகடன் கூறின் திருப்திகரமான முன்னேற்றங்களின் அடிப்படையில் செய்த விதந்துரைப்பின் பேரில் ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் சிஎஉ 2.7 மில்லியனுக்கு ஒப்புதலளித்தது. இதற்கிணங்க திருத்தப்பட்ட கொடுகடன் கூறிற்கு ஒதுக்கப்பட்ட தொகை சிஎஉ 18.119 மில்லியனாக உயர்ந்தது. 2002இன் இறுதியில் கொடுகடனுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 3,131 தகைமை பெற்ற துணைச் செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.1,977.5 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினதும் 2,967 துணைச்

செயற்றிட்டங்களுக்கு ரூ.1,626 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆண்டுக் காலப்பகுதியில் தேயிலை விளையும் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான காலநிலை மற்றும் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாகவும் தேயிலை சிறு உடமையாளர்களின் கடன்களுக்கான கேள்வி அதிகரித்தது. இதன் விளைவாக 2002ஆம் ஆண்டில் கடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.581 மில்லியனாக அமைந்ததோடு இது இவ்வாண்டிற்கான இலக்கில் 197 சதவீதத்தினைக் காட்டியது.

## இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற்றிட்டமானது கொடுகடன் வசதிகளையும், ஆதரவுப் பணிகளையும் வழங்குவதன் மூலமாக நிரந்தரப் பயிர்த்துறையின் அபிவிருத்திக்கும் வர்த்தக மயமாக்கலுக்கும் உதவுவதனை குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. 2002ஆம் ஆண்டில் இச் செயற்றிட்டம் அதன் நான்காவது ஆண்டுத் தொழிற்பாட்டினை நிறைவுசெய்தது. மத்திய வங்கி இச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறினை அமுல்படுத்துவதோடு செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகம் மற்றைய கூறுகளான ஆராய்ச்சி, விதை மற்றும் பயிரிடல் பொருட்கள் மற்றும் நிறுவனரீதியான வலுப்படுத்தல்கள் என்பவற்றை வேளாண்மை அமைச்சின் சார்பில் கையாண்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிஎஉ 14.743 மில்லியன் கொண்ட ஒதுக்கில் சிஎஉ 11.562 மில்லியன் கொண்ட தொகை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களின் மீள் நிதியிடலுக்கான கொடுகடன் கூறாக ஒதுக்கப்பட்டுள்ளது. நாடளாவிய இச்செயற்றிட்டம் 2004இல் நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினாலும் 1,901 தகைமை பெற்ற துணைச் செயற்றிட்டங்களின் பொருட்டு ரூ.925.28 மில்லியன் கொண்ட தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆண்டுக் காலத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ரூ.327 மில்லியனாக அமைந்ததோடு இலங்கை மத்திய வங்கியினால் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதி யிடலாக வழங்கப்பட்ட தொகை ரூ.270.05 மில்லியனாக அமைந்தது. இதன்படி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வருடத்திற்கான பகிர்ந்தளிப்பு இலக்கின் 96 சதவீதத்தினை அடைவதற்கு முடியுமாக விருந்தது.

## தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டமானது இலங்கை அரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் 1999ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட செயற்றிட்டத்திற்கான கடன் உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப் படுத்தப்பட்டது. உடன்படிக்கையின் கீழ் செயற் றிட்டத்திற்கு சிஎஉ 13.7 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்டது. 2000 மாச்சிலிருந்து 2006 ஒகத்து வரையிலான ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு இதனை அரசின் சார்பில் நடைமுறைப் படுத்துவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு பொறுப்பாகவிருக்கும். மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் பயிற்சி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தேர்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டம் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தகைமை பெற்ற கடன் பாட்டாளர்களுக்கும் துணைக்கடன்களுக்கு மீள்நிதியிடல் வசதிகளை வழங்கும் பொறுப்பினை வங்கி ஏற்றுக் கொண்டது. சிறு அளவு தொழில்முயற்சி அல்லது சுயதொழில் நடவடிக்கைகளை நிறுவுவதற்கு தேவையான தொடக்க நிதியுதவிகளை வழங்கும் நோக்கில் மொத்த ஒதுக்கீட்டில் ஐ.அ.டொலர் 675,000 கொடுகடன் கூறிற்கு ஒதுக்கப்பட்டது. ஒரு கடன்பாட்டாளருக்கான கடன் அளவு ரூ.50,000 இற்கும் ரூ.250,000 இற்கும் இடைப்பட்டதாக இருக்கும்.

## பெருந்தோட்டத்துறை சீராக்கச் செயற்றிட்டம்

1996 நவெம்பரில் ஐந்தாண்டுச் செயற்றிட்ட மொன்றாகத் தொடங்கப்பட்ட பெருந்தோட்டத்துறை சீராக்கச் செயற்றிட்டம் 2001 ஒகத்தில் முற்றுப்பெற்றது. செயற்றிட்ட காலப்பகுதியில் செயற்றிட்டத்தின் மொத்த மீள்நிதியிடல் ஒப்புதல்கள் ரூ.6,475 மில்லியனாக அமைந்தது. செயற்றிட்டத்தின் மொத்த பகிர்ந்தளிப்பு ரூ.4,953 மில்லியனாக இருந்ததுடன் 2002ஆம் ஆண்டில் ரூ.25 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் பணப் பற்றாக்குறை காரணமாக ரூ.1,522 மில்லியன் பெறுமதியான கடன்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் நிதியியல் தேவைகளை ஈடுசெய்வதற்காக கடன்களின் மீளளிப்புக்களையும் வட்டிப் பெறுகைகளையும் பயன்படுத்தி இலங்கை மத்திய வங்கி 2001 யூலையில் பெருந்தோட்டத்துறை சுழலும் நிதியினை நிறுவியது. 1998இல் தனியார் மயப்படுத்தப்பட்ட ஏழு பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் சுழல் நிதியிலிருந்தான நிதியிடலுக்கு தகைமையுடைனவாக இருந்தன. ஆண்டுக்காலத்தில் சுழலும் நிதியத்திட்டத்தின் கீழ் ரூ.226 மில்லியன் மீள்நிதியிடலாக ஒப்புதலளிக்கப் பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன் விளைவாக பெருந்தோட்டத்துறை சீராக்கச் செயற்றிட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட தொகை மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் முறையே ரூ.6,702 மில்லியனாகவும், ரூ.5,176 மில்லியனாகவும் அமைந்தது.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே மொத்தக் கடனின் பெரும்பகுதியான ரூ.226 மில்லியன் கொண்ட தொகை மரப்பயிர் அபிவிருத்திக்காக ஒப்புதலளிக்கப் பட்டது. இத்துறைக்கான நிதிப் பகிர்ந்தளிப்புக்கள் 2002ஆம் ஆண்டில் ரூ.247 மில்லியனாக இருந்தது. 1996-2002 காலப்பகுதியில் இவ்வகையின் கீழான மொத்தப் பகிர்ந்தளிப்பானது ரூ.3,145 மில்லியன் (61 சதவீதம்) ஆகக் காணப்பட்டது. பதனிடல், மேம்படுத்தல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு ஆகிய துணைவகையின் கீழ் ரூ.21 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. செயற்றிட்ட காலப்பகுதியில் இத் துணை வகையின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.1,386 மில்லியனாக (27 சதவீதம்) அமைந்திருந்தது. செயற்றிட்ட

காலப்பகுதியில் பணிகளுக்கான ஊர்திகளை கொள்வனவு செய்தல், உபகரணங்கள் மற்றும் சிறிய நீர்மின் செயற்றிட்டங்கள் போன்ற துணை வகைகளுக்கான மொத்த பகிர்ந்தளிப்புக்கள் ரூ.645 மில்லியனாக (12 சதவீதம்) காணப்பட்டது.

பெருந்தோட்டத்துறை சீராக்கல் செயற்றிட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புக்கெதிராக வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்புக்களின் பேரிலான இலங்கை மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்பு 2002இல் ரூ.171 மில்லியனாக இருந்தது. இத் திட்டத்தின் கீழ் 1996 இலிருந்து 2002 வரையிலான உத்தரவாதத்தின் பேரிலான வங்கியின் மொத்தப் பொறுப்பு ரூ.3,227 மில்லியனாகக் காணப்பட்டது. பெருந்தோட்டத்துறை சீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் உத்தரவாதங்களின் மீது சேகரிக்கப்பட்ட கட்டணம் 2002 காலப்பகுதியில் ரூ.75 மில்லியனாக விளங்கியதோடு 1996 இலிருந்து 2002 வரை சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ.279 மில்லியனாக விளங்கியது.

### நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறை செயற்றிட்டம்

நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்புத்துறைச் செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கிடைத்த ஐ.அ.டொலர் 20 மில்லியன் கொண்ட கடனின் மூலம் பெறப்பட்டது. 2002ஆம் ஆண்டுப்பகுதியில் மீள்நிதியிடல் ஒப்புதல்களும் கடன்நிதிகளின் பகிர்ந்தளிப்புக்களும் 2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

இச் செயற்றிட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 2001இன் 7,471 இலிருந்து 2002இல் 9,948 ஆக அதிகரித்தது. 2002ஆம் ஆண்டிறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த மீள்நிதியிடல் மற்றும் பகிர்ந்தளிப்புக்கள் முறையே ரூ.719.9 மில்லியன் மற்றும் ரூ.744.9 மில்லியனாக காணப்பட்டது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் மொத்த ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடலில் 76 சதவீதத்திற்கும், மொத்த பகிர்ந்தளிப்புக்களில் 74 சதவீதத்திற்கும் வகைகூறியது. துணைக் கடன்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் ஏறத்தாழ 79 சதவீதம் புதிய வீடுகளின் நிருமாணம் மற்றும் ஏற்கனவேயுள்ள வீடுகளின் விரிவாக்கம் ஆகிய நோக்கங்களுக்காக வழங்கப்பட்டன.

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

வடமத்திய மாகாணத்தின் வறுமையை குறைப்பதனை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமாகும். இச் செயற்றிட்டம் 1997இல் தொடங்கியதோடு 2003 இறுதியில் முடிவுறுத்தப் படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டம் அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மகாவலி பிரதேசங்களையும் முழு பொலனறுவை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

இச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறுகளுக்கான இணைப்பு முகவராக மத்திய வங்கி உள்ளது. பண்ணை மற்றும் பண்ணைசாராத தொழில்முயற்சிகளுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினூடாக பாரியளவில் உதவுவதே இச் செயற்றிட்டத்தின் கடன் கூறின் நோக்கமாகும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நசனல் வங்கி மற்றும் செலான் வங்கி போன்ற நான்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களும் இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு கொடுகடனை பகிர்ந்தளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. 2001இல் ஆசிய அபிவிருத்தி வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள்நிதியிடல் வசதிகளை வழங்குவதற்காக ஐ.அ.டொலர் 500,000வை (கிட்டத்தட்ட ரூ.40 மில்லியன்) ஒதுக்கியிருந்தது. தனிக் கடன்பாட்டாளர் ஒருவரின் உச்ச கடன் எல்லை ரூ.250,000 ஆகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் விதந்துரைப்புக்களின் பேரில் தனியார்துறை வழங்குநர்களுக்கு உதவிச் சேவைகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, பொலனறுவை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களிலுள்ள கடன்பாட்டாளர்களுக்கு பணிகள் வழங்குவதற்காக 2002இல் செயற்றிட்ட முகாமைத்துவ அலுவலகத்தினால் கைத்தொழில் சேவைகள் பணியகம் மற்றும் சேவா லங்கா மன்றம் என்ற இரு நிறுவனங்கள் முறையே தெரிவு செய்யப்பட்டன. 2002இல் இச் செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ரூ.10.2 மில்லியன் கொண்ட 132 கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

### வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமானது வடமத்திய மாகாணத்தின் வறுமைக் குறைப்பையும் சமச்சீரான பிரதேச அபிவிருத்தியையும் நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அனுராதபுர மாவட்டத்தின் மகாவலி பகுதிகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை இச் செயற்றிட்டம் உள்ளடக்குகின்றது. இச் செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகள் 1996இல் தொடங்கியதோடு 2002இன் இறுதியில் நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்றிட்டத்தின் எஞ்சியுள்ள சில நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்காக வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் 2003 யூன் 30 வரை செயற்றிட்ட காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறிற்கான இணைப்பு முகவராக மத்திய வங்கி உள்ளது. 2002இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களிற்கு வங்கியினால் ரூ.5 மில்லியன் மீள்நிதியிடலாக வழங்கப்பட்டுள்ளது.

### நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் (கட்டம் II - சுழலும் நிதி கொடுகடன் திட்டம்)

ஐக்கிய அமெரிக்காவில் உள்ள தனிப்பட்ட முதலீட்டாளரான வரையறுக்கப்பட்ட லசார்ட் பிறேறர்ஸ் அன்ட் கம்பனியினால் நிதியிடப்பட்ட நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் (கட்டம் I)

கொடுகடன் நடவடிக்கைகளை தொடர்ந்து 2002 மேயில் நகர சுற்றாடல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II சுழலும் நிதி கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2001 ஒத்தோபரில் செயற்றிட்டத்தின் கட்டம் I வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. சுழலும் நிதி கட்டம் IIஇற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.100 மில்லியனாக காணப்பட்டது.

2002இல் மொத்தக் கொடுகடன் பகிர்ந் தளிப்புக்கள் ரூ.96 மில்லியனாக அமைந்தது.

### உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டம்

நாட்டின் உணவு உற்பத்தியை மேம்படுத்தல் மற்றும் கடன்வழங்கும் நிறுவனங்களை ஊக்குவித்தல் போன்ற குறிக்கோள்களுடன் வேளாண்மையாளர் அமைப்புக்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிராமிய அமைப்புக் களினூடாக கடன்வழங்கும் நோக்குடன் வேளாண்மை அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க 1997இல் உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு இது இத்துறைக்கான செலவு குறைந்த கொடுகடன் வழங்கல் பொறிமுறை யாகும். எவ்வாறாயினும் 2002 மாச்சு இறுதியில், ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ284 மில்லியனில் ரூ.29 மில்லியன் மட்டுமே பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தது. கடன் வழங்கும் போது வங்கிகளுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க பிணையங்களை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வேளாண்மையாளர் சங்கங்கள் எதிர்நோக்கிய இடர்ப் பாடுகளின் காரணமாக கொடுகடனின் குறைவான தொகையே பாவிக்கப் பட்டிருந்தது.

2002இல் அமைச்சரவை, உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டத்தின் அமுலாக்கத்தினை நிறுத்திவிட்டு இச் செயற்றிட்டத்தின் கீழுள்ள நிதியினை, ஹிங்குராக்கொடை, மீகொடை, மரதகஹமுல மற்றும், எம்பிலிப்பிட்டிய போன்ற இடங்களில் பொருளாதார நிலையங்களை நிறுவு வதற்காக பொது திறைசேரியினூடாக கிராமிய பொருளாதார அமைச்சுக்கு மாற்றுவதற்கு தீர்மானித்தது. இதற்கிணங்க உணவு மற்றும் ஊட்டச் சத்து மேம்பாட்டு கொடுகடன் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டு எஞ்சியிருந்த நிதி ரூ.120.6 மில்லியனை இலங்கை மத்திய வங்கி 2002 ஆண்டில் கிராமிய பொருளாதார அமைச்சுக்கு மாற்றியது.

### வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் - ப.ஒ.ய.வங்கி

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினால் நிதியிடப்பட்ட வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டமானது, சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினை ஒத்ததாகவே இருக்கிறது. சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் திருப்திகரமான முன்னேற்றங்களில் திருப்தி கண்ட யப்பானிய அரசாங்கம் வறுமையை ஒழிக்கும் நோக்கில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டத்திற்கு ஒரு நுண்பாக நிதியிடல் தலையீடாக நிதியளிப்பதற்கு தீர்மானித்தது. வருவாய் உழைக்கும் நடவடிக்கைகள் மூலம் கிராமிய வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே இச் செயற்றிட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். இச் செயற்றிட்டம் களுத்துறை, அம்பாந்தோட்டை, பதுளை, நுவரெலியா, மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய ஆறு மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது. செலவுச் சிக்கனமானதும், வலுவானதுமான நுண்பாக கொடுகடன் வழங்கல் முறையொன்றினை நிறுவுதல், பெண்களின் உயர் பங்களிப்பு, கிராமிய மக்களிடேய சேமிப்பு பழக்கத் தினையும், சிக்கனத்தினையும் புகட்டுதல், வறிய மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தி தன்னம்பிக்கையை கட்டி யெழுப்புதல், மற்றும் மற்றவர்கள் மீது தங்கியிருக்கும் மனோபாவத்தை அவர்களிடமிருந்து அகற்றுதல் என்பன செயற்றிட்டத்தின் திறனான தொழிற்பாடு களாகும்.

பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியின் செயற்றிட்டத்திற்கான நிதியிடல் 2006ஆம் ஆண்டின் இறுதியில் நிறுத்தப்பட்டாலும் அரசாங்கத்திற்கும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கிக்குமிடையிலான உடன்படிக்கையின்படி கடன் மீள்பெறுகைகளிலிருந்தும் வட்டி வருமானத் திலிருந்தும் உருவாக்கப்படுகின்ற சுழலும் நிதியினைப் பயன்படுத்தி மேலும் 20 ஆண்டுக் காலப்பகுதிக்கு வங்கியினால் இச் செயற்றிட்டத்தினை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2002ஆம் ஆண்டின் இறுதியில், செயற்றிட்டம் 27,253 நன்மை பெறுநர்களுடன் 4,978 சுயஉதவிக் குழுக்களை அடையாளம் கண்டுள்ளது. குழுச்சேமிப்பு என்ற வடிவில் ரூ19.3 மில்லியன் சேமிக்கப்பட்டதுடன் செயற்றிட்டம் ரூ.83.5 மில்லியனை நுண்பாக கடன்களாக வழங்கியுள்ளது. 2,511 கிராமங்கள் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இதில் பெண்களின் பங்களிப்பு 76 சதவீதமாக இருந்தது. 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மாவட்ட மட்டத்தில் மீள்நிதியிடல் தொடங்கப்பட்டதுடன் கணக்குகள் முழுமையாக கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன. இதன் திரண்ட மீள்பெறுவனவு வீதம் 98 சதவீதமாக இருந்தது.

### மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம்

1999இல் நடைமுறைக்கு வந்த இச் செயற்றிட்டம் 2002ஆம் ஆண்டிலும் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. இது கடன் கூறின் 2ஆவது வருட தொழிற்பாடாக இருந்தபோதிலும் இது அதனது 4ஆவது ஆண்டு தொழிற்பாடாகும். வேளாண்மை அபிவிருத்திக் கான பன்னாட்டு நிதியம் குழுச் செயற்றிட்டத்திற்கு சிஎஉ 8.35 மில்லியனை ஒதுக்கியுள்ளதோடு, இத் திட்டத்தின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங் களினால் வழங்கப்படுகின்ற கடன்களுக்கெதிராக சிஎஉ 2 மில்லியனை மீள்நிதியிடலுக்காக ஏற்பாடு செய்துள்ளது.

இதனை ஒத்த மற்றைய செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இச் செயற்றிட்டத்தின் முக்கிய பண்புகளில் ஒன்றாக தனியார்துறையின் செயற்றிறன் வாய்ந்த பங்கேற்பு அமைகின்றது. இச் செயற்றிட்டத்தின் ஆரம்பத் திட்டப்படி எதிர்காலத்தில் செயற்றிட்ட முகாமைத்து வத்தில் அரசுசாரா அமைப்புக்கள் மற்றும் சிவில் சங்கங்கள் பெருமளவு பங்களிப்பினைக் கொண்டிருக்கு மென எதிர்பார்க்கப்பட்டதுடன் இது அரசினால்

நடைமுறைப்படுத்தப்பட்ட வழமையான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்திலிருந்தும் வேறுபட்டதாகவுமிருந்தது.

இச் செயற்றிட்டத்தின் நோக்கம் செயற்றிட்ட பிரதேசத்திலுள்ள கிராமிய வறிய மக்களினதும், பண்ணைக் குடும்பங்களினதும் வருமானத்தினை நிரந்தரமாகவும், உறுதியாகவும் உயர்த்துவதேயாகும். செயற்றிட்டத்தின் கிராமிய நிதியிடல் கூறின் நிறைவேற்று முகவராக வங்கி தொழிற்பட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில் கந்துரட்ட அபிவிருத்தி வங்கி ரூ.13.5 மில்லியனை பகிர்ந்தளித்து திரட்டப்பட்ட கடன் பகிர்ந்தளிப்புக்களின் தொகையை ரூ.47.1 மில்லியனுக்கு கொண்டுவந்தது. 2002இல் கொடுகடன் திட்டத்தில் சனச அபிவிருத்தி வங்கி இணைந்து கொண்டதுடன் செயற்றிட்ட நன்மை பெறுநர்களுக்கு ரூ.9.2 மில்லியனை பகிர்ந்தளித்தது.

### புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

நெல்லிற்கும், துணை உணவுப் பயிர்களுக்கும் குறுங்காலப் பயிர்ச்செய்கை கடன்களை வழங்குகின்ற விதத்தில் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் நாடு முழுவதிலும் தொழிற்பாட்டிலிருந்து வருகின்றது. திட்டத்தின் செயற்பரப்பு பல நோக்கங்களுக்கு விரிவாக்கப் பட்டுள்ளது. அதாவது முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் மூலம் பயிர்கள் கொள்வனவிற்கான கொடுகடன் எல்லை ஒரு தனிக்கடனுக்கு ரூ.5 மில்லியன் வரையில் அதிகரிக்கப் பட்டுள்ளது. ஆண்டுக் காலத்தில் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் மூலம் விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்கள் வாபஸ் பெறப்பட்டன. இத் திட்டத்தின் தொழிற்பாடுகள் பற்றிய விரிவான விடயங்கள் இவ்வாண்டறிக்கையின் பகுதி 1இன் கிராமிய வங்கித்தொழில் மற்றும் கொடுகடன் பிரிவின் கீழ் உள்ளடக்கப் பட்டுள்ளன.

### சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

1990இல் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டமானது வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் கொண்ட கடன், கனேடியன் பன்னாட்டு அபிவிருத்தி முகவரின் ஐ.அ.டொலர் 6.6 மில்லியன் கொண்ட கொடை மற்றும் அரசின் (மத்திய வங்கி) பங்களிப்பான ஐ.அ.டொலர் 4.1 மில்லியன் கொண்ட உதவு தொகைகளின் மூலம் கூட்டாக நிதியிடப்பட்டுள்ளது. முறைசார்ந்த வங்கித்தொழில் நிறுவனங்களிடமிருந்து கொடுகடன் வசதிகளைப் பெறமுடியாமலிருக்கும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்தை இச் செயற்றிட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. செயற்றிட்டம் நான்கு மாவட்டங்களான காலி, மாத்தறை, புத்தளம் மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் தொழிற்படுவதோடு இப் பகுதிகளிலுள்ள நன்மை பெறுபவர்களின் சமூக, பொருளாதார மற்றும் பொது சேமநல வசதிகளை மேம்படுத்தி வருகின்றது.

கொடுகடன் வழங்கலில், கடன்வழங்கலுடன் சேர்த்து பணிகளை வழங்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நிறுவனரீதியான வலயமைப்பை பொறுத்தவரை கொடுகடன் மற்றும் பணிகளை வழங்கும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கிடையிலான இணைப்பும் வலியுறுத்தப் பட்டுள்ள நிதிப் சேவைகள் குழு அணுகுமுறைகளுடாக வழங்கப்பட்டதுடன், பங்குபற்றும் குழுக்களினூடாக கடன் விண்ணப்பங்களை கூர்ந்து ஆராய்வதில் கண்காணிப்புக்கள், பின்தொடரல்கள், மீள்பெறுகைகள் மற்றும் புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் "இசுறு" என அழைக்கப்படும் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் மிகவும் அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு சிக்கனசெலவில் கொடுகடன் வழங்கும் முறையாகும். மத்திய வங்கி அரசாங்கத்தின் சார்பில் நிறைவேற்று முகவராக செயற்படுவதோடு மாவட்ட செயற்றிட்ட அலுவலகங்களுக்கான அலுவலர்கள் இதற்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளிடமிருந்து பெறப் பட்டுள்ளது.

செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதியிடல் ஆரம்பத்தில் அட்டவணையிடப்பட்டவாறு 1997 திசெம்பரில் முடிவடைந்ததுடன், 1999 இற்குப் பின்னர் கொடுகடன் உடன்படிக்கையில் வசதியளிக்கப் பட்டுள்ளவாறு கடன் பெறுகைகளை மீள்சுற்றோட்டப் படுத்தி செயற்றிட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

2002இன் இறுதியில் செயற்றிட்டமானது நான்கு மாவட்டங்களிலுள்ள 3,731 கிராமங்களை உள்ளடக்கியிருந்தது. 82,267 நன்மை பெறுநர்களைக் கொண்ட 13,868 சுயஉதவிக் குழுக்கள் காணப்பட்டன. மேற்குறிப்பிட்ட எண்ணிக்கை செயற்றிட்ட வடிவமைப்பில் நிர்ணயிக்கப்பட்ட 32,000 கொண்ட இலக்கிலும் பார்க்க மிக உயர்வாக இருந்தது. செயற்றிட்டத்தின் மிகுந்த கவனத்திற்குரியதொரு பண்பாக செயற்றிட்ட நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு மிக உயர்வாக இருந்தமை விளங்கியதுடன் இவர்களின் எண்ணிக்கை 58,700 ஆக அல்லது நன்மை பெறுநர்களின் மொத்த எண்ணிக்கையில் 72 சதவீதத்திற்கு வகைகூறியது. கடன் பெறுநர்களின் வருவாய் உருவாக்க சுயவேலைவாய்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இயலச்செய்யும் பொருட்டு 2002இன் இறுதியில் நுண்பாகக் கடனாக கடன்பாட்டாளர்களுக்கு ரூ.917.6 மில்லியன் கொண்ட தொகை முற்பணமாக வழங்கப்பட்டது. கடன்களின் சராசரி அளவு ரூ.11,858 ஆகக் காணப்பட்டது. செயற்றிட்டம் 97 சதவீதத்திற்கு மேற்பட்ட உயர்ந்த மீளப்பெறல் வீதத்தினைத் தொடர்ச்சியாகப் பேணியது. மேலும் நன்மை பெறுநர்கள் கட்டாய சேமிப்புக்கள் மற்றும் சுயவிருப்பு குழுக்களினூடாக 2002இன் இறுதியில் ரூ.146.7 மில்லியனைச் சேமித்தன.

சுயஉதவிக் குழுக்களின் நிதித் தளத்தினை வலுப்படுத்தி பேச்சுவார்த்தை இயலளவினை மேம்படுத்தவும் இயலாற்றல் விரிவாக்கத்தினை உயர்த்தி வசதிகளை வழங்கும் பொருட்டும் முறைசார்ந்த கூட்டுச் சபைகளாக இசுறு அபிவிருத்தி சங்கங்களை உருவாக்குவதற்காக 1997இல் சுயஉதவிக் குழுக்கள் ஒன்றிணைக்கப்பட்டன. 2002இல் ஒன்றிணைத்து தேசிய

இசுறு சம்மேளனமொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. செயற்றிட்டத்தின் மாவட்ட மட்ட நிருவாகத்தை அந்தந்த பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதோடு மத்திய வங்கி செயற்றிட்டத்தினை அதன் மத்திய செயற்றிட்ட அலுவலகத்தின் மூலம் தேசிய மட்டத்தில் தொடர்ந்து நிருவகித்து கண்காணிக்கும்.

### சபரகமுவ மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் (சுழல் நிதியம்) செயற்றிட்டம்

கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்திலிருந்தான நிதியியல் உதவியுடன் கேகாலை மாவட்டத்தில் 1986-1996 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச் செயற்றிட்டம் அட்டவணையிடப்பட்டவாறு 1996இல் நிறைவுசெய்யப்பட்டது. செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறு மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அப்போதைய கேகாலை மாவட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினூடாக நடைமுறைப் படுத்தப்பட்டது. மத்திய வங்கி மீள்நிதியளிப்பதற்கு பொறுப்பாகவிருந்தது. செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமான அனைத்து பொறுப்புக்களும் திட்ட அமுலாக்கல் அமைச்சிடம் இருந்தது.

செயற்றிட்டம் நிறுத்தப்பட்டதன் பின்னர் கேகாலை மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் தொழில்முயற்சியாளர் மற்றும் இளைஞர்கள் குழுக்களுக்கு வேளாண்மை மற்றும் சுயவேலைவாய்ப்பு தொடர்ந்து மீள்நிதியிடல் வசதிகளை கிடைக்கச் செய்வதற்காக இச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறின் கீழ் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மீளப்பெறல்களிலிருந்து மத்திய வங்கி சுழலும் நிதியினை நிறுவி அதனைப் பேணியது. செயற்றிட்ட முகாமைத்துவ அலகின் கீழ் செயற்படும் வியாபார அபிவிருத்தி அலுவலர்களினால் அடிமட்டத்திலிருப்பவர்களுக்கு கொடுகடன் வழங்கல் கையாளப்பட்டது.

கொடுகடனுக்கு காணப்பட்ட உயர்ந்த கேள்வியை கவனத்திற்கொண்டு சப்ரகமுவா மாகாணம் முழுவதையும் உள்ளடக்கும் நோக்குடன் கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் 2002இல் இரத்தினபுரி மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டது. இச் செயற்றிட்டம் சப்ரகமுவா மாகாண ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட சுழலும் நிதி கொடுகடன் திட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் மீள்நிதியிடலை வழங்கு வதற்காக ஆரம்பத்தில் ரூ.25 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

2002இன் இறுதியில் செயற்றிட்டம் ரூ.245.2 மில்லியன் பெறுமதி கொண்ட 6,187 துணைச் செயற்றிட்டங்களுக்கு நிதியிட்டது. 2002ஆம் ஆண்டில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ரூ.65.7 மில்லியன் பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டன. ஆய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில் செயற்றிட்டத்தின் பொதுவான மீளப்பெறல் வீதம் 94 சதவீதமாகக் காணப்பட்டது.

### சுறதுற நிகழ்ச்சித்திட்டம் - நுண்பாக தொழில்முயற்சி கொடுகடன் திட்டத்தினூடாக சுயவேலைவாய்ப்பினை மேம்படுத்தல்.

சுறதுற நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்று பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன அவற்றின் சொந்த நிதியத்திலிருந்து ஆண்டிற்கு 10 சதவீத வட்டியில் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் கடன் வழங்கலைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அரசாங்கம் தொடர்ந்து 10 சதவீத வட்டி உதவுதொகையினை செலுத்தியது.

1997ஆம் ஆண்டில் தொடங்கிய இச் செயற்றிட்டத்தின் கட்டம் IIஇன் கீழ் தகைமை பெற்ற கடன்பாட்டாளர்கள் வருமான உருவாக்க சுயவேலை வாய்ப்பு செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்காக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் ரூ.1,300 மில்லியன் பெறுமதி கொண்ட கடன்களை வழங்க இலக்கிட்டன. இத் திட்டம் தொழிலற்றவர்களுக்கு குறிப்பாக படித்த இளைஞர்களுக்கு புதிய செயற்றிட்டம் ஒன்றினை தொடங்க அல்லது ஏற்கனவேயுள்ள செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு கடன்களை வழங்கியது.

கட்டம் II இன் வட்டி உதவுதொகை கொடுப்பனவுகளை மத்திய வங்கி தொடர்ந்தும் நிருவகித்ததோடு 1997இல் தொழிற்பாடுகளை நிறைவுசெய்த சுறதுற கட்டம் I இன் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மீளளிப்புக்களை தொடர்ந்தும் கண்காணித்தது.

### தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட (சுழலும் நிதியம்) கொடுகடன் திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டு 2000ஆம் ஆண்டு யூனில் முற்றுப்பெற்ற தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் நடவடிக்கைகளை தொடர்வதற்காக 2000ஆம் ஆண்டு யூலையில் தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்ட (சுழலும் நிதியம்) கொடுகடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுழலும் நிதியத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.194 மில்லியனாகக் காணப்பட்டது. கொடுகடன் திட்டத்தின் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினூடாக கிடைக்கச் செய்யப்பட்ட கொடு கடன் நிதியத்துடன் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் கிராமிய நுண்பாக மற்றும் சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.

2002இல் மொத்தக் கொடுகடன் பகிர்ந்தளிப்பு ரூ.32 மில்லியனாகக் காணப்பட்டது. கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களின் மீதான வங்கி மீள்நிதியிடல் இவ் வாண்டில் ரூ.28 மில்லியனாக விளங்கி பயன்படுத்தப் பட்ட தொகையை மொத்த ஒதுக்கான ரூ.194 மில்லியனுக்கு சமமாக கொண்டுவந்தது.

### சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளின் கீழான கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள் (சிநகை மற்றும் சிநஉதி)

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களும் (சி.ந.கை I, II, III, IV) சிறிய

நடுத்தர தொழில்முயற்சிகள் உதவிச் செயற்றிட்டமும் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. சிறிய நடுத்தர கைத்தொழில் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு தேசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, மற்றும் புத்தாக்கம் மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி என்பவற்றால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 12.6 மில்லியன் கொண்ட தொடர் கொடுகடன் பெறுகை களிலிருந்து மீளநிதியளித்தது. சிறிய நடுத்தர உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான மீள்நிதியிடல் வசதிகள் வெளிநாட்டு வங்கி களிலிருந்தும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும் கூட்டாகப் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 55 மில்லியன் கொண்ட கடன் தொகையை பயன்படுத்தி தேசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்டன.

சிறிய நடுத்தர உதவிச் செயற்றிட்ட கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதப் பாதுகாப்பினை வழங்குவது 2001 சனவரியில் முடிவடைந்தது. 1997 இலிருந்து 2001 வரை வழங்கப் பட்ட கொடுகடன் உத்தரவாத பாதுகாப்புக்களின் எண்ணிக்கை 1,894 ஆகவும் மொத்தக் கடன்தொகை ரூ.2,742 மில்லியனாகவும் காணப்பட்டது. அத் தொகையின் மீதான மத்திய வங்கியின் பொறுப்புத் தொகை ரூ.1,271 மில்லியனாகவும் காணப்பட்டது.

எனினும், கொடுகடன் உத்தரவாத பாதுகாப்புக்களைக் கொண்ட கடன்கள் மீதான கட்டண சேகரிப்பு பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் தொடரப்பட்டது. இரண்டு திட்டங்களின் கீழும் வழங்கப்பட்ட கடன்களின் செயலாற்றமில்லாத்தன்மை தொடர்பான செயற்றிட்ட பரிசோதனைகளும், கண்காணிப்பு வேலைகளும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் செயற்படாக் கடன்கள் மீது பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரல்களின் தீர்ப்பனவினையும் 2002இலும் தொடர்ந்து மேற்கொண்டது.

## கொடுகடன் உத்தரவாத நிதியத்தின் முதலீடு

இவ்வாண்டில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தால் திறைசேரி உண்டியல்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் மொத்தப் பெறுமதி ரூ.3,173 மில்லியனாக விளங்கியது. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூ.385 மில்லியனாகும். இம்முதலீடுகளுக்கான நிதிகள், சிறிய நடுத்தர கைத்தொழில்கள், பேருந்து கொள்வனவுக் கடன் திட்டம், சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் உதவித்திட்டம், ஆகிய கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் சேகரிக்கப்பட்ட கட்டணங்களிலிருந்தும் மத்திய வங்கியினால் முற்பணமாக வழங்கப்பட்ட நிதியிலிருந்தும் பெறப்பட்டது.

## பிரதேச அலுவலகங்கள்

மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங் களின் நடவடிக்கைகளை கண்காணித்தலை பிரதேச அபிவிருத்தி திணைக்களம் தொடர்ந்தது. திணைக்களம் பிரதேச அலுவலகங்களின் முக்கிய தொழிற்பாட்டு விடயங்களை அதாவது பல்வேறுபட்ட நுண்பாக நிதிச் செயற்றிட்டங்களின் அமுலாக்கம், மற்றும் பிரதேசத்திலுள்ள ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், தரவு சேகரிப்புக்கள், பயிற்சியளித்தல், காசோலைத் தீர்ப்பனவு, நாணயத் தொழிற்பாடுகள் மற்றும் பொது நிருவாகம் என்பவற்றை கண்காணித்தது. மேற்கூறப்பட்ட தொழிற்பாடுகளை பிரதேச அலுவலகங்கள் தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் அது அவற்றுடன் தொடர்பான பிராந்தியங்களின் சமூக பொருளாதார அபிவிருத்திகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் பெருமளவு வலியுறுத்தல்களை மேற்கொண்டது. இக் குறிக்கோள்களுடன் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறை மற்றும் ஏனைய கொடுகடன் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதில் பிரதேச அலுவலகங்கள் ஈடுபட்டிருந்தது. வடமத்திய மாகாண பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பவற்றின் நடைமுறைப் படுத்தலில் அனுராதபுர பிரதேச அலுவலகம் ஈடுபட்டிருந்தவேளையில் மாத்தளைப் பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டத்தின் அமுலாக்கத்திற்கு மாத்தளை பிரதேச அலுவலகம் பொறுப்பாகவிருந்தது.

### பிரதேச அலுவலகம்- அநுராதபுரம்

அநுராதபுர பிரதேச அலுவலகம் அதன் முக்கிய நடவடிக்கைகளான அபிவிருத்தி கடன்வழங்கல் மற்றும் நுண்பாக தொழில்முயற்சி அபிவிருத்தி, முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறைகளை ஊக்குவித்தல், வடமத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம், மற்றும் வடமத்திய மாகாண பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் சார்பில் தொடர்ந்தும் மேற்கொண்டது. பிரதேச அலுவலகம் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான ஆய்வரங்குகளை ஒழுங்குசெய்தல், விலைத் தகவல் களையும் தரவுகளையும் சேகரித்தல், நாணயத் தொழிற் பாடுகள் மற்றும் மத்திய வங்கியின் வெளியீடுகளின் விற்பனை என்பனவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டது.

பிரதேச அலுவலகம், அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் பலவகையான பயிர்களின் மீது 3,945 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் மூலம் ரூ.160 மில்லியன் பெறுமதி கொண்ட உடன்படிக்கைகளில் கையெழுத்திட இரு பகுதி யினருக்கும் வசதியளித்தது. அறுவடைக்குப் பின்னான நுட்பங்கள் மற்றும் விதை நெல்லினை சுயமாக உற்பத்தி செய்தல் என்பன பற்றி அறிவூட்டுவதற்காக 146 பங்கேற்பாளர்களுக்கு மூன்று கல்வியூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆய்வுக்குரிய ஆண்டில் பிரதேச காசோலைத் தீர்ப்பனவினூடாக ரூ.7,422.4 மில்லியன் பெறுமதியான 229,591 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. 2002 யூலை 1ஆம் நாள் முதல் பிரதேச அலுவலகத்தின் நாணயத் தொழிற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன.

### பிரதேச அலுவலகம்- மாத்தளை

மாத்தளை பிரதேச அலுவலகம், பிரதேச மட்டத்தில் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் பலவகையான பொறுப்புக்களில் தொடர்ந்து ஈடுபட்டது.

இச் செயற்பாடுகளில் அபிவிருத்தி கடன் நடவடிக்கைகள், மற்றைய பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபடல், உள்ளார்ந்த நன்மை பெறுநர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்விக் கருந்தரங்குகளை நடாத்துதல், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையை மேம்படுத்துதல் என்பன உள்ளடங்கும். மேலும், கந்துரட்ட விலைச்சுட்டெண்ணை தயாரிப்பதற்கும் தரவுகளை சேகரிப்பதற்கும் புள்ளிவிபர திணைக்களத்திற்கு உதவியது. காசோலைத் தீர்ப்பனவுகளிலும் மத்திய வங்கியின் வெளியீடுகளை விற்பனை செய்வதிலும் தொடர்ந்து ஈடுபட்டது.

பிரதேச அலுவலகம் நெல், பெரிய வெங்காயம், சோயா, மரக்கறி வகைகள், பழங்கள் மற்றும் தானிய வகைகள் என்பன தொடர்பாக வேளாண்மையாளர்களுக்கும், கொள்வனவாளர்களுக்குமிடையே 1,822 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை ஒழுங்கு செய்தது. பிரதேச அலுவலகம் மாத்தளை மாவட்டத்தில், மாத்தளை பிரதேச பொருளாதார முன்னேற்றச் செயற்றிட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டம் என்பவற்றின் நடைமுறைப் படுத்துவதிலும் ஈடுபட்டது. பிரதேச அலுவலகம் ரூ.37,750 மில்லியன் பெறுமதியான 829,790 காசோலைகளையும் கண்டி பிராந்திய தீர்வையகம் ரூ.2,296 மில்லியன் பெறுமதியான 101,734 காசோலைகளையும் தீர்ப்பனவு செய்தன.

### பிரதேச அலுவலகம் - மாத்தறை

மாத்தறை பிரதேச அலுவலகமானது பிரதேச அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் புள்ளிவிபரங்கள், வங்கித்தொழில் அபிவிருத்தி ஆகிய திணைக்களங்களை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் ஆற்றியதுடன் பிரதேசத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றை பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் தொடர்ந்தும் மேற்கொண்டன.

அபிவிருத்தி வங்கித்தொழில் மீள்நிதியிடல் திட்டங்களின் இணைப்பு நடவடிக்கைகள், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தினை அமுல்படுத்துவதற்கு உதவிபுரிதல், மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதியிடல் செயற்றிட்டத்தை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அறிமுகப்படுத்தல், முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையினை அமுல்படுத்தல், கிராமிய தெரிவுத் திட்டங்கள், தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம், சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்ட கொடுகடன் திட்டம், நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் தென்மாகாண பிரதேச பொருளாதார முன்னேற்ற செயற்றிட்டம் என்பனவற்றை அமுல்படுத்தலில் உதவியளித்தல் என்பவற்றை உள்ளடக்கும். றுகுணு அபிவிருத்தி வங்கியின் கொள்கை ஆக்கலுக்கும் பிராந்தியத்தில் வங்கி உரிய முறையிலும் ஒழுங்காகவும் தொழிற்படுவதற்கும் உதவியளிப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

மாத்தறை பிரதேச அலுவலகம் 2945 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வேலைகள் சம்பந்தமாக ஒருங்கிணைப்பு வேலைகளில் ஈடுபடக்கூடியதாகவிருந்தது.

பிரதேசத்திலுள்ள ஏழு வர்த்தக வங்கிகளுக்கான தீர்ப்பனவு வசதிகளை இவ்வலுவலகத்தில் அமைந்துள்ள பிரதேச தீர்வகம் வழங்கியது. ஆய்வுக்குரிய ஆண்டில் ரூ.5,183.7 மில்லியன் பெறுமதியான 197,904 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

மத்திய வங்கியின் மறுசீரமைப்பு திட்டத்தின்படி எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க 2002 யூன் 1 முதல் பிரதேச மட்டத்திலான நாணயத் தொழிற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன.

## பிரதேச அபிவிருத்தி வங்கிகள்

2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வேளாண்மை, கைத்தொழில், வர்த்தகம், வாணிபம், மீன்பிடித்துறை மற்றும் அவர்களது அந்தந்த பிரதேசங்களின் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளோடு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வறியவர்களுக்கு நிதிவசதியளித்தல் போன்றவற்றிற்கு ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளும் தொடர்ந்து நிதிவசதியளித்தன.

2001 மற்றும் 2002 ஆண்டுக்காலப்பகுதியிலான பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் மொத்த இலாபம் 2001இன் ரூ.124 மில்லியனிலிருந்து 2002இல் ரூ.343 மில்லியனுக்கு அதிகரித்தமை அவற்றின் திருப்திகரமான நிதியியல் செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்றது. கடன் வழங்கும் நடவடிக்கைகளின் அதிகரிப்பு மற்றும் வரவேண்டிய கடன்களை மீளப்பெற எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கைகளும் இதன் இலாப அதிகரிப்புக்கு உதவின.

அட்டவணை II-21

பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றம்

(தொகை ரூ.மில்லியன்களில்)

| | 2001 | 2002 |
|---|---|---|
| ஆண்டிறுதியில் | | |
| மொத்த வைப்புக்கள் | 4,746 | 6,344 |
| கடன்களும்முற்பணங்களும் | 6,057 | 7,222 |
| ஆண்டுக்காலத்தில் | | |
| பகிர்ந்தளிக்கப்பட்ட | | |
| கடன்களும் முற்பணங்களும் | 4,695 | 6,345 |
| இலாபம் (நட்டம்) | 124 | 343 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் கிளை வலையமைப்பு

ருகுண அபிவிருத்தி வங்கியின் வலஸ்முல்லைக் கிளை மற்றும் சபரகமுவ அபிவிருத்தி வங்கியின் கஹவத்தை கிளை என்பன 2002இல் திறக்கப்பட்ட தனைத் தொடர்ந்து ஆறு பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 191 இலிருந்து 193 ஆக அதிகரித்தது. சேமிப்புக்களை திரட்டிக்கொள்ளல் மற்றும் அடகுக்கடன் முற்பணங்களை பகிர்ந்தளித்தல் என்பவற்றை விரிவாக்கும் நோக்கில் ஆண்டுக்காலத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் ஐந்து சேமிப்பு மற்றும் அடகுபிடிக்கும் நிலையங்களை திறந்தன. றுகுண அபிவிருத்தி வங்கி மொரவக மற்றும் அம்பாந் தோட்டையில் இரண்டு சேமிப்பு மற்றும் அடகுச்சேவை நிலையங்களை திறந்தவேளையில், வயம்ப அபிவிருத்தி வங்கி குருநாகலில் ஒரு சேமிப்பு மற்றும் அடகு பிடிக்கும்

நிலையத்தை திறந்தது. ரஜரட்டை அபிவிருத்தி வங்கியும் அனுராதபுரத்திலும், கதுறுவெலையிலும் இரண்டு சேமிப்பு மற்றும் அடகுச்சேவை நிலையங்களை திறந்தது.

## வைப்புக்களை திரட்டல்

கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் கிராமிய சேமிப்புக்களை திரட்டிக்கொள்வதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்தன. குறிப்பிட்ட பிரதேசங்களில், வங்கியற்ற மற்றும் வங்கித்துறை போது மானதாக இல்லாத இடங்களுக்கு பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நடமாடும் வங்கித்தொழில் அலகின் ஊடாக வங்கித்தொழில் வசதியளித்தன. பிரதேச அபிவிருத்தி வங்கிகளினால் திரட்டப்பட்ட மொத்த சேமிப்புக்களின் பெறுமதி 2002இன் இறுதியில் ரூ.6,344 ஆக அமைந்த தோடு கணக்குகளின் எண்ணிக்கை 1.7 மில்லியனாக அமைந்து 2001இன் இறுதியிலிருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் வைப்புக்களின் அளவு 34 சதவீத அதிகரிப்பையும் கணக்குகளின் எண்ணிக்கை 14 சதவீத அதிகரிப்பினையும் காட்டின. இவ்வகையான சேமிப்புக்களின் பகுதியையும் உள்ளடக்கி மொத்த சேமிப்புக்களின் பெறுமதி காணப்பட்டது. மொத்த சேமிப்பு வைப்புக்களின் பெறுமதி 1.6 மில்லியன் கணக்குகள் தொடர்பில் ரூ.4,102 மில்லியனாகக் காணப் பட்டது. சேமிப்புக் கணக்கு ஒன்றிலான சராசரி தொகை 2001இன் ரூ.2,430 இலிருந்து 2002இல் ரூ.2,593 இற்கு அதிகரித்தது.

## கொடுகடன் வழங்கல்

கொடை முகவர்களினால் நிதியிடப்பட்ட கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் அதன் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் நிதியியல் வசதிகளை வழங்கியது. இவற்றில் அரச ஊழியர்களுக்கும் மற்றும் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுபவர்களுக்கும் வடிவமைக்கப்பட்ட விசேட கொடுகடன் திட்டங்கள், சிறியளவு தொழில் முயற்சியாளர்களுக்காக ருகுண அபிவிருத்தி வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட "திவிமக" கடன் திட்டம் மற்றும் கந்துரட்ட அபிவிருத்தி வங்கியினால் பரீட்சார்த்த ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்ட விதைகள் உற்பத்தி மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு கடன் என்பனவும் உள்ளடங்குகின்றது.

வெளிநின்ற நிலுவைகளும், முற்பணங்களும் 2001 இன் இறுதியின் ரூ.6,057 மில்லியனுக்கு எதிராக 2002இன் இறுதியில் ரூ.7,222 மில்லியனாக அமைந்திருந்தது. 2002இல் பிரதேச அபிவிருத்தி வங்கிகளினால் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் வழங்கப்பட்ட கடன்களின் விபரம் அட்டவணை II.22 இல் தரப்பட்டுள்ளது.

2002 காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளினால் பல்வேறு கடன் திட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தொகை ரூ.6,345 மில்லியனை பதிவுசெய்தவேளையில் இது முன்னைய ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ.4,695 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 35 சதவீத அதிகரிப்பாகும். 875,000 இற்கும் மேற்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு ஒரு கடனின் சராசரி அளவு ரூ.7,225 ஆகக் காணப்பட்டது. இது குறிப்பிட்ட பிர தேசங்களிலுள்ள தேவையுள்ள பாரிய எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு சிறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளமையானது பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் குறிக்கோளுடன் இணைந்து போவதை எடுத்துக் காட்டுகின்றது. 2001ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கு வழங்கப்பட்ட ரூ.357 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2002இல் ரூ.497 மில்லியன் தொகை வழங்கப்பட்டது. ஆண்டுக் காலப்பகுதியில் வேளாண்மை துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் 2001/2002 பயிர்ச்செய்கைக் காலத்தில் நெல் பயிரிடல் மற்றும் ஏனைய பருவகால பயிர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.164 மில்லியனையும் உள்ளடக்கு கின்றது. இக் கடன்கள் 12 சதவீத உதவுதொகையளிக்கப் பட்ட வட்டி வீதத்தில் அனைத்தையுமுள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. தங்க ஆபரணங்களின் அடகுபிடித்தலின் கீழ் 699,000 கடன்பாட்டாளர்களுக்கு ரூ.2678 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.1.513 மில்லியன் வேளாண்மை மற்றும் சிறுகைத்தொழில் தேவை களுக்காக வழங்கப்பட்டது.

அட்டவணை II.22

**கடன்கள் மற்றும் முற்பணங்களின் பகிர்ந்தளிப்புக்கள்**

(ரூ.மில்லியன்களில்)

| வகை | 2001 கணக்குகளின எண்ணிக்கை | 2001 தொகை | 2002 கணக்குகளின் எண்ணிக்கை | 2002 தொகை |
|---|---|---|---|---|
| விவசாயம் | 15,989 | 357 | 16,741 | 497 |
| கால்நடை வளர்ப்பு | 1,228 | 46 | 1,747 | 64 |
| மீன்பிடி | 529 | 36 | 890 | 47 |
| சிறு கைத்தொழில்கள் | 4,945 | 237 | 7,365 | 340 |
| வர்த்தக/ வாணிபம் | 5,421 | 387 | 7,339 | 499 |
| எனையவை | 71,531 | 1,440 | 144,301 | 2,159 |
| அலுவலர் | 681 | 58 | 696 | 61 |
| அடகுச்சேவை | 610,061 | 2,134 | 699,210 | 2,678 |
| மொத்தம் | 711,185 | 4,695 | 878,289 | 6,354 |

மூலம். இலங்கை மத்திய வங்கி

## ஏனைய தொழிற்பாடுகள்

அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான ஊக்குவித்தல்களை வழங்குதல் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்திப் பங்கினை நிறைவேற்றும் நோக்கில் அதன் வாடிக்கையாளர்களுக்கு பர ந்தளவிலான துணைச் சேவைகளை வழங்குதல் போன்ற வற்றிற்கு பிரதேச அபிவிருத்தி வங்கிகள் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தன. சமுர்த்தி பெறுநர்கள் உள்ளிட்ட அதன் வாடிக்கையாளர்களுக்கு பயனளிக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆலோசனை உதவிகளை வழங்கின. வங்கித்தொழில் வசதிகள் குறித்தும் வழங்கப்படுகின்ற கொடுகடன் சேவைகள் தொடர்பாக மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பிர தேச அபிவிருத்தி வங்கிகள் தொடர்ந்தும் கிராம மட்டத்திலான ஜனசமுக கூட்டங்களை நடாத்தியது. சப்ரகமுவ அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட நீர் மின்வலு பொறிச் செயற்றிட்டம் மற்றும் ருகுண

## அட்டவணை II-23
## 2002 இல் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் தொழிற்படுத்தப்பட்ட கொடுகடன் திட்டங்கள்

| | செயற்றிட்டத்தின் பெயர் | நிதிமிடல் முகவர் | பணித் திட்டங்கள் | ஆரம்ப ஒதுக்கு | கடன்படுநர் களுக்கான வட்டிவீதம் | 2002இல் கொடு கடன் பகிர்ந்தளிப்பு (ரூ.மில்.) | 31.12.2002 வரையான கடன்பகிர்ந்தளிப்புக்கள் ரூ.மில். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | தேயிலை அபிவிருத்தி செயற்றிட்டம் (1999 - 2005) | ஆ.அ.வ | சிறு தேயிலை உடமையாளர்களின் வருமானத்தினை உறுதியான அடிப்படையில் உயர்த்துதல் செயற்றிட்டப் பிரதேசத்தின் இயற்கைச் சூழலை மேம்படுத்தல். | ஐ.அ.டொ 17 மில். | ச.நி.வை.வீதம் +2 (மீள்நடுகைக்கு) ச.நி.வை.வீதம் +6 (ஏனையநோக்கம்) | 581 | 1.626 |
| 2. | இரண்டாவது நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் (1998-2004) | ஆ.அ.வ | நிரந்தரப்பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயப் படுத்தலையும் அதிகரித்தல் நாற்று மேடையை அபிவிருத்தி செய்தல் அறுவடைக்குப் பின்னைய கையாளல் பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் | சி.எ.உ 11.562 மில். | சராசரி நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | 310.4 | 792.6 |
| 3. | தேர்ச்சி அபிவிருத்திச் செயற்றிட்டம் (2000ஆம் ஆண்டில் தொடங்கியது) | ஆ.அ.வ | உயர்ந்த தகைமைபெற்ற தொழிற்படையை உருவாக்குவதற்காகவும், தேர்ச்சிப் பொருத்தப்பாடின்மை, கிராமிய மற்றும் நகர் இளைஞர்களிடையேயான வேலைவாய்ப்பின்மையினையும் கருத்திற்கொண்டு தரத்தினையும் தொடர்பான தேர்ச்சிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் மேம்படுத்துவது. | சி.எ.உ. 0.657மில். | சராசரி நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்+2 | - | - |
| 4. | வடமத்திய மாகாணத்தின் பங்கேற்பு கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (1996 - 2002)<br>வட மத்திய மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் (1997 - 2003) | ஆ.அ.வ, வே.ப.நி<br>ச.ச.அ.க, உ.நி.தி | குறைந்த வருமானமுடைய மக்களின் வறுமை ஒழிப்பு, உணவுப்பாதுகாப்பு ஊட்டச்சத்தை மேம்படுத்தல் மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல் | இல.ரூ.40மில்<br>இல.ரூ.20மில் | ச.நி.வை.வீதம் அல்லது10% இதில் எது அதனுடன்+ குறைந்ததோ அதில் 6 சதவீதப்புள்ளி | 10..2 | 10.2 |
| 5. | நகர சூழல் உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் கட்டம் II (சுழலும் நிதி) | ஐ.அ.ப.அ முகவர் | நகர மற்றும் நகரம்சார் பகுதிகளில் வாழும் மக்களின் சுற்றாடல் வசதிகள், சுகாதாரம், நலம் என்பனவற்றை மேம்படுத்தல் | இல.ரூ.100மில் | 16% | 96 | 96 |
| 6. | உணவு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டுக் கொடுகடன் திட்டம் (1997இல் தொடக்கப்பட்டது) | யப்பானிய அரசு | நாட்டில் உணவு உற்பத்தியையும், உணவு செய்முறைப்படுத்தல் தொழில் நுட்பத்தையும் மேம்படுத்தல். | இல.ரூபா 284 மில். | 10% | வி.கி | 29 |
| 7. | வறுமை ஒழிப்பு, நுண்பாக நிதிச் செயற்றிட்டம் (தொடங்கப்பட்ட ஆண்டு 2000) | ப.ஓ.அ. யப்பானிய வங்கி | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாக கடன்வழங்கல் முறையினை நிறுவுவதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப்பழக்கத்தை மேம்படுத்தலும். | யப்பானிய யென் 1,368 மில். | சந்தை வீதங்கள் | 83.5 | 84.7 |
| 8. | மாத்தளை பிரதேச பொருளாதார முற்போக்கு நிகழ்ச்சித் திட்டம் (2000 - 2006) | வே.அ.ப.நி | கிராமப் புறங்களிலுள்ள சிறிய தொழில் முயற்சியாளர்களினதும் செயற்றிட்டப் பிரதேசங்களிலுள்ள வேளாண்மைக் குடும்பங்களினதும் வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தி வலுவாக்கல் | சிஎஉ 2 மில். | 14 | 22.7 | 56.3 |
| 9. | புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் | அ.வ.உ.தொ.ப.கொ.நி | குறுங்கால உணவுப்பயிர்களைப் பயிரிடும் கிராமிய வேளாண்மையாளர்களை உயர்த்துதல் | - | 12% | வி.கி | 638 |
| 10. | சிறிய வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் (1990-2000) | வே.ப.நி<br>க.ப.அ.க<br>இலங்கை அரசு | செலவுச் சிக்கனமானதும் வலுவானதுமான நுண்பாகக் கடன் வழங்கல் முறைமையினைத் தாபிப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் சேமிப்புப் பழக்கத்தை மேம்படுத்தலும். | சி.எ.உ 4.85 மில். | வேளாண்மை-16% ஏனைய நோக்கங்கள்-20% | 174.6 | 927.8 |
| 11. | கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (சுழலும் நிதி) செயற்றிட்டம் (1997 - 2007) | இலங்கை அரசு | வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேம்படுத்துவதன் மூலம் செயற்றிட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். | இலரூபா 100 மில். | 10% | 65.7 | 245.2 |
| 12. | சுறுதுற நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II (1998 இலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | படித்த வேலையற்ற இளைஞர்களிடையே சுயதொழில் வாய்ப்பினை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தினையும் அதிகரித்தல். | இல. ரூபா 1300 மில். | 10% | - | 596 |
| 13. | தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் (சுழலும் நிதி) (2000ஆம் ஆண்டிலிருந்து) | அ.வ.உ.தொ.ப. கொ.நி | தென் மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 8.1 மில். | 12% | 32 | 177 |
| 14. | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம் | வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் ஆ.அ.வ | குறைந்த பிணைகளுடன் உள்ளார்ந்த வள ஆற்றலுடன் கூடிய செயற்றிட்டங்களுடன் கூடிய விதத்தில் சி.ந.தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கலை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 55 மில். | சந்தை வீதங்கள் | மீள்நிதியிடல் தே.அ.வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டது | வி.கி |
| 15. | நகர அபிவிருத்தி குறைந்த வருமான வீடமைப்புச் செயற்றிட்டம் | ஆ.அ.வ | குறைந்த வருமான குடியிருப்பாளர்களுக்கான வழிவகைகளை அதிகரித்தல் | ஐ.அ.டொ 20 மில். | ஆகக்கூடியது 16% | 745 | 1.310% |
| 16. | சிறிய நடுத்தர கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் | ப.அ.அமைப்பு பு.அ.ப.வங்கி | குறைந்த பிணைகளுடன் உள்ளார்ந்த வள ஆற்றலுடன் கூடிய செயற்றிட்டங்களுடன் கூடிய விதத்தில் சி.ந.தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கலை மேம்படுத்தல் | ஐ.அ.டொ 12.6 மில் | சந்தை வீதங்கள் | மீள்நிதியிடல் தே.அ.வங்கியினால் பகிர்ந்தளிக்கப்பட்டது | வி.கி |

ச.நி.வை.வீ - சராசரி நிறையேற்றப்பட்ட வைப்புவீதம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அபிவிருத்தி வங்கியினால் நிதிவசதியளிக்கப்பட்ட பல சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்கள் உள்ளிட்ட பல செயற்றிட்டங்களை அரசின் 100 நாள் வேலைத் திட்டத்துடன் இணைந்து பிரதேச அபிவிருத்தி வங்கிகள் அமுல்படுத்தின.

பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் சந்தைப் படுத்தலையும் ஊக்குவித்தது, பதனிடலையும் தொடர்ந்தது விவசாய உற்பத்திகளின் சந்தைப் பொறிமுறைகளினூடாக விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையில் உறுதித்தன்மையைப் பேணும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியினால் மேற கொள்ளப்படுகின்றமுன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறைமையின் அனுசரணையாளராக பிரதேச அபிவிருத்தி வங்கிகள் கலந்துகொண்டன. 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வேளாண்மையாளர்களுக்கும், வாங்குனர்களுக்குமிடையில் 10,000 இற்கும் மேற்பட்ட முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பணியைச் செய்வதற்கு பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கு இயலுமானதாக இருந்தது. பிரதேச அபிவிருத்தி வங்கி களினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் மொத்தப் பெறுமதி ரூ.487 மில்லியனாகும். மரபுரீதியான வங்கித்தொழில் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நாட்டின் சூழலை பாதுகாக்கும் நோக்கில் அந்தந்த பிரதேசங்களில் பிரதேச அபிவிருத்தி வங்கி மரநடுகை நிகழ்ச்சித்திட்டங்களில் ஈடுபட்டிருந்தது.

பலவிதமான அபிவிருத்தி கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களில் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாக தொழிற் பட்டன.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் நாணயச்சபைக்கு தகவல்களை வழங்கி அவற்றை பகுப்பாய்வு செய்து மதியுரை வழங்குதல் மற்றும் அரசாங்கத்திற்கான பொருளாதார மதியுரையாளராக சபையின் பங்கை நிறைவேற்று வதிலும், பொருளாதார விடயங்கள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தகவலை வெளிப் படுத்துதல் ஆகிய அதன் இரட்டை நியதிக் கடப்பாடுகளை நடைமுறைப் படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

அவ்வாறு செய்வதற்காக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் உள்நாட்டிலிருந்தும் பன்னாட்டு மூலங்களிலிருந்தும் பொருளாதாரத் தரவை சேகரித்து, திரட்டி பகுப்பாய்வு செய்தது. தகவல்களை பரப்புவதில் அதன் உள்ளடக்கம் மற்றும் நேரம் பிந்தாமை ஆகிய நியதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிககைகள் மேற்கொள்ளப்பட்டன. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் தொழினுட்ப தேர்ச்சிகள் வங்கியினுள்ளே உள்ள திணைக்களங்களாலும் வெளி முகவராண்மைகள் மற்றும் அலுவலர்களாலும் பரந்தளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அலுவலர்கள் மூலவள ஆளணியினராகவும் தொழிநுட்ப மதியுரையாளர்களாகவும் பணியாற்றுமாறு அடிக்கடி வேண்டப்பட்டனர். திணைக்களம் வங்கியினுள்ளே ஏனைய திணைக்களங்களுக்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் விசேடமாக நிதியமைச்சுக்கும் பல விடயங்கள் சார்பாக கொள்கை மதியுரைகளை வழங்கியது.

நாணயக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கான பகுப்பாய்வையும் தகவலையும் வழங்கல் இத் திணைக்களத்தின் முக்கிய பணியாக விளங்கியது. நாணயக் கொள்கை மற்றும் நாணயக் கொள்கை மீதான நாணயச்சபைக்கு மதியுரை வழங்கும் குழுவின் கூட்டங்கள் குறைந்தது மாதம் ஒரு முறையாவது நடாத்தப்பட்டது. இக் கூட்டங்களுக்கான கலந்துரை யாடலுக்கான பத்திரங்களும் தகவலும் முக்கியமாக பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் வழங்கப்பட்டவேளையில், இத் திணைக்களத்தின் அலுவலர்கள் குழுவில் தொடர்ந்து பணியாற்றினர். இத்துடன், திணைக்களம், சந்தைத் தொழிற்பாடுகளை கலந்தாலோசிக்கும் குழு, உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவக்குழு மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவக்குழு என்பவற்றிற்கு உள்ளீடுகளை வழங்கி பங்குபற்றியது. வங்கியின் திட்டங்களின் ஒரு பகுதியாக அதன் தொழிற்பாடுகளின் தெளிவான தன்மையை முன்னேற்றுவதற்காக நாணயக்கொள்கை கட்டமைப்பின் விபரங்கள் மற்றும் நாணய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான எறிவுகளும் வங்கியின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டன. வங்கியின் நாணயக் கொள்கைக் குறிக்கோள்கள் மற்றும் எறிவுகளை சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு, அவர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. தொடர்ந்து நடைபெறும் கலந்துரையாடல்கள் சந்தை பற்றிய தெளிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவியதுடன் நாணயக்கொள்கையின் செயற்திறனையும் முன்னேற்ற உதவியது. சுவீடன் ரிஸ்பாங் உதவியுடன், பணவீக்கத்தை இலக்கிடும் கட்டமைப்பிற்கு நடுத்தர காலத்தில் நகர்ந்துசெல்லும் வங்கியின் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வேலை தொடர்ந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பன்னாட்டு நாணயநிதியம், 24 நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையிலான குழு, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான தென்கிழக்காசிய மத்திய வங்கியின் நிலையம், மத்திய வங்கி ஆளுநர்களின் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய நாடுகளின் நிதிக்குழு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பின் நிதிச்செயலாளர்களினதும் குழு என்பவற்றுக் கிடையில் இலங்கையின் உறவுகளை ஒருங்கிணைத்த வேளையில், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய பல்புடை மற்றும் இருபுடை உதவி வழங்குனர்கள் என்பனவற்றுடன் திட்டமிடுவதற்கும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கும் நிதியமைச்சிற்கு உதவியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் துணைநில் ஒழுங்கு மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பிடல் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் இறுதிப்படுத்தல் சார்பான ஒருங்கிணைப்பு வேலைக்கும், வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பன்னாட்டு நாணயநிதியம் மற்றும் உலகவங்கியுடனான ஆரம்ப கலந்துரையாடல்களுக்கும் முதன்மைப் பொறுப்பாக விளங்கியது. 2001இல் ஆரம்பிக்கப்பட்ட துணைநில் ஒழுங்குகள் செத்தெம்பர் 2002இல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டு வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதியின் கீழ் சலுகைரீதியான உதவியைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு அரசுக்கு வழியமைத்தது. (வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி வசதி நிழ்ச்சித்திட்டங்களின் கூடிய விவரமான விளக்கம் பகுதி I இன்சிறப்பு குறிப்பு 3இல்

காணப்படுகிறது). இது போலவே, 2001இல் ஆரம்பமான நாட்டின் நிதியியல் முறையின் பலங்கள், பலவீனங்கள், இடர்நேர்வுகள் மற்றும் பாதிக்கக்கூடிய தன்மையை மதிப்பிடும் பொருட்டு பன்னாட்டு நாணயநிதியம் மற்றும் உலக வங்கியின் ஒத்துழைப்புடனான நிதியியல் உறுதிப்பாட்டு மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2002இல் பூர்த்தி செய்யப்பட்டது. பன்னாட்டு நிறுவனங்களுக்கான பொருளாதார தகவலை வழங்கல், கிரமமான அடிப்படையில் தொடர்ந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் இலங்கையின் தென்னாசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (சார்க்) நிதிப்பிரிவிற்கு தொடர்ந்தும் வசதிகளை வழங்கியது. சார்க் நிதிப்பிரிவு என்பது மத்திய வங்கி ஆளுநர்கள் மற்றும் நிதிச் செயலாளர்கள் என்போரை ஒரு அணியில் ஒன்று சேர்க்கும் அமைப்பு சார்க்கின் கீழான ஒரு அமைப்பாக 2002இல் உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியால் கொழும்பில் சனவரி 2002இல் நடாத்தப்பட்ட சார்க் நிதிப்பிரிவு ஒருங்கிணைப்பாளர்களின் முதற்கூட்டம் பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. சார்க் நிதியின் கீழ் "வெளிநாட்டுத்துறை முகாமைத்துவம்" சம்பந்தமாக இருநாள் கருந்தரங்கொன்றும், சார்க் நிதி ஒருங் கிணைப்பாளர்களின் தொடக்கக் கூட்டம் முடிவடைந்த வுடன் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கி தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் தீவிரமான ஆரம்ப உறுப்பினராக இருந்துவருவதுடன் தென்கிழக்காசிய மத்திய வங்கியின் வேலையிலான தற்போதைய ஈடுபாட்டின் ஒரு பகுதியாக தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பணிப்பாளர்களின் 24ஆவது கூட்டத்தையும் நிதியியல் உறுதிப்பாடு மற்றும் மூலதனப் பாய்ச்சல்கள் சம்பந்தமான செயலமர்வையும் திசெம்பர் 2002இல் நடாத்தியது. பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், இக் கூட்டங்களின் ஏற்பாடுகளுக்கான பிரதான பொறுப்பைக் கொண்டிருந்தது. வங்கி தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி நிபுணர் குழுவில் தொடர்ந்தும் பங்குபற்றி, இக்குழுவிற்கு தகவலை வழங்குவதுடன், இப் பணியும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக் களத்தினாலேயே ஒருங்கிணைக்கப்பட்டது.

திணைக்களத்தினது தொழிற்பாடுகளின் மிக முக்கியமானதொரு பகுதி பொருளாதார விடயங்கள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களுக்குப் பரப்புவதாகும். நாளாந்தத்திலிருந்து வருடாந்தம் வரை காலாந்தரத் தகவல்கள் மத்திய வங்கி வெளியீடுகளினூடாகவும், அதன் இணையத்தளம் ஊடாகவும் ஊடகங்களுக்கான தகவல் மூலமும் வழங்கப்பட்டது. அத் தகவலின் உள்ளடக்கத்தையும், சரியான நேரத்தில் கிடைப் பதனையும், அடையக்கூடிய தன்மையையும் முன்னேற்றுவதற்கு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடை முறையில் இருக்கிறது. மின்னியல்களூடாகத் தகவல் களைப் பெற்றுக்கொள்வதற்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுவதுடன், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தால் பேணப்படும் மத்திய வங்கியின் இணையத் தளம் தற்போது நாளொன்றுக்கு 200 பயன்படுத்துனர்களை பதிவு செய்கிறது. திணைக்களம் நாணய மற்றும் வெளிநாட்டுத் துறைகள் மீதான அடிப்படைத் தகவலையும் குறிகாட்டு வீதமாக சந்தையில் தொழிற்படுவோரால் தற்போது பயன்படுத்தப்படும் இலங்கையில் வங்கிகளுக் கிடையிலான வழங்கல் வீதம், நிறையேற்றப்பட்ட வாராந்த சராசரி முதன்மை கடன் வழங்கும் வீதம், நிறையேற்றப்பட்ட மாதாந்த சராசரி வைப்பு வீதம் போன்ற முக்கிய வட்டி வீதங்களையும் தொடர்ந்து திரட்டி வெளியிடுகிறது. திணைக்களம் மாதாந்த வர்த்தகச் சுட்டெண்களையும் மற்றும் தனியார் துறை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்களையும் திரட்டி வெளியிடுகிறது. விரிவான அரையாண்டு ரீதியிலான கைத்தொழில் உற்பத்தி அளவீடுகள் தொடர்ந்து நடைபெற்றன.

தரவைப் பரப்புகின்ற கால ஒழுங்கொன்று தயாரிக்கப்பட்டு இவ் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் வங்கியின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. முக்கியமான பொருளாதாரத் தகவல்கள் இக்கால ஒழுங்கின்படி வெளியிடப்படுவதுடன் இது பொதுமக்கள், முக்கிய பொருளாதாரத் தரவின் பெறுகையைத் திட்டமிடுவதில் பெறுமதி மிக்க வழிகாட்டியாக பணிபுரியும்.

திணைக்களம் 2001ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கையை பிரசுரிப்பதற்கு, வங்கியின் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் இணைந்து செயலாற்றுவதற்கு பொறுப்பாக இருந்தது. திணைக்களம், அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் முக்கிய பண்புகளினை மாச்சு 2002இலும் "அண்மைய பொருளாதார அபிவிருத்திகள்-2002இன் முக்கிய பண்புகளும் 2003 இற்கான வாய்ப்புக்களும்" நவெம்பரிலும் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன், விசேடமாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் வெளியிட்டது. மாதாந்த செய்தித்திரட்டு திணைக்களத்தால் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. இம் மாதாந்த செய்தித்திரட்டை வாசகர் மனதைக் கவரக்கூடிய விதத்திலும் அதை வாசகர்களுக்கு அளிக்கும் முறையை முன்னேற்றும் விதத்திலும் இதன் வடிவமைப்பை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வடிவமைப்பு 2003இலிருந்து பயன்படுத்தப்படும். திணைக்களம், நிதியமைச்சுக்கு அவ்வப்போது தேவையான அறிக்கைகளை வழங்கியதற்கு மேலதிகமாக 2003இற்கான அரச வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பதில் உதவியளிக்கும் வகையில், நாணயச் சட்டத்தின் 116ஆம் பிரிவின் கீழ் விசேட அறிக்கையை தயாரித்து நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்தது. இத் திணைக்களம், அரசால் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல வெளிநாட்டுக் கடன்களை மதிப்பிடுவதற்கும், நாணய விதிச்சட்டத்தால் வேண்டப்பட்டவாறு, இக் கடன்கள் மீதான அதன் கருத்தினை நாணயச் சபைக்கு வழங்குவதில் அவற்றினால் விளைவிக்கப்படக் கூடிய நாணயத் தாக்கங்களை மதிப்பிடுவதற்கும் பொறுப்பாக இருந்தது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்கள அலுவலர்கள் வங்கியின் தேவைகளை நிறைவேற்று வதற்காகவும் அவர்களது சொந்த ஆர்வம் காரண மாகவும் பல ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். பல ஆய்வுகள் மத்திய வங்கியின் "உயர் அலுவலர் ஆய்வுகளில்" வெளியிடப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத் திணைக்களத்தின் மூத்த உயர் பதவியாளர்கள் பலர் வங்கியினுள்ளும், வங்கிக்கு வெளியேயுமான பல முக்கியமான குழுக்களில் பங்காற்றினர். அவற்றிடையே, பேரண்ட மற்றும் வர்த்தகக் கொள்கை அமைப்பு வேலை தொடர்பான குழு, தீர்வை ஆணைக்குழு, நாணயக் கொள்கைக்குழு சந்தைத் தொழிற்பாட்டுக்குழு, வெளிநாட்டு ஒதுக்குகள் முகாமைக்குழு, பயிற்சிக்குழு, உள்நாட்டுப்படுகடன் முகாமைத்துவக்குழு, திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் விலைகோரல் குழு என்பன காணப்பட்டன. இத் திணைக்களத்தின் அலுவலர்கள் தேசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச்சபை, இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், மற்றும் தொலைக்கல்வி நிலையம் போன்ற நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் பணிபுரிந்தனர். அலுவலர்கள் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் அரசு, தனியார் மற்றும் தென்கிழக்காசிய மத்திய வங்கிகள் நிலையம் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சி நிழ்ச்சித்திட்டங்களிலும் மூலவள ஆட்களாகவும் தொழிற்பட்டனர்.

அலுவலர்களின் தொழினுட்பத் தேர்ச்சிகளை முன்னேற்றும் பொருட்டு, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் அலுவலர்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர்ச்சியாக பயிற்றுவித்தது.

## செயலகம்

நிதித் திணைக்களம் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக செயலகத் திணைக்களத்தினால் இதுவரை மேற்கொள்ளப்பட்டுவந்த நிதியியல் தொழிற்பாடுகள் 2002ஆம் ஆண்டில் நிதித் திணைக்களத்திற்கு மாற்றல் செய்யப்பட்டன. இது தவிர, வங்கிக்கான பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவு, அலுவலர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் பொது நிருவாகத்திற்கான ஒழுங்குகள், உபசாரங்கள், விடுப்பு கொள்கை விடயங்கள் மற்றும் விரிவாக்கப் பணிகள் போன்ற மற்றைய அனைத்து விடயங்களும் செயலகத் திணைக்களத்தினால் தொடர்ந்தும் கையாளப்பட்டன.

வங்கியினை நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 2002இல் 81 ஊழியர்கள் செயலகத் திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்றனர். இதனைத் தொடர்ந்து, அலுவலர் குறைப்பிலிருந்து தோன்றிய உடனடிப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பொருட்டு அஞ்சல் நடவடிக்கையினைக் கையாளல் வெளிமுகவர்களிடம் கையளிக்கப்பட்ட வேளையில் தரவுப் பதிவுத் தொழிற்பாடுகள் மற்றும் கணக்குகளைச் சமப்படுத்தல் போன்ற குறித்துரைக்கப் பட்ட நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு அமைய ஊழியர்கள் சிலர் தொழிலுக்கமர்த்தப்பட்டனர். இந் நடவடிக்கைகள் திணைக்களம் அதன் நடவடிக்கை களைக் குறைந்த செலவில் மேற்கொள்வதனை இயலச் செய்ததுடன் இவ்வாண்டின் வரவு செலவுத் திட்ட செலவினத்தில் கணிசமான தொகை சேமிக்கப்பட்டது.

## பாதுகாப்புப் பணிகள்

வங்கியின் பாதுகாப்பு ஒழுங்குகளை மேலும் வலுப்படுத்துவதற்கு வங்கிப் பணிமனையில் நவீன மின்னியல் பாதுகாப்புக் கருவி பொருத்தப்பட்டது. இக் கருவியினைத் தொழிற்படுத்துவதற்கு பாதுகாப்பு அலுவலர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. பாதுகாப்பு அலுவலர்களுக்கு இலங்கையிலும், வெளிநாட்டிலும் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட ஏனைய விடயங்களிலும் பயிற்சியளிக்கப்பட்டது.

## புள்ளிவிபரங்களும் கள அளவீடுகளும்

புள்ளிவிபரவியற் திணைக்களம் (அ) தேசியக் கணக்குகள், விலைகள், கூலிகள், தொழிற்படை, தொழில்நிலை மற்றும் ஏனைய சமூக பொருளாதார குறிக்காட்டிகள் (ஆ) வீட்டுத்துறையினர் மற்றும் வியாபாரத்துறை மீதான நுண்பாகத்தரவு என்பவற்றை 2002இலும் அதன் அளவீடுகளுடாக, அவற்றைத்திரட்டி, பகுப்பாய்வு செய்து தொடர்ந்தும் வெளியிட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில், தேசிய வருமானத்தை மதிப்பிடும் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே இருக்கும் தரவு முறைகளைப் பூரணப் படுத்தும் வகையில் புதிய புள்ளிவிபரவியல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியத் தன்மையை ஆராய்வதற்கும், தரம், நேரம் பிந்தாமை மற்றும் அதன் ஏனைய தரவுத் தளங்களை உள்ளடக்கவும் திணைக்களம் பல ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தரம் மற்றும் உள்ளடக்கத்தை முன்னேற்றுவதில், நுகரப்பட்ட பொருட்களும், பணிகளும் என்ற ஆரம்ப எடுகோளை அடிப்படையாகக் கொண்டிருந்த தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில், தனியார் நுகர்வுச்செலவு மீது ஏற்கனவேயிருக்கும் தரவுத்தளம், நோக்க அடிப்படையில் தனியார் நுகர்வின் புதிய பகுப்புக்கு இசையும் வகையில் திருத்தப்பட்டது. இவ்வாண்டில், திணைக்களம் மாகாணரீதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான ஒருங்கிணைந்த தொகுதி மதிப்பீடு களையும் தயாரித்ததுடன் காலாண்டு ரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் வெளியீட்டையும் விரிவுபடுத்தியது.

நாடு பூராகவும் சில்லறை மற்றும் மொத்த விற்பனைச் சந்தைகளில் விலை மாற்றங்களை ஒழுங்காகவும், தீவிரமாகவும் கண்காணித்தல், திணைக்களத்தின் தொடர்ச்சியான விலை சேகரிப்பு முறையின் முக்கிய மூலமாக தொடர்ந்து விளங்கியது. விலை முன்னேற்றங்களிலான வழமையான பகுப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, கொள்கைத் தீர்மானங்களை இலகுவாக்கும் பொருட்டு முகாமைத்துவத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன. திணைக்களம் பதிப்பு மற்றும் மின் ஊடகம் மூலம் சில்லறை மற்றும் மொத்த விற்பனைச்சந்தைகள் தொடர்பாக விலை வெளியிடல் நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்துகின்றவேளையில், நாட்டின் சமாதான நடவடிக்கைகள் முன்நோக்கிச் செல்வதால், பாதகமான பாதுகாப்புச் சூழ்நிலைகள் காரணமாக இதுவரை தொழிற்பாடற்றிருந்த வடக்கு கிழக்கு மாகாணங் களிலுள்ள விலை சேகரிப்பு நிலையங்களை மீள நிறுவவும் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டது.

இதேவேளை, திணைக்களத்தின் வழமையான வெளியீடுகளான இலங்கை சமூக பொருளாதாரத்தரவு-

2002, இலங்கைக்கு பொருளாதார சமூக புள்ளிவிபரங்கள் 2002 ஆகியவற்றை நடப்பாண்டிலேயே நேரம் பிந்தாது வெளியிடுவதற்கு மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விரு வெளியீடுகளில் உள்ள தகவல்களை மின்னியல்முறை வடிவில் வெளியிடுவதற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. முதலாவது அறிக்கை பொதுமக்களுக்கு பதிப்பு மற்றும் மின்முறை வடிவு ஆகிய இரண்டிலும் கிடைக்கச்செய்யப்பட்டது. பின்னைய அறிக்கையை மின்முறை வடிவில் வெளியிடுவதற்கு 2002இல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், CD ROM 2003இன் ஆரம்பப்பகுதியில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புள்ளிவிபரவியற் திணைக்களத்தின் அலுவலர்கள் முகாமை அபிவிருத்தி நிலையம் மற்றும் வங்கிக் கற்கைகளுக்கான நிலையத்தால் நடாத்தப்படும் கல்விசார், தொழில்சார் மட்டங்களிலான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றில் பங்குபற்றுவதன் மூலமும் பயிற்சித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதன் மூலமும் அவர்களின் தொழில்சார் திறன்களை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. பயிற்சி விடயங்கள் அரசநிதி, பொருளாதாரம் பன்னாட்டு வர்த்தகம் மற்றும் பன்னாட்டு பேரண்டப் பொருளாதாரம், என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

இத்துடன் அலுவலர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைப்பகுதிகள் பலவற்றில் கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் தேசிய குழுக்களில் பங்குபற்றி தீவிரமாக பங்களிப்புச் செய்தனர். பன்னாட்டு கருத்தரங்குகளில் பங்குபற்றல், தரங்களை அமைத்தல், நேரம் பிந்தாத தன்மை மற்றும் தரமான புள்ளிவிபரவியலை நோக்கிய பேரண்ட புள்ளிவிபரத் துறைகளிலான அண்மைய அபிவிருத்திகள் மீது கவனஞ் செலுத்தியது. இதன் அடிப்படையில், பன்னாட்டு முகவராண்மைகளின் அனுசரணையுடன் 2002 மேயில் சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட தேசிய புள்ளிவிபரவியல் முறைகளின் ஆளுகை மீதான உசாத்துணைக் கருத்தரங்கு, 2002 ஒகத்தில் சுவிற்சலாந்தில் நடாத்தப்பட்ட 'மத்திய வங்கியின் புள்ளிவிபரயல நடவடிக்கைகளுக்கான சவால்கள்' மீதான கருத்தரங்கு ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும்.

திணக்களம், ஏனைய முகவராண்மைகளுக்கான அதன் துணைப் பணிகளை விரிவாக்கும் ஒரு பகுதியாக வியாபார முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவனத்தின் இரண்டு மாணவர்களுக்கு பயிற்சி ஏற்பாடுகளை வழங்கியது. கொழும்பு பல்கலைக் கழகத்தின் கணனி விஞ்ஞான மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கிணங்க திணைக்களம் அதன் இரு பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, 2002இன் இறுதிப் பகுதியில் 8 வார காலப்பகுதிக்கு கைத்தொழில் பயிற்சி ஏற்பாட்டு வசதிகளை வழங்கியது.

## அளவீடுகள்

### காலாண்டுக்கு ஒருமுறை தொடரும் சிறிய வியாபார அளவீடு

2001இன் பின்னரைப்பகுதியில் நடாத்தப்பட்ட சிறு வியாபார அளவீடு, சிறு வியாபாரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட துணை மாதிரிக்கான காலாண்டு அடிப்படையில் அளவீட்டை தொடர்ந்து மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டது. இவ்அளவீட்டை நடாத்தும் முக்கிய நோக்கம் யாதெனில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் நேரடிக்கணக்கீட்டிற்கு சிறு வியாபாரத்துறைக்கான தரவுத்தளத்தை நிறுவுவதாகும். இதன்படி சிறு வியாபாரம் மீது முதலாவது காலாண்டு ரீதியிலான அஞ்சல் மூலமான அளவீடு 2002இன் முதல் அரைப்பகுதியில் நடாத்தப்பட்டது. எனினும், இவ்வஞ்சல் மூலமான அளவீடு, அளவீட்டில் பங்குபற்றுவோரின் பதிலளிக்காமை அதிகமாக இருந்ததால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளானது. இந்நடைமுறையின் குறைவான முன்னேற்றத்தை மதிப்பிட்ட பின்பு, மாற்று உத்திக்கான தேர்வுகளை திறந்து வைத்திருக்கும்வேளையில், இவ் அளவீட்டை நடாத்துவதை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

### முன்மொழியப்பட்டுள்ள 8ஆவது நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீடு - 2003/2004

தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்துக்கும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துக்கு மிடையேயான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து தொடர்ச்சியான அடிப்படையில் இலங்கை சமூக பொருளாதார நிலைமைகள் மீது ஒருங்கிணைந்த தரவுத்தளத்தை அமைப்பது சம்பந்தமாக எதிர்கால வருமானம் மற்றும் செலவு அளவீடுகளை பின்பற்றுவதற்கான இணக்கமொன்று அடையப்பட்டது. இது சம்பந்தமாக, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் வருமானம் மற்றும் செலவு அளவீடுகள் மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்படும் நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதர அளவீடு ஆகிய இரண்டும் திட்டமிடுவோருக்கு தேவைப்படு வதுடன் இவை ஒவ்வொன்றும் சமமான இடை வெளிகளில் தரவுத்தொடர்களுக்கு அனுமதிக்கும் வகையில் நடாத்தப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது.

2003/04 இல் நடாத்தப்படவிருக்கும் எட்டாவது நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீடு சம்பந்தமான திட்டமிடலில் திணைக்களம் பல முக்கிய வழிமுறைகளை இவ்வாண்டு மேற்கொண்டது. இவ்அளவீட்டை நடாத்துவதன் முக்கிய குறிக்கோள்கள் யாதெனில், வீட்டுத்துறையினரது வருமானம், செலவு, நுகர்வு, சேமிப்பு மற்றும் முதலீடுகள் மீதான ஒருங்கிணைந்த தரவை சேகரிப்பதாகும். இத்துடன், குடித்தொகைப் பண்புகள், வீடமைப்பும் சமூக பொருளாதார நிலைமைகளும், தொழிற்படை மற்றும் தொழில்நிலை மீதான ஏனைய முக்கிய தரவின் தொடர்களும் சேகரிக்கப்பட்டன. இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளாக அளவீட்டு வினாக் கொத்து தயாரித்தல், மாதிரியின் அளவைத் தீர்மானித்தல், மாதிரிப்படுத்தல் முறை, முதலாவதுகட்ட மாதிரி கட்டங்களின் தேர்வு, களஅமைப்பை தயார் பண்ணல் மற்றும் ஏனைய முக்கிய ஒழுங்குகளுக்கான திட்டமிடல் என்பன விளங்கின.

## சில்லறை விற்பனை அளவீடு

சில்லறை விற்பனை அளவீட்டை நடாத்துவதன் மூலம் உள்நாட்டு வர்த்தகத்துணைத்துறை சம்பந்தமான தரவுத்தளத்தை நிறுவுவதற்கான சாத்தியத்தன்மையை ஆராய்வதற்கான ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அளவீடு கேள்விக்கொத்தின் வரைவு மற்றும் அளவீட்டை நடாத்தும் ஏனைய முக்கிய ஒழுங்குகள் இவ்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக முன்னேற்றம் 2003இன் முற்பகுதியில் எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடளாவிய தரவு சேகரிப்புமுறை

1978இல் ஆரம்பிக்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்புமுறை 2002இல் அதன் தொழிற்பாட்டில் 24 வருடங்களைப் பூர்த்தி செய்தது. நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள், வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் மற்றும் முறைசாராத் துறையோடு தொடர்புடைய கூலி வீதங்கள் ஆகியவை தொடர்பான தகவல்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டன. இத்திட்டம் நுகர்வுப் பொருட்களின் நிர்வகிக்கப்பட்ட விலைகளில் ஏற்படும் மாற்றங்களை இனங்காணவும், முக்கிய உற்பத்திப்பகுதி வேளாண்மைக்கான உள்ளீடுகளை கண்காணிக்கவும் பயன்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள துணைத்துறைகளாக நெல், தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கை, சிறிய அளவிலான கட்டடவாக்கம் என்பன விளங்கின. தரவுச் சேகரித்தல் 100 நிலையங்களில் புள்ளிவிபர புலனாய்வாளர்களாகத் தொழிற்படும் பாடசாலை ஆசிரியர்களைக் கொண்டுள்ள நாடு பூராவான வலையமைப்பு மூலம் நிறைவேற்றப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தகவல்கள் பதிப்பு மற்றும் மின்னியல் ஊடகம் மூலம் கிரமமாக வெளியிடப்படுகின்றன. தரம், வினைத்திறன் மற்றும் தரவு சேகரிப்பில் நேரம் பிந்தாமையை முன்னேற்றுவதற்காகவும், பிராந்திய நுகர்வு விலைச்சுட்டிகளின் கணிப்பில் இப்பிராந்திரயங்களில் இனங்காணப்பட்ட விலை அபிவிருத்திகளில் காணப்படும் வேறுபாடுகளுக்கான காரணங்களில் அவர்களின் உள்ளீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் தரவு சேகரிப்பாளர்களுக்கு மேலும் பயிற்சியை வழங்குவதற்குமாக 2002இல் கொழும்பு, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் கண்டியில் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

புறக்கோட்டைச்சந்தை மற்றும் ஏனைய நிலையங்களான மரதகமுல்லை அரிசிச்சந்தை, தம்புள்ள பொருளாதார நிலையம் என்பவற்றில் நிலவும் முக்கிய உணவுப்பொருட்களின் மொத்த விற்பனை சில்லறை விலைகளின் நாளாந்த சேகரிப்பும் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகவல்கள் தினமும் புதினப்பத்திரிகைகள் மற்றும் மின்ஊடகங்களூடாக வேளாண்மையாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், நுகர்வோருக்கும் வெளியிடப் படுகின்றன. இத்தகவல்கள் அரச முகவராண்மைகளாலும் தனியார்துறை நிறுவனங்களாலும் ஆராய்ச்சி மற்றும் முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் உள்ளது போன்ற வியாபாரத் தீர்மானம் மேற்கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. திணைக்களத்தின் அலுவலர்களால் முன்பு நடாத்தப்பட்ட புறக்கோட்டைச்சந்தை மற்றும் கொழும்பு மாவட்டத்தினுள் ஏனைய நிலையங்களிலிருந்தான விலைத் தகவல் சேகரிப்பு, விருப்பத்திற்குரிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அலுவலர்கள் ஓய்வு பெற்றுச்சென்றதை தொடர்ந்து தனியார் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டது.

புள்ளிவிபரத் திணைக்களத்தின் விலைகள் மற்றும் கூலிகள் பிரிவு, குறுங்கால அடிப்படையில் திணைக்களத்தில் பணிபுரிந்த, வியாபார முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவனத்தில், கணனியினை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைகளில் உயர் டிப்புளோமா நெறியைத் தொடரும் இரு மாணவர்களின் உதவியுடன் நுண்பாகத் தரவுப்பகுப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை அபிவிருத்தி செய்தது. இந்நிகழ்ச்சித்திட்டம், இதைப் பயன்படுத்துவோருக்கு இலகுவானதாகவும் இப்பிரிவின் முழுத்தகவல் தளத்தையும் கையாளத்தக்க வல்லமையையும் கொண்டுள்ளது. நுண்பாகத்தரவு பகுப்பு நிகழ்ச்சித் திட்டம், நாடளாவிய தரவு சேகரிப்பு முறையின் கீழ் தகவலைத் திருத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் தேவையான மனித மணித்தியாலங்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் இப்பிரிவின் வினைத்திறனை முன்னேற்ற உதவியது.

மேலும், இப்பிரிவு நாடளாவிய தரவு சேகரிப்புமுறையின் கீழ் ஆசிரியர்களான புலனாய்வாளர்களுக்கு முன்னைய கொடுப்பனவு முறையான தபால் திணைக்களத்தின் தபால் கட்டளைகளை வழங்கும் முறையை, இலங்கை வங்கிகளுக்கிடையேயான கொடுப்பனவு முறையுடன் இணைப்பைக் கொண்டிருக்கும் கணணி மயப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினால் பதிலீடு செய்தது. இது மனித மணித்தியாலங்களின் எண்ணிக்கை நியதிகளிலும் தபாற் திணைக்களத்துக்கான தரகுக் கொடுப்பனவுகள் நியதிகளிலும் செலவைக் குறைத்தது. நாடளாவிய தரவு சேகரிப்பு முறையின் கீழான இரு அபிவிருத்திகளாக MSAP மற்றும் SLIPS விருப்பத்துடனான ஓய்வுபெறும் முறையின் பின்பு பிரிவை புதிய சூழலின் கீழ் சுமூகமாக தொழிற்பட உதவியதாக அமைகின்றது.

## விலைச் சுட்டெண்களின் கணிப்பீடு

### நுகர்வோர் விலைச் சுட்டெண்கள்

1998இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிப்பீடு செய்யப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை பூரணப்படுத்தும் சுட்டெண்ணாக இத் திணைக்களத்தால் தொடர்ந்தும் கணிப்பீடு செய்யப்பட்டது. இச்சுட்டெண்ணில் பயன்படுத்தப்பட்ட குடித்தொகை இலக்கு, வருமான அடிப்படையில் நிரைப்படுத்தப்பட்ட மாவட்ட குடித்தொகையில் ஆகக்குறைந்த வருமானத்தைக் கொண்ட 40 சதவீதமானவர்கள் ஆகும். கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண் பொருட்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையிலும் புவியியல் ரீதியிலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை

விட பரந்த உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது. சுட்டெண்ணை கணிப்பதற்கான தகவல்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ள 11 நிலையங்களிலிருந்து பெறப்படுகிறது. இவ் 11 நிலையங்களில் புறக்கோட்டைச்சந்தை, ஹங்வெல்ல, ஹோமாகம, மொறட்டுவ, அவிசாவளை ஆகிய நிலையங்கள் நாடளாவிய தகவல் சேகரிப்பு முறையின் கீழும் ஏனைய நிலையங்களான கொலன்னாவை, நுகேகொட, தெகிவளை, பிலியந்தலை, மகரகம, பாதுக்கை என்பன 1999 சனவரியில் புதிதாகவும் அறிமுகப்படுத்தப்பட்டன. தகவல் சேகரிப்பினை கம்பனி ஒன்றிற்கு பாரப்படுத்தப் பட்டதனையடுத்து கம்பனியிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட புலனாய்வாளர்களும் நியமனம் செய்யப்பட்ட ஆசிரிய புலனாய்வாளர்களும் இந் நிலையங்களிலிருந்து தகவல்களை ஒழுங்காகச் சேகரித்தனர்.

1998இலிருந்து அனுராதபுரம், மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கான மூன்று பிரதேச நுகர்வோர் விலைச்சுட்டெண்களை பரீட்சார்த்த அடிப்படையில் இத் திணைக்களம் கணிப்பிடுகின்றது. சுட்டெண்களுக்கான பொருட்களின் நிறைகள் மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட 1996/97 இன் நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்து பெறப்பட்ட உரிய மாவட்டங்களின் செலவிடும் முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுட்டெண்களை கணிப்பிடுவதற்கான பண்டங்களின் நிறைகள், வருமான அடிப்படையில் நிரைப்படுத்தப்பட்ட மாவட்டத்திலுள்ள குடும்பங்களில் ஆகக்குறைந்த வருமானத்தையுடைய 40 சதவீத குடித்தொகையை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டது. இச்சுட்டெண்கள் பிராந்திய விலை அசைவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு பயனுள்ளதாகும். இவை, வேளாண்மைப் பொருட்களின் முன்நோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் பேரம்பேசுவதற்கும் சந்தைத் தொழிற்பாட்டாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

புள்ளிவிபரவியற் திணைக்களம் உள்நோக்கங் களுக்காக மேல்மாகாணத்தை உள்ளடக்கி நுகர்வோர் விலைச்சுட்டெண் ஒன்றை தொடர்ந்தும் கணிப்பிட்டது. இச்சுட்டெண்ணின் முக்கிய முன்னேற்றமாக உயர்ந்த வருமானமுடைய குடியிருப்பாளர்களையும் பரந்த பூகோள பிரதேசத்தையும் இச்சுட்டெண் உள்ளடக்கியிருப்பதாகும். இச்சுட்டெண், 1996/97 இன் நுகர்வோர் நிதிகள் மற்றும் சமூக பொருளாதார அளவீட்டிலிருந்து எடுக்கப்பட்ட வருமான அடிப்படையில் தரப்படுத்துகையில், மேல்மாகாணத் திலுள்ள மிகக்குறைந்த வருமானம் பெறும் 64 சதவீதம் கொண்ட குடும்பங்களைப் பிரதிபலிக்கின்றது. நிறைகள் பிரதி நிதித்துவப்படுத்தும் குடும்பங்களின் செலவின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டதாகும். தகவல் சேகரிப்பு மையங்கள் கூடிய வருமானமுடைய குடும்பங்களின் மாற்றமடைந்து செல்லும் நுகர்வு மாதிரியை உள்ளடக்கி கொள்வதற்காக நகரிலுள்ள சிறப்பு அங்காடிகளை உள்ளடக்கும் வகையில் கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்காக பயன்படுத்தப்படும் முக்கிய வர்த்தக மையங்களுக்கு அப்பாலும் விரிவாக்கப்பட்டது.

மேற்கூறிய நுகர்வோர் விலைச்சுட்டெண்களுக்கு மேலதிகமாக, புள்ளிவிபரவியற் திணைக்களம் தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தால் 2002 மாச்சில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலான அசைவுகளின் பகுப்பாய்வை ஆரம்பித்தது. இச்சுட்டெண் தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தால் 1995/96இல் நடாத்தப்பட்ட அளவீட்டைப் பயன்படுத்தி வடமாகாணம் நீங்கலாக முழுநாட்டிற்கும் செலவின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்ட குடும்பங்களின் 80 சதவீதத்தை உள்ளடக்குகிறது. இவ்வாண்டில், புள்ளிவிபரவியற் திணைக்களம் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் உட்பட்ட கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அசைவுகளை பகுப்பாய்வு செய்து இவ்விலை அசைவுகளுக்கான பங்களிப்புக் காரணிகளுடன் மாதாந்த பத்திரிகை வெளியீடுகளை வெளியிடத் தொடங்கியது.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண்

திணைக்களம், முதலாந்தரச்சந்தை மட்டத்தில் விலை அசைவுகளைப் பிரதிபலிக்கும் மொத்த விலை விற்பனைச் சுட்டெண்ணை தொடர்ந்தும் கணிப்பீடு செய்தது. இது சில்லறைச் சந்தைகளின் எதிர்கால விலை அசைவுகளை எடுத்துக்காட்டும் பயனுள்ள குறிகாட்டியாக அமைந்துள்ளது.

## தேசியக் கணக்குகள்

திணைக்களம் தேசிய கணக்குகளின் மதிப்பீடு தொடர்பான அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர தரவின் சேகரிப்பு மற்றும் தொடர்பான புள்ளிவிபரங்களின் தொகுப்பு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

2002இல் தரவுகளை பரப்புவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. கடந்த காலத்தில், காலாண்டு ரீதியிலான பத்திரிகை வெளியீடுகள், இலங்கை மத்திய வங்கியினால் பிரசுரிக்கப்படும் வருடாந்த தகவலுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உ தொடர்பாக பொதுமக்களுக்கு வரையறுக்கப்பட்ட தகவலையே வெளியிட்டன. பத்திரிகை வெளியீடுகள் வேளாண்மை, காட்டுத்தொழிலும் மீன்பிடியும், சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், தயாரிப்பு, கட்டடவாக்கப் பணிகள் ஆகிய ஐந்து துறைகளைக் கொண்டிருந்தன. எனினும், அவ்வாறான வெளியீடுகளின் நான்கு ஆண்டுகளின் பின்பு, இக்காலப்பகுதியில் மொ.உ.உ இன் காலாண்டு ரீதியிலான தரவின் உள்ளடக்கம் விரிவடைந்து முன்னேற்றமடைந்ததுடன், இது மொ.உ.உ.இன் காலாண்டு ரீதியிலான அதிகபட்ச ஒருங்கிணைந்த தகவலை நேரம் பிந்தாது வெளியிட வேண்டுமென கருதப்பட்டது. எனவே, 2002இன் முதலாம் காலாண்டு பத்திரிகை வெளியீட்டிலிருந்து, உள்ளடக்கம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் வருடாந்த மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அமைப்பான பதினொரு துறைகளுக்கு விரிவாக்கப்பட்டது. இத்துடன் திணைக்களம் 2002இற்கான வெளியீட்டுக்கான கால அட்டவணையை முன்கூட்டியே வழங்கியதுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் தொகுத்து வெளியிடும் உலகளாவிய தேசிய புள்ளிவிபரவியல் நிறுவனங்கள் பலவற்றில் நடைமுறைப்படுத்தப்படுபவற்றைப் பின்பற்றி

காலாண்டுரீதியிலான தேசிய கணக்கு மதிப்பீடுகளை வெளியிடும் எதிர்காலத் திகதிகளையும் எடுத்துக் காட்டுகிறது. முன்பு, காலாண்டுரீதியிலான மொ.உ.உ தகவல்கள் பத்திரிகை வெளியீடு மூலம் மின் மற்றும் பதிப்பு ஊடகத்திற்கு வழங்கப்பட்டது. 2002இன் முதலாம் காலாண்டிலிருந்து, பொருளாதார நலனுள்ள விடயங்களில் பொதுமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு காலாண்டு அறிக்கை வெளியீட்டுடன் பத்திரிகை மாநாடொன்றும் நடாத்தப்பட்டது.

2002இல், தேசிய கணக்குகள் பிரிவு 40 ஆண்டு காலத்திற்கும் மேலாக நடைமுறையிலிருந்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் வகைப்படுத்தலை திருத்தியது. இது பொருட்கள் பணிகள் மற்றும் நுகரப்பட்ட மூலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. நோக்க அடிப்படையிலான தனியார் நுகர்வு என்ற புதிய வகைப்படுத்தல் பன்னாட்டுரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்க அடிப்படையிலான பகுப்பாகும். இப்புதிய வகைப்படுத்தல் ஆண்டறிக்கையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.

## மாகாண ரீதியிலான தேசிய கணக்குகள்

மாகாணரீதியில் மொ.உ.உ.இற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மதிப்பீடுகளின் தொகுதியைக் கொண்டிராதமையால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பும் நோக்கில், திணைக்களம், 1996 இலிருந்து 2000 வரையான காலப்பகுதிக்கு நடமுறைக் காரணிச்செலவு விலைகளில் மாகாணரீதியிலான மொ.உ.உ மதிப்பீடுகளின் முறையொன்றை அபிவிருத்தி செய்வதிலும், திரட்டுவதிலும், வெளியிடுவதிலும் வெற்றியீட்டியுள்ளது. அவ்வாறான மாகாணரீதியிலான மொ.உ.உ மதிப்பீடுகள், கொள்கை வகுப்போர் முக்கிய பொருளாதர குறிகாட்டிகளான பொருளாதார வளர்ச்சி, தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் தலைக்குரிய வருமானத்தை உற்பத்தி மூலவளங்களின் கூடிய பயன்தரு ஒதுக்குகளிலும் பயன்பாட்டிலும் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கும். அரசின் பொதுவான அபிவிருத்தித் திட்டத்தின் வேலைத்திட்டத்தில் பிரதேச அபிவிருத்தி ஒரு முக்கிய காரணியாக விளங்குவதால் திணைக்களம் "இலங்கையின் பிராந்திய ரீதியிலான பொருளாதார செயற்பாடுகளின் பகுப்பாய்வும் மாகாணரீதியிலான மதிப்பீடும்" என்ற கருத்தரங்கை 2002 மேயில் நடாத்தியது. இம்மாகாண மொ.உ.உ மதிப்பீடுகள் மீதான அறிக்கை ஒன்றையும் திணைக்களம் இவ்வாண்டில் வெளியிட்டது. இவ்வறிக்கை, தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான மாகாணரீதியிலான பங்களிப்பைப் போன்று மாகாணரீதியிலான பொருளாதார நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுப்பாய்வையும் வழங்குகிறது.

நேரம் பிந்தாமையை முன்னேற்றும் முயற்சியொன்றாக 2001ஆம் ஆண்டிற்கான மாகாணரீதியிலான மொ.உ.உ மதிப்பீடுகள் சார்ந்த திரட்டுகையின் கிட்டத்தட்ட 90 சதவீதம் 2002இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இவ் இலக்கு 2003இன் ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப் படுகிறது.

## தொழில்வாய்ப்பு புள்ளி விபரங்கள்

அரச அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச சபைகளிலான தொழில்நிலையில் காணப்படும் போக்குகளை கண்டறியும் நோக்கத்துடன், திணைக்களம் 2002இல் அரசதுறை தொழில்நிலை மீதான அதன் ஆண்டு அளவீட்டை தொடர்ந்து மேற்கொண்டது. மேலும், 2001இல் ஆரம்பிக்கப்பட்ட காலாண்டு ரீதியிலான அரசதுறை தொழில்நிலை மீதான அளவீடு, தேசிய வருமானக்கணக்கில் பொதுநிருவாக மற்றும் பாதுகாப்புத்துறையில் பெறுமதி கூட்டலின் மதிப்பீட்டுக்காகத் தேவைப்பட்ட அரசதுறை தொழில்நிலையிலான போக்குகளை கண்டறியும் நோக்கத்திற்காக 2002இலும் தொடர்ந்தது.

## ஸ்ராநெற் (STANET) இணையத்தளம்

திணைக்களம், முக்கிய தரவு மற்றும் பத்திரிகை வெளியீடுகளை அடையும் வழிமுறைகளையும் திணைக்களத்தின் வேலை பற்றிய பொதுவான தகவல்களையும் மத்திய வங்கியின் உள்ளக வலயமைப்பு மீதான "ஸராநெற்" இணையத்தளம் மூலம் தொடர்ந்து வழங்கியது. ஒருங்கிணைக்கப்பட்ட வலையமைப்பு முறை வங்கியின் பிரிவுகளுக்கிடையேயும் ஏனைய திணைக்களங்களுக்கிடையேயும் மற்றும் மத்திய வங்கியின் இணையத்தளத்திலும் தரவுத் தளத்தினை அடையவும் பகிர்ந்து கொள்வதற்கும் வழிவகுக்கின்றது.

## வெளியீடுகள்

### *இலங்கையில் சிறிய வியாபாரம் மீதான அளவீட்டின் அறிக்கை 2001*

அளவீட்டில் கண்டறியப்பட்டவையை எடுத்துக்காட்டும் மேற்கூறிய அறிக்கை 2002 பெப்புருவரியில் பூர்த்தி செய்யப்பட்டது.

## ஏனைய வெளியீடுகள்

மீளாய்விற்குரிய காலப்பகுதியில், திணைக்களம் அதன் இரு ஆண்டு வெளியீடுகளுடன் தொடர்புபட்ட அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. திணைக்களம் யூனில் இலங்கையின் சமூக பொருளாதாரத் தரவு 2002 தொகுதி XXV ஐயும், திசெம்பரில் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள் - தொகுதி XXIV ஐயும் வெளியிட்டது.

இவ்விரு வெளியீடுகளும் குடித்தொகை, தொழிற்படையும் தொழில்நிலையும், தேசிய வருமானமும் செலவினமும், வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகமும் நிதியும், விலைகளும் கூலியும், பணமும், வங்கித்தொழிலும், மூலதனச்சந்தை, அரசநிதி மற்றும் சமூக பொருளாதாரப் பணிகளை உள்ளடக்கிய சமூக பொருளாதார மாறிலிகள் மீதான ஒருங்கிணைந்த காலத்தொடர்களையும் குறுக்குப்பிரிவு ரீதியிலான தரவுகளையும் கொண்டிருக்கின்றன.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை[1]

மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முன்மதித் தேவைப்பாடுகளுக்கு நிதிக்கம்பனிகள் இசைவாக நடந்துகொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமானது பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தொடர்பாக அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இத் தொழிற்பாடுகள் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு மற்றும் தலப் பரீட்சிப்புக்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. நிதி குத்தகையிடல் நிறுவனங்களின் பதிவு மற்றும் கண்காணிப்பு பணியும் இத் திணைக்களத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் புதிய நிதிக்கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டவேளையில், மற்றொரு கம்பனியின் பெயர் அதன் புதிய முகாமைத்துவத்தினால் மாற்றப்பட்டது. 2002ஆம் ஆண்டின் இறுதியில் நிதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 26ஆகக் காணப்பட்டது. இதே நாளில் பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை 49ஆகக் காணப்பட்டது.

### தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு

பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இந்த செயற்பாட்டின் போது, நிதிக்கம்பனிகளின் நிதியியல் நிலைமைகளைக் கண்டறிந்து கொள்ளும் நோக்குடனும் நிதிக்கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் அவர்கள் இணங்கி ஒழுகுவதனைக் கண்காணிக்கும்பொருட்டு நிதிக்கம்பனிகளினால் காலத்திற்குக்காலம் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நிதிக்கம்பனிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் திரவச்சொத்துக்களின் வாராந்தக்கூற்றுக்கள், வழங்கப்பட்ட பாரிய முற்பணங்களின் மாதாந்தக் கூற்றுக்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்தக்கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் தொடர்பான மாதாந்தக்கூற்றுக்கள், செயற்படா முற்பணங்கள் தொடர்பான காலாண்டு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை மற்றும் இலாபநட்டக் கணக்குகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் ஆகக்குறைந்த மூலதனம் மற்றும் திரவத் தேவைப்பாடுகள், அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடுகள், தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை, மற்றும் பங்கு முதலீடுகளுக்கான வரையறை போன்றனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1. பதிவு செய்துள்ள நிதிக் கம்பனிகளின் 1993 - 2002 ஆண்டுக்கான ஒன்றுதிரட்டிய ஐந்தொகை பின்னிணைப்பு அட்டவணை 114இல் தரப்பட்டுள்ளது.

### தலப் பரீட்சிப்புக்கள்

இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் இரண்டு நிதிக்கம்பனிகளின் அனைத்தையும் உள்ளடக்கிய தலப்பரீட்சிப்புக்களை நடத்தியது. மூலதனப்போதுமை, சொத்துக்களின் தரம், முகாமைத்துவ வினைத்திறன், வருவாய்கள் மற்றும் திரவத்தன்மை என்பனவற்றை பரீட்சிக்கும் பொருட்டு நிதிக்கம்பனிகளினால் பேணப்படும் கணக்கேடுகள் மற்றும் ஏனைய பகுதி களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் திணைக்களத்தின் பரீட்சிப்பாளர்களினால் மதிப்பிடப்பட்டன. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முறைகள் மற்றும் நியதித் தேவைப்பாடுகளுக்கு கம்பனிகள் இணங்கி ஒழுகுவது பற்றியும் பரீட்சிக்கப்பட்டன. அதேவேளையில் 2003ஆம் ஆண்டுக்கான ஆண்டு உரிமங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் மற்றைய 23 கம்பனிகளினதும் உடன் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வுடன் பரீட்சிப்புக்கள் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களை மட்டுமே உள்ளடக்கியிருந்தன.

### நிதிக்குத்தகை வியாபாரங்களைப் பதிவுசெய்தல்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி, நிதிக் குத்தகை வியாபாரத்தினைக் கொண்டுநடாத்துவதற்கு பதிவுச் சான்றிதழ் அவசியமானதாகும். நியமன நாளன்று அதாவது 2001 ஒகத்து 1ஆம் நாளன்று நிதிக் குத்தகை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் எந்த ஒரு நிறுவனமும், நியமனத் திகதியிலிருந்து ஓராண்டினை விஞ்சாத காலப்பகுதிக்கு பதிவு இல்லாமல் அத்தகைய வியாபாரத்தினை தொடர்ந்து நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்டன. 2002 யூலையிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் 8 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், 4 உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 23 பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் 14 பொதுக்கம்பனிகள் என்பனவற்றை உள்ளடக்கிய 49 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் இந் நிறுவனங்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### பணிப்புரையின் வழங்கல்

செத்தெம்பரில், 2002ஆம் ஆண்டின் நிதிக் கம்பனிகளின் (வைப்புக்கள்) 1ஆம் இலக்க பணிப்புரை வழங்கப்பட்டதுடன், 2001ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரை நீக்கப்பட்டது. புதிய பணிப்புரையின் நியதிகளின்படி, நிதிக்கம்பனிகள் ஆகக்குறைந்தது ஒரு மாத காலப்பகுதிக்கு வைப்புக்களை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டன. முன்னர் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான ஆகக்குறைந்த காலம் மூன்று மாதங்களாக இருந்தன.

### முறிவடைந்த நிதிக்கம்பனிகள்

1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி நாணயச்சபைக்கு நிருவாகமும் முகாமைத்துவமும் முன்னர் கையளிக்கப்பட்ட முறிவடைந்த ஒன்பது நிதிக்கம்பனிகளில் ஐந்து கம்பனிகள் 2002 இறுதியில் ஒடுக்கிவிடுவதன் கீழ் இருந்தன. எஞ்சிய நான்கு கம்பனியினதும் நிருவாகமும், முகாமைத்துவமும்

தொடர்ந்தும் நாணயச்சபையிடம் கையளிக்கப் பட்டிருந்தன. அத்தகைய கம்பனியொன்றினை ஒடுக்கிவிடுவதற்கான விண்ணப்பம் நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்பார்த்துள்ளது.

## வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம்

தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நிதியியல் புத்தாக்கல்களிலிருந்து தோன்றுகின்ற அறைகூவல்களை எதிர்கொள்வதற்காக நிதியியல் துறையிலுள்ள அலுவலர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் குறிக்கோளுடன் வங்கித்தொழில் கல்வி ஆய்வுநிலையம் 2002இல் பரந்தளவிலான குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும், செயலமர்வு மற்றும் ஆய்வரங்கு களையும் நடத்தியது. 2002இல் தகவல் தொழில் நுட்பத்திலும் ஆங்கில மொழியிலும், பல நீண்டகால பாடநெறிகள் நடத்தப்பட்டன. அட்டவணை II-24இல் 2002இன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விரிவான துறைகளைக் காட்டுகின்றது.

வங்கித்தொழில் கல்வி ஆய்வுநிலையம் 1,438 பயிற்சி மணித்தியாலங்களை உள்ளடக்கிய 55 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை 1,009 பங்கேற்பாளர்களுக்காக நடத்தியது. ஏறத்தாழ 49 சதவீதமான பங்கேற்பாளர்கள் மத்திய வங்கி அலுவலர்களாகக் காணப்பட்டவேளையில் எஞ்சியோர் வர்த்தக வங்கிகளிலிருந்தும் ஏனைய நிதியியல் துறை நிறுவனங்களிலிருந்தும் கலந்து கொண்டனர். வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் பயிற்சிகளில் அமைச்சுக்களிலிருந்தும் ஒரு சில பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகம் மற்றும் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் என்பனவற்றிலிருந்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையத்திற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்து கொண்டமை புதியதொரு நிகழ்வாக காணப்பட்டது.

2002இல் வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல்துறை நிறுவனங்களின் அதிகரித்த கேள்வியைக் கொண்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களாக "வட்டி வீதங்களையும் செலாவணி வீதங்களையும் நிர்ணயிக்கும் காரணிகள்", "அரசபடுகடன் முகாமைத்துவம்", "வாடகைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும்", "முற்பணங்களுக்கான ஆவணத்தயாரிப்பில் சட்ட அம்சங்கள்", "மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் வட்டி வீதப்போக்குகளும்", "செயற்படாச் சொத்துக்களும் வங்கித்தொழில் முறைத் தோல்விகளும்", "நகை அடமானங்களின் மீது கடன்வழங்கல்" மற்றும் "நிதியியல் கூற்றுக்களின் பகுப்பாய்வு" என்பன காணப்பட்டன. மத்திய வங்கியின் அலுவலர்களிடமிருந்து தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியில் கணிசமான கேள்வி காணப்பட்டதன் காரணமாக வங்கித்தொழில்கல்வி ஆய்வுநிலையம் 24 கணனிப் பயிற்சிப் பாடநெறிகளை நடத்தியதுடன் 89 சதவீதமான பங்குபற்றுநர்கள் மத்திய வங்கியைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இணையம் மற்றும் மின்-அஞ்சல் தொடர்பான 7 அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் புறம்பாக, தகவல் தொழில்நுட்பத்திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் 4 சிறப்பு நிழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப தொடர்பு அலுவலர்களுக்காகத் திணைக்களம் சிறப்பு செயலமர்வினை நடத்தியது. அதற்குப் புறம்பாக, இவ்வாண்டில் 6 தேர்ச்சி அபிவிருத்திப் பாடநெறிகளும் நடத்தப்பட்டதுடன் இதில் 4 ஆங்கில மொழியில் மத்திய வங்கியிலிருந்து பங்கேற்றவர்களுக்காக பிரத்தியேகமாக நடத்தப்பட்டது. வங்கித்தொழில்கல்வி ஆய்வுநிலையம் 8 உயர்மட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை வங்கித்தொழில்கல்வி ஆய்வு நிலையத்தின் பணிமனையில் நடத்துவதற்கு மத்திய வங்கியின் முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்திற்கு தொடர்ந்தும் அடிப்படையான உதவிகளை வழங்கியது.

வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் வங்கித்தொழில் நிதி பொருளாதாரம் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்களில் புதிய சிந்தனைகளைப் பரப்புகின்ற நோக்குடன், தொடர்ந்தும் நான்காவ தாண்டாக, தனது மாதாந்த பொது ஆய்வரங்குகள் மற்றும் ஞாபகார்த்த உரைகளின் தொடரை நடத்தியது. இது பொதுமக்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோர் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் அரங்கொன்றினை வழங்கியது.

அட்டவணை II-25, 2002இல் நடத்தப்பட்ட பதினொரு பொது ஆய்வரங்குகள் மற்றும் ஞாபகார்த்த விரிவுரைகள் தொடர்பான தகவல்களை வழங்குவதுடன் இவ்வாய்வரங்குகளிலும், ஞாபகார்த்த விரிவுரைகளிலும் வங்கித்தொழில், நிதியியல் மற்றும் அரசதுறைகள் பல்கலைக்கழகங்கள், ஊடகங்களின் அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

அட்டவணை II-24
2002இல் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | பயிற்சி நிகழ் திட்ட. எண்ணிக்கை | பயிற்சி பெறுவோர் | | | மொத்தப் பயிற்சி மணித். |
|---|---|---|---|---|---|
| | | இ.ம.வ | ஏனையவை | மொத்தம் | |
| வங்கித்தொழில் தொழிற்பாடுகள் | 6 | 8 | 176 | 184 | 96 |
| வங்கிமேற்பார்வை | 7 | 7 | 152 | 159 | 90 |
| நிதியியல்துறை அபிவிருத்தியும் பொருளாதார முகாமைத்துவமும் | 5 | 15 | 147 | 162 | 54 |
| தகவல் தொழில்நுட்பம் | 24 | 240 | 30 | 270 | 934 |
| முகாமை | 1 | 14 | 5 | 19 | 30 |
| தேர்ச்சி அபிவிருத்தி | 6 | 128 | 7 | 135 | 204 |
| சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 6 | 80 | - | 80 | 30 |
| **மொத்தம்** | **55** | **492** | **517** | **1,009** | **1,438** |

மூலம்: வ.க.ஆ.நிலையம், இலங்கை மத்திய வங்கி.

## பயிற்சி

ஆய்விற்குரிய ஆண்டுப்பகுதியில், வங்கியின் புதிய மையக்குறிக்கோள்களை எய்துவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தேவையான தகுதியுடன் கூடிய விதத்தில் வங்கியில் மனித மூலவளத் தேர்ச்சியை அபிவிருத்தி செய்வதனை வலியுறுத்தும் பொருட்டு, அனைத்துத்

அட்டவணை II.25

## 2002இல் நடத்தப்பட்ட ஞாபகார்த்த விரிவுரைகளும் பொது ஆய்வரங்குகளும்

| நாள் | விடயம் | விரிவுரையாளர் | கலந்துரையாடுவோர் |
|---|---|---|---|
| 11 சனவரி | மத்திய வங்கித்தொழிலில் புதிய சார்புகள் | முனைவர்.ஏ. வாசுதேவன்<br>கௌரவ மதியுரையாளர்<br>இந்திய றிசேர்வ் வங்கி<br>மும்பாய் | |
| 24 பெப் | பன்னாட்டு நிதியியல் கட்டமைப்பின் சீர்திருத்துதல் | திரு. அன்றூ டி. குறொக்கெட்<br>பொது முகாமையாளர்<br>பன்னாட்டுதீர்ப்பனவிற்கானவங்கி<br>பாசல்<br>சுவிற்சர்லாந்து | திரு.நதீம் உல் சுக்<br>மூத்த வதிவிடப் பிரதிநிதி<br>ப.நா.நிதியம் |
| 21 பெப் | அரசில் கொள்கை வகுப்பின் செயல்முறை<br>(சுதந்திர தின ஞாபகார்த்த விரிவுரை) | திரு. கொட்விறே குணதிலக<br>உறுப்பினர், மனித உரிமைகள்<br>ஆணைக்குழு, ஆளுநர்சபை<br>மார்கா நிறுவனம் | |
| 2 மே | 2001-குடிமதிப்பில் தொடக்கத்தில் கண்டறியப்பட்டவையும் அபிவிருத்திக்குத் திட்டமிடுவதில் குடிமதிப்புத்தரவுகளின் பயன்பாடும் | திரு.ஏ.ஜி. டபிள்யூ. நாணயக்காரா<br>பணிப்பாளர் நாயகம்<br>தொகைமதிப்பு<br>புள்ளிவிபரவியல் திணைக்களம் | முனைவர்.கே.ஏ.சித்திசேன<br>குடித்தொகைப் பேராசிரியர்<br>கொழும்பு பல்கலைக்கழகம்<br>முனைவர் ஏ.ரி.பி.எல். அபேகோன்<br>பணிப்பாளர்குடித்தொகைப்பிரிவு<br>சுகாதார, ஊட்டச்சத்து நலன்புரி<br>அமைச்சு |
| 16 மே | பொருளாதார நிலையும் அமைப்பியல் சீர்திருத்தத்திற்கான தேவையும்<br>(குடியரசுத்தின ஞாபகார்த்த விரிவுரை) | முனைவர்.ஏ.ஜி. கருணேசன<br>பணிப்பாளர்,<br>பொருளாதார ஆராய்ச்சி<br>இலங்கை மத்திய வங்கி | திரு.பி.பீ.ஜயசுந்தர<br>தலைவர், அரச தொழில்<br>முயற்சிகள் சீர்திருத்த<br>ஆணைக்குழு |
| 27 யுன் | இலங்கையில் வறுமையின் சமூகவியல் பார்வை | பேராசிரியர்.கே. தியுடர் சில்வா<br>சமூகவியல் பேராசிரியர்<br>பேராதனைப் பல்கலைக்கழகம்<br>நிறைவேற்றுப் பணிப்பாளர்<br>வறுமைபகுப்பாய்விற்கானநிலையம் | திரு.நிகால் சந்தரத்ன<br>வருகைதரும் மூத்த<br>அங்கத்தவர்வேளாண்மை<br>பட்டப்பின்படிப்பு நிறுவனம்<br>பேராதனைப் பல்கலைக்கழகம் |
| 11 யூலை | பெறுமதி கூட்டப்பட்டவரி பண்புகளும் பிரச்சனைகளும் | திரு.பி. குறுகே<br>மதியுரையாளர் -<br>இறைக்கொள்கை நிதி அமைச்சு | திருமதி.லக்மானி நாணயக்கார<br>பங்காளர்-ஏனஸ்ட்அன்ட் யங்<br><br>திரு.சி.ஜே.பி.சிறிவர்த்தன<br>மூத்த பொருளியலாளர்,<br>இறைக்கொள்கைப்<br>பிரிவுத்தலைவர்<br>இலங்கை மத்திய வங்கி |
| 8 ஒகத்து | Enron இன் பின் கணக்கீட்டுக் கைத்தொழில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் | திரு. மனில் ஜெயசிங்க<br>பங்காளர்<br>ஏனஸ்ட் அன்ட் யங் | திஅரித்தா விக்கிரமநாயக்க<br>மூத்த பங்காளர்<br>நித்யா பங்காளர்கள்<br>(சட்டத்தரணி) |
| 29 ஒகத்து | வரிமுறையும் தனியொரு வரிமுறையில் அபிவிருத்தி செய்தலும் (மத்திய வங்கியின் 52ஆவது ஆண்டு நிறைவுவிழா விரிவுரை) | முனைவர்.பார்த்தசாரதி சோம்<br>பணிப்பாளர், ப.நா.நிதியம்<br>சிங்கப்பூர் பிரதேச பயிற்சி<br>நிறுவனம்<br>சிங்கப்பூர் குடியரசு | |
| 26 செத் | நீர் மூலவள முகாமைத்துவ பிரச்சனைகள் | பேராசிரியர்.ஏ. வைத்தியநாதன்<br>அபிவிருத்தி ஆய்வுகள்<br>சென்னை நிறுவனம்<br>சென்னை | |
| 17 ஒத் | வேளாண்மைப் பண்டங்களுக்கான முன்னோக்கிய சந்தை (வங்கித் தொழில் கல்வி ஆய்வு நிலையத்தின் 21ஆவது நிறைவுவிழா விரிவுரை) | திரு. லமன் றுட்டன்<br>இணைப்பாளர்<br>பண்டச்சந்தைப்படுத்தல்<br>இடர்நேர்முகாமைத்துவமும்நிதியும்<br>அங்ராட்,<br>ஜெனீவா | |

மூலம். வ.க.ஆ.நி, இலங்கை மத்திய வங்கி

தரங்களிலுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் பயிற்சித் திணைக்களம் நடுத்தரகாலப் பயிற்சித்திட்டமொன்றினை வடிவமைத்தது. முக்கிய தகுதிகளைப் பெற்றுக்கொள்ளும் விதத்திலும் அதேபோன்று தேவையான குறித்துரைக்கப் பட்ட தொழில்நுட்பத் தகுதிகளை அடையும் விதத்திலும், கற்றல் செயல்முறைகளினூடாக அடையாளம் காணப்பட்ட அலுவலர்களின் தேர்ச்சி இடைவெளியைப் பூர்த்தி செய்யும்விதத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல் ஆய்வுகள், வங்கி மேற்பார்வை மற்றும் நிதி என்பனவற்றில் வங்கிக்குள்ள மிக அவசர தேவைகளை ஈடுசெய்யும் விதத்தில் தகுதியுள்ள அலுவலர்களுக்கு பட்டப்பின்படிப்பு பயிற்சிகளை வழங்குவதில் பயிற்சித்திட்டங்கள் உயர்ந்த முன்னுரிமையைக் கொண்டிருந்தன. அலுவலர்கள் வங்கி தொடர்பான தொழில்நுட்பத்துறையில் அவர்களது தகுதிகளையும் அறிவாற்றலையும் பூரணப்படுத்திக் கொள்வதற்கு உதவியளிப்பதற்குப் புறம்பாக, தொடர்பூட்டல் தேர்ச்சிகளையும் தகவல் தொழில்நுட்பத்தினையும் மேம்படுத்தும் விதத்தில் குறுங்கால பயிற்சிகள் முக்கிய கவனத்தைச் செலுத்தின.

பயிற்சித் திட்டத்தினை வடிவமைப்பதற்கான முன்னோடியாக, அலுவலர்கள் பெற்றிருந்த தகுதிகளையும் மற்றும் தொடர்புபட்ட தொழில்கள் மற்றும் பணிகளின் செயலாற்றத்திற்குத் தேவையான தகுதிகளையும் இனங்காண்பதன் மூலம் ஒவ்வொரு அலுவலர்களினதும் தகுதி மதிப்பீட்டு ஆய்வொன்று திணைக்களரீதியான பயிற்சி துணைக்குழுவினால் நடத்தப்பட்டது. இந்நடவடிக்கைகளினூடாகக் கண்டறியப் பட்ட தகுதி இடைவெளி முதன்மைப் பயிற்சித் திட்டத்தினை தயாரிப்பதற்கு உதவியது.

2002ஆம் ஆண்டில் 5 அலுவலர்கள் பட்டப்பின் படிப்பிற்காக அனுப்பப்பட்டதுடன், அவர்களில் மூன்று அலுவலர்கள் நிதித்துறையில் பட்டப்பின்படிப்பினை மேற்கொண்ட வேளையில் ஒரு அலுவலர் தகவல் தொழில்நுட்பத்திலும் ஒரு அலுவலர் முகாமைத்து வத்திலும் பட்டப்பின்படிப்பினை மேற்கொண்டனர். 2002 இறுதியில், வெளிநாட்டில் 17 அலுவலர்கள் பல்வேறு துறைகளிலும், பட்டப்பின்படிப்பினை மேற் கொண்டிருந்தனர். இவ்வாண்டுப் பகுதியில் இரண்டு அலுவலர்கள் முதுமானிப்பட்டத்தினை நிறைவு செய்த பின்னர் வங்கிக்குத் திரும்பினர்.

வெளிநாட்டு குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சி பெற்ற அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 154 ஆக இருந்தவேளையில் உள்ளூரில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 818ஆகக் காணப்பட்டது. உள்ளூரில் பயிற்சி பெற்றவர்களில் 500 அலுவலர்கள் மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் நடத்தப்பட்ட பாடநெறிகளில் பயிற்சி பெற்றனர்.

அட்டவணை II-26
அலுவலர் பயிற்சி
பட்டப்பின்படிப்பு ஆய்வுகள் 2001/ 2002

| ஆண்டு | பட்டப்பின் படிப்பிற்கு அனுப்பப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கைகளை | பட்டப்பின்படிப்பினை முடித்துக்கொண்டு திரும்பிய அலுவலர்களின் எண்ணிக்கை | 2002 திசெம்பர் 31இல் உள்ளவாறு பட்டப்பின் படிப்பைத் தொடரும் அலுவலர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| | | | முனைவர் பட்டம் | முதுமானி / பட்டப்பின்படிப்பு டிப்புளோமா |
| 2001 | 10 | 7 | 1 | 12/ 11 |
| 2002 | 5 | 2 | 1 | 15/ 2 |

ஆய்விற்குரிய ஆண்டில் வங்கி பட்டய நிதியியல் பகுப்பாய்வாளர், மற்றும் பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள் இணை உறுப்பினர் போன்ற பட்டயம் பெறுநராக தொழில்சார் தகைமைகளைப் பெறுவதற்கு வாய்ப்பினை வழங்கியது. முதற்தடவையாக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் மத்திய வங்கியை பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பயிற்சியளிக்கக்கூடிய ஏற்றுக்கொள்ள பயிற்சி நிறுவனமாக அங்கீகரித்திருக்கிறது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மத்திய வங்கியிலுள்ள பட்டயக் கணக்காளர் பாடநெறிகளை பின்பற்றுவோர் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம், உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம், பொதுப்படுகடன் திணைக்களம், நிதி, முகாமைக் கணக்காய்வு திணைக்களம், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் மற்றும் ஊ.சே.நிதியத் திணைக்களம் ஆகியவற்றில் நடைமுறைப் பயிற்சிகளைப் பெறுவர். எதிர்வரும் 5 ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியின் பல அலுவலர்கள் இத் தொழில்சார் துறையில் தகைமை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு தேர்ச்சிகளிலும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி இடர்நேர்வு முகாமைத்துவம்,

அட்டவணை II-27
அலுவலர்களின் பயிற்சி
குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
ஆய்வரங்கு - 2002
பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை

| திணைக்களம் | வெளிநாடு | | உள்நாடு (வ.கி.ஆ) | |
|---|---|---|---|---|
| | 2001 | 2002 | 2001 | 2002 |
| 1. வங்கித்தொழில் | 18 | - | 24 | - |
| 2. பொருளாதார திணைக்களம் | 17 | 24 | 31 | 27 |
| 3. வங்கி மேற்பார்வை | 18 | 24 | 66 | 54 |
| 4. தகவல் தொழில்நுட்பம் | 6 | 7 | 18 | 10 |
| 5. செயலகம் | - | 8 | 24 | 22 |
| 6. ஊ.சே.நிதியம் | - | 1 | 63 | 61 |
| 7. பொதுப்படுகடன் | 6 | 14 | 26 | 17 |
| 8. பிரதேச அபிவிருத்தி திணைக்களம் | 4 | 13 | - | 28 |
| 9. வங்கித்தொழில் கல்வி ஆய்வு நிலையம் | - | 2 | 22 | 12 |
| 10. நாணயம் | - | 3 | 15 | 31 |
| 11. அபிவிருத்தி நிதி | - | - | 11 | - |
| 12 னித மூலவள அபிவிருத்தி | 1 | 6 | 8 | 14 |
| 13. செலாவணிக் கட்டுப்பாடு | 1 | 6 | 10 | 23 |
| 14. நிதியியல் சந்தை | - | - | 21 | - |
| 15. முகாமைக் கணக்காய்வு | 2 | 2 | - | 13 |
| 16. பணிமனைத் திணைக்களம் | - | - | 17 | 13 |
| 17. புள்ளிவிபரம் | 5 | 2 | 8 | 18 |
| 18. வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வை | 3 | 6 | 19 | 34 |
| 19. நலன்புரி | - | 1 | 22 | 22 |
| 20. பயிற்சி | 1 | 1 | 16 | 10 |
| 21. பாதுகாப்புப் பணிகள் | - | 3 | 10 | 15 |
| 22. புதிய கட்டடங்கள் | - | - | 8 | - |
| 23. சட்டம் | 2 | 3 | 8 | 1 |
| 24. தகவல் (நூலகம் உட்பட) | 2 | 1 | 7 | 28 |
| 25. நிதி திணைக்களம் | - | 3 | 43 | 13 |
| 26. உள்நாட்டு தொழிற்பாடுகள் | - | 2 | - | 7 |
| 27. பன்னாட்டு தொழிற்பாட்டு திணைக்களம் | - | 14 | - | 11 |
| 28. கொடுப்பனவு தீர்ப்பனவு திணைக்களம் | - | 7 | - | 13 |
| 29. முகாமை அபிவிருத்தி நிலையம் | - | - | - | 3 |
| **மொத்தம்** | **86** | **154** | **497** | **500** |

(அ) பிரதேச அலுவலகங்கள் உட்பட

ஒதுக்கு முகாமைத்துவம், நாணய மற்றும் நிதியியல் துறை முகாமைத்துவம் மற்றும் வங்கித்தொழில் மேற்பார்வை போன்ற வங்கியின் மையத் தொழிற்பாடுகளுடன் பெருமளவிற்கு தொடர்பானதாகக் காணப்பட்டது. புதிய கணக்கிடல் முறை, அதே நேரத்தில் தீர்ப்பனவு செய்யும்முறை மற்றும் புதிய கணக்காய்வு முறை என்பனவற்றை அறிமுகப் படுத்துவதற்கான சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் வங்கியில் நடத்தப்பட்டன. உயர் பதவியல்லா அலுவலர்களின் மொழித் தேர்ச்சியையும் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சியையும் மேம்படுத்தும் பொருட்டு தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் சிறப்பு பாடநெறிகளும் சிறப்பு தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளும் நடத்தப்பட்டன. திணைக்களம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் அதன் தொலைக்கல்வி நிலையத்தில் நடத்துகின்ற பாடநெறிகளில் பங்குபற்றும்படி இலங்கை மத்திய வங்கி அலுவலர்களை ஊக்குவித்து வருகின்றது. இப்பாடநெறிகள், உலகின் ஏனைய பாகங்களிலுள்ள மாற்றல் சாராருடன் அதேநேரத்திலும், சமகால எதிர் நடவடிக்கைகளினூடாகவும் பயின்று கொள்வதற்கு வசதியளிக்கின்றன. தொலைதூர கல்வி நிகழ்ச்சித் திட்டத்தில் எல்லாமாக 36 அலுவலர்கள் பங்கு பற்றினர்.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பு நாடுகளிடையேயான கருத்துக்களையும் அறிவாற்றலையும் பகிர்ந்துகொள்வதனை ஊக்குவிப்பதற்காக திணைக்களம் அலுவலர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் தொடர்ந்தும் அலுவலர்களை அனுப்பியது. இவ்வாண்டுப்பகுதியில், 19 அலுவலர்கள் இப்பிராந்தியத்திலுள்ள மத்திய வங்கிகளுக்கு பொதுப்படுகடன் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, நிதி குத்தகைக்கம்பனிகள் ஒழுங்குவிதிகள் பயிற்சியாளர் பயிற்சி, உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகள் படுகடன் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி போன்ற துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டனர்.

சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதுடன் திணைக்களம், தாளினை அடிப்படையாகக் கொண்ட முறையிலிருந்து மின்னியல் முறைக்குத் திணைக்களங்கள் மாறிச்செல்வதனை இயலச்செய்யும் விதத்தில், உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் பிரயோகிக்கப்படும் செயற்பாட்டினை அறிமுகப்படுத்தியதன் மூலம் புதிய சூழலொன்றினை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை திணைக்களம் மேற்கொண்டது. வங்கியின் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை அலுவலர்கள் இலகுவாக அடைந்துகொள்வதனை இயலச்செய்யும் பொருட்டு, கிடைக்கத்தக்கதாக இருந்த பயிற்சி வாய்ப்புக்கள் பற்றி தகவல்களை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இணையத்தளமொன்று தொடங்கப் பட்டது. வெளிநாட்டில் பயிற்சிபெற்ற அலுவலர்கள் அவர்களின் அறிவினை மற்றைய அலுவலர்களுடன் பகிர்ந்துகொள்ளச் செய்யும் பொருட்டு அவர்களின் பயிற்சியின் பின்னர் வங்கிக்கு பயிற்சி பற்றி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமெனக் கோரப்பட்டமையின் மூலம் அவர்கள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டனர். மின்னியல் வடிவத்திலமைந்த பயிற்சி செய்தித் திரட்டினையும் திணைக்களம் அதன் இணையத்தளத்தில் மேற்கொண்டமையானது பயிற்சியின் பின் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தெரிந்தெடுக்கப் பட்ட பயிற்சி அறிக்கைகளைப் பரப்புவதற்கும் வசதியளித்தது. இவ்வாண்டுப் பகுதியில் 10 கட்டுரைகளை உள்ளடக்கிய இரண்டு தொகுதிகள் செய்தித்திரட்டில் புகுத்தப்பட்டன. மேலும், நடைமுறைப் பொருளாதாரம், வங்கித்தொழில் மற்றும் ஏனைய பொது விடயங்கள் பற்றிய அறிவினையூட்டும் நோக்குடன் திணைக்களம் வாரந்தோறும் தொடர் ஆய்வரங்குகளை நடத்தியது. இந்த ஆய்வரங்குகள் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள ஏனைய நிறுவனங்களின் புகழ்பெற்ற ஆட்களினாலும் அதேபோன்று வங்கியிலுள்ள அலுவலர்களினாலும் நடத்தப்பட்டன. இவ்வாண்டில் 47 அத்தகைய ஆய்வரங்குகள் நடத்தப்பட்டன.

## நலன்புரி

வங்கியின் சுய விருப்பத்துடனான ஓய்வுபெறும் திட்டத்தின் அமுலாக்கம் காரணமாக நலன்புரித் திணைக்களம் அதிகரித்த வேலைப்பழுவில் கவனம் செலுத்தும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. திணைக்களம் சுய விருப்பத்துடனான ஓய்வுபெறும் திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற 690 ஊழியர்களின் வெளிநின்ற கடன் பொறுப்புக்களை மீளப்பெறுவதிலும், கடன் பொறுப்புக்களை தீர்த்த பின்பு அவர்களுக்குச் சேரவேண்டிய ஊழியர் சேமநிதிய பணத்தை விடுவிப்பதை விரைவுபடுத்துவதிலும் ஈடுபட்டது.

2002இல், நலன்புரித் திணைக்களம் பல சலுகைரீதியிலான அலுவலர் கடன் திட்டங்களை நிருவகிப்பதன் மூலமும், வங்கி, மருத்துவ சிகிச்சை நிலையத்தில் நலன் வசதிகளை வழங்குவதன் மூலமும், நான்கு உணவகங்களில் உணவுகளை வழங்குவதன் மூலமும் ஊழியர்களுக்கான நலன்புரி வசதிகளை தொடர்ந்து விரிவுபடுத்தியது. உணவகங்கள், அலுவல்சார் வைபவங்களிலும் பன்னாட்டு கருத்தரங்குகளிலும் உணவு வழங்கும் பணிகளையும் மேற்கொண்டன.

சுயவிருப்பு ஓய்வூதிய திட்டம் காரணமாக குறைந்த அலவலர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலையை திணைக்களம் புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்தி விரைவுபடுத்தக் கூடியதாக இருந்தது. இது ஊழியர் சேமநிதியம் மற்றும் அலுவலர் நன்மைபயக்கும் திட்டங்களின் கடன் விண்ணப்பப் பத்திரங்களின் பரிசோதனையை கணனி முறைப்படுத்துவதன் மூலம் கணனியால் பிறப்பிக்கப்பட்ட கொடுப்பனவு ஆவணங்களைப் பயன்படுத்தி நாணயத் திணைக்களத்திலிருந்து ஊழியர்கள் பணம் பெற்றுக் கொள்வதை இயலச் செய்தது.

வீடமைப்புக் கடன் திட்டம் இவ்வாண்டில் சுமுகமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. வங்கிக்கு புதிதாகச் சேர்க்கப்பட்டோர் சேவையிலிருக்கும்போது அவ் ஊழியருக்கு மரணம் சம்பவிக்கும் சந்தர்ப்பத்தில் காப்புறுதிப் பத்திரங்களை வைத்திருப்போரில் தங்கியிருப்போர் வீடமைப்புக் கடன்சுமைக்கு உள்ளாக்கப்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவற்காக

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து கடன் பாதுகாப்பு கொள்கையொன்றை பெறும்படி கேட்கப் பட்டனர்.

1996இல் வங்கி தாக்குதலுக்குள்ளான போது பார்வையிழந்து பாதிப்புற்றோருக்கு அவர்களின் வாழ்க்கைத் தகைமையை மேம்படுத்துவதற்காக திணைக்களம், மென்பொருள் வசதிகளுடன் கூடிய கணனி வசதிகளை தொடர்ந்து வழங்கியது.

ஊழியர்கள், ஓய்வுபெற்றோர் மற்றும் அவர்களில் தங்கியிருப்போரின் மருத்துவச் செலவுகளுக்காக அலுவலர் மருத்துவ நன்மைபயக்கும் திட்டத்தின் கீழ் முற்பணங்கள் மற்றும் மீளளித்தல் மேற்கொள்ளப்பட்டன. நாணயச்சபையானது ஊழியர், மருத்துவ நன்மைபயக்கும் திட்டத்தின் கீழான நன்மைகளின் அதிகரிப்பிற்கு, 2003 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஒப்புதலளித்தது. ஓய்வுபெற்றோருக்கும் அவர்களின் வாழ்க்கைத் துணைக்கும் மருத்துவ நன்மைபயக்கும் திட்டத்தின் கீழ் சி.டி மற்றும் ஈ இன் கீழான மருத்துவ வசதிகள் இவர்களுக்கு தொடரும் அடிப்படையில் விரிவாக்கப்பட்டமையால், விசேட அறுவைச்சிகிச்சை, அபூர்வமான மற்றும் மாற்றமுடியாத நோய்கள் போன்றவற்றின் செலவின் மீளளிப்புக்கு அவர்களை இயலச்செய்யும்.

ஊழியர்களுக்கு தமது கையில் கிடைக்கும் சம்பளத்தை அதிகரிப்பதை இயலச்செய்யும் பொருட்டு, நாணயச்சபை, செத்தெம்பர் 1997 இலிருந்து வழங்கப்பட்ட ஊழியர் சேமநிதியக் கடன்களை ஒருங்கிணைப்பதற்கும் மீள்அட்டவணைப்படுத்துவதற்கும் ஒப்புதலளித்தது.

உதவுதொகை அளிக்கப்பட்ட பேருந்து பருவகால பயணச்சீட்டுத் திட்டமும் புகையிரத ஆணைச்சீட்டு முறையும் முன்னைய ஆண்டைப் போல் தொடர்ந்தது.

## மனித வளத் திணைக்களம்

நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2002 ஏப்பிறலில் மனித வள முகாமைத்துவத்திற்காக தொழில்சார் நிபுணத்துவம் பெற்ற பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் நிறுவனத் திணைக்களத்தினை மனித வளத் திணைக்களம் என மீளப்பெயரிடுவதற்கு வங்கி தீர்மானித்தது. மனித வளத் திணைக்களத்துடன் தொடர்பான குறிப்பிட்ட சில மாற்றங்களும் இவ்வாண்டுப் பகுதியில் அடையாளங் காணப்பட்டன. ஆட்சேர்ப்பு, பதவியிலமர்த்தல், பதவி நிலையை அபிவிருத்தி செய்தல், தொடர்ச்சியான மற்றும் செயலாற்ற முகாமைத்துவம் என்பன தொடர்பான கொள்கைகள் ஆராயப்பட்டு வருகின்றன. மனித வள அபிவிருத்தித் திணைக்களம் வங்கியின் தற்போதைய பலம், வங்கித்தொழில் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தும் வேகம் என்பனவற்றை கவனத்திற் கொள்வதுடன், நிதியில்துறை விரைவாக விரிவடை வதினால் ஏற்படும் விளைவுகள் என்பவற்றை அவதானித்துள்ளதுடன் ஊழியர்களின் தகுதி, வினைத்திறன், தரம் மற்றும் கடப்பாடு என்பவற்றை முன்னேற்றுவதில் சிறப்புக்கவனம் செலுத்தவிருக்கிறது.

தற்போதைய நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தினைப் பயனுறு முறையில் மேற்கொள்வதற்கு ஊழியர்களின் உள்ளக இயலாற்றலை உருவாக்கு வதற்கான அத்திவாரமாக மனித வள அபிவிருத்தி விளங்குவதனால் தற்பொழுது நடந்துவரும் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் மனித வள அபிவிருத்தித் திணைக்களம் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. ஆகவே ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சியினையும் அபிவிருத்தியினையும் அடையாளம் காண்பதற்கான தகுதிப்படுத்தும் ஆரம்ப வேலைகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. இந் நடவடிக்கைகள் முடிவடைந்ததும், வங்கியின் தற்போதைய மனித வளம் பற்றிய மதிப்பீட்டையும் தொழில்சார் அலுவலர்களின் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவைப்படும் தகவல்களையும் பெறக்கூடியதாகவிருக்கும். வங்கியின் செயலாற்றத்தினை அதிகரிப்பது தொடர்பான பண்பினை உருவாக்கு வதற்காக செயலாற்ற முகாமைத்துவ முறையும் மேம்படுத்தப்படும்.

அதேவேளை, நிதித் திணைக்களத்திற்கும், முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்திற்கும் தொழில்சார் தகைமை பெற்ற இரு அலுவலர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். ஆண்டின் தொடக்கத்தில் வங்கிப் பணிக்கு உயர்பதவி அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதுடன், 2003ஆம் ஆண்டின் முதற் காலாண்டுப்பகுதியில் ஆட்சேர்ப்பு இறுதிப்படுத்தப்படு மெனவும் எதிர்பார்க்கப்பட்டது. வங்கியில் மனித வள முகாமைத்துவ மூலோபாயத்தினை விருத்தி செய்வதற்காக மனித வள ஆலோசனையாளரின் பணியினைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2002ஆம் ஆண்டுப் பகுதியில் ஆளுநர். திரு.ஏ.எஸ். ஜயவர்த்தன பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

1. வாசிங்டன் டி சி இலுள்ள உலக வங்கியின் தலைமை அலுவலகத்தில் 2002 சனவரி 8-10ஆம் நாள் வரை நடைபெற்ற உலக வங்கியின் வருடாந்தப் போட்டியான "அபிவிருத்திச் சந்தை இடம்" என்ற நிகழ்வில் கலந்து கொண்டார்.
2. 2002 பெப்புருவரி 14-21 வரை நடைபெற்ற பன்னாட்டு பொருளாதார உறவுகள் பற்றிய ஆராய்ச்சிக்கான இந்திய கழகம் மற்றும் புதுடெல்லியில் இடம்பெற்ற தென்ஆசிய புகழ்பெற்ற விரிவுரைத் தொடரிலும் (தொண்ணூறுகளில் இலங்கையில் பொருளாதாரச் செயலாற்றம்) கலந்து கொண்டதுடன் மும்பாயிலுள்ள பருத்திப் பண்டப் பரிவர்த்தனைகளுக்கும் மற்றும் எண்ணெய் விதை பரிவர்த்தனைகளுக்கும் விஜயம் செய்தார்.
3. 2002 ஏப்பிறல் 16-24 காலப்பகுதியில் வாசிங்டன் டி.சி இயில் இடம்பெற்ற ஜி.24, பன்னாட்டு நிதிய மாநாடு மற்றும் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.
4. இலண்டனில் 2002 யூலை 2-5 வரை நடைபெற்ற பொதுநலவாய செயலக கருத்தரங்கு நிகழ்விலும் மத்திய வங்கி ஆளுநர்களின் கருத்தரங்கு நிகழ்விலும்,

சுவிற்சர்லாந்து, பாசிலில் யூலை 6-8 ஆம் நாள்வரை நடைபெற்ற பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் 72ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டதுடன் 2002 யூலை 9-19 வரை சுவீடன் சுவெறிஜஸ் ரிஸ்க் வங்கிக்கு விஜயம் செய்தார்.

5. வாசிங்டனில் 2002 செத்தெம்பர் 16-ஒத்தோபர் 1 வரை "உலக மயமாக்கப்பட்ட நிதியியல் முறைகளிலிருந்து மத்திய வங்கித்தொழிலுக்கு ஏற்படுகின்ற அறைகூவல்கள்" என்ற விடயம் தொடர்பான மாநாடு மற்றும் வங்கி/நிதியம் ஆண்டுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

6. கொங்கொங்கில் 2002 ஒத்தோபர் 30-நவெம்பர் 4 வரை நடைபெற்ற தென்கிழக்காசிய நியூசிலாந்து அவுத்திரேலியா மத்திய வங்கி ஆளுநர்களின் கருத்தரங்கிலும் கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

## பன்னாட்டு தொழிற்பாடு, உள்நாட்டுத் தொழிற்பாடு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு, நிதி ஆகிய திணைக்களங்களை நிறுவியதன் மூலம் வங்கித்தொழில் திணைக்களம் மீளமைக்கப்பட்டது

தற்பொழுது நடைபெற்றுவரும் நவீன மயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் வங்கித்தொழில் திணைக்களம், அதன் தொழிற்பாடுகளை காத்திரமான முறையில் செயற்படுத்தும் பொருட்டு நான்கு பல்வேறு திணைக்களங்களாக மீளமைக்கப்பட்ட வேளையில், நடைமுறையிலுள்ள பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இணைந்து செல்லும்விதத்தில் அதன் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் மீள ஒழுங்குமுறைப் படுத்தப்பட்டன. பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம், கொடுப்பனவுகள் தீர்ப்பனவுகள் திணைக்களம் மற்றும் நிதித் திணைக்களம் என்பனவே அந் நான்குமாகும். 2002 சனவரி 1ஆம் நாளன்று இப் புதிய திணைக்களங்கள் தொழிற்படத் தொடங்கியதுடன் வங்கித்தொழில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் முடிவிற்கு வந்தன.

## கிராமியக் கொடுகடன் திணைக்களமும் அபிவிருத்தி நிதித் திணைக்களமும் ஒருங்கிணைக்கப்பட்டமை

கிராமியக் கொடுகடன் திணைக்களமும், அபிவிருத்தி நிதித் திணைக்களமும் 2002 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் ஒருங்கிணைக்கப்பட்டு பிரதேச அபிவிருத்தித் திணைக்களமாக அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. இவ்வொருங்கிணைப்பானது அபிவிருத்திக்கான பிரச்சனைகளையும், வாய்ப்புக்களையும் விளங்கிக்கொள்ளும் தன்மையினையும் மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டதுடன் இப் பிரச்சனைகளுக்கு கிராமிய அபிவிருத்தி வங்கிகளினூடாக பயனுறு முறையில் தீர்வுகாணக்கூடியதாயிருக்கும்.

## நியமனங்கள்

1 பின்வரும் நியமனங்கள் 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து மேற்கொள்ளப்பட்டன.

(i) வங்கித்தொழில் திணைக்களத்தின் முதன்மைக் கணக்காளர் திரு.வை.எம்.டபிள்யூ.பி. வீரசேகர பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ii) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் டீ.எஸ்.விஜேசிங்க உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

(iii) வங்கித்தொழில் திணைக்களத்தின் மேலதிக முதன்மைக் கணக்காளர் திருமதி.கே.ஆர்.எம். சிறிவர்த்தன கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப பட்டார்.

(iv) கிராமியக் கொடுகடன் திணைக்களத்தின் பணிப்பாளரும் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான திருமதி.சி.கே. நாணயக்காரா பயிற்சித் திணைக்களப் பணிப்பாளராகவும், முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் பதில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

(v) பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளரும் பயிற்சித் திணைக்களத்தின் பதில் பணிப்பாளரும் முகாமைத்துவ அபவிருத்தி நிலையத்தின் பதில் பணிப்பாளருமான திரு.எம்.எம்.அத்தநாயக்கா பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

2. செயலகத் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் திரு.கே. ஜெகநாதன் 2002 சனவரி 1ஆம் நாளிலிருந்து நிதித் திணைக்களத்தின் பதில் முதன்மைக் கணக்காளராகவும் அதனைத் தொடர்ந்து 2002 மாச்சு 15ஆம் நாளிலிருந்து வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர் என்ற அவரது கடமைக்கு மேலதிகமாக, 2002 செத்தெம்பர் 17 இலிருந்து நிதித் திணைக்களத்தின் மேலதிக முதன்மைக் கணக்காளராகவும் நியமிக்கப்பட்டார்.

3. செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிக கட்டுப்பாட்டாளர் திருமதி.பி.பி. சிறிசேன 2002 சனவரி 25ஆம் நாளிலிருந்து வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

4. செயலகத் திணைக்களத்தின் பதில் மேலதிகச் செயலாளர் திரு.எல்.வை. தர்மசேன 2002 மாச்சு 18ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

5. திரு.டீ.எல்.கட்டுவாவல 2002 மாச்சு 15ஆம் நாளிலிருந்து நிதித் திணைக்களத்தின் தலைமைப் பதவிக்கு முதன்மைக் கணக்காளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

6. வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பதில் பணிப்பாளர் திரு. எச். டீ. திசேரா 2002 மாச்சு 15ஆம் நாளிலிருந்து

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தற்போதைய அவரது கடமைகளுக்குப் புறம்பாக 2002 யூன் 13ஆம் நாளிலிருந்து தகவல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

7. நிறுவனத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு.கே.ஏ.டீ.றூபசேன 2002 ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து மனித வள அபிவிருத்தித் திணைக்களத்தின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

8. திரு.எம்.ஏ. நந்தசிறி 2002ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆம் நாளிலிருந்து மனித வளத் திணைக்களத்தின் தலைமைப் பதவிக்கு மனித வளப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

9. திரு.டபிள்யூ.எம்.ஜே. இரட்னப்பிரிய 2002 செத்தெம்பர் 2ஆம் நாளிலிருந்து முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைமைப் பதவிக்கு பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்.

10. முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.சி.கே.பரணவித்தான 2002 செத்தெம்பர் 2ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஓய்வு பெறல்

1. திரு.எஸ்.றூபசிங்க பணிப்பாளர் நிறுவனத் திணைக்களம் 2002 சனவரி 3ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
2. திரு. பி.ரி. சிறிசேன பணிப்பாளர் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 2002 சனவரி 25ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
3. திரு.கே.ஏ.டீ. றூபசேன சிறப்பு அலுவலர், மனித வள அபிவிருத்தித் திணைக்களம் 2002 மே 9ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.
4. திரு.ஜி.ஏ.வி. பொன்சேகா பதில் பணிப்பாளர் பணிமனைத் திணைக்களம் 2002 யூன் 16ஆம் நாள் தொடக்கம் வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

## விடுவிப்பிலுள்ள அலுவலர்கள்

1. திரு.ஆர்.ஏ.ஜெயதிஸ்ஸ மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.
2. திருமதி.எம்.ஏ.ஆர்.சி. கூறே நிதியமைச்சிற்கு இறைக்கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்களுக்கான பணிப்பாளர் நாயகமாக.
3. முனைவர்.யூ.விதானபத்திரன கைத்தொழில் அமைச்சிற்குச் செயலாளராக.
4. திரு.எம்.ஜே.எஸ்.அபேசிங்க நிதியமைச்சிற்கு.
5. திரு.எல்.ஜே.விக்கிரமசிங்க லங்கா கிளியர் லிமிட்டெட்டிற்கு.
6. திருமதி.வை.எம். இந்திரரத்ன நிதியமைச்சிற்கு இறைக்கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்களுக்கான துணைப் பணிப்பாளராக.